

ஆகஸ்ட்

2019






# நடப்பு நிகழ்வுகள்






www.winmeen.com

# நடப்பு நிகழ்வுகள்

**1. 52ஆவது ASEAN வெளியுறவு அமைச்சர்கள் கூட்டம் (AMM–52) நடைபெற்ற நகரம் எது?**




A) ஜாகர்த்தா


B) கோலாலம்பூர்

C) நைப்பியிதோ

**D) பாங்காக் ☑**

✓ 52ஆவது ASEAN வெளியுறவு அமைச்சர்கள் கூட்டம் (AMM–52), சமீபத்தில், ஜூலை.29 முதல் ஆக.3 வரை தாய்லாந்தின் பாங்காக்கில் நடைபெற்றது. அதிகரித்து வரும் சர்வதேச சவால்களுக்கு இடையில் வர்த்தகத்தை விரிவுபடுத்தவும், பிராந்தியத்தில் செழிப்பை மேம்படுத்தவும் ஓர் ஆழ்ந்த ஒருங்கிணைப்பு வழங்கும் நோக்குடன் இந்தக் கூட்டத்தை நடத்தும் தாய்லாந்தின் அழைப்போடு இந்த ஆண்டுக்கூட்டம் தொடங்கப்பட்டது. கொரிய தீபகற்பத்தில் அதிகரித்துவரும் பாதுகாப்புப் பதற்றம், தென் சீனக்கடலில் சீனாவின் தீவிரமான பிராந்திய உரிமைக்கோரல்கள் மற்றும் அமெரிக்க–சீனா வர்த்தகப் போர் சிக்கல்கள் ஆகியவற்றின் அடிப்படையில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது. இதில், உலகளாவிய பிரதிநிதியாக ASEAN தனது குரலை உயர்த்துகிறது.

**2. எந்த முன்னாள் இந்திய கிரிக்கெட் வீரருக்கு 'பாரத் கௌரவ்' விருது வழங்கப்பட்டுள்ளது?**



A) சுனில் கவாஸ்கர்

**B) கபில்தேவ் ☑**

C) அஜித் வடேகர்

D) அணில் கும்ப்ளே

✓ ஆகஸ்ட்.1 அன்று கிழக்கு வங்காள அணியானது அதன் நிறுவன நாள் கொண்டாட்டங்களை நேதாஜி உள்ளரங்கில் தொடங்கியது. அதன்சமயம், இந்தியாவின் முதல் கிரிக்கெட் உலகக்கோப்பையை வென்றுதந்த கேப்டன் கபில்தேவுக்கு, அந்தச் சங்கம் அதன் மிகவுயர்ந்த கௌரவமான 'பாரத் கௌரவ்' விருதை வழங்கியது.

**3. T20I போட்டிகளில் 1000 ரன்கள், 100 விக்கெட்டுகளை எட்டிய முதல் கிரிக்கெட்டாளர் யார்?**



A) ஜஸ்பிரீத் பும்ரா

B) சாஹிப் அல் ஹசன்

C) சாஹித் அப்ரிடி

**D) எலிஸ் பெர்ரி (Ellyse Perry) ☑**

- ✓ ஆஸ்திரேலிய பெண்கள் கிரிக்கெட் அணியை சேர்ந்த எலிஸ் பெர்ரி, சர்வதேச T20 கிரிக்கெட்டில் 1000 ரன்கள் அடித்து, 100 விக்கெட்டுகளையும் வீழ்த்திய முதல் கிரிக்கெட்டாளர் என்ற சாதனையை படைத்துள்ளார். சர்வதேச ஆண்கள் & பெண்கள் கிரிக்கெட்டில் முதல்முறையாக இந்தச்சாதனையை எலிஸ் படைத்துள்ளார். ஹோவ் நகரத்தில், ஆஸ்திரேலியா, 7 விக்கெட் வித்தியாசத்தில் இங்கிலாந்து அணியை வீழ்த்திய 2019 ஆஷஸ் தொடரில் அவர் இச்சாதனையை நிகழ்த்தினார்.
- ✓ அடுத்த ஈரிடங்களில் பாகிஸ்தானின் சாஹித் அப்ரிடி (1416 ரன்கள், 98 விக்கெட்டுகள்), வங்கதேசத்தின் சாஹிப் அல் ஹசன் (1471 ரன்கள் 88 விக்கெட்டுகள்) உள்ளனர்.

**4. QS மாணவர்களுக்கான சிறந்த நகரங்களின் தரவரிசையில், மாணவர்களுக்கான உலகின் சிறந்த நகரமாக தெரிவுசெய்யப்பட்டுள்ள நகரம் இது?**

A) பாரிஸ்

B) டோக்கியோ

C) மெல்பர்ன்

**D) இலண்டன் ☑**

- ✓ 'QS Best Student Cities Ranking – QS மாணவர்களுக்கான சிறந்த நகரங்கள் தரவரிசை'யை சர்வதேச கல்வி ஆலோசனை நிறுவனமான QS Quacquarelli Symonds தொகுத்து வெளியிட்டுள்ளது. இதில் தொடர்ந்து 2ஆவது முறையாக லண்டன் நகரம் முதலிடத்தைப் பிடித்துள்ளது. 2ஆவது இடத்தை ஜப்பானின் டோக்கியோவும், 3ஆவது இடத்தை ஆஸ்திரேலியாவின் மெல்பர்னும் பிடித்துள்ளன.
- ✓ இந்தியாவை பொறுத்தவரை பெங்களூரு 81ஆவது இடம், மும்பை 85ஆவது இடம், தில்லி 113ஆவது மற்றும் சென்னை 115ஆவது இடங்களைப் பிடித்துள்ளன. குறிப்பிட்ட நகரத்தில் உள்ள சிறந்த பல்கலைகளின் எண்ணிக்கை, பொதுமக்களுக்கும் மாணவர்களுக்கும் இடையிலான விகிதாச்சாரம், வாழ்க்கைத்தரம், வேலைவாய்ப்பு, விலைவாசி, அங்கு ஏற்கனவே வசிக்கும் மாணவர்களின் திருப்தி முதலிய ஆறு அம்சங்களின் அடிப்படையில் QS அமைப்பு சர்வதேச நகரங்களைப் பட்டியலிட்டு வருகிறது.


**5. நடப்பாண்டின் ஆட்கடத்தலுக்கு எதிரான உலக தினத்தின் கருப்பொருள் என்ன?**

**A) Human Trafficking: call your government to action ☑**

B) Act to protect and assist trafficked persons

C) Unite to eradicate human trafficking

D) Protect rights of human trafficking victims




- ✓ ஆட்கடத்தலால் பாதிக்கப்பட்டோரின் நிலைமை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது, அவர்களின் உரிமைகள் குறித்து தெரியப்படுத்துவது மற்றும் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டு ஒவ்வோர் ஆண்டும் ஜூலை.30 அன்று ஆட்கடத்தலுக்கு எதிரான உலக தினம் (World Day against Trafficking in Persons) கடைப்பிடிக்கப்படுகிறது.

✓ "Human Trafficking: call your government to action" நடப்பாண்டில் வரும் இந்நாளுக்கான கருப்பொருள் ஆகும். இது கடத்தலில் பாதிக்கப்பட்டோரின் நலனுக்காக அரசு எடுக்கவேண்டிய நடவடிக்கைகளின் முக்கியத்துவத்தை சிறப்பித்துக்காட்டுவதில் கவனம் செலுத்துகிறது.

**6. நடப்பாண்டு IBC 'International Honour for Excellence' வென்றவர் யார்?**



A) கிறிஸ்டோபர் நோலன்

B) குவென்டின் டராண்டினோ

**C) ஆண்டி செர்கிஸ் ☑**

D) டேவிட் பிஞ்சர்

✓ நடிகரும், திரைப்படத் தயாரிப்பாளருமான ஆண்டி செர்கிஸ், நடப்பாண்டு IBC 'International Honour for Excellence' வென்றுள்ளார். மேலும், செப்.15 அன்று ஆம்ஸ்டர்டாமில் நடைபெறும் சர்வதேச ஒலிபரப்பு மையத்தின் (IBC) விருது வழங்கும் விழாவில் அவருக்கு இந்தக் கௌரவம் வழங்கப்படும்.

**7. தூய்மையான காற்றுக்கான கண்டுபிடிப்பானது இந்தியா மற்றும் எந்த நாட்டால் பெங்களூரில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது?**




**A) ஐக்கிய பேரரசு ☑**

B) பிரான்ஸ்

C) பெல்ஜியம்

D) தென்னாப்பிரிக்கா

✓ தூய்மையான காற்றுக்கான கண்டுபிடிப்பு (Innovating for Clean Air – IfCA) என்னும் இரண்டாண்டு கூட்டு முயற்சியை இந்தியாவும் ஐக்கிய பேரரசும் இணைந்து பெங்களூருவில் அறிமுகம் செய்துள்ளன. செயற்கைக்கோள் மற்றும் உணரிகள் (Sensors) தரவை ஒருங்கிணைப்பதன் மூலமும், மின்சாரத்தில் இயங்கும் வாகனப் பயன்பாட்டுக்கு இந்திய மக்கள் மாறுவதற்கு ஆதரவு வழங்குவதன் மூலமும் காற்றின் தரத்திற்கு ஒரு தனித்துவமான அளவீட்டு முறையை வழங்குவதே இதன் நோக்கமாகும்.

✓ இங்கிலாந்து – இந்தியா கூட்டு முயற்சியான இது இரு நாடுகளின் பங்குதாரர்களுக்கும் காற்றின் தரம் மற்றும் மின்சார வாகன ஒருங்கிணைப்பு தொடர்பானவற்றை சோதிக்கும் வாய்ப்புகளை வழங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் திட்டத்தை ஐக்கிய பேரரசு ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்பின் (UKRI) பிரிவான இன்னோவேட் UK வழிநடத்துகிறது.

✓ மேலும், கர்நாடகா மற்றும் இந்தியாவைச் சேர்ந்த பல்வேறு கூட்டாளர்களுடன் இணைந்து நியூட்டன் நிதியத்தால் இதற்கு நிதியளிக்கப்படுகிறது. இந்திய அறிவியல் கழகம் (IISc), Enzen, புராஜக்ட் லித்தியம், இந்திய தொழிற்துறை கூட்டமைப்பு, C40 நகரங்கள் மற்றும் தூய காற்று தளம் முதலியன இந்தத் திட்டத்தின் முக்கிய பங்காளர்களாகும்.

**8.எந்த மத்திய அமைச்சகம், புது தில்லியில், அடல் சமூக புத்தாக்க மையத்தை தொடங்கியுள்ளது?**

**A) பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம் ☑**

B) உள்துறை அமைச்சகம்

C) நிதியமைச்சகம்

D) பழங்குடி விவகாரங்கள் அமைச்சகம்

✓ மக்களிடையே புத்தாக்க உணர்வை ஊக்குவிப்பதற்காக மத்திய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு மற்றும் எஃகுத்துறை அமைச்சரான தர்மேந்திர பிரதான், அண்மையில், புது தில்லியில் அடல் சமூக புத்தாக்க மையத்தை தொடங்கிவைத்தார். சமுதாயத்திற்கு சேவைசெய்யும் பொருட்டு தீர்வுசார்ந்த வடிவமைப்பு சிந்தனை மூலம் புத்தாக்க உணர்வை ஊட்டுவதே இம்முயற்சியின் நோக்கமாகும். அடல் சமூக புத்தாக்க மையம் என்பது அடல் புத்தாக்க திட்டத்தின் (AIM) ஒரு முயற்சியாகும்.

✓ இது கிராமப்புற, பழங்குடிப்பகுதிகள் மற்றும் அடுக்கு II மற்றும் III நகரங்கள் மற்றும் பாதுகாக்கப்படாத பிராந்தியங்களில் புத்தாக்கத்துக்கான அண்மைய தொழில்நுட்பங்களை அணுகுவதற்கும் புத்தாக்கத்து –க்கான முன்மாதிரிகளை உருவாக்குவதற்குமான ஒரு தளத்தை வழங்கும்.

**9.எந்த மத்திய அமைச்சகத்தின் கீழ், தேசிய பாதுகாப்புப் படை (NSG) செயல்படுகிறது?**

A) நிதி அமைச்சகம்

**B) உள்துறை அமைச்சகம் ☑**

C) சட்டம் மற்றும் நீதி அமைச்சகம்

D) பாதுகாப்பு அமைச்சகம்



✓ ஐ.பி.எஸ் அதிகாரி SS தேஸ்வாலுக்கு (ஹரியானா: 1984) பயங்கரவாத எதிர்ப்புப் படையான தேசிய பாதுகாப்புப்படையின் கூடுதல் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. சுதீப் லக்டாகியாவுக்குப் பிறகு இந்தப் பதவிக்கு வரவுள்ள அவர், அடுத்து ஒருவரை நியமிக்கும் வரையோ அல்லது வழக்கமான தலைமை இயக்குநர் ஒருவர் நியமிக்கப்படும் வரையோ இப்பதவியில் இருப்பார். இந்தோ – திபெத்திய எல்லைக் காவல்படையின் தலைவரான தேஸ்வால், லக்டாகியாவின் உடன் பணிபுரிந்தவராவார்.

✓ தேசிய பாதுகாப்புப் படை (National Security Guard) என்பது மத்திய உள்துறை அமைச்சகத்தின் கீழ் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள் புரியும் இந்திய சிறப்புப் படைப்பிரிவாகும். 'கருப்புப் பூனைகள்' என்றழைக்கப்படும் இந்தப்படை, 1984இல் இந்திய நாடாளுமன்றம் நிறைவேற்றிய தேசிய பாதுகாப்புச் சட்டத்தின்படி உருவாக்கப்பட்டது. NSGக்கு IPS அதிகாரி ஒருவரே தலைவராக நியமிக்கப்படுகிறார்.

**10.இருதய நோய்களை எதிர்த்துப் போராடுவதற்காக எந்தத் தொழில்நுட்ப நிறுவனமானது அப்பல்லோ மருத்துவமனைகளுடன் கூட்டுச் சேர்ந்துள்ளது?**

A) பேஸ்புக்

B) இன்போசிஸ்

**C) மைக்ரோசாப்ட் ☑**

D) விப்ரோ

- ✓ மைக்ரோசாப்ட் இந்தியாவானது அப்பல்லோ மருத்துவமனைகளுடன் கூட்டுச் சேர்ந்து ஒரு தேசிய மருத்துவ ஒருங்கிணைப்புக் குழுவை அமைத்துள்ளது. இது அனைத்து இருதய மற்றும் இருதயம் தொடர்பான செயற்கை நுண்ணறிவு (AI) திட்டங்களில் வழிகாட்டும். இது தேசிய, பன்மைய எதிர்கால ஆய்வின் அனுமானங்களின் அடிப்படையில் மருத்துவ வழிமுறைகள் & சிகிச்சை வழிகாட்டுதல்களை வளர்த்தெடுப்பது பற்றிய மருத்துவ நுண்ணறிவுகளையும் வழங்கும்.
- ✓ செயற்கை நுண்ணறிவில் இயங்கும் இருதய நோய் அபாய மதிப்பெண் APIக்காக இந்தக் குழு செயல்படும். அப்பல்லோ மருத்துவமனைகள், அகில இந்திய மருத்துவ அறிவியல் நிறுவனம் (AIIMS), புது தில்லி மற்றும் இலக்னோவின் கிங் ஜார்ஜின் மருத்துவ பல்கலை ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட உறுப்பினர்களை இது கொண்டிருக்கும். இந்தியாவில் ஏற்படும் இறப்புகளுக்கான மிகப்பெரிய காரணமாக (கிட்டத்தட்ட 25% இறப்புகள் – 25 முதல் 69 வயதுக்குட்பட்டவர்களில்) இருதய நோய்கள் உள்ளன.

---

# நடப்பு நிகழ்வுகள்

**1.நடப்பாண்டுக்கான மதிப்புமிக்க ரமோன் மகசேசே விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட இந்தியர் யார்?**

A) K சிவன்

B) அன்னா ஹசாரே

**C) இராவிஷ்குமார் ☑**

D) மேரி கோம்



- ✓ NDTV இந்தியாவின் மூத்த நிர்வாக ஆசிரியர் இராவிஷ் குமார், தனது 'நன்னெறி இதழியல்' பணிக்காக நடப்பாண்டுக்கான மதிப்புமிக்க ரமோன் மகசேசே விருது பெற்றுள்ளார். அவர், 'Prime Time' என்னும் நிகழ்ச்சியின் வாயிலாக மக்களின் பிரச்சனைகளை தீர்க்க உதவிவருகிறார். மக்களின் குரலாக ஒலிக்கும் அவரது சேவையை கௌரவிக்கும் விதமாக அவருக்கு இவ்விருது அறிவிக்கப்பட்டது.
- ✓ மேலும், மியான்மர் நாட்டின் கோ ஸ்வே வின்; தாய்லாந்தின் அங்கானா நீலபாய்ஜித்; பிலிப்பைன்சின் ரேமண்டோ புஜன்டே காயாப்யாப்; தென்கொரியாவின் கிம் ஜோங்–கி ஆகிய நால்வருக்கும் இவ்விருது அறிவிக்கப்பட்டது. ஆசியர்களுக்கும், ஆசியாவைச்சேர்ந்த அமைப்புக்கும் வழங்கப்படும் மிகவுயர்ந்த கௌரவமான ரமோன் மகசேசே விருது, பொதுவில் 'ஆசியாவின் நோபல் பரிசு' என குறிப்பிடப்படுகிறது.

**2.எந்த நோக்கத்திற்காக மத்திய அரசு KABILஐ அமைத்துள்ளது?**

A) பெண்கள் தொழில்முனைவுக்கு ஆதரவளிக்க

B) இலவச கல்வியை வழங்க

**C) முக்கியமான கனிமங்களின் விநியோகத்தை உறுதிசெய்ய**

D) டிஜிட்டல் மயமாக்கலை ஊக்குவிக்க



- ✓ இந்திய சந்தைகளில் முக்கியமான மற்றும் உத்திசார் தாதுக்கள் தொடர்ச்சியாக வழங்கப்படுவதை உறுதிசெய்வதற்காக மூன்று மத்திய பொதுத்துறை நிறுவனங்களின் பங்களிப்புடன் ஒரு கூட்டு நிறுவனமாக கானிஜ் பிதேஷ் இந்தியா லிட் (KABIL) அமைக்கப்பட்டுள்ளது. தேசிய அலுமினிய நிறுவனம் (NALCO), இந்துஸ்தான் செம்பு நிறுவனம் (HCL) மற்றும் கனிம ஆராய்ச்சி நிறுவனம் (MECL) ஆகியன அம்மூன்று மத்திய பொதுத்துறை நிறுவனங்களாகும்.
- ✓ புதிதாக அமைக்கப்பட்டுள்ள இந்நிறுவனம், நாட்டில் குறைந்த அளவே கிடைக்கும் லித்தியம் மற்றும் கோபால்ட் விநியோகத்தை உறுதி செய்யும். ஆஸ்திரேலியா போன்ற பிற கனிமவள நாடுகளுடனும், ஆப்பிரிக்கா மற்றும் தென்னமெரிக்காவில் உள்ள நாடுகளுடனும் கூட்டாண்மைகளை உருவாக்கவும் இது உதவும். NALCO, HCL&MECL இடையேயான பங்களிப்பு வீதம் 40:30:30 என்ற அளவில் உள்ளது.

**3.முன்னோட்டத்தின் அடிப்படையில், 'ஒரே நாடு ஒரே ரேசன் அட்டை' என்ற திட்டம், எந்தெந்த மாநிலங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது?**

A) தமிழ்நாடு, கேரளா மற்றும் கர்நாடகா

B) மத்திய பிரதேசம், மகாராஷ்டிரா மற்றும் குஜராத்

**C) ஆந்திரப்பிரதேசம், மகாராஷ்டிரா மற்றும் குஜராத் ☑**

D) தெலுங்கானா, மத்திய பிரதேசம் மற்றும் ஒடிசா



- ✓ தேசிய உணவுப் பாதுகாப்புக்கு மிகப்பெரிய அளவில் ஊக்கமளிக்கும் வகையில், இந்திய அரசானது ஆகஸ்ட்.1 முதல் தெலுங்கானா, ஆந்திரப்பிரதேசம், மகாராஷ்டிரா மற்றும் குஜராத் ஆகிய மாநிலங்களில், முன்னோட்டத்தின் அடிப்படையில், 'ஒரே நாடு ஒரே ரேசன் அட்டை' என்ற திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது. உணவுப் பாதுகாப்பு அட்டைகளைக் கொண்டுள்ள குடும்பங்கள், இந்தக் குறிப்பிட்ட மாநிலங்களில் உள்ள எந்த நியாய விலைக்கடைகளிலிருந்தும் மானிய விலையில் அரிசி மற்றும் கோதுமையை வாங்கிக்கொள்ளலாம். இந்தச் சேவையை பெற, அவர்களின் ரேசன் அட்டைகள், ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்டிருத்தல் அவசியம்.
- ✓ தெலுங்கானாவில், வெள்ளை ரேசன் அட்டை வைத்திருப்பவர்கள் அம்மாநிலத்தில் உள்ள எந்தவொரு நியாய விலைக்கடைகளிலிருந்தும் மானிய விலைப் பொருட்களைப் பெற்றுக் கொள்ளலாம். வரும் 2020 ஆகஸ்ட் மாதத்துக்குள் அனைத்து மாநிலங்களுக்கும் இந்தத் திட்டத்தை விரிவுபடுத்த மத்திய அரசு எண்ணம் கொண்டுள்ளது.

**4. 'Save Green, Stay Clean' என்னும் பரப்புரையைத் தொடங்கியுள்ள மாநில அரசு எது?**

**A) மேற்கு வங்கம் ☑**

B) பஞ்சாப்

C) ஹிமாச்சல பிரதேசம்

D) ஹரியானா




- ✓ மேற்கு வங்க அரசானது கொல்கத்தாவில் பசுமையை பாதுகாப்பதற்கும் சுற்றுச்சூழலை தூய்மையாக வைத்திருப்பதற்கும் 'Save Green, Stay Clean' என்னும் ஒரு பரப்புரையைத் தொடங்கியுள்ளது. மாநிலத்தில் பசுமைப்பரப்பை அதிகரிக்கும் நோக்குடன் மாநிலம் முழுவதும் 1 இலட்சத்துக்கும் மேற்பட்ட மரக்கன்றுகளை அம்மாநில அரசு விநியோகிக்கவுள்ளது.

**5.வீட்டுக்கான மின் இணைப்பின் கீழ், 200 அலகுகள் வரை பயன்படுத்தும் மக்களுக்கு இலவச மின்சாரத்தை அறிவித்துள்ள மாநில / யூனியன் பிரதேச அரசு எது?**

**A) தில்லி ☑**

B) ஆந்திரப்பிரதேசம்

C) மகாராஷ்டிரா

D) மத்திய பிரதேசம்



✓ தில்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால், அண்மையில் வீட்டுக்கான மின் இணைப்பின் கீழ், 200 அலகுகள் வரை பயன்படுத்தும் மக்களுக்கு இலவச மின்சாரத்தை அறிவித்துள்ளார். ஆகஸ்ட்.1 முதல் நடைமுறைக்கு வந்துள்ள இந்த அறிவிப்பு, வரும் 2020 பிப்ரவரியில் நடக்கவுள்ள தில்லி சட்டமன்றத் தேர்தலுக்கு ஆறு மாதங்களுக்கு முன்பாக வந்துள்ளது. 200 அலகுகளுக்குக் குறைவாக மின்சாரம் பயன்படுத்தும் நுகர்வோருக்கு மின்சாரக் கட்டணம் வசூலிக்கப்படமாட்டாது. 200 – 400 அலகு வரை பயன்படுத்துவோருக்கு, மின்சாரக் கட்டணத்தில் 50% மானியம் வழங்கப்படும்.

**6.ஐஸ்வரி பிரதாப் சிங் தோமர், எந்த விளையாட்டுடன் தொடர்புடையவர்?**

**A) துப்பாக்கி சுடுதல் ☑**

B) குத்துச்சண்டை

C) மல்யுத்தம்

D) பாட்மிண்டன்



✓ புது தில்லியில் நடந்த 12ஆவது சர்தார் சஜ்ஜன் சிங் சேத்தி நினைவு மாஸ்டர்ஸ் போட்டியில், மத்திய பிரதேசத்தைச் சேர்ந்த ஐஸ்வரி பிரதாப் சிங் தோமர், ஆண்கள் 'ரைபிள்–3' (3P) பிரிவில், 459.9 புள்ளிகள் பெற்று தங்கப்பதக்கம் வென்றார். வெள்ளி, வெண்கலப்பதக்கத்தை முறையே சஞ்சீவ் ராஜ்புத் (455.5 புள்ளிகள்), பருல் குமார் கைப்பற்றினர்.

**7. "Tools and Weapons: The Promise and the Peril of the Digital Age" என்ற நூலின் ஆசிரியர் யார்?**

A) சுந்தர் பிச்சை

**B) பிராட் ஸ்மித் (Brad Smith) ☑**

C) சத்யா நாதெல்லா

D) ஜெப் பெசோஸ்



✓ "Tools and Weapons: The Promise and the Peril of the Digital Age" என்ற நூலை மைக்ரோசாப்ட் தலைவர் பிராட் ஸ்மித் மற்றும் கரோல் ஆன் பிரவுன் இணைந்து எழுதியுள்ளனர். இந்த நூல், வரும் செப்டம்பர்.11 அன்று வெளியிடப்படும். இந்த நூல், பன்னாட்டு தொழில்நுட்ப நிறுவனத்தின் திரைக்குப்

பின்னாலான கதைகளைச் சொல்லும். தனியுரிமை, இணைய குற்றம் மற்றும் இணையப் போர், சமூக ஊடகங்கள் உள்ளிடவை இதிலடங்கும்.

**8.இந்திய வன மேலாண்மை நிறுவனம் (IIFM), எந்த நகரத்தில் அமைந்துள்ளது?**

A) ஜெய்ப்பூர்

**B) போபால் ☑**

C) டேராடூன்

D) தில்லி

✓ தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையமானது "இந்தியாவில் புலி காப்பகங்களின் பொருளாதார மதிப்பீடு: ஒரு மதிப்பு + அணுகுமுறை" என்ற தலைப்பில் ஓர் ஆய்வை வெளியிட்டுள்ளது. இந்த ஆய்வை, இந்திய வன மேலாண்மை நிறுவனத்தில் (போபால்) உள்ள சுற்றுச்சூழல் சேவைகள் மேலாண்மை மையம் எழுதியுள்ளது. இது பந்திப்பூர் புலிகள் காப்பகம் மற்றும் நாட்டின் 9 புலிகள் காப்பகத்தின் பொருளாதார மதிப்பீட்டை மதிப்பிடுகிறது. பாதுகாக்கப்பட்ட பகுதிகளின் முழுமையான பொருளாதார நன்மைகளை எடுத்துக்காட்டுவதன் மூலம் புலிகள் பாதுகாப்பை மேம்படுத்துவதே இவ்வறிக்கையின் நோக்கமாகும்.

✓ புலிகள் காப்பகத்தின் பொருளாதார, அறிவியல், கல்வி, கலாசார மற்றும் பொழுதுபோக்கு சேவைகளை தீர்மானிக்க ஆராய்ச்சியாளர்கள் பல முறைகளைப் பயன்படுத்தியுள்ளனர். மேல்காட் புலிகள் காப்பகம் (மகாராஷ்டிரா), நாகார்ஜுனாசாகர் ஸ்ரீசைலம் (ஆந்திரா), ஆனமலை (தமிழ்நாடு), பந்திப்பூர் (கர்நாடகா), தூத்வா (உத்தரப்பிரதேசம்), பக்கே (அருணாச்சல பிரதேசம்), பலாமூ (ஜார்க்கண்ட்), சிமிலிபால் (ஒடிசா), பன்னா (மத்திய பிரதேசம்) மற்றும் வால்மீகி (பீகார்) ஆகியவை ஆய்வு நடத்தப்பட்ட காப்பகங்களாகும்.

✓ 1982ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட IIFM என்பது வனம், சுற்றுச்சூழல் மற்றும் இயற்கைவள மேலாண்மை மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகளில் கல்வி, ஆராய்ச்சி, பயிற்சி மற்றும் ஆலோசனைகளில் ஈடுபட்டுள்ள ஒரு தேசிய அளவிலான முன்னணி நிறுவனமாகும்.

**9.நடப்பாண்டுக்கான உலக தாய்ப்பாலூட்டல் வாரத்தின் கருப்பொருள் என்ன?**

A) Breastfeeding and Work: Let's Make It Work!

B) Sustaining Breastfeeding Together

C) Breastfeeding: Foundation of Life

**D) Empower Parents, Enable Breastfeeding ☑**

WABA | WORLD BREASTFEEDING WEEK 2019
1-7 AUGUST 2019

✓ தாய்ப்பாலூட்டல் குறித்து பெற்றோர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதும், தாய்ப்பால் கொடுக்க பெற்றோரை ஊக்குவிப்பதையும் நோக்கமாகக் கொண்டு உலக தாய்ப்பாலூட்டல் வாரமானது ஆண்டு தோறும் நூற்றியிருபதுக்கும் மேற்பட்ட நாடுகளில் ஆக.1–7 வரை கடைப்பிடிக்கப்படுகிறது.

- ✓ தாய்ப்பாலின் முக்கியத்துவத்தைப் பற்றி ஒரு வாதிடும் பொருளை இந்த நாள் வழங்குகிறது. "Empower Parents, Enable Breastfeeding" என்பது நடப்பாண்டில் வரும் இவ்வாரத்துக்கான கருப்பொருளாகும். இது பாதுகாப்பு, ஊக்குவிப்பு & தாய்ப்பாலூட்டலுக்கான ஆதரவு ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது.

**10.இந்தியாவின் முதலாவது தேசிய நேர மேலாண்மை ஆய்வை (Time Release Study) நடத்தும் மத்திய அமைச்சகம் எது?**

A) உள்துறை அமைச்சகம்

**B) நிதி அமைச்சகம் ☑**

C) பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சகம்

D) மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம்



- ✓ வணிகர்களுக்குப் பயனளிக்கும் விதமாக நாட்டின் எல்லைப்புறங்களில் சரக்குப் போக்குவரவை விரைவுபடுத்தும் நோக்குடன் மத்திய நிதி அமைசக்கத்தின் வருவாய்த் துறையானது இந்தியாவின் முதலாவது நேர மேலாண்மை ஆய்வை (Time Release Study – TRS) ஆக.1–7 வரை நடத்துகிறது. இந்த ஆய்வு, வருடாந்திர அடிப்படையில் இனி ஒவ்வோர் ஆண்டும் இதே காலகட்டத்தில் நடத்தப்படும். TRS என்பது பன்னாட்டு வணிகப் போக்குவரத்தின் செயல்திறனை அளவிடுவதற்காக உலக சுங்க அமைப்பினால் பரிந்துரை செய்யப்பட்ட, பன்னாட்டளவில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு கருவியாகும்.

- ✓ இது கடல், வான், நிலம், மற்றும் உலர் துறைமுகங்கள் உட்பட 15 துறைமுகங்களில் ஒரே நேரத்தில் நடத்தப்படும். தேசிய TRS ஆனது அடிப்படை செயல்திறன் அளவீட்டை நிறுவும் மற்றும் அனைத்துத் துறைமுகங்களிலும் தரப்படுத்தப்பட்ட செயல்பாடுகளையும் நடைமுறைகளையும் அது கொண்டிருக்கச் செய்யும். TRS முடிவுகளின் அடிப்படையில், எல்லை தாண்டிய வணிகத்துடன் தொடர்புடைய அரசு நிறுவனங்கள், தடையற்ற வணிகப் போக்குவரவிற்கு தடைகளாக இருக்கும் தற்போதைய தடைகளை கண்டறிய முடியும். மேலும் சரக்கு மேலாண்மை நேரத்தை குறைப்பதற்கான தீர்வு நடவடிக்கைகளை எடுக்க முடியும். இம்முயற்சி, மத்திய மறைமுக வரி மற்றும் சுங்க வாரியத்தின் தலைமையில் உள்ளது.

# நடப்பு நிகழ்வுகள்


**1. கினிய குடியரசின் "National order of Merit" என்ற மிகவுயர்ந்த விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட இந்தியர் யார்?**

A) இராஜ்நாத் சிங்

**B) இராம்நாத் கோவிந்த் ☑**

C) நரேந்திர மோடி

D) சுப்பிரமணியம் ஜெய்சங்கர்



- ✓ ஒட்டுமொத்த உறவுகளின் முன்னேற்றத்திற்கும், இந்தியாவுக்கும் கினியாவுக்கும் இடையிலான பரஸ்பர ஒத்துழைப்பின் வளர்ச்சிக்கும், இருநாடுகளின் மக்களிடையேயான நட்பையும் கூட்டாண்மை –யையும் மேம்படுத்துவதில் சிறப்பான பங்களிப்பை வழங்கியதற்காகவும் இந்திய குடியரசுத்தலைவர் இராம்நாத் கோவிந்துக்கு "National Order of Merit" என்ற மிகவுயர்ந்த கௌரவத்தை கினிய குடியரசுத் தலைவர் வழங்கியுள்ளார். இது கினிய குடியரசின் மிகவுயர்ந்த விருதாகும்.

- ✓ இதுதவிர, இரண்டு நாடுகளுக்கும் இடையே பாரம்பரிய மருத்துவ முறை துறையில் ஒத்துழைப்பு, e–வித்யாபாரதி – e–ஆரோக்கியா பாரதி வலையமைப்புத் திட்டம் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆகிய மூன்று புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன. கொனாக்ரி நகரத்தின் நீர் வழங்கல் திட்டத்திற்காக குடியரசுத்தலைவர் இராம்நாத் கோவிந்த் $170 மில்லியன் அமெரிக்க டாலர் கடனை அறிவித்துள்ளார். சமகால யதார்த்தங்களை பிரதிபலிக்கும் வகையில் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புக் குழுவின் சீர்திருத்தத்தின் அவசியத்தையும் இருநாடுகளும் ஒப்புக்கொண்டுள்ளன.

**2. நடுத்தர–ரக அணுவாயுதங்கள் தடை ஒப்பந்தத்தில் இருந்து (Intermediate–Range Nuclear Forces Treaty – INF) அதிகாரப்பூர்வமாக விலகியுள்ள நாடு எது?**

A) பிரான்சு

B) ஜெர்மனி

**C) அமெரிக்க ஐக்கிய நாடுகள் (USA) ☑**

D) ஐக்கிய பேரரசு



- ✓ இரஷ்யாவுடனான நடுத்தர – ரக அணுவாயுதங்கள் தடை ஒப்பந்தத்திலிருந்து (INF) அமெரிக்க ஐக்கிய நாடுகள் அதிகாரப்பூர்வமாக விலகியுள்ளது. INF ஒப்பந்தம் என்பது 1987ஆம் ஆண்டில் அப்போதைய அமெரிக்க அதிபர் ரொனால்ட் ரீகன் மற்றும் சோவியத் தலைவர் மிக்கேல் கோர்பச்சேவ் ஆகியோரால் கையெழுத்திடப்பட்ட ஒரு பனிப்போர் கால ஏவுகணை ஒப்பந்தமாகும்.

- ✓ இந்த ஒப்பந்தம், இருநாடுகளையும் 500 கி.மீ – 5500 கி.மீ வரை சென்று தாக்கவல்ல ஏவுகணைகளை பயன்படுத்துவதிலிருந்து தடைசெய்தது. இரு வல்லரசு நாடுகளுக்கு (அப்போது) இடையிலான ஆயுதப் போட்டியை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான ஒரு முக்கிய அம்சமாக இந்த ஒப்பந்தம் இருந்தது.

மேலும், ஐரோப்பாவில் உள்ள அமெரிக்காவின் NATO நட்பு நாடுகளை சோவியத் யூனியனின் ஏவுகணைத் தாக்குதல்களிலிருந்து பாதுகாக்கவும் அது உதவியது.

✓ ஐரோப்பாவை குறுகிய கால இடைவெளியில் தாக்கவல்ல Novator 9M729 (NATO "SSC-8" வகை) ஏவுகணைகளைப் பயன்படுத்தி வருவதன் மூலம் இந்த ஒப்பந்தத்தை இரஷ்யா மீறிவருவதாக ஒபாமா மற்றும் டிரம்ப் நிர்வாகங்கள் பலமுறை குற்றம்சாட்டியுள்ளன. ஆனால், இதை இரஷ்யா மறுத்துவந்தது. இதுவே, ஐக்கிய அமெரிக்க நாடுகள் (USA) இந்த ஒப்பந்தத்திலிருந்து விலகுவதற்கான காரணமாகும்.

**3.பெண் குழந்தைகளின் நலனுக்காக 'வாலி டிக்ரி யோஜனா' என்ற திட்டமொன்றை அறிமுகம் செய்துள்ள மாநில அரசு எது?**

**A) குஜராத் ☑**

B) மத்திய பிரதேசம்

C) இராஜஸ்தான்

D) சத்தீஸ்கர்



✓ ஆகஸ்ட்.3 அன்று பெண் குழந்தைகளின் நலனுக்காக இராஜ்கோட்டில் 'வாலி டிக்ரி யோஜனா' என்ற ஒரு திட்டத்தை குஜராத் முதல்வர் விஜய்ரூபானி தொடங்கிவைத்தார். இது, குஜராத் மாநிலத்தில் பிறந்த ஒவ்வொரு பெண் குழந்தைக்கும் நிதயுதவி அளிக்கும் திட்டமாகும். பாலின சமத்துவத்தை அடையும் பொருட்டு, பெண் குழந்தை பிறப்பு விகிதத்தை ஆண் குழந்தை பிறப்பு விகிதத்துக்கு இணையாக உயர்த்தும் நோக்கோடு இந்தத் திட்டம் உள்ளது.

✓ இத்திட்டத்தின்படி, ஒவ்வொரு பெண் குழந்தைக்கும், அக்குழந்தை 4ஆம் வகுப்பில் சேர்க்கப்படும்போது ரூ.4000-/உம், 9ஆம் வகுப்புக்கு செல்லும்போது ரூ.6000-/உம், 18 வயதில் உயர்கல்வியில் சேரும் போது ரூ.1 இலட்சமும், திருமணத்தின்போது மீண்டும் ரூ.1 இலட்சமும் வழங்கப்படும். இத்திட்டத்திற்கு என, சுமார் ரூபாய் 133 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**4.சீனத்தின் தேசிய முன்கூட்டியே பணஞ்செலுத்தும் அமைப்புடன் (China's National Advance Payment System – CNAPS) இணைந்துள்ள முதல் இந்திய வங்கி எது?**

A) பரோடா வங்கி

B) ஐசிஐசிஐ வங்கி

**C) இந்திய ஸ்டேட் வங்கி (SBI) ☑**

D) பஞ்சாப் தேசிய வங்கி



✓ இந்திய ஸ்டேட் வங்கியின் (SBI) ஷாங்காய் கிளையானது சீனத்தின் தேசிய முன்கூட்டியே பணஞ் செலுத்தும் அமைப்புடன் (CNAPS) இணைந்த முதல் இந்திய வங்கியாக மாறியுள்ளது. CNAPSஇன் உறுப்பினரானபின், SBI ஷாங்காய் கிளையால், சீனத்துக்குள், உள்ளூர் பணங்களை PBOC மூலம் வழிநடத்துவதன் மூலம் நிகழ்நேர பரிமாற்றத்தையும் (Realtime Transfer) அளிக்க முடியும்.

- ✓ பணப் பரிமாற்றத்துக்காக பல்வேறு வங்கிகளுடன் கணக்குகளை பராமரிப்பதன் தேவையை இது நீக்குகிறது. சீனப்பெருநிலத்தில் தீர்க்கப்பட்ட அனைத்துக் கொடுப்பனவுகளுக்கும் (Cleared Payments), அதேபோல், ஹாங்காங் போன்ற அக்கரை யுவான் (Yuan) மையங்களில் உள்ள அனைத்து தீர்வக வங்கிகளுக்கும் (Clearing Banks) CNAPS நிகழ்நேர தீர்வுச் சேவைகளை வழங்குகிறது.
- ✓ சீன நாணயமான யுவானின் சர்வதேச பயன்பாட்டை அதிகரிக்கும் நோக்கத்துடன் 2015ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட CNAPS அமைப்பின் பன்னாட்டுப் போட்டியாளரான CIPSஆல் (சீன பன்னாட்டுக் கொடுப்பனவு அமைப்பு அல்லது எல்லை கடந்த வங்கிகளுக்கு இடையேயான பணஞ்செலுத்தும் முறை) CNAPSஇன் சில குறைகள் பூர்த்திசெய்யப்பட்டன. 2008ஆம் ஆண்டில், சீன மக்கள் வங்கியால் (PBOC) CNAPS தொடங்கப்பட்டது.

### 5.அண்மையில் காலமான தேவதாஸ் கனகலா, எந்த மொழி திரைத்துறை சார்ந்த நடிகராவார்?



A) தமிழ்


**B) தெலுங்கு ☑**

C) மலையாளம்

D) கன்னடம்

- ✓ மூத்த தெலுங்கு நடிகரான தேவதாஸ் கனகலா (75), ஆக.3 அன்று ஹைதராபாத்தில் காலமானார். தென்னிந்திய நடிகர்களான இரசினிகாந்த், சிரஞ்சீவி மற்றும் இராசேந்திர பிரசாத் ஆகியோருக்கு, தான் நடத்தி வந்த திரைப்பட நிறுவனம் மூலம் பயிற்சியளித்தவராக இவர் அறியப்படுகிறார்.

### 6.மிஸ் இங்கிலாந்து 2019 மகுடம் சூட்டப்பட்ட இந்திய வம்சாவளி பெண்மணி யார்?



A) சுவாதி சர்மா

B) ரோஷிணி ராய்

**C) பாஷா முகர்ஜி ☑**

D) சுவேதா சிங்

- ✓ இந்திய வம்சாவளி மருத்துவரான பாஷா முகர்ஜி (23), நடப்பாண்டு 'மிஸ் இங்கிலாந்து' என மகுடம் சூட்டப்பட்டுள்ளார். 146 IQ கொண்டவரும் ஆங்கிலம், பெங்காலி, ஹிந்தி, ஜெர்மன் மற்றும் பிரெஞ்சு ஆகிய 5 மொழிகளில் சரளமாக உரையாட கூடியவருமான இவர், நாட்டிங்ஹாம் பல்கலைக்கழகத்தில் மருத்துவ அறிவியலில் ஒரு பட்டமும், மருத்துவம் & அறுவைச்சிகிச்சையில் ஒரு பட்டமும் பெற்றுள்ளார்.
- ✓ 2019 'மிஸ் இங்கிலாந்து' பட்டம் வென்றதன் மூலம், அவர் உலக அழகிப் போட்டிக்கு நேரடியாக தகுதி பெற்றுள்ளார். விடுமுறையில் மொரிஷியஸ் செல்லும் வாய்ப்பும் அவருக்குக் கிடைத்துள்ளது.

**7.மக்கள்தொகை கணக்கெடுப்பு (Census) 2021, எத்தனை அட்டவணைப்படுத்தப்பட்ட மொழிகளில் (Scheduled Languages) நடத்தப்படும்?**

A) 16

**B) 18 ☑**

C) 22

D) 20

**மக்கள்தொகை கணக்கெடுப்பு**

- ✓ 16ஆவது மக்கள்தொகை கணக்கெடுப்பு 2021 ஆனது அட்டவணைப்படுத்தப்பட்ட 22 மொழிகளுள் 18 மொழிகளில் நடத்தப்படவுள்ளது. மக்கள்தொகை கணக்கெடுப்பு 2011 ஆனது அட்டவணைப்படுத்தப்பட்ட 18 மொழிகளுள் 16 மொழிகளில் நடத்தப்படும் என அப்போது அறிவிக்கப்பட்டிருந்தது. செயல்முறையை சீராக்க, இந்தக் கணக்கெடுப்பில், ஒரு குறியீடு கோப்பகம் (Code Directory) அறிமுகப்படுத்தப்படவுள்ளது.
- ✓ முக்கியமாக, எடுக்கப்படவுள்ள இந்த மக்கள்தொகை கணக்கெடுப்பு, தற்போதுள்ள திட்டத்தின் படி, சாதி சார்ந்த தரவுகளை சேகரிக்காது. பாலின பிரிவின் கீழ், 'பிற' என்றிருந்த விருப்பத்தெரிவானது இப்போது 'மூன்றாம் பாலினம்' என்று மாற்றம் செய்யப்பட்டுள்ளது. ஏப்ரல் 2020 முதல் செப்டம்பர் 2020 வரை 34 அளவுருக்கள் கொண்ட வீட்டுவசதி பட்டியலிடலும், பிப்ரவரி 9 2021 முதல் பிப்ரவரி 28 2021 வரை 28 அளவுருக்கள் கொண்ட மக்கள்தொகை கணக்கெடுப்பும் என இந்த மக்கள்தொகை கணக்கெடுப்பு இரண்டு கட்டங்களாக நடத்தப்படவுள்ளது.
- ✓ 31 இலட்சம் பயிற்சிபெற்ற கணக்கீட்டாளர்கள் ஆண்ட்ராய்டு அடிப்படையிலான அலைபேசிகளைப் பயன்படுத்தி எண்ணிம முறையில் தரவுகளைச் சேகரிக்கும் இந்தப் பணியில் ஈடுபடவுள்ளனர். 2024 – 2025ஆம் ஆண்டுக்குள் இந்த மக்கள்தொகை கணக்கெடுப்பு குறித்த முழுத்தரவுகளும் கிடைக்கும்.

**8.அரசியலமைப்பின் எப்பிரிவின்படி, குற்றஞ்சாட்டப்பட்டவர்களின் குரல் மாதிரிகளை பெறுவதற்கு ஆணையிட குற்றவியல் நீதித்துறை நீதிபதிக்கு அதிகாரம் உண்டென இந்திய உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது?**

A) பிரிவு 144

**B) பிரிவு 142 ☑**

C) பிரிவு 143

D) பிரிவு 141



- ✓ குற்றவியல் விசாரணையின்போது, ஒரு குற்றவாளியின் சம்மதத்திற்கு எதிராகக்கூட அவரின் குரல் மாதிரிகளைப் பெற குற்றவியல் நீதித்துறை நடுவரால் உத்தரவிட முடியும் என உச்சநீதிமன்றம் அண்மையில் தீர்ப்பளித்துள்ளது. இந்தத் தீர்ப்பை, இந்திய தலைமை நீதிபதி இரஞ்சன் கோகோய் தலைமையிலான அமர்வு மற்றும் நீதிபதிகள் தீபக் குப்தா மற்றும் சஞ்சீவ் கன்னா ஆகியோர் அடங்கிய அமர்வு வழங்கியது.

- ✓ குற்றவியல் நடைமுறை விதித் தொகுப்பில் (CrPC) எந்தவொரு முன்னேற்பாடும் இல்லாதிருந்தால், குற்றஞ்சாட்டப்பட்ட நபரின் குரல் மாதிரியைப்பதிவுசெய்ய ஒரு புலனாய்வு விசாரணை நிறுவனத்திற்கு அங்கீகாரம் வழங்க முடியுமா? என்பது உள்ளிட்ட பிரச்சனைகளை அந்த அமர்வு கையாண்டது. சம்பந்தப்பட்ட அனைத்து சட்டங்களுக்கும் விளக்கம் அளித்ததைத்தொடர்ந்து அரசியலமைப்பின் 142ஆவது பிரிவின் கீழ் உச்சநீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது என CJI சுட்டிக்காட்டியுள்ளது.

**9.எந்தக் குழுவின் அறிக்கையின்படி, UGC ஆனது 20 நிறுவனங்களை 'சிறந்த நிறுவனங்கள்' (Institutes of Eminence – IoE) எனப் பரிந்துரைத்துள்ளது?**

A) அம்பிகா சோனி குழு

B) N S விஸ்வநாதன் குழு

**C) N கோபாலசுவாமி குழு ☑**

D) விரால் ஆச்சார்யா குழு



- ✓ மெட்ராஸ் மற்றும் கரக்பூர் IIT நிறுவனங்கள், தில்லி பல்கலைக்கழகம், ஹைதராபாத் பல்கலைக்கழகம், அமிர்த விசுவ வித்யாபீடம் மற்றும் VIT போன்ற இருபது கல்வி நிறுவனங்களுக்கு, 'சிறந்த கல்வி நிறுவனங்கள்' என்னும் தகுதியை வழங்க பல்கலைக்கழக மானியக்குழு (UGC) பரிந்துரைத்துள்ளது.
- ✓ N கோபாலசுவாமியின் தலைமையிலான வல்லுநர் குழுவின் அறிக்கைகளின் அடிப்படையில், இந்தப் பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சர்வதேச கல்வி வரைபடத்தில் இந்தியாவை பிரதிநிதித்துவ –ப்படுத்தும் இருபது உலகத்தரம் வாய்ந்த கல்வி நிறுவனங்களை உருவாக்குவதே இந்த 'சிறந்த கல்வி நிறுவனங்கள்' திட்டத்தின் நோக்கமாகும்.
- ✓ தேர்ந்தெடுக்கப்பட்ட கல்வி நிறுவனங்களுக்கு கட்டணம், பாடத்திட்டத்தின் காலம் மற்றும் நிர்வாகக் கட்டமைப்புகளை தீர்மானிப்பதற்கு அதிக சுயாட்சி மற்றும் சுதந்திரம் வழங்கப்படும். பட்டியலில் உள்ள பொதுத்துறை நிறுவனங்களுக்கு அரசாங்கம் ரூ.1000 கோடி மானியம் வழங்கும். பட்டியலில் உள்ள தனியார் நிறுவனங்களுக்கு இந்தத் திட்டத்தின்கீழ் எந்த நிதியும் அளிக்கப்படாது.

**10.திடக்கழிவு மேலாண்மைக்காக நீர்வெப்பக் கரியாக்கத் தொழில்நுட்பத்தை (Hydro Thermal Carbonization – HTC) உருவாக்கியுள்ள IIT நிறுவனம் எது?**

A) ஐஐடி கான்பூர்

**B) ஐஐடி கரக்பூர் ☑**

C) ஐஐடி மெட்ராஸ்

D) ஐஐடிடெல்லி




- ✓ IIT கரக்பூரைச் சேர்ந்த ஓர் ஆராய்ச்சிக் குழுவினர் அதிக ஈரப்பதங்கொண்ட திடக்கழிவுகளிலிருந்து ஆற்றலை உருவாக்கக்கூடிய ஒரு தொழில்நுட்பத்தை உருவாக்கியுள்ளனர். இந்தப் புதிய, நீர்வெப்பக் கரியாக்கத் தொழில்நுட்பத்தால் நகராட்சி திடக்கழிவுகளை உயிரி எரிபொருள், மண் திருத்தி மற்றும்

உறிஞ்சியாக மாற்ற முடியும். ஒரு தொகுப்புலையை பயன்படுத்துவதன் மூலம் நகராட்சி திடக்கழிவின் கரிமப்பகுதியை நீர்வெப்பக்கரியாக (Hydrochar) இந்தத் தொழில்நுட்பம் மாற்றுகிறது.

- ✓ கழிவுகளில் உள்ள ஈரப்பதமானது வேதிவினைக்கு தண்ணீரைப்பயன்படுத்தும் செயல்முறைக்காகப் பயன்படுத்தப்படுகிறது. இந்தச் செயல்முறை, நகர்ப்புற கரிமக்கழிவுகளில் 50 – 65% வரை வள மீட்பு விளைச்சலை (Resource Recovery Yield) அதிகரித்துள்ளது. மேம்பட்ட வெப்ப ஒருங்கிணைப்புடன் கூடிய முறையான நீர்வெப்பக் கரியாக்கத் தொழில்நுட்ப உலையை வடிவமைப்பதில்தான் இந்தத் தொழில்நுட்பத்தின் வெற்றிக்கான திறவுகோல் உள்ளது.

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- ✓ சென்னையில் உள்ள இந்திய ரிசர்வ் வங்கியின் (RBI) பிராந்திய இயக்குநராக, தமிழ்நாடு மற்றும் புதுச்சேரிக்கு, S M N சுவாமி பொறுப்பேற்றுள்ளார்.
- ✓ ஆகஸ்ட்.15 முதல் நீலகிரி மாவட்டத்தில் நெடுஞ்சாலை ஓரங்களில் உள்ள கடைகளில் நெகிழி போத்தல்களில் குடிநீர் மற்றும் குளிர்பானம் விற்க தடைவிதிக்கப்படவுள்ள நிலையில், முக்கியமான 70 சுற்றுலாத்தலங்களில் தண்ணீர் ATMகள் திறக்கப்படவுள்ளன.
- ✓ தூத்துக்குடி வ.உ.சி துறைமுகம் ஜூலை.27 அன்று ஒரேநாளில் 1,80,597 மெட்ரிக் டன் சரக்குகளைக் கையாண்டு சாதனை படைத்துள்ளது. இதற்கு முன்பு, கடந்த 2017 நவம்பர்.16 அன்று ஒரே நாளில் 1,77,639 மெட்ரிக் டன் சரக்குகளைக் கையாண்டதே சாதனையாக இருந்தது.
- ✓ சென்னையில் 7 வழித்தடங்களில் விரைவுப் பேருந்து சேவை திட்டத்தை (**B**us **R**apid **T**ransit **S**ystem) செயல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. வழித்தடங்கள் விவரம்.,
  - *கோயம்பேடு – பூந்தமல்லி.*
  - *சைதாப்பேட்டை – மகேந்திரா சிட்டி.*
  - *கோயம்பேடு – அம்பத்தூர்.*
  - *கோயம்பேடு – சைதாப்பேட்டை.*
  - *கோயம்பேடு – மாதவரம்.*
  - *குரோம்பேட்டை – துரைப்பாக்கம்.*
  - *சைதாப்பேட்டை – சிறுசேரி.*
- ✓ சென்னையில் தினசரி பொதுமக்களிடமிருந்து சேகரிக்கப்படும் உணவுக் கழிவுகளிலிருந்து இயற்கை எரிவாயு தயாரிக்கும் வகையில் பள்ளிக்கரனை, சோழிங்கநல்லூர், அண்ணாநகர் முதலிய மூன்று இடங்களில் இயற்கை எரிவாயு ஆலைகளை அமைக்க சென்னை மாநகராட்சி முடிவு செய்துள்ளது.
- ✓ சென்னை அருகில் உள்ள வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவுக்கு அஸ்ஸாம் மாநிலம் காசிரங்கா தேசியப்பூங்காவிலிருந்து நான்கு வயதான ஆண் காண்டாமிருகம் ஒன்று கொண்டு வரப்பட்டுள்ளது. சுமார் முப்பது ஆண்டுகளுக்குப் பின்பு இந்தப் பூங்காவுக்கு காண்டாமிருகம் கொண்டு வரப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# நடப்பு நிகழ்வுகள்


**1. அண்மையில் காலமான காந்தி பட், எந்தத் துறையைச் சார்ந்தவராக இருந்தார்?**

**A) இதழியல் ☑**

B) அரசியல்

C) விளையாட்டு

D) கலை



✓ மூத்த குஜராத்தி பத்திரிகையாளரும், எழுத்தாளரும், கட்டுரையாளருமான காந்தி பட் (88), மும்பையில் காலமானார். இவர் 1931 ஜூலை 15 அன்று குஜராத்தின் அந்நாளைய பாவ்நகர் மாகாணத்தில் உள்ள சச்ரா என்ற சிற்றூரில் பிறந்தார். 1960களின் பிற்பகுதியில் மும்பையில் நிதியியல் இதழாளராக தனது இதழியல் பணியை அவர் தொடங்கினார். சித்ரலேகா, மும்பை சமாச்சார், ஜனசக்தி, சந்தேஷ், யுவ தர்சன், ஜனசத்தா, வியாபார் மற்றும் அபியான் போன்ற பல்வேறு குஜராத்தி இதழ்களில் இதழாளர், எழுத்தாளர், கட்டுரையாளர் மற்றும் ஆசிரியராக இவர் பணியாற்றியுள்ளார். 'அபியான்' என்னும் ஒரு முன்னணி குஜராத்தி இதழின் நிறுவன ஆசிரியராகவும் இவர் இருந்துள்ளார்.

**2. அண்மையில் காலமான ஆனந்த் செடல்வாட், எந்த விளையாட்டின் மூத்த ஆளுமையாவார்?**

A) பாட்மிண்டன்

B) ஹாக்கி

C) குத்துச்சண்டை

**D) கிரிக்கெட் ☑**



✓ கிரிக்கெட் வர்ணனையாளரான ஆனந்த் செடல்வாட் (84), ஆகஸ்ட்.4 அன்று மும்பையில் காலமானார். அவரது இனிமையான ஏற்றவிறக்கம் மிக்கக் குரலானது, 1960களின் மத்தியிலிருந்து 1980கள் வரை மற்ற கிரிக்கெட் வர்ணனையாளர்களிடமிருந்து அவரை வேறுபடுத்திக் காண்பித்தது. ரஞ்சிக்கோப்பை, BCCI போட்டிகள் & தகுதிகாண் போட்டிகளுக்கும் AIRஇன் வர்ணனையாளராக அவர் இருந்துள்ளார். 1969ஆம் ஆண்டு மும்பையில் நடந்த இந்திய–ஆஸ்திரேலிய தகுதிகாண் போட்டிக்கான AIR குழுவிலும் அவர் இடம்பெற்றிருந்தார்.

**3. சாத்விக்சாய்ராஜ் ராங்கிரெட்டி, எந்த விளையாட்டுடன் தொடர்புடையவர்?**

**A) பாட்மிண்டன் ☑**

B) ஹாக்கி

C) குத்துச்சண்டை

D) மல்யுத்தம்



- ✓ BWF சூப்பர் 500 பூப்பந்து போட்டியை வென்ற முதல் இந்திய ஜோடியாக சாத்விக்சாய்ராஜ் ராங்கிரெட்டி – சிராக் ஷெட்டி ஆகியோர் திகழ்கின்றனர். பாங்காக்கில் நடந்த தாய்லாந்து ஓப்பனில் 21–19, 18–21, 21–18 என்ற செட் கணக்கில் உலக சாம்பியனான சீனத்தின் லி ஜுன் ஹுய் மற்றும் லியு யூ சென் ஆகியோரை வீழ்த்தி, ஆண்கள் இரட்டையர் பிரிவில் அவர்கள் வெற்றிவாகைசூடினர்.

**4. எந்த நகரத்தில், விண்வெளி சூழ்நிலை விழிப்புணர்வு கட்டுப்பாட்டு மையத்தை அமைக்க ISRO முடிவுசெய்துள்ளது?**



A) கொச்சின்

**B) பெங்களூரு ☑**

C) ஹைதராபாத்

D) இராய்ப்பூர்

- ✓ ISRO தலைவர் K சிவன், அண்மையில், பெங்களூருவின் பீனியாவில் விண்வெளி சூழ்நிலை விழிப்புணர்வு கட்டுப்பாட்டு மையத்திற்கு (Space Situational Awareness Control Centre – SSACC) அடிக்கல் நாட்டினார். விண்வெளிக்குப்பைகளிலிருந்து அதிக மதிப்புள்ள விண்வெளிச்சொத்துக்களை கண்காணித்து பாதுகாப்பதே இந்தக் கட்டுப்பாட்டு மையத்தின் நோக்கமாகும். விண்வெளி சூழ்நிலை விழிப்புணர்வு மற்றும் மேலாண்மைக்கான நடவடிக்கைகளை இந்த மையம் முன்னறிவிக்கும்.
- ✓ இந்நடவடிக்கை, இந்தியாவின் விலையுயர்ந்த மற்றும் உத்திசார் முக்கியத்துவம் வாய்ந்த செயற்கைக் கோள்கள் மற்றும் எதிர்கால விண்கலங்களை விண்வெளியில் சுற்றிவரும் செயலிழந்த செயற்கைக் கோள்களின் எச்சங்கள், பூமிக்கு அருகிலுள்ள சிறுகோள்கள் மற்றும் தீவிர வானிலை சூழ்நிலைகள் ஆகியவற்றிலிருந்து பாதுகாக்கும். உள்நாட்டு கண்காணிப்பு மையங்களிலிருந்து செயலிழந்த செயற்கைக்கோள்களின் கண்காணிப்புத் தரவை இது ஒருங்கிணைக்கும்.

**5. VPM1002 & Immuvacக்கான இந்தியாவின் முதலாவது பெரிய அளவிலான சோதனையானது எந்த நோயுடன் தொடர்புடையது?**



A) AIDS

B) மலேரியா

**C) காசநோய் ☑**

D) இளம்பிள்ளை வாதம்

- ✓ இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கவுன்சிலானது (ICMR) VPM1002 மற்றும் Immuvac என்ற இரண்டு புதிய காசநோய் (Tuberculosis) தடுப்பூசிகளுக்கான இந்தியாவின் முதல் பெரிய அளவிலான சோதனையை தொடங்கியுள்ளது. VPM1002 தடுப்பூசியை புனேவின் சீரம் (Serum) இந்தியா நிறுவனம் தயாரிக்கிறது. Immuvac தடுப்பூசியை கேடிலா (Cadila) என்ற மருந்துநிறுவனம் தயாரிக்கிறது.

✓ இந்தக் காசநோய் எதிர்ப்பு தடுப்பூசிகள், தொற்றைத்தடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன (நோய் வெளிப்பாட்டுக்கு முன்பாக) அல்லது முதல்நிலை முன்னேற்றம் / மறைந்துள்ள காசநோய்த் தொற்று மறுசெயல்பாட்டுக்கு வருவதைத் தடுக்கின்றன (நோய் வெளிப்பாட்டுக்கு பின்பாக). உலக சுகாதார அமைப்பு வெளியிட்டுள்ள சர்வதேச காசநோய் அறிக்கை 2017இன் படி, உலகில் அதிகளவு காசநோய் பாதிப்பானது இந்தியாவில் உள்ளது.

**6.எந்தத் தேதியில், நடப்பாண்டின் ஐ.நா. சர்வதேச நட்பு நாள் கொண்டாடப்பட்டது?**

A) ஜூலை 24

**B) ஜூலை 30** ☑

C) ஜூலை 26

D) ஜூலை 27




✓ பல்வேறு கலாசாரங்களுக்கிடையில் அமைதியை வளர்ப்பதில் நட்பின் முக்கியத்துவத்தைக் நோக்கும் வகையில், ஒவ்வோர் ஆண்டும் ஜூலை.30 அன்று உலகம் முழுவதும் ஐ.நா. சர்வதேச நட்பு நாள் (UN International Day of Friendship) கொண்டாடப்படுகிறது. உலகெங்கும் உள்ள மாந்தர்களின் வாழ்வில் ஓர் உன்னதமான மற்றும் மதிப்புமிக்க உணர்வாக உள்ள நட்பின் முக்கியத்துவத்தை அங்கீகரிப்பதன் அடிப்படையில் இந்நாள் அமைந்துள்ளது. இருப்பினும், ஆகஸ்ட் முதல் ஞாயிற்றுக்கிழமை, இந்தியா நட்பு நாளை கொண்டாடுகிறது.

**7.எண்ணிம கைரேகை (Digital Fingerprint) மற்றும் கருவிழி மேவல் (Iris Scanning) முறையை ஏற்றுக்கொண்டுள்ள இந்தியாவின் முதல் மாநிலம் எது?**

A) சத்தீஸ்கர்

**B) மகாராஷ்டிரா** ☑

C) இராஜஸ்தான்

D) ஒடிசா



✓ காவல்துறை விசாரணைகளுக்கு உதவுவதற்காக எண்ணிம கைரேகை மற்றும் கருவிழி மேவல் முறையை – (Automated Multi–modal Biometric Identification System – **AMBIS**) – ஏற்றுக்கொண்டுள்ள இந்தியாவின் முதல் மாநிலமாக மகாராஷ்டிரா மாறியுள்ளது. இந்த முறையானது விரைவில் நாடு முழுவதும் உள்ள பிற மாநிலக் காவல்துறையினரால் பயன்படுத்தப்படவுள்ளது. ஒரு AMBIS அலகானது ஒரு கணினி முனையம், ஒரு கேமரா, மற்றும் கருவிழி, கைரேகை மற்றும் உள்ளங்கை மேவல் கருவிகளைக் கொண்டிருக்கும். குற்றம் நடைபெற்ற இடத்திலிருந்து கைரேகைகளை எடுப்பதற்காக ஒரு சிறிய அளவிலான அமைப்பும் இதில் இடம்பெற்றிருக்கும்.

✓ இந்தப் புதிய அமைப்பானது இந்திய சட்ட அமலாக்க நிறுவனங்களால் கைவிரல் மற்றும் உள்ளங்கை ரேகைகளைத் தேட பயன்படுத்தப்படும் தானியங்கு கைரேகை அடையாளங்காணல் அமைப்புக்கு (Automated Fingerprint Identification System – **AFIS**) மாற்றாக இருக்கும்.

**8.ரூ.4900 கோடி மதிப்பிலான கோசி – மேச்சி இணைப்புத் திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. எந்த ஆற்று வடிநிலத்தின் முக்கிய கிளையாறாகும் மேச்சி?**



A) கங்கை

**B) மகாநந்தா ☑**


C) பிரம்மபுத்திரா

D) யமுனை

✓ பீகார் மாநிலத்தின் கோசி & மேச்சி ஆறுகளை ஒன்றிணைப்பதற்காக ரூ.4900 கோடி மதிப்பிலான கோசி – மேச்சி இணைப்புத் திட்டத்திற்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மத்தியபிரதேசத்தில் கென் – பெத்வா திட்டத்திற்குப்பிறகு, ஒப்புதல் அளிக்கப்பட்ட நாட்டின் இரண்டாவது மிகப்பெரிய ஆறுகள் இணைப்புத் திட்டம் இதுவாகும். இந்தக் கோசி – மேச்சி திட்டம், பல வழிகளில் தனித்துவமுடையது.

✓ இது வடக்கு பீகாரில் மீண்டும் மீண்டும் வரும் வெள்ளத்தைத் தடுப்பதோடு மட்டுமல்லாமல், அரேரியா, பூர்னியா, கிசான்கஞ்ச் & கதிகார் மாவட்டங்களில் (கூட்டாக சீமாஞ்சல் பகுதி என்றழைக்கப்படுகிறது) 2.14 லட்சம் ஹெக்டேருக்கு மேல் சாகுபடி நடக்கக்கூடிய நிலங்களுக்கு நீர்ப்பாசனத்தை அளிக்கிறது. மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின் தொழில்நுட்பத்துடன் கூடிய நிர்வாக இசைவைப் பெற்றபிறகே இந்தத் திட்டத்திற்கு இந்த ஒப்புதல் கிடைத்தது. மேச்சி, மகானந்தா ஆற்றின் முதன்மையான கிளையாறாகும்.

**9.விக்டோரிய அரசாங்கத்தால் 'Excellence in Cinema' விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ள நடிகர் யார்?**



A) பிரியங்கா சோப்ரா

B) சேகர் கபூர்

**C) ஷாருக்கான் ☑**

D) தீபிகா படுகோனே

✓ ஆகஸ்ட்.8 அன்று நடைபெறவுள்ள மெல்பர்ன் இந்திய திரைப்பட விழாவின் (IFFM) விருது வழங்கும் இரவு நிகழ்வில், நடிகர் ஷாருக்கானுக்கு 'Excellence in Cinema' விருது வழங்கப்படவுள்ளது. இந்த விருது வழங்குவதன் மூலம், இந்தியாவில், திரைத்துறைக்கு தொடர்ச்சியாக பங்களிப்பு செய்துவரும் திரைக்கலைஞரை இந்த விழா கௌரவிக்கிறது. இந்த விழாவின் சிறப்பு விருந்தினராக ஷாருக்கான் கலந்துகொள்கிறார். விக்டோரியா மாகாணத்தின் முதல் பெண் ஆளுநரான லிண்டா டெஸ்ஸா ஷாருக் கானுக்கு இந்த விருதை வழங்குவார்.

✓ ஆஸ்திரேலியாவின் விக்டோரிய அரசின் தலைமையில், IFFMஇன் 10ஆவது பதிப்பு நடைபெறவுள்ளது. மேலும், நடப்பாண்டில், "Courage"ஐ அதன் கருப்பொருளாக அது கொண்டாடுகிறது. மெல்பர்னில் உள்ள Palais அரங்கில் இந்த நிகழ்வு நடைபெறும், இது அந்நகரின் பாரம்பரிய அடையாளங்களுள் ஒன்றாகும்.

**10.நடப்பாண்டின் மிஸ் வேர்ல்ட் பல்வகைமை (Miss World Diversity) பட்டத்தை வென்ற நாஸ் ஜோஷி, எந்த நாட்டைச் சேர்ந்தவராவார்?**



A) மொரிசியசு

B) இந்தோனேஷியா

**C) இந்தியா ☑**

D) தாய்லாந்து

- ✓ இந்திய திருநங்கை நாஸ் ஜோஷி, ஆக.3 அன்று மொரிசியசில் உள்ள போர்ட் லூயிசில், நடப்பாண்டின் 'Miss World Diversity' என மகுடம் சூட்டப்பட்டார். 'Miss World Diversity' போட்டியில் தொடர்ச்சியாக 3ஆவது முறையாக வெற்றிபெற்று அவர் நாட்டிற்குப் பெருமைசேர்த்துள்ளார். 'Miss World Diversity' பட்டத்தைத் தவிர, Best Project, Miss Congeniality, Miss People's Choice Ambassador மற்றும் Best National Costume பட்டங்களையும் நாஸ் ஜோஷி வென்றுள்ளார். இவர், 2017ஆம் ஆண்டில், பிறப்பிலேயே பெண்ணாக பிறந்தவர்களுக்கு எதிராக சர்வதேச கிரீடம் வென்ற உலகின் முதல் திருநங்கையாவார்.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- ✓ சென்னையில் மழைநீர் சேகரிப்புத் திட்டத்தை முறையாகப் பின்பற்றுபவர்களைப் பாராட்டும் வகையில், அவர்களின் வீடுகளில் பச்சை நிற ஸ்டிக்கர்கள் ஒட்டப்படுவதாக மாநகராட்சி ஆணையர் பிரகாஷ் தெரிவித்துள்ளார்.
- ✓ கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் பெண் ஊராட்சி செயலாளர்களுக்கு மகப்பேறு கால விடுப்பை 180 நாள்களில் இருந்து 9 மாதங்களாக உயர்த்தி தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது.

---

## நடப்பு நிகழ்வுகள்

**1. யானைகள் கணக்கெடுப்பானது தேசிய அளவில் எத்தனை ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படுகிறது?**

A) நான்கு

B) எட்டு

**C) ஐந்து ☑**

D) பத்து



- ✓ 2017ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் அடிப்படையில் திருத்தப்பட்ட–மாநில வாரியான காட்டு யானைகள் எண்ணிக்கையின் மதிப்பீட்டின்படி, நாடு முழுவதும் யானைகளின் எண்ணிக்கை 29,964 ஆக இருந்தது. இந்த எண்ணிக்கை 2012ஆம் ஆண்டில் 29,576 என இருந்தது. தெற்குப் பிராந்தியத்தில் 14,612 யானைகளும், வடகிழக்கில் 10,139 யானைகளும் உள்ளன.
- ✓ தென்னிந்திய மாநிலங்களுள் 6049 யானைகளுடன் கர்நாடக மாநிலம் முதலிடத்தில் உள்ளது. அதைத்தொடர்ந்து கேரள மாநிலம் உள்ளது. 2018ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி, நாடு முழுவதும் புலிகளின் எண்ணிக்கை 2,967 என மதிப்பிடப்பட்டது. புலிகள் கணக்கெடுப்பு–தேசிய அளவில் நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறையும், யானைகள் கணக்கெடுப்பு–தேசிய அளவில் ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறையும் மேற்கொள்ளப்படுகிறது. 2015ஆம் ஆண்டின் மதிப்பீட்டுடன் ஒப்பிடுகையில் தேசிய அளவில் 6,778 கி.மீ., வனப்பகுதி அதிகரித்துள்ளதாக இந்திய வன அறிக்கை – 2017 கூறுகிறது.

**2. அமெரிக்காவால் 'பண மதிப்பை திரிக்கும் நாடு' (Currency Manipulator) என அறிவிக்கப்பட்டுள்ள நாடு எது?**

A) மியான்மர்

B) தென்கொரியா

**C) சீனா ☑**

D) வடகொரியா



- ✓ யுவானின் மதிப்பிழப்பைத் தொடர்ந்து சீனாவை 'பணத்தின் மதிப்பை திரிக்கும் நாடு' என அமெரிக்கா அறிவித்துள்ளது. இந்த நடவடிக்கை, இருநாடுகளுக்கும் இடையிலான பதட்டமான வர்த்தக உறவை மேலும் அதிகரிக்கும். கடந்த பத்து ஆண்டுகளுக்கும் மேலான காலகட்டத்தில் முதல்முறையாக ஓர் அமெரிக்க டாலருக்கு ஏழு யுவான் என்ற வகையில் சீனா யுவானை மதிப்பிழப்பு செய்ததையடுத்து அமெரிக்காவின் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
- ✓ இந்நிலையில், ஆரோக்கியமான போட்டியை சீர்குலைக்கும் வகையில் நியாயமற்ற வகையில் சீனா நடந்துகொள்வதாக சர்வதேச நாணய நிதியத்திடம் (IMF) புகாரளிக்க உள்ளதாக அமெரிக்க நிதித்துறை தெரிவித்துள்ளது. 1994ஆம் ஆண்டுக்குப் பிறகு அமெரிக்கா முதன்முறையாக இத்தகைய அறிவிப்பை

விடுத்துள்ளது. இந்த அறிவிப்பு, US கருவூலம் அதன் அரையாண்டு நாணய அறிக்கையின் ஒரு பகுதியாக இதுபோன்ற முறையான அறிவிப்பை வழங்குவதற்கான வாய்ப்பைப்பெற்ற 4 மாதங்களுக்கு பிறகு வந்துள்ளது. அவற்றின் பணச்சந்தைகளில் தீவிரமாக தலையிடல்; அமெரிக்காவுடன் மிகப்பெரிய வர்த்தக உபரிகளைக் கொண்டிருத்தல் மற்றும் ஒட்டுமொத்த நடப்புக்கணக்கு உபரிகளைக் கொண்டி–ருத்தல் முதலிய மூன்று அளவுகோல்களை இதுபோன்ற அறிவிப்பை வெளியிடுவதற்கு அமெரிக்கக் கருவூலம் பயன்படுத்துகிறது.

### 3. ஜூலை மாத PCA வீரராக தேர்வு செய்யப்பட்டுள்ள இந்திய கிரிக்கெட் வீரர் யார்?



A) சேதேஷ்வர் புஜாரா

B) ஷிகர் தவான்

C) அஜிங்யா ரஹானே

**D) R அஸ்வின் ☑**

✓ இந்திய வலச்சுழற்பந்து வீச்சாளரான (off–spinner) இரவிச்சந்திரன் அஸ்வின், கவுண்டி சாம்பியன்ஷிப் போட்டிகளில் தொடர்ந்து விளையாடிவருவதற்காக நடப்பாண்டு ஜூலை மாதத்துக்கான தொழிற்முறை கிரிக்கெட் வீரர்கள் சங்கத்தின் (PCA) வீரராக தேர்வு செய்யப்பட்டுள்ளார். மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான இந்தியாவின் உலக தகுதிகாண் சாம்பியன்ஷிப் போட்டிகளுக்கான பயிற்சி ஆட்டமாக இந்த மாத இறுதியில் நடைபெறவுள்ள ஆறு கவுண்டி சாம்பியன்ஷிப் போட்டிகளில் விளையாட நாட்டிங்ஹா–ம்ஷையர் அணியுடன் அஸ்வின் ஒப்பந்தமாகியுள்ளார்.

### 4. IIS அதிகாரிகளின் 2ஆவது அகில இந்திய ஆண்டு மாநாட்டை நடத்திய மத்திய அமைச்சகம் எது?



A) மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம்

B) தகவல் தொடர்பு அமைச்சகம்

C) வணிகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம்

**D) தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகம் ☑**

✓ இந்திய தகவல் பணி அதிகாரிகளின் (IIS) 2ஆவது அகில இந்திய ஆண்டு மாநாடு, புதுதில்லியில் உள்ள வெளிநாடுவாழ் இந்தியர்கள் மையத்தில் ஆகஸ்ட்.5 அன்று நடைபெற்றது. மத்திய தகவல் & ஒலிபரப்பு அமைச்சகத்தின்கீழ் செயல்படும் அனைத்து ஊடகப்பிரிவுகளிடையே சிறப்பான ஒருங்கிணைப்பை ஏற்படுத்தி அரசு தகவல் தொடர்புப் பணிகளை மேம்படுத்தும் நோக்கில் இந்த மாநாடு நடத்தப்பட்டது.

✓ மேலும், தகவல் & ஒலிபரப்பு அமைச்சகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள ஊடகப்பிரிவுகளின் செயல்பாடுகள் குறித்தும் இந்த மாநாட்டில் ஆய்வுசெய்யப்பட்டது. நாடுமுழுவதும் பணியாற்றும் முதுநிலை இந்திய தகவல்பணி அதிகாரிகள், மத்திய தகவல் & ஒலிபரப்பு அமைச்சகம், பிரசார்பாரதி மற்றும் இந்திய மக்கள் தொடர்பு நிறுவனத்தின் அதிகாரிகள் இந்த மாநாட்டில் கலந்துகொண்டனர்.

**5.எந்த இந்திய கிரிக்கெட் வீரருக்கு, கார்த்திக் போஸ் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டுள்ளது?**



A) பிஷன் சிங் பேடி

**B) அருண் லால் ☑**

C) பரோக் எஞ்சினியர்

D) சையத் கிர்மானி

✓ முன்னாள் இந்திய தொடக்க வீரரும், வங்காள கிரிக்கெட் அணியின் தலைவருமான அருண் லாலுக்கு, கொல்கத்தாவில் உள்ள வங்காள கிரிக்கெட் சங்கத்தின் 'கார்த்திக் போஸ் வாழ்நாள் சாதனையாளர் விருது' வழங்கப்பட்டுள்ளது. அவர் 1982 மற்றும் 1989க்கு இடையில் இந்தியாவுக்காக 16 தகுதிகாண் போட்டிகளிலும், 13 சர்வதேச ஒருநாள் போட்டிகளிலும் விளையாடியுள்ளார். வங்காள அணிக்கான வழக்கமான வீரராக மாறுவதற்கு முன்பு, தில்லிக்காக 6 பருவங்களில் விளையாடிய அவர், 1989இல் வங்காளத்தின் ரஞ்சிக் கோப்பை வெற்றியிலும் பெரும்பங்கு வகித்தார்.

**6.ஸ்கூநியூஸ் (ScooNews) சர்வதேச பயிற்றுநர் விழா நடைபெறவுள்ள நகரம் எது?**

SCOO NEWS | GLOBAL EDUCATORS FEST2019 | ENCOURAGED BY MEWAR

A) புது தில்லி

B) கான்பூர்

**C) உதய்பூர் ☑**

D) இராஞ்சி

✓ இந்தியாவின் மிகப்பெரிய கல்வி அறிவுக்கிளர்ச்சி நிகழ்ச்சியான மூன்றாவது ஸ்கூநியூஸ் சர்வதேச பயிற்றுநர் விழாவானது (ScooNews Global Educators Fest) ஆக.9–10 ஆகிய தேதிகளில் இராஜஸ்தான் மாநிலம் உதய்பூரில் நடைபெறவுள்ளது. இந்தியாவை அடுத்த சர்வதேச கல்வி ஆற்றல்மையமாக நிறுவுவதற்கான வழிகள் குறித்து விவாதிக்க ஐந்நூற்றுக்கும் மேற்பட்ட கல்வியாளர்களை இந்த விழா ஒன்றிணைக்கும். "Education for Sustainability: Moving on from Conformity to Creativity" என்பது இந்த நிகழ்வுக்கான கருப்பொருளாகும்.

✓ தொழிற்துறை–கல்வித்துறை கூட்டாண்மை தொடர்பான தொழில் தலைவர்களுடன் புத்தாக்கம் பற்றி விவாதிக்க கல்வி, பள்ளிகள் மற்றும் துளிர் நிறுவனங்களுக்கு பங்களிக்கும் தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு இவ்விழா ஒரு சிறந்த தளத்தை வழங்கும். சூப்பர் 30இன் பிரபல பயிற்றுநர் ஆனந்த் குமார், 3 இடியட்ஸ் புகழ் சோனம் வாங்சுக் மற்றும் பலர் புதிய உலகில் கல்வி தொடர்பான முக்கிய பிரச்சனைகள் (Key Issues) குறித்து உரையாற்றுவார்கள்.

**7. 'மிஷன் சக்தி' என்னும் விளையாட்டுத் திட்டத்தை தொடங்கியுள்ள மாநில அரசு எது?**

A) சத்தீஸ்கர்

**B) மகாராஷ்டிரா ☑**

C) இராஜஸ்தான்

D) ஒடிசா



✓ சந்திராபூர் மற்றும் கட்சிரோலியைச் சேர்ந்த தடகள வீரர்/வீராங்கனைகளுக்கு ஒலிம்பிக் போன்ற பன்னாட்டு நிகழ்வுகளுக்கு பயிற்சியளிப்பதற்காக பல்லார்பூரில் நடந்த ஒரு விழாவில் மகாராஷ்டிர அரசின் 'மிஷன் சக்தி' என்ற விளையாட்டுத் திட்டத்தை ஹிந்தி நடிகர் ஆமீர்கான் தொடங்கிவைத்தார்.

✓ 2024ஆம் ஆண்டுக்குள் பழங்குடி தடகள வீரர்/வீராங்கனைகளை ஒலிம்பிக் பதக்கம் பெறும் அளவிற்கு தயார்செய்வதே இந்த 'மிஷன் சக்தி' திட்டத்தின் நோக்கமாகும். வில்வித்தை, துப்பாக்கி சுடுதல், கைப் பந்து, நீச்சல், பளுதூக்குதல் மற்றும் சீருடற்பயிற்சி முதலிய ஆறு விளையாட்டுப் பிரிவுகளில் இத்திட்டம் தனது கவனத்தைச் செலுத்துகிறது. 'மிஷன் சௌர்யா'வின் ஒருபகுதியாக அண்மையில் எவரெஸ்ட் சிகரத்தின் உச்சியை அடைந்த பழங்குடி மலையேற்ற வீரர்கள் குழுவையும் அப்போது ஹிந்தி நடிகர் ஆமிர்கான் பாராட்டினார்.

**8. 2019 போலந்து ஓப்பன் மல்யுத்த போட்டியில், பெண்கள் 53 கிலோ பிரிவில், தங்கம் வென்ற இந்திய மல்யுத்த வீராங்கனை யார்?**

A) சாக்ஷி மாலிக்

B) பபிதா குமாரி

**C) வினேஷ் போகத் ☑**

D) கவிதா தேவி



✓ ஆக.4 அன்று வார்சாவில் நடந்த போலந்து ஓப்பன் மல்யுத்த போட்டியில், பெண்களுக்கான 53 கி.கி எடைப்பிரிவில் இந்திய வீராங்கனை வினேஷ் போகத், போலந்தின் ரோக்சனாவை 3–2 என்ற கணக்கில் வீழ்த்தி தங்கப்பதக்கம் வென்றார். ஸ்பெயினில் நடந்த கிராண்ட் பிரிக்ஸ் மற்றும் கடந்த மாதம் துருக்கியின் இஸ்தான்புல்லில் நடந்த யாசர் டோகு போட்டியில் தங்கம் வென்ற பிறகு 53 கி.கி பிரிவில் இது அவர் தொடர்ச்சியாக வெல்லும் மூன்றாவது தங்கமாகும்.


**9. அருகிலுள்ள முதலாவது மீ–புவி கோளான GJ357dஐ கண்டுபிடித்த விண்வெளி நிறுவனம் எது?**

**A) NASA ☑**

B) Roscosmos

C) CNES

D) ISRO



- ✓ NASA அறிவியலாளர்கள் நமது சூரிய மண்டலத்துக்கு வெளியே வாழத்தகுந்த முதல் புவியை கண்டறி–ந்துள்ளனர்; அது வாழ்வதற்கு ஏற்றதாக இருக்கலாம். GJ357d எனப் பெயரிடப்பட்டுள்ள அந்த மீ–புவி (Super Earth) கோளை NASAஇன் Transiting Exoplanet Survey Satellite (TESS) கண்டறிந்தது. இப்புதிய கோள், நமது புவியைவிட 6 மடங்கு பெரியதாகவும் மற்றும் 31 ஒளி ஆண்டுகள் தொலைவில் அமைந்து உள்ளதாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தக் கோள், ஹைட்ரா விண்மீன் தொகுப்பில் உள்ள ஒரு குள்ள நட்சத்திரத்தை சுற்றிவருகிறது.

- ✓ ஒரு மீ–புவி என்பது புவியைவிட அதிகமான நிலப்பரப்பைக் கொண்ட ஒரு புற சூரிய மண்டல கோள் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் சூரிய மண்டலத்தின் பெரும் பனிக்கோள்களான யுரேனஸ் மற்றும் நெப்டியூன் ஆகியவற்றைக் காட்டிலும் கணிசமான அளவில் இது சிறிதாகவே உள்ளது.

**10. 'Intelights' என்னும் முப்பரிமாண ஸ்மார்ட் போக்குவரத்து சமிக்ஞை அறிமுகம் செய்யப்பட்டுள்ள இந்தியாவின் முதலாவது நகரம் எது?**

A) இலக்னோ

B) இந்தூர்

C) ஜெய்ப்பூர்

**D)** மொகாலி ☑

- ✓ இதன்வகையில் நாட்டிலேயே முதன்முதலாக, மொகாலி போக்குவரத்துக்காவல்துறையினர், சண்டிகர் பல்கலை மாணவர்களால் வடிவமைக்கப்பட்ட முப்பரிமாண ஸ்மார்ட் போக்குவரத்து சமிக்ஞைகளை அறிமுகப்படுத்தியுள்ளனர். 'Intelights' எனப்படும் கம்பியிலா அமைப்பானது விமான நிலைய சாலைக்கு அருகிலுள்ள போக்குவரத்துச் சந்திப்பில், முன்னோட்ட அடிப்படையில் நிறுவப்பட்டுள்ளது. மேலும், ஸ்மார்ட் பருந்துப் பார்வை கம்பியிலா உணரி அமைப்பின் (Smart Bird's Eye View Wireless Sensor System) மூலம் போக்குவரத்து சமிக்ஞைகளை அது ஒழுங்குபடுத்தும்.

- ✓ அதிகரித்துவரும் போக்குவரத்து நெரிசலின் சிக்கலைத் தடுப்பதற்கு 360° தீர்வை இந்த 'Intelights' வழங்குகிறது. குறுக்குச்சாலை சந்திப்புகளில் நிறுவப்பட்ட போக்குவரத்து சமிக்ஞை நேரங்காட்டிகள் (Timers) சரியாக பணி செய்யாததே போக்குவரத்து நெரிசலுக்கான ஒரு முக்கிய காரணமாக உள்ளது. தற்போதுள்ள போக்குவரத்து விளக்குகளின் நேரங்காட்டிகள் முன்னமைக்கப்பட்ட மதிப்பினையே காண்பிக்கின்றன; இது நேரவிரயத்துக்கு வழிவகுக்கிறது.

- ✓ எடுத்துக்காட்டாக ஒரு சாலைச்சந்திப்பில் எந்த ஒரு வண்டியும் இல்லாத சமயத்தில் 20 வினாடிகளுக்கு பச்சை விளக்கு காட்டப்படும் எனில் அவ்விடத்தில் நேரம் வீணடிக்கப்படுகிறது. இச்சிக்கலை கையாள, 'Intelights' ஒரு நுண்ணறிவு போக்குவரத்து நேரக்கட்டுப்பாட்டு முறையை வழங்குகிறது. அது, ஒரு சந்திப்பில், போக்குவரத்து நெரிசலுக்கேற்ப சிவப்பு, மஞ்சள் & பச்சை விளக்குகளின் நேரங்காட்டிகளை அந்தச் சூழலுக்கு ஏற்ப கட்டுப்படுத்தும் தொழில்நுட்பத்தை பயன்படுத்தும். நேரலை போக்குவரத்து காணொளித் தரவை சேகரிக்க இவ்வமைப்பு ஏற்கனவேயுள்ள CCTV கேமராக்களைப் பயன்படுத்தும். மேலும், செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி போக்குவரத்து அடர்த்தியை தானாக மதிப்பிடும். மேலும், அதற்கேற்ப சமிக்ஞை நேரங்காட்டிகளை அமைக்கும்.

# நடப்பு நிகழ்வுகள்


**1.எந்த IITஐச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள், செல் வளர்ப்பு அல்லது நுண்ணுயிரியல் ஆய்வுகள் ஏதும் இல்லாமல் நுண்ணுயிரியைக் கண்டறியும் ஒரு சிறிய சாதனத்தை உருவாக்கியுள்ளனர்?**

A) ஐஐடி கரக்பூர்

B) ஐஐடி பாம்பே

**C) ஐஐடி குவஹாத்தி ☑**

D) ஐஐடி மெட்ராஸ்




- ✓ IIT குவஹாத்தியைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள், செல் வளர்ப்பு கலாசாரம் அல்லது நுண்ணுயிரியல் ஆய்வுகள் ஏதுமில்லாமல் நுண்ணுயிரியைக் கண்டறியும் ஒரு சிறு மலிவு விலை சாதனத்தை உருவா–க்கியுள்ளனர். உயிரி–இணைக்க உணரிகொண்ட இந்தக் கையடக்க சாதனத்தால் மூளைக்காய்ச்சல் போன்ற அவசரகால நோய்களை விரைவாக கண்டறிய முடியும்.

- ✓ உலகெங்கும் நோயுற்ற தன்மைக்கும், இறப்புக்கும் நுண்ணுயிர் தொற்று ஒரு பொதுவான காரணமாக உள்ளது. பல்வேறு விதமான நுண்ணுயிர் எதிர்ப்பிகள் உருவாக்கப்பட்ட போதிலும், தொடக்கநிலை நுண்ணுயிர்த் தொற்றைக் கண்டறிவது சவாலாகவே இருந்துவருகிறது. தற்போதுள்ள நுட்பங்கள் அதிக நேரம் எடுத்துக்கொள்பவையாக உள்ளன. தற்போது, ஒரு நோயாளியிடமிருந்து பெறப்பட்ட செல்களில் நுண்ணுயிரியைக் கண்டறியவும், நுண்–பகுப்பாய்வு செய்யவும் அவை ஆய்வகங்களில் வளர்க்கப்பட வேண்டும். ஆனால், இந்தப் புதிய சிறிய சாதனத்தால், நுண்ணுயிரியின் செல்சுவர்களில் உள்ள மின்சுமைகளை (Charges) உடனடியாக கண்டறிய முடியும்.

- ✓ இந்த ஆராய்ச்சியானது நுண்ணுயிரியை விரைவாக கண்டறிய உதவுவதோடு மட்டுமல்லாமல், சுகாதாரத் துறையில் உயிரி–பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள் & சுற்றுச்சூழல் கண்காணிப்பிலும் முக்கியத்துவம் பெறுகிறது. இக்குழுவின் பணிகள், அண்மையில் காப்புரிமை பெறப்பட்டு, 2019 ஜூலை மாத "Journal of Materials Chemistry of the Royal Society of Chemistry" இதழில் வெளியிடப்பட்டது.

**2.அண்மையில் காலமான ஜெய் ஓம் பிரகாஷ், எந்தத் துறையைச் சார்ந்தவராவார்?**

A) நிழற்படத்துறை

**B) திரைத்துறை ☑**

C) இதழியல்

D) விளையாட்டு



- ✓ மூத்த திரைப்பட தயாரிப்பாளரும், ரித்திக் ரோஷனின் தாய்வழி தாத்தாவுமான ஜெய் ஓம் பிரகாஷ் (93), மகாராஷ்டிரா மாநிலம் மும்பையில் ஆக.7 அன்று காலமானார்.

**3.எந்த இராணுவ நிலையத்தில், ஐந்தாவது பன்னாட்டு இராணுவ சாரண மாஸ்டர்கள் போட்டி தொடங்கியுள்ளது?**

**A) ஜெய்சால்மர் ☑**

B) குவாலியர்

C) டேராடூன்

D) ஆக்ரா



- ✓ ஐந்தாவது பன்னாட்டு இராணுவ சாரண மாஸ்டர்கள் போட்டியானது ஆக.5–16 வரை இராஜஸ்தான் மாநிலம் ஜெய்சால்மர் இராணுவ நிலையத்தில் நடைபெறுகிறது. பங்கேற்கும் நாடுகளுக்கு இடையே இராணுவ ஒத்துழைப்பை அதிகரிப்பதும்; நம்பிக்கையை வளர்ப்பதும்; அமைதியான சமுதாயத்தை நிறுவுவதும், தொழிற்முறை பயிற்சியினை மேம்படுத்துவதும்; பங்கேற்கும் நாடுகளால் பின்பற்றப்படும் சிறந்த நடைமுறைகளை பகிர்ந்து கொள்வதுமே இந்த இராணுவ விளையாட்டுக்களின் நோக்கமாகும்.
- ✓ இந்தியா, சீனா, இரஷ்யா, பெலாரஸ், ஆர்மீனியா, கஜகஸ்தான், உஸ்பெகிஸ்தான், சூடான் முதலிய 8 நாடுகளைச்சேர்ந்த அணிகள் இப்போட்டியில் பங்கேற்கின்றன. ஊடுருவுதல் திறன், பொறையுடைமை, குறிதவறாது சுடும் திறன் மற்றும் குழு செயல்பாடுகள் போன்ற ஐந்து நிலைகளை இந்தப் போட்டிகள் கொண்டுள்ளன. இப்போட்டிகளை, பன்னாட்டு நடுவர் குழு மதிப்பீடு செய்யும்.

**4.நோபல் பரிசு பெற்ற டோனி மாரிசன் காலமானார். அவர் எந்த நாட்டைச் சேர்ந்தவராவார்?**

A) ஜெர்மனி

B) ஐக்கிய பேரரசு

C) பிரான்ஸ்

**D) ஐக்கிய அமெரிக்க நாடுகள் (USA) ☑**




- ✓ நோபல் பரிசு பெற்ற அமெரிக்க எழுத்தாளர் டோனி மாரிசன் (88), அமெரிக்காவின் நியூயார்க்கில் ஆக.5 அன்று காலமானார். இனப்பாகுபாடுகளால் நிரம்பிவழிந்த வெள்ளையர்களின் சமூகத்தில் வாழும் கறுப்பின அமெரிக்கர்களின் போராட்டங்களை சித்தரிக்கும் புதினங்களுக்காக இலக்கியத்திற்கான நோபல் பரிசை வென்ற முதல் ஆப்பிரிக்க – அமெரிக்க கறுப்பின பெண்மணியாவார் இவர்.
- ✓ 1988ஆம் ஆண்டில், தனது 'Beloved' புதினத்துக்காக புலிட்சர் விருதைப் பெற்றார். 2012ஆம் ஆண்டில் அப்போதைய அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா அவருக்கு மிகவுயர்ந்த குடிமக்கள் கௌரவமான 'விடுதலைக்கான அதிபர் பதக்கத்தை' வழங்கிக் கௌரவித்தார்.

**5.5ஆவது தேசிய கைத்தறி நாளின் முக்கிய நிகழ்வு நடைபெறும் இடமாக தெரிவு செய்யப்பட்ட நகரம் எது?**



A) பாட்னா

B) உதய்பூர்

**C) புவனேசுவரம் ☑**

D) அமராவதி

- ✓ நாட்டில் உள்ள கைத்தறி நெசவாளர்களை கௌரவிப்பதற்காகவும், இந்தியாவின் கைத்தறி தொழிலை சிறப்பிப்பதற்காகவும் வேண்டி ஐந்தாவது தேசிய கைத்தறி நாளானது ஆகஸ்ட்.7 அன்று இந்தியாவில் கொண்டாடப்பட்டது. இந்தியாவின் சமூக – பொருளாதார வளர்ச்சிக்கு கைத்தறி தொழிற்துறையின் பங்களிப்பு குறித்தும், நெசவாளர்களின் வருமானத்தை அதிகரிப்பதற்கும் இந்த நாள் முயற்சி செய்தது.
- ✓ இந்த ஆண்டு, கைத்தறிகளின் வளமான பாரம்பரியத்தின் காரணமாக புவனேசுவரம் இந்த நாளின் முக்கிய நிகழ்வு நடைபெறும் இடமாக தேர்வுசெய்யப்பட்டது. பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு அதிகாரம் அளிப்பதே புவனேசுவரத்தில் தேசிய கைத்தறி நாளின் முக்கிய நிகழ்வை நடத்துவதன் நோக்கமாகும்.
- ✓ ஆங்கிலேய அரசாங்கம் வங்காளத்தை பிரிப்பதை எதிர்த்து 1905 ஆகஸ்ட்.7 அன்று கல்கத்தா டவுன் அரங்கில் தொடங்கப்பட்ட சுதேசி இயக்கத்தை நினைவுகூரும் வகையில், தேசிய கைத்தறி நாளாக ஆக.7 தேர்வுசெய்யப்பட்டது. இந்த இயக்கம் உள்நாட்டுப் பொருட்கள் & உற்பத்திச் செயல்முறைகளை புதுப்பிப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தது.

**6.நுகர்வோர் பாதுகாப்புக்காக வரைவு மின்னணு–வணிக விதிமுறைகளை வெளியிட்டுள்ள மத்திய அமைச்சகம் எது?**



A) நிலக்கரி அமைச்சகம்

B) இரயில்வே அமைச்சகம்

C) பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சகம்

**D) நுகர்வோர் விவகாரங்கள் அமைச்சகம் ☑**

- ✓ நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோக அமைச்சகத்தின்கீழ் வரும் நுகர்வோர் விவகாரங்கள் துறையானது இணையவழி நுகர்வோர்களை பாதுகாப்பதற்காக 'நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் 2019க்கான மின்னணு–வணிக வழிகாட்டுதல்'கள் வரைவை வெளியிட்டுள்ளது.
- ✓ அமேசான்&பிளிப்கார்ட் போன்ற மின்னணு–வணிக நிறுவனங்கள் பொருட்கள் அல்லது சேவைகளின் விலையில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தாக்கத்தை ஏற்படுத்தக் கூடாது என இந்த வரைவு குறிப்பிட்டுள்ளது. மின்–வணிக நிறுவனங்கள், புகாரதிகாரியின் பெயர், தொடர்பு விவரங்கள் மற்றும் புகாரளிக்கும் வழிமுறைகளை இணையதளத்தில் வெளியிடவேண்டும் எனவும் இந்த வரைவு குறிப்பிட்டுள்ளது.

- ✓ நிறுவனங்கள் எந்தவிதமான தவறான அணுகுமுறையையும் பின்பற்றக்கூடாது, தங்கள் பெயரில் பொருட்களின் விமர்சனங்கள் / மதிப்புரைகளை வெளியிடக்கூடாது (அ) பொருட்களின் தரத்தை மிகைப்படுத்தக்கூடாது எனவும் பரிவர்த்தனைகளில் வெளிப்படைத்தன்மையை உறுதிசெய்ய, நிறுவனங்கள் தங்களுக்கும் விற்பனையாளர்களுக்கும் இடையிலான ஒப்பந்த விவரங்களை வெளியிட வேண்டும் எனவும் இந்த வரைவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- ✓ இந்த வரைவு விதிமுறைகள் தொடர்பான கருத்துக்களை 45 நாட்களுக்குள்ளோ அல்லது செப்.16ஆம் தேதிக்குள்ளோ சமர்பிக்குமாறு நுகர்வோர் அமைச்சகம் தெரிவித்துள்ளது

**7. எந்த மாநில அரசு, 'RACE' என்னும் புதிய உயர்கல்வி மாதிரியை அறிமுகப்படுத்தியுள்ளது?**

A) சத்தீஸ்கர்

B) மகாராஷ்டிரா

**C) இராஜஸ்தான் ☑**

D) ஒடிசா



- ✓ இருக்கும் வளங்களை எல்லோருக்கும் சமமாக கிடைக்கும் வகையில் பகிர்ந்து அளிக்கும் நோக்கில், மாவட்ட அளவிலான அரசுக் கல்லூரிகளுக்கு ஆசிரியர்கள் மற்றும் அசையும் சொத்துக்களை பகிர்ந்து பரவலாக்குவதற்காக 'Resource Assistance for Colleges with Excellence' என்னும் புதிய உயர்கல்வி மாதிரியை இராஜஸ்தான் மாநில அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.
- ✓ இந்தப் புதிய உயர்கல்வி மாதிரியானது இருக்கும் வசதிகளை பகிர்ந்து பரவலாக்குவதற்கான ஒரு வழியை உருவாக்கும்; அது உட்கட்டமைப்பற்ற கல்லூரிகளுக்கு மிகுந்த பயனை அளிக்கும். வசதிகள் தேவைப்படும் கல்லூரிகள் தங்களது தேவைகளைப் பட்டியலிட்டு மாவட்டத்தில் உள்ள மைய கல்லூரியில் சமர்ப்பிக்கவேண்டும். பின்னர் ஆசிரியர்கள் (தேவைப்பட்டால்), படவீழ்த்திகள், மின்னணு நூலகங்கள், உபகரணங்கள், தொழில்நுட்ப வசதிகள் போன்றவை சம்பந்தப்பட்ட கல்லூரிகளுக்கு வழங்கப்படும்.

**8. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற உர்குந்த் மென்பொருள், எந்தத்துறையுடன் தொடர்புடையது?**

A) ஆயுள் காப்பீடு

**B) கல்வி ☑**

C) மின்னணு வங்கியியல்

D) பங்குச்சந்தை

- ✓ பல்கலை மானியக் குழுவின்படி (UGC), இந்தியாவில் உள்ள பொது மற்றும் தனியார் என அனைத்துப் பல்கலைகளுக்கும் வரும் செப்.1 முதல் சுவீட நாட்டின் படைப்புத் திருட்டுக்கு எதிரான (anti–plagiarism) மென்பொருளான உர்குந்தை (Urkund) அணுகுவதற்கான இறுதி சந்தா (Subscription) கிடைக்கப்பெறும். பன்னாட்டு ஒப்பந்தக்கோரல் செயல்முறை மூலம் 'உர்குந்த்' மென்பொருள் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

- ✓ வருங்காலங்களில் படைப்புத் திருட்டைத் தடுப்பதற்கான முயற்சியின் ஒருபகுதியாக தனியார் பல்கலைகள் உட்பட அனைத்து 900 பல்கலைக்கழகங்களுக்கும் இந்தப்படைப்பு திருட்டுக்கு எதிரான மென்பொருள் இலவசமாக வழங்கப்படும். இது ஆசிரியர்கள், மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள் என அனைவருக்கும் கிடைக்கும். படைப்புத் திருட்டுக்கான தரப்படுத்தப்பட்ட தண்டனையை பரிந்துரைக்க UGC (கல்வி ஒருமைப்பாட்டை ஊக்குவித்தல் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் படைப்புத்திருட்டை தடுப்பது) விதிமுறைகள், 2018ஐ மத்திய அரசு அறிவித்துள்ளது.

- ✓ இதுதவிர, முன்னாள் இந்திய அறிவியல் நிறுவனத்தின் (IIS) இயக்குநர் P பாலராம் தலைமையிலான ஆராய்ச்சி கலாசாரத்தை மேம்படுத்துவதற்கான UGC குழு, 2010 & 2014க்கு இடையில் சுமார் 11,000 போலி இதழ்களில் வெளியிடப்பட்ட அனைத்துக் கட்டுரைகளிலும் 35% இந்திய கல்வி நிறுவனங்கள் பங்களித்திருப்பதாகக் குறிப்பிட்டார். இந்தக் கட்டுரைகள் போலி பொறியியல் இதழ்களில் அதிகம் இடம் பெற்றிருந்தன. அதைத்தொடர்ந்து உயிரி – மருத்துவம் மற்றும் சமூக அறிவியல் போலி இதழ்களில் அக்கட்டுரைகள் இடம்பெற்றிருந்தன.


**9.இந்திய இரயில்வேயின் எந்த மண்டலம், புதிய உயிரியளவு அடையாள வில்லை முறையை (Biometric Token System) அறிமுகப்படுத்தியுள்ளது?**

A) வடமேற்கு இரயில்வே

**B) மேற்கு இரயில்வே ☑**

C) கிழக்கு மத்திய இரயில்வே

D) தென்மேற்கு இரயில்வே



- ✓ மேற்கு மற்றும் மத்திய இரயில்வே ஆனது ஒரு புதிய உயிரியளவு அடையாள வில்லை முறையை அறிமுகப்படுத்தியுள்ளது. இது, முன்பதிவு செய்யப்படாத இருக்கைகளைக்கொண்ட பயணிகள் பொதுப் பெட்டிக்கான அடையாள வில்லையாகும். இரயில் புறப்படுவதற்கு சுமார் 3 மணிநேரத்துக்கு முன்பாக இந்த அடையாள வில்லைகள் கொடுக்கப்படும்.

- ✓ இந்த அடையாள வில்லைகள் பயணிகளின் உயிரியளவு தகவல்களைப் பெற்றுக்கொண்டு முதலில் வருபவர்களுக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் பயணிகளுக்கு வழங்கப்படும். இவ்வில்லையில் ஒரு தனித்துவமிக்க வரிசை எண் இருக்கும். அதன்மூலம், அந்த எண் கொண்டுள்ளவர் மட்டுமே பெட்டியில் பயணிக்க அனுமதிக்கப்படுவர். உயிரியளவு தகவல்களைப் பயன்படுத்துவதன் மூலம் பயணச்சீட்டு முகவர்கள் தவிர்க்கப்படுவார்கள் மற்றும் அசல் பயணிகளுக்கு இது மிகுந்த உதவியாக இருக்கும். மேலும், இவ்வமைப்பு செலவுகுறைந்ததாகும், சராசரியாக ஒரு இரயிலுக்கு ₹20 செலவாகும்.

**10. 'வாய்மொழி வரலாற்றுத் திட்டம்' என்ற தலைப்பிலான ஒரு திட்டத்தை அறிமுகம் செய்துள்ள மாநிலம் / யூனியன் பிரதேச அரசு எது?**

A) தமிழ்நாடு B) கேரளா

C) இராஜஸ்தான் **D) தில்லி ☑**



- ✓ தில்லியில் வசிக்கும் மூத்த குடிமக்கள் வாய்மொழியாகக் கூறும் வரலாற்றுத் தகவல்களைப் பதிவு செய்யும் 'வாய்மொழி வரலாற்றுத் திட்டம் – Oral History Programme' என்னும் திட்டத்தை தில்லி அரசு தொடங்கியுள்ளது. வரும் ஈராண்டுகளில் தில்லியில் நூற்றுக்கணக்கான மக்கள் வாய்மொழியாகக் கூறும் வரலாற்றுத் தகவல்கள் பதிவுசெய்யப்படும். தில்லி அரசின் ஆவணக்காப்பகத் துறையுடன் இணைந்து தில்லி அம்பேத்கர் பல்கலைக்கழகம் இதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது.

- ✓ நகரத்தின் வரலாற்றை அதன் குடிமக்களின் பார்வையில் ஆவணப்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. 'வாய்மொழி வரலாற்றுத் திட்ட'மானது உண்மையில் தில்லி ஆவணக்காப்பகங்களின் முப்பதாண்டு கால திட்டத்தை உயிர்ப்பிக்கிறது. 1980களில், தில்லி ஆவணக்காப்பகமானது ஒரு 'வாய் மொழி வரலாற்றுத் திட்ட'த்தைத் தொடங்கியது; இதில் நாட்டின் பிரதமராக இருமுறை பணியாற்றிய குல்சரிலால் நந்தா மற்றும் மகாத்மா காந்தியின் நெருங்கிய உதவியாளரான சுசிலா நையார் உள்ளிட்ட பிரபலங்கள் நேர்காணல் செய்யப்பட்டனர். ஆனால், 56 பிரபலங்களை நேர்காணல் செய்தபின்னர், இத்திட்டம் பாதியிலேயே கைவிடப்பட்டது.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- ✓ தமிழ்நாடு முழுவதும் உள்ள அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு, ஆதார் எண் கட்டாயம் என பள்ளிக்கல்வித்துறை உத்தரவிட்டுள்ளது. மாணாக்கர்களின் ஆதார் எண் மற்றும் அவர்களது பெற்றோரின் ஆதார்எண் போன்றவற்றை சேகரித்து, கல்வித்தகவல் மேலாண்மை இணையதளமான (Educational Management Information System – EMIS)இல் பதிவுசெய்ய வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

- ✓ தமிழ்நாடு முழுவதும் நீர் பாதுகாப்பு வாரியம் அமைத்து, ஒரு வாரம் முழுவதும் விழிப்புணர்வு பரப்புரை இயக்கம் மேற்கொள்ளப்படும் என தமிழ்நாடு முதலமைச்சர் பழனிசாமி தெரிவித்துள்ளார்.

- ✓ தென்னிந்திய தொழில் நிறுவன உரிமையாளர்கள் கூட்டமைப்பின் சார்பில் தேசிய தொழிலாளர் நல்லுறவு மாநாடு வரும் 9 மற்றும் 10 ஆகிய தேதிகளில் சென்னையில் நடைபெறவுள்ளது. இதனை தமிழ்நாட்டின் ஆளுநர் பன்வாரிலால் புரோகித் தொடங்கிவைக்கிறார்.

---

# நடப்பு நிகழ்வுகள்

**1.அண்மையில் காலமான குறிப்பிடத்தக்க கல்வியாளர் இராஜலட்சுமி பார்த்தசாரதி, எந்த மாநிலத்தைச் சேர்ந்தவராவார்?**



**A) தமிழ்நாடு ☑**

B) கேரளா

C) கர்நாடகா

D) தெலுங்கானா

✓ புகழ்பெற்ற கல்வியாளரும், இதழாளரும், மூத்த கலைஞருமான இராஜலட்சுமி பார்த்தசாரதி (93), சென்னையில் ஆகஸ்ட்.5 அன்று காலமானார். 'பள்ளிக்கல்வியை இந்தியமயமாக்குவது' என்ற அவரது விருப்பத்தின் பேரில் பத்ம சேஷாத்ரி பாலபவன் பள்ளிகளை இராஜலட்சுமி பார்த்தசாரதி நிறுவினார். அவர் பொதுவாக ரேஷ்மி அல்லது 'திருமதி YGP' என்று அழைக்கப்பட்டார். 2010இல் இலக்கியம் மற்றும் கல்வித் துறையில் அவராற்றிய பங்களிப்புக்காக 'பத்மஸ்ரீ' விருதுபெற்றார். 'தி ஹிந்து' இதழிலும் அவர் பணிபுரிந்துள்ளார்.

**2.பன்னாட்டு தாவா தீர்வு ஒப்பந்தங்கள் குறித்த ஐ.நா. தீர்மானம் (United Nations Convention on International Settlement Agreements – UNISA) _____ என்றும் அழைக்கப்படுகிறது?**




**A) சிங்கப்பூர் மத்தியஸ்த தீர்மானம் ☑**

B) ஆஸ்திரேலியா மத்தியஸ்த தீர்மானம்

C) மெக்சிகோ மத்தியஸ்த தீர்மானம்

D) தென்னாப்பிரிக்கா மத்தியஸ்த தீர்மானம்

✓ வெளிநாட்டு முதலீட்டாளர்களின் நம்பிக்கையை அதிகரிப்பதற்காக இந்தியா, சமீபத்தில், பன்னாட்டு தாவா தீர்வு ஒப்பந்தங்கள் குறித்த ஐக்கிய நாடுகளின் தீர்மானத்தில் கையெழுத்திட்டது. இதில், இந்திய அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சிங்கப்பூருக்கான இந்திய உயராணையர் ஜாவேத் அஷ்ரப் கையெழுத்திட்டார். பன்னாட்டு தாவாக்களைத் தீர்க்கும் கட்டமைப்பை வலுப்படுத்துவதோடு நாடுகள் இடையே வணிகம் மற்றும் வர்த்தகத்தை எளிதாக்க உதவுவதே இந்தத் தீர்மானத்தின் நோக்கமாகும். கையொப்பமிட்ட நாடுகளிடையே மத்தியஸ்த தீர்வு ஒப்பந்தங்களை அமல்படுத்த இது உதவும்.

✓ தற்போதுவரை, 'சிங்கப்பூர் மத்தியஸ்த தீர்மானம்' என்ற இந்த ஒப்பந்தத்தில் அமெரிக்கா, சீனா, இந்தியா உள்ளிட்ட 46 நாடுகள் கையெழுத்திட்டுள்ளன. ஐ.நா பொது அவை தனது 73ஆவது அமர்வின்போது 2018 டிச.20 அன்று இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டது.

**3.எந்த நாட்டின் அறிவியலாளர்கள், உலகின் மிக மெல்லிய தங்கத்தை உருவாக்கியுள்ளனர்?**



A) ஐக்கிய அமெரிக்க நாடுகள்

**B) பிரிட்டன் ☑**

C) பிரான்ஸ்

D) ஜெர்மனி

- ✓ பிரிட்டனில் உள்ள லீட்ஸ் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் 0.47 நானோமீட்டர் தடிமனுடைய ஒரு புதிய வடிவ தங்கத்தை உருவாக்கியுள்ளனர். இது மனித விரலில் உள்ள நகத்தைவிடவும் 1 மில்லியன் மடங்கு மெல்லியதாக உள்ளது. ஆராய்ச்சியாளர்கள் தாங்கள் உருவாக்கிய விலைமதிப்பற்ற இந்த உலோகத்துக்கு நீருக்கடியில் அதன் பச்சை நிறத்தின் காரணமாகவும், அதன் வடிவத்திற்கும் பாசியின் வடிவத்திற்கும் இடையிலான ஒற்றுமையின் காரணமாகவும் "தங்க ஆல்கா" எனப் பெயரிட்டுள்ளனர்.
- ✓ ஆராய்ச்சியாளர்களின் கூற்றுப்படி, இந்தத் 'தங்க ஆல்கா – Golden Algae' மருத்துவ சாதனம் மற்றும் மின்னணுத் தொழில்களில் பரந்த அளவிலான பயன்பாடுகளைக்கொண்டிருக்கக்கூடும். தொழிற்துறை செயல்முறைகளின் வரம்பில் வேதியியல் எதிர்வினைகளை விரைவுபடுத்துவதற்கு இது ஒரு வினை ஊக்கியாகவும் (Catalyst) பயன்படுத்தப்படலாம்.

**4.இந்திய மின்சார விநியோகக் கட்டமைப்பு நிறுவனத்தின் (Power Grid Corporation of India) புதிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநராக பொறுப்பேற்றுள்ளவர் யார்?**



A) அமிர்தா சிங்

B) இரவி P சிங்

**C) கந்திகுப்பா ஸ்ரீகாந்த் (Kandikuppa Sreekant) ☑**

D) பிரதீப் L கௌஉல்

- ✓ இந்திய மின்சார விநியோகக் கட்டமைப்பு நிறுவனத்தின் புதிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநராக கந்திகுப்பா ஸ்ரீகாந்த் பொறுப்பேற்றுள்ளார். 2023 டிசம்பர் 31 வரை அவர் இந்தப் பதவியில் இருப்பார். அவரது ஓய்வுறுகாலம் வரும்வரையோ அல்லது அடுத்த உத்தரவு வரும்வரையோ அவர் இந்தப் பதவியிலிருப்பார். இந்த நியமனத்திற்கு முன்பாக, அவர் 'Power Grid' நிறுவனத்தின் நிதியியல் இயக்குநராக பணிபுரிந்து வந்தார்.
- ✓ 'Power Grid' என்பது குருகிராமை தலைமையிடமாகக்கொண்டு இயங்கும், இந்திய அரசாங்கத்துக்குச் சொந்தமான ஒரு மின்சார பயன்பாட்டு நிறுவனமாகும். இது இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் மொத்த மின்சாரத்தில் 50 சதவீதத்தை அதன் பரிமாற்ற வலையமைப்பின் மூலம் கொண்டுசெல்கிறது.

**5. Ethnologueஇன் கூற்றுப்படி, உலகில் அதிக எண்ணிக்கையிலான வழக்கிலிருக்கும் உள்ளூர் மொழிகளைக் கொண்ட நாடு எது?**




A) ஐக்கிய அமெரிக்க நாடுகள்

B) ஆஸ்திரேலியா

C) இந்தியா

**D) பப்புவா நியூ கினியா ☑**

- ✓ உலகளவில் 7,111 மொழிகளை வழக்கிலிருக்கும் மொழிகளாக (தற்போதும் மக்களால் பயன்படுத்தப்பட் –டும், பேசப்பட்டும் வரும் மொழிகள்) Ethnologue (மொழிகளின் அடைவு) பட்டியலிட்டுள்ளது. அதன்படி, பசிபிக் தீவு நாடான பப்புவா நியூ கினியா, உலகில் அதிக எண்ணிக்கையிலான வழக்கிலிருக்கும் உள்ளூர் மொழிகளை (840) கொண்டுள்ளது. இந்தியா 453 மொழிகளுடன் 4ஆவது இடத்தில் உள்ளது.
- ✓ பரவலாக ஆங்கிலம் பேசும் நாடுகளான ஐக்கிய அமெரிக்கா (335 மொழிகள்) மற்றும் ஆஸ்திரேலியா (319) ஆகியன அதிக எண்ணிக்கையிலான உள்ளூர் மொழிகள் பேசும் நாடுகளின் பட்டியலில் இடம் பெற்றுள்ளன. பிராந்தியங்களில், ஆசியா (2303) & ஆப்பிரிக்கா (2140) ஆகியன அதிக எண்ணிக்கை –யிலான உள்ளூர் மொழிகளைக் கொண்டுள்ளன (மொத்தத்தில் 70 சதவீதத்துக்கும் அதிகமானவை). ஐ.நா அவை 2019ஆம் ஆண்டை உள்ளூர் மொழிகளின் சர்வதேச ஆண்டாக அறிவித்துள்ளது.

**6. நடப்பாண்டு பட்டை மற்றும் பாதை சீனா ஹுனான் சர்வதேச செஸ் போட்டியில் வென்ற இந்திய கிராண்ட்மாஸ்டர் யார்?**



A) பரிமர்ஜன் நேகி

**B) சூர்ய சேகர் கங்குலி ☑**

C) பெண்டலா ஹரிகிருஷ்ணா

D) கிருஷ்ணன் சசிகிரண்

- ✓ கொல்கத்தாவைச் சேர்ந்த இந்திய கிராண்ட்மாஸ்டர் சூர்ய சேகர் கங்குலி, 2019 பட்டை மற்றும் பாதை சீனா ஹுனான் சர்வதேச செஸ் போட்டியில் வென்றுள்ளார். அவர் 7 புள்ளிகளுடன் 5 வெற்றிகளையும் 4 சமநிலை ஆட்டத்தையும் பதிவுசெய்தார். அவர், 27.5 எலோ புள்ளிகளை சேகரித்ததோடு $50,000 டாலர் (ரூ.35.6 இலட்சம்) ரொக்கப்பரிசையும் வென்றார்.

**7. ரிசர்வ் வங்கி, 2019–20ஆம் நிதியாண்டிற்கான அதன் மூன்றாவது இருமாத பணக்கொள்கை அறிக்கையில், எவ்வளவு அடிப்படைப் புள்ளிகளால் கொள்கை ரெப்போ வீதத்தை குறைத்துள்ளது?**

A) 25 **B) 35 ☑**

C) 45 D) 10



- ✓ இந்திய ரிசர்வ் வங்கியின் பணக்கொள்கைக் குழுவானது (Monetary Policy Committee) சமீபத்தில், தனது 2019–20ஆவது நிதியாண்டுக்கான மூன்றாவது இருமாதத்திற்கு ஒருமுறை வெளியிடப்படும் பணக்கொள்கை அறிக்கையை அறிவித்தது. அதில், பணப்புழக்கத்தை சரிசெய்தல் வசதியின் (LAF)கீழ், கொள்கை ரெப்போ வீதத்தை ரிசர்வ் வங்கி 35 அடிப்படைப் புள்ளிகள் (5.75 சதவீதத்திலிருந்து 5.40 சதவீதமாக) குறைத்தது.

- ✓ இதன் விளைவாக, LAFஇன் கீழ் தலைகீழ் ரெப்போ வீதம் 5.15 % ஆகவும், வங்கிகளின் அவசர நிதி தேவைக்கான கடன் வசதி (MSF) வீதமும், வங்கி வீதமும் 5.65 % ஆகவும் திருத்தப்பட்டுள்ளது. ரிசர்வ் வங்கி வட்டி வீதங்களை குறைப்பது இது 4ஆவது முறையாகும். இந்நடவடிக்கை பொருளாதாரத்திற்கு ஓர் ஊக்கத்தை அளிக்கும் எனக் கூறப்படுகிறது. சக்திகாந்த தாஸ் தலைமையிலான பணக்கொள்கைக் குழுவானது, மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி இலக்கை நடப்பு நிதியாண்டில் 7 சதவீதத்தில் இருந்து 6.9 சதவீதமாகக் குறைத்துள்ளது.

**8. சுற்றுச்சூழல் மற்றும் சமூக மேலாண்மை கட்டமைப்புக்கு நிதியளிக்கும் சர்வதேச அமைப்பு எது?**

A) பன்னாட்டு நாணய நிதியம்

**B) உலக வங்கி ☑**

C) ஆசிய உட்கட்டமைப்பு மற்றும் முதலீட்டு வங்கி

D) ஆசிய வளர்ச்சி வங்கி

- ✓ ஒருங்கிணைந்த கடற்கரை மண்டல மேலாண்மைக்காக (ICZM), மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகமானது 'சுற்றுச்சூழல் & சமூக மேலாண்மை கட்டமைப்பு (Environmental & Social Management Framework – ESMF)" என்ற தலைப்பில் ஒரு வரைவை வெளியிட்டுள்ளது. இது உலக வங்கி நிதியுதவி அளிக்கும் திட்டத்தின் ஒருபகுதியாக உள்ளது. கடலோரத்தில் அமைந்துள்ள தொலைநோக்கு உட்கட்டமைப்பு திட்டங்கள், அனுமதிக்கு விண்ணப்பிப்பதற்கு முன்பு எவ்வாறு மதிப்பிடப்பட வேண்டும் என்பதை இந்த வரைவு விளக்குகிறது.

- ✓ கடற்கரை மண்டலங்களில் திட்டங்களை அங்கீகரிக்கும்போதும், ஒழுங்குபடுத்தும்போதும் கடலோர மாநிலங்கள் பின்பற்ற வேண்டிய வழிகாட்டுதல்களை இந்த வரைவு வகுத்துள்ளது. அமைச்சகத்துடன் இணைந்த அமைப்பான ஒருங்கிணைந்த கடலோர மேலாண்மை சங்கத்தால் இந்த வரைவு தயாரிக்கப்பட்டுள்ளது. இதுவரை 3 கடலோர மாநிலங்கள் (குஜராத், ஒடிசா மற்றும் மேற்கு வங்கம்) உலக வங்கியின் ஆதரவுடன் ICZM திட்டங்களைத் தயாரித்துள்ளன. இத்தகைய திட்டங்கள் பிற மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட கடலோரப்பகுதிகளுக்கும் தயாரிக்கப்படும்.

**9. விக்ரம் சாராபாய் இதழியல் விருதை அறிவித்துள்ள அமைப்பு எது?**

**A) ISRO ☑** B) DRDO

C) BARC D) VSSC

- ✓ விண்வெளி அறிவியல், பயன்பாடுகள் மற்றும் ஆராய்ச்சித் துறையில் தீவிரமாக பங்களிப்பு செய்த ஊடகவியலாளர்களை அங்கீகரித்து வெகுமதி அளிப்பதற்காக இந்திய விண்வெளி ஆய்வுமையமானது (ISRO) தனது "விண்வெளி அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சித் துறையில் விக்ரம் சாரபாய் இதழியல் விருதை" அறிவித்துள்ளது.
- ✓ அடிப்படையில், இந்திய விண்வெளித் திட்டத்தின் தந்தை Dr. விக்ரம் சாராபாய் நூற்றாண்டு விழாவின் ஒருபகுதியாக இதழியலில் இரண்டு வகைமையிலான விருதுகளை ISRO நிறுவியுள்ளது. இதழியல் துறையில் நல்ல அனுபவம் உள்ள அனைத்து இந்தியர்களும் இந்த விருதுக்கு விண்ணப்பிக்கலாம். இந்தியாவிலிருந்து வெளிவரும் பிரபலமான இதழ்கள், அறிவியல் இதழ்கள் அல்லது சஞ்சிகைகளில் 2019ஆம் ஆண்டிலிருந்து 2020ஆம் ஆண்டுவரை வெளியான படைப்புகளிலிருந்து தெரிவுசெய்யப்படும்.
- ✓ தெரிவு செய்யப்பட்டவர்களின் விவரம், 2020 ஆக.1 அன்று அறிவிக்கப்படும் என ISRO தெரிவித்துள்ளது. விருதின் முதல் வகையில் இருவருக்கு தலா ரூ.5 இலட்சம் பரிசுத்தொகையும், பதக்கமும், பாராட்டுப் பத்திரமும் வழங்கப்படும். விருதின் இரண்டாவது வகையில் ரூ.3 இலட்சம், ரூ.2 இலட்சம், ரூ.1 இலட்சம் என மூன்று ரொக்கப்பரிசுகளும், பாராட்டுப் பத்திரங்களும் வழங்கப்படும்.

### 10.ஐ.நா. தொழிற்துறை மேம்பாட்டு அமைப்பின் (UNIDO) தலைமையகம் எங்கு அமைந்துள்ளது?

A) பெர்லின்

B) நியூயார்க்

**C) வியன்னா ☑**

D) பாரிஸ்

UNITED NATIONS
INDUSTRIAL DEVELOPMENT ORGANIZATION

- ✓ சூரிய வெப்ப ஆற்றல் துறையைச் சார்ந்த பல்வேறுநிலை பயனாளிகளுக்கு திறன் மேம்பாட்டுத் திட்டத்தைத் தொடங்குவதற்காக இந்தியாவின் தேசிய சூரிய ஆற்றல் நிறுவனம் (NISE), அண்மையில் ஐ.நா. தொழிற்துறை மேம்பாட்டு அமைப்புடனான ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. சிறந்த பயிற்சிக் குறிப்புகளை உருவாக்குவதன் மூலம் சிறந்த நடைமுறைகளைக் கொண்டுவர இரு நிறுவனங்களும் தேசிய மற்றும் பன்னாட்டு வல்லுநர்களை அதன் தயாரிப்பில் ஈடுபடுத்தும்.
- ✓ இந்த ஒப்பந்தம், UNIDOஆல் கூட்டாகச் செயல்படுத்தப்பட்டுவரும் MNRE – GEF – UNIDO திட்டத்தின் ஒரு பகுதியாகும். மேலும், நிலக்கரி, டீசல், உலை எண்ணெய் (furnace oil) போன்ற வழக்கமான புதைபடிவ எரிபொருளுக்கு மாற்றாக பயன்படுத்தப்படவுள்ள செறிவூட்டப்பட்ட சூரிய வெப்ப ஆற்றல் தொழில்நுட்பங் –களில் திறன் மேம்பாடு மற்றும் தொழில்நுட்ப மனித ஆற்றலின் திறன் கட்டமைப்புக்கும் இது உதவும்; மற்றும் தொழிற்துறை செயல்முறை வெப்ப பயன்பாடுகளில் செலவுகள் மற்றும் உமிழ்வுகளை இது குறைக்கும்.

## நடப்பு நிகழ்வுகள்

**1. "தாய்ப்பாலூட்டல் மற்றும் பச்சிளங்குழந்தைகள் மற்றும் குழந்தைகளுக்கு உணவளிக்கும் நடைமுறைகள்" குறித்த மத்திய சுகாதார அமைச்சகத்தின் அறிக்கை அட்டையின் தரவரிசையில் முதலிடம் பிடித்துள்ள மாநிலம் எது?**

A) தமிழ்நாடு

B) கேரளா

**C) மணிப்பூர் ☑**

D) தெலுங்கானா



- ✓ மத்திய சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் Dr.ஹர்ஷ்வர்தன், சமீபத்தில், "தாய்ப்பாலூட்டல் மற்றும் பச்சிளங்குழந்தைகள் மற்றும் குழந்தைகளுக்கு உணவளிக்கும் நடைமுறைகள்" குறித்த அறிக்கை அட்டையை மாநிலம் மற்றும் யூனியன் பிரதேசங்களின் தரவுகளுடன் ஆகஸ்ட்.8 அன்று புது தில்லியில் வெளியிட்டார். அதில், தாய்ப்பாலூட்டல் அறிக்கை அட்டையின் தரவரிசையில் நாட்டிலேயே மணிப்பூர் மாநிலம் முதலிடத்தில் உள்ளது. மிக மோசமாக செயல்படும் மாநிலங்களுள் இந்தியாவின் தலைநகரமான தில்லியும் உள்ளது.
- ✓ தாய்ப்பாலூட்டலின் தொடக்ககாலம், 6 மாதங்களுக்கு தாய்ப்பால் தருவது மற்றும் குழந்தையின் வயதில் ஆறு – எட்டு மாதங்களில் ஊக்கமூட்டும் உணவுகளை அளித்தல் முதலிய 3 சுட்டிகளின் (Indicators) அடிப்படையில் ஒரு கூட்டு மதிப்பெண்ணை (Composite Score) உருவாக்குவதன் மூலம் இவ்வறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. உத்தரப்பிரதேசம், இராஜஸ்தான் மற்றும் பிகார் முதலான மாநிலங்கள் அறிக்கை அட்டையின் கீழ் நிலைகளில் உள்ளன.

**2. நடப்பாண்டின் உலக பழங்குடியினர் நாளுக்கான கருப்பொருள் என்ன?**

A) Indigenous People

B) Indigenous Regions

C) Indigenous Cultures

**D) Indigenous Languages (உள்ளூர் மொழிகள்) ☑**

- ✓ உலகில் உள்ள பழங்குடி மக்களின் உரிமைகளை முன்வைத்து அவற்றைப்பாதுகாப்பதற்காக ஆக.9 அன்று உலகின் பழங்குடி மக்களுக்கான பன்னாட்டு நாள் அல்லது உலக பழங்குடியினர் நாள் (World Tribal Day) கடைபிடிக்கப்படுகிறது. "உள்ளூர் மொழிகள்" என்பது நடப்பாண்டில் வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும். சுமார் 2680 உள்ளூர் மொழிகள் அழிவின் விளிம்பிலிருப்பதாக 2016ஆம் ஆண்டில் தெரிவிக்கப்பட்டது. இவ்வுள்ளூர் மொழிகளை அழிவிலிருந்து பாதுகாப்பதற்காக ஐ.நா. அவையானது நடப்பாண்டை (2019) சர்வதேச உள்ளூர் மொழிகள் ஆண்டாக அறிவித்துள்ளது.

**3.மின்னாளுகை தொடர்பான 22ஆவது தேசிய மாநாட்டின் கருப்பொருள் என்ன?**

A) Technology for accelerating Development

B) Digital Connectivity to the Last Mile

C) Digital Transformation

**D) Digital India: Success to Excellence ☑**

- ✓ மேகாலயாவில், மின்னாளுகை தொடர்பான 22ஆவது தேசிய மாநாடு, ஆக.8–9 அன்று ஷில்லாங்கில் "Digital India: Success to Excellence" என்ற கருப்பொருளுடன் நடைபெற்றது. இதை மத்திய அமைச்சர் Dr. ஜிதேந்திர சிங் மற்றும் மேகாலயா முதலமைச்சர் கன்ராட் K சங்மா ஆகியோர் தொடங்கிவைத்தனர்.
- ✓ இம்மாநாடு, நடுவணரசின் நிர்வாக சீர்திருத்தங்கள் மற்றும் பொதுமக்கள் குறைதீர்ப்புத்துறையின் 100 நாள் திட்டங்களின் ஒருபகுதியாக நடந்தது. இந்த நிகழ்வு, நாட்டின் வடகிழக்கில் நடத்தப்பட்டது இதுவே முதல்முறையாகும். இதில், 28 மாநிலங்களும் அனைத்து யூனியன் பிரதேசங்களும் பங்கேற்றன.

**4.விண்வெளிப் பூங்காவை உருவாக்க எந்த அமைப்புடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கேரள அரசு கையெழுத்திட்டுள்ளது?**

A) ISRO

B) DRDO

**C) VSSC ☑**

D) BARC



- ✓ மாநிலத்தில் விண்வெளி தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்கும், அதன் முயற்சிகளை ஆதரிப்பதற்கும் நோக்கம் கொண்டு கேரள அரசு விக்ரம் சாராபாய் விண்வெளி மையத்துடனான (VSSC) புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- ✓ இந்த ஒப்பந்தத்தின் மூலம், விண்வெளித் துறைசார்ந்த பன்னாட்டு துளிர் நிறுவனங்களை ஈர்க்கவும், விண்வெளி தொடர்பான தொழில்நுட்பம், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கான முதன்மை மையத்தை உருவாக்கவும் உதவும் இந்தியாவின் முதல் அதிநவீன விண்வெளிப் பூங்காவை திருவனந்தபுரத்தின் அறிவு நகரத்தில் அமைக்கும் கேரளத்தின் திட்டத்திற்கு VSSC ஆதரவளிக்கும்.
- ✓ இதன் மூலம் தொழினுட்பம் & தலைமைத்துவ பொறுப்புகளில் கேரள விண்வெளி பூங்காவுக்கு VSSC ஆதரவளிக்கும். மேலும், விண்வெளித் துறைக்கான சேவைகளை மேம்படுத்துவதில் குறு & நடுத்தர தொழில் நிறுவனங்கள் மற்றும் பிற நிறுவனங்களை VSSC ஊக்குவிக்கும்.

**5.லாகூர்–அட்டாரி சம்ஜவுதா விரைவு இரயில் சேவையானது எந்த ஆண்டில் தொடங்கப்பட்டது?**



A) 1984

B) 1981


**C) 1976 ☑**

D) 1978

✓ ஜம்மு–காஷ்மீருக்கு சிறப்புத்தகுதி அளிக்கும் 370ஆவது பிரிவை நீக்கியதைத் தொடர்ந்து ஆக.8 அன்று லாகூர்–அட்டாரி சம்ஜவுதா விரைவு இரயில் சேவையை பாகிஸ்தான் நிறுத்தியது. இருப்பினும், இரயில் சேவை இடைநிறுத்தம் செய்யப்படவில்லை என்றும் வழக்கம்போல் இந்த இரயில் இயக்கப்படும் என்றும் இந்திய இரயில்வே தெளிவுபடுத்தியுள்ளது. சம்ஜவுதா விரைவு இரயில் சேவை (பிரண்ட்ஷிப் எக்ஸ்பிரஸ் எனவும் அழைக்கப்படுகிறது) படுக்கை வசதிகள் கொண்ட 6 பெட்டிகளையும், 3 அடுக்கு குளிர்பதனவசதிகொண்ட பெட்டிகளையும் கொண்டுள்ளது.

✓ கடந்த 1971ஆம் ஆண்டு போருக்குப்பிறகு சிம்லா ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின்படி கடந்த 1976 ஜூலை.22 அன்று சம்ஜவுதா விரைவு இரயில் சேவை தொடங்கப்பட்டது. இந்த இரயில், இந்தியப் பகுதியில் தில்லியிலிருந்து அட்டாரி வரையிலும், பாகிஸ்தான் பகுதியில் லாகூரிலிருந்து அட்டாரி வரையிலும் இயக்கப்பட்டது. 'சம்ஜவுதா' என்ற சொல்லுக்கு ஹிந்தி மற்றும் உருது மொழிகளில் "ஒப்பந்தம்" என்று பொருளாகும்.

**6.அயல்நாட்டிலுள்ள ரூபாய் சந்தைகள் மீதான ரிசர்வ் வங்கி பணிக்குழுவின் தலைவர் யார்?**



A) M K ஜெயின்

**B) உஷா தோரட் (Usha Thorat) ☑**

C) B P கனுங்கோ

D) N S விஸ்வநாதன்

✓ உஷா தோரட் தலைமையிலான அயல்நாட்டிலுள்ள ரூபாய் சந்தைகள் மீதான ரிசர்வ் வங்கி பணிக் குழுவானது அயல்நாட்டு பயனர்களுக்கு தாராளமய பணச்சந்தையை பரிந்துரைத்துள்ளது. அயல் நாட்டுச் சந்தைகளால் (Offshore Markets) வழங்கப்படும் நெகிழ்வுத் தன்மையுடன் பொருந்தக்கூடிய வகையில், சொந்தநாட்டுச் சந்தைகளின் (Onshore Markets) நேரங்களை நீட்டிக்கலாம் எனவும் அந்தக் குழு பரிந்துரைத்துள்ளது.

✓ உள்நாட்டு விற்பனைக் குழுவினரால் (அ) அயல்நாட்டு கிளைகளில் பணிபுரியும் பணியாளர்களைப் பயன்படுத்துவதன் மூலம் புறக்குடியிருப்பாளர்களுக்கு அவர்களின் இந்திய புத்தகங்களிலிருந்து எல்லா நேரங்களிலும் இலவசமாக விலைகளை வழங்க வங்கிகள் அனுமதிக்கப்படலாம் எனத் தோரட் குழு பரிந்துரைத்துள்ளது.

✓ வழங்கப்படாத ரூபாய் பங்குகள் (அயல்நாட்டு நாணயத்தில் மேற்கொள்ளப்படும் தீர்வைகள்) சர்வதேச நிதியியல் சேவை மையத்தில் (IFSC) வர்த்தகம் செய்ய அனுமதிக்கப்படலாம் மற்றும் IFSC வங்கி

அலகுகள் ஒரு தனித்துவமான அயல்நாட்டு நாணய – இந்திய ரூபாய் (INR) நிலை வரம்பைக்கொண்டு இத்தகைய பங்குகளைக் கையாள அனுமதிக்கப்படலாம்.

**7.மணிப்பூரின் பசுமை தூதராக (Green Ambassador) நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**



A) டிங்கோ சிங்

B) மீராபாய் சானு

C) மேரி கோம்

**D) வாலண்டினா எலங்பம் ☑**

✓ மணிப்பூர் மாநில அரசாங்கம் 9 வயது சிறுமியான வாலண்டினா எலங்பமை அம்மாநிலத்தின் 'பசுமை தூதராக' நியமித்துள்ளது. தான் ஆசையாக வளர்த்த மரங்கள் வெட்டி வீழ்த்தப்பட்டதை கண்டு அவர் கதறியழுத காணொளி சமூக வலைத்தளத்தில் வைரலாகியதைத் தொடர்ந்து அவர் அம்மாநிலத்தின் பசுமை தூதராக நியமிக்கப்பட்டார்.

✓ மரங்கள் மீதான அச்சிறுமியின் அளவிலான அன்பையும் பாசத்தையும் அங்கீகரிப்பதற்காகவும், உத்தரவு பிறப்பித்த நாளிலிருந்து ஓராண்டு காலத்திற்கு சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் அம்மாநில அரசு ஓர் உத்தரவை பிறப்பித்துள்ளது. கக்சிங் நகரத்தில் உள்ள அமுதோம்பி டிவைன் லைப் ஆங்கிலப் பள்ளியில் ஐந்தாம் வகுப்பு படித்து வருகிறார் வாலண்டினா. அவர் முதலாம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தபோது 2 குல்மொகர் (Royal poinciana) மரங்களின் கன்றுகளை ஆற்றின் ஓரத்தில் நட்டு வளர்த்துவந்தார்.

✓ இருப்பினும், சிறுமிக்கு ஒரு பேரதிர்ச்சியாக, சாலை விரிவாக்க திட்டத்தின் ஒருபகுதியாக அம்மரங்கள் சமீபத்தில் வெட்டி வீழ்த்தப்பட்டன. பின்னர், மரங்கள் வெட்டப்பட்டதற்காக வாலண்டினா கதறியழுகிற காணொளியை அவரது மாமா பேஸ்புக் சமூக வலைத்தளத்தில் பகிர்ந்தார்.

**8. 'சமக்ர சிக்ஷா – ஜல் சுரக்ஷா' இயக்கத்தை தொடங்கியுள்ள மத்திய அமைச்சகம் எது?**

**A) மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் ☑**



B) சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகம்

C) சுற்றுச்சூழல் வனம் மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகம்

D) ஜல்சக்தி அமைச்சகம்

✓ மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் இரமேஷ் போக்ரியால் 'நிசாங்க்', நாடு முழுவதுமுள்ள அனைத்துப் பள்ளி மாணாக்கர்களிடையேயும் நீர் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த ஆக.9 அன்று 'சமக்ர சிக்ஷா – ஜல் சுரக்ஷா' இயக்கத்தை தொடங்கிவைத்தார். மாணவர்கள், பள்ளி மற்றும் வீடுகளில் நீரைச் சிக்கனமாக பயன்படுத்துவதன் மூலம் தண்ணீர் வீணாவதை தடுப்பதே இந்தப் பிரமாண்ட இயக்கத்தின் நோக்கமாகும்.

✓ நீர்ப்பாதுகாப்பு குறித்த இந்தக் கருத்துரு, மாணவர்களுக்கு இன்றியமையாததாகும். இதனால் அவர்கள் நீரின் முக்கியத்துவத்தையும் அது அவர்களின் வாழ்வை எவ்வாறு அர்த்தமுள்ளதாக வடிவமைக்கிறது என்பதையும் புரிந்துகொள்ள முடியும். இது, அவர்களை அவர்களின் அன்றாட வாழ்வில் நீர்ப்பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவும் உதவும்.

**9. 2018 தேசிய திரைப்பட விருதுகளில், 'திரைப்பட தோழமை மிகுந்த மாநில' விருதை வென்ற மாநிலம் எது?**

A) தமிழ்நாடு

B) கேரளா

**C) உத்தரகாண்ட் ☑**

D) ஒடிசா



✓ 66ஆவது தேசிய திரைப்பட விருதுகளில் உத்தரகாண்ட் மாநிலம் 'திரைப்பட–தோழமை மிகுந்த மாநிலம் – Most Film–Friendly State' விருதை வென்றுள்ளது. தேசிய விருதுகள் பட்டியலில் இந்த வகை விருது சேர்க்கப்படுவது இதுவே முதல்முறையாகும். இராகுல் ரவைல், உத்பால் போர்புஜாரி மற்றும் A S கனல் ஆகியோர் அடங்கிய குழு இந்த விருதை அறிவித்தது. அபிஷேக் கபூர் இயக்கிய 'கேதார்நாத்' என்னும் ஹிந்தித் திரைப்படம் இம்மாநிலத்தில் படமாக்கப்பட்டது.

**10. 2018 தேசிய திரைப்பட விருதுகளில், 'சிறந்த திரைப்பட' விருதை வென்ற திரைப்படம் எது?**

**A) ஹெல்லாரோ (Hellaro) ☑**

B) அந்ததூன்

C) சும்பக்

D) பேட்மேன்



✓ 2018ஆம் ஆண்டுக்கான 66ஆவது தேசிய திரைப்பட விருதுகளில் ஹெல்லாரோ (குஜராத்தி) 'சிறந்த திரைப்பட' விருதை வென்றுள்ளது. அதே நேரத்தில், ஆயுஷ்மான் குரானா மற்றும் விக்கி கௌஷல் ஆகியோர் முறையே அந்ததூன் & உரி: தி சர்ஜிக்கல் ஸ்ட்ரைக்ஸ் படத்துக்காக 'சிறந்த நடிகருக்கான' விருதைப் பகிர்ந்துகொள்கின்றனர். 'மகாநடி' திரைப்படத்துக்காக 'சிறந்த நடிகை'க்கான விருதை நடிகை கீர்த்தி சுரேஷ் வென்றுள்ளார்.

✓ சிறந்த இயக்குநருக்கான விருதை உரி திரைப்படத்தின் இயக்குநர் ஆதித்யா தர்ரும், சிறந்த அறிமுக இயக்குநருக்கான விருதை சுதாகர் ரெட்டி யகாந்தியும் வென்றனர். 'பதாய் ஹோ' படத்திற்காக 'சிறந்த துணை நடிகை'க்கான விருதை சுரேகா சிக்ரியும், மராத்தி திரைப்படமான 'சும்பக்' படத்திற்காக 'சிறந்த துணை நடிகர்' விருதை பாடலாசிரியரும் நடிகருமான ஸ்வனந்த் கிர்கிரேவும் வென்றுள்ளனர். மேலும், 'சிறந்த பொழுதுபோக்கு திரைப்பட'த்திற்கான விருதை 'பதாய் ஹோ' திரைப்படமும், 'சமூக நலனுக்கான சிறந்த திரைப்பட' விருதை 'பேட்மேன்' திரைப்படமும் வென்றுள்ளது.

---

## நடப்பு நிகழ்வுகள்

**1.நடப்பாண்டு உலக உயிரி எரிபொருள் நாளுக்கான கருப்பொருள் என்ன?**

**A) Production of Biodiesel from Used Cooking Oil (UCO) ☑**



B) Promote Green Fuels & Save Earth

C) End use of Fossil Fuels

D) Save Green Planet

✓ வழக்கமான புதைபடிவ எரிபொருட்களுக்கு மாற்றாக புதைபடிவஞ்சாராத எரிபொருட்களின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த ஒவ்வோர் ஆண்டும் ஆக.10 அன்று உலக உயிரி எரிபொருள் தினம் அனுசரிக்கப்படுகிறது. உயிரி எரிபொருள் துறையில் அரசு மேற்கொண்ட பல்வேறு முயற்சிகளையும் இந்த நாள் எடுத்துக்கூறுகிறது. நடப்பாண்டில் வரும் இந்த நாளுக்கான கருப்பொருள், "Production of Biodiesel from Used Cooking Oil (UCO)" ஆகும். இறக்குமதி சார்பு குறைப்பு, தூய்மையான சுற்றுச்சூழல், விவசாயிகளுக்கு கூடுதல் வருமானம் & வேலைவாய்ப்பு உருவாக்கம் ஆகியவற்றின் நன்மைகளை உயிரி எரிபொருள் கொண்டுள்ளது.

**2.கடன் வழங்குநர்களிடமிருந்து பழங்குடியினர் பெற்ற கடன்களை தள்ளுபடி செய்வதாக அறிவித்துள்ள மாநில அரசு எது?**

A) இராஜஸ்தான்

B) சத்தீஸ்கர்

**C) மத்திய பிரதேசம் ☑**

D) திரிபுரா

✓ உலக பழங்குடியினர் நாளை முன்னிட்டு, மாநிலத்தின் கடன் வழங்குநர்களிடமிருந்து பழங்குடியினர் பெற்ற கடன்களை மாநிலத்தின் அனைத்துப் பழங்குடிகள் தொகுதிகளிலும் தள்ளுபடி செய்யப்படும் என மத்திய பிரதேச அரசு அறிவித்துள்ளது. பழங்குடியினருக்கு பற்றட்டைகளையும் அரசு வழங்கும். இதன்மூலம், அவர்கள் ATMகளிலிருந்து ரூ.10,000 வரை எடுத்துக்கொள்ளலாம். ATMகளிலிருந்து பணம் எடுக்கும் வசதியானது வாரச்சந்தைகளில் வழங்கப்படும். இந்த முடிவு, 1.5 கோடி பழங்குடியின மக்களுக்கு பயனளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

✓ கடன் பெறுவதற்காக பிணையமாக வைக்கப்பட்ட நகைகள் போன்ற விலைமதிப்புமிக்க பொருட்கள் மற்றும் நிலங்கள் திரும்பப் பெற்றுத்தரப்படும் என முதலமைச்சர் கமல்நாத் உறுதி தெரிவித்துள்ளார். கடன் வழங்குநர்கள், இப்போது, பழங்குடிப் பகுதிகளில் பணியாற்றுவதற்காக அரசிடமிருந்து உரிமம் பெறவேண்டும். நிர்வாக வசதிக்காக வனப்பகுதிகளில் உள்ள சிற்றூர்கள் 'வருவாய் சிற்றூர்களாக மாற்றப்படும்' என்றும் அம்மாநில அரசு அறிவித்துள்ளது. பழங்குடியினரின் கோரிக்கைக்கு ஏற்ப, பழங் குடியினர் துறையானது 'பழங்குடியினர் மேம்பாட்டுத் துறை' என மறுபெயரிடப்படும்.

**3.பழங்குடியினருக்காக 'முதலமைச்சர் மதத் யோஜனா'வை அறிவித்துள்ள மாநில அரசு எது?**

A) குஜராத்

**B) மத்திய பிரதேசம் ☑**

C) இராஜஸ்தான்

D) சத்தீஸ்கர்



- ✓ பழங்குடியின குடும்பங்களில் குழந்தை பிறந்தாலோ அல்லது அவர்கள் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் எவரேனும் மரணித்தாலோ அந்தக் குறிப்பிட்ட குடும்பத்திற்கு உதவிகள் செய்வதற்காக மத்திய பிரதேச மாநில அரசு அண்மையில் 'முதலமைச்சர் மதத் யோஜனா' எனும் திட்டமொன்றை தொடங்கியுள்ளது.
- ✓ பழங்குடியினர் குடும்பத்தில் ஆண் அல்லது பெண் குழந்தை பிறந்தவுடன், அக்குடும்பத்திற்கு 50 கிலோ அரிசி (அ) கோதுமை வழங்கப்படும். பழங்குடியின குடும்பத்தில் மரணம் ஏற்பட்டால் அக்குடும்பத்திற்கு 100 கிலோ அரிசி (அ) கோதுமை மற்றும் உணவு சமைப்பதற்கான பாத்திரங்கள் வழங்கப்படும். இது தவிர, பழங்குடியினர் பகுதிகளில் தரமான கல்வியை வழங்குவதற்காக 40 புதிய ஏகலைவா பள்ளிகள் அமைக்கப்படும். பழங்குடியினரின் வரலாற்றைப் பாதுகாப்பதற்காக, இராஜ ஷங்கர்ஷா மற்றும் இராஜ இரகுநாத் ஷா ஆகியோரின் நினைவாக, ஜபல்பூரில், ரூ.500 கோடி செலவில் ஓர் அருங்காட்சியகம் அமைக்கப்படும்.

**4.மத்திய புலனாய்வுப் பிரிவின் (CBI) புதிய குற்றவழக்கு விசாரணை இயக்குநர் யார்?**

A) T S தாஸ்

**B) சுதா ராணி ரெலாங்கி ☑**

C) ஓம் பிரகாஷ் வர்மா

D) இராஜ் மெஹ்ரா

- ✓ தற்போது சட்டம் மற்றும் நீதி அமைச்சகத்தின் இணைச் செயலாளராக பணியாற்றிவரும் சுதா ராணி ரெலாங்கி, ஈராண்டு காலத்துக்கு மத்திய புலனாய்வுப் பிரிவில் (CBI) புதிய குற்றவழக்கு விசாரணை இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கு முன்பு இந்தப் பதவியிலிருந்த O P வர்மா தனது பதவிக் காலத்தை 24 டிசம்பர் 2018 அன்று நிறைவு செய்ததிலிருந்து இந்தப் பதவி காலியாகவே இருந்தது.

**5.எந்த IITஐச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள், சிறுநீரை மறுசுழற்சி செய்யும் ஓர் அமைப்பை வடிவமைத்துள்ளனர்?**

A) ஐஐடி மும்பை

**B) ஐஐடி மெட்ராஸ் ☑**

C) ஐஐடி இந்தூர்

D) ஐஐடி கான்பூர்

- ✓ மெட்ராஸ் IITஜச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் மனித சிறுநீரை மறுசுழற்சி செய்வதற்காக 'Project Water Chakra' என்ற ஓர் அமைப்பை வடிவமைத்துள்ளனர். இத்திட்டம் 2019 ஜூலையில், 'இந்திய புத்தாக்க வளர்ச்சித் திட்டம் 2.0' என்ற ஒரு விருதை வென்றது. ஆராய்ச்சியாளர்கள், சிறுநீரைச் சேகரிப்பதற்காக வளாகத்தில் உள்ள சிறுநீர் கழிப்பிடங்களை மறுசீரமைப்பு செய்துள்ளனர். அதாவது, பின்னர் உற்பத்தியில் பயன்படுத்துவதற்காக அது பல பயனுள்ள பொருட்களாக செயலாக்கப்படும். யூரியாவை அம்மோனியாவாக மாற்றுவதற்காக செறிவூட்டப்பட்ட சிறுநீர் 3 நாட்களுக்குச் சேமிக்கப்படும்.

- ✓ நீராவியால் காய்ச்சி வடித்தல் செயல்முறையின் மூலம் அமோனியா பிரிக்கப்பட்ட வணிகத் தரத்திலான அந்தத் திரவத்தை சலவைத்தூள் போன்ற தூய்மைப்படுத்திகளை தயாரிப்பதற்கோ அல்லது இரப்பர் உற்பத்தியிலோ பயன்படுத்த முடியும். பின்னர், ஸ்ட்ரூவைட் செயல்முறை மூலம் பாஸ்பரஸை படிய வைக்க, மீதமுள்ள திரவத்தில் மெக்னீசியம் சேர்க்கப்படும். எனவே, மின் வேதியியல் செயல்முறை மூலம் நாம் 90% தண்ணீரை மீட்டெடுக்க முடியும். அந்த நீரை, தோட்டக்கலை தேவைகளுக்காகவும், சுத்தப்படுத்தவும் பயன்படுத்தப்பட முடியும்.

### 6. ஹார்வர்ட் பல்கலைக்கழகத்துடன் இணைந்து எந்த IIT, மீன்களில் பாதரசம் சேர்வது குறித்து ஆய்வு செய்துள்ளது?

A) ஐஐடி மும்பை

**B) ஐஐடி ஹைதராபாத் ☑**

C) ஐஐடி இந்தூர்

D) ஐஐடி கான்பூர்

भारतीय प्रौद्योगिकी संस्थान हैदराबाद
Indian Institute of Technology Hyderabad

- ✓ காலநிலை மாற்றம் மற்றும் அதிகப்படியான மீன்பிடித்தல் முதலானவை பெருங்கடல் மீன்களான அட்லாண்டிக் கோட், அட்லாண்டிக் புளூஃபின் டூனா போன்றவற்றில் மெத்தில்மெர்குரி (MeHg) என்ற நச்சுத்தன்மையை அதிகரிப்பதாக ஹார்வர்ட் பல்கலை மற்றும் ஹைதராபாத் IIT ஆராய்ச்சியாளர்கள் நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

- ✓ இந்த மீன்கள், மனிதர்களால் பரவலாக உணவுக்காக பயன்படுத்தப்படுகின்றன. மீன்களில் பாதரசம் குவிவதற்கான மூன்று காரணிகளை ஆராய்ச்சியாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். க) அதிகப்படியான மீன்பிடித்தல் (இது கடல்வாழ் உயிரினங்களிடையே உணவுமுறை மாற்றங்களுக்கு வழிவகுக்கிறது), உ) கடல்நீரின் வெப்பநிலையிலுள்ள மாறுபாடுகள் (இது மீன் வளர்சிதை மாற்றத்தில் மாற்றங்களுக்கு வழிவகுக்கிறது) மற்றும் ங) மாசுபாட்டின் விளைவாக கடல் நீரில் காணப்படும் பாதரசத்தின் அளவில் மாற்றங்கள்.

- ✓ மெத்தில்மெர்குரி, மனிதர்களின் நரம்பு மண்டலத்திற்கு கடுமையான சேதத்தை ஏற்படுத்தும். பல்வேறு மாசுபடுத்தும் மூலங்களிலிருந்து வெளியேறும் பாதரசத்தால் கடல் மற்றும் ஆற்றுநீரில் பாதரச மாசுபாடு ஏற்படுகிறது. காலநிலை மாற்றம் காரணமாக கடல்களை வெப்பமயமாக்குவது என்பது மீன்களில் நச்சின் அளவு உயர வழிவகுக்கும் என ஆய்வில் தெரியவந்துள்ளது.

**7. CITESஇல், ஐந்து வனவுயிரி இனங்களின் பாதுகாப்பு நிலையை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகளை இந்தியா அண்மையில் சமர்ப்பித்தது. CITESஇன் தலைமையகம் எங்குள்ளது?**

**A) வாஷிங்டன் ☑**

B) நியூயார்க்

C) பாரிஸ்

D) பெர்லின்

✓ சுவிச்சர்லாந்தின் ஜெனிவாவில் நடந்த CITES செயலகக்கூட்டத்தில், ஐந்து வனவுயிரி இனங்களின் (ஆற்று நீர்நாய் (Smooth–Coated Otter), காட்டு நீர்நாய் (Small–Clawed Otter), இந்திய நட்சத்திர ஆமை, Tokay gecko, ஆப்பு மீன் (Wedge fish) மற்றும் சிசே மரம்) பட்டியலில் மாற்றங்கள் செய்வது தொடர்பான பரிந்துரைகளை இந்தியா சமர்ப்பித்தது. விவசாயத்திற்காக வாழ்விடத்தை இழத்தல் மற்றும் செல்லப் பிராணி வர்த்தகத்திற்காக சட்டவிரோதமாக கடத்தப்படுதல் முதலிய இரண்டு அச்சுறுத்தல்களை இந்த இனங்கள் எதிர்கொள்கின்றன.

✓ சர்வதேச வர்த்தகத்தில் அதிக ஆபத்தை எதிர்கொள்ளும் இந்த 5 வனவுயிரினங்களின் பாதுகாப்பை அதிகரிப்பதற்கு இந்தியா முற்படுகிறது. இவ்வினங்களை, CITES பிற்சேர்க்கை (Appendix) IIஇல் இருந்து பிற்சேர்க்கை Iக்கு மறுபட்டியலிட முன்மொழியும் கட்சிகளுள் இந்தியாவும் ஒன்றாக உள்ளது. CITES (**C**onvention on **I**nternational **T**rade in **E**ndangered **S**pecies on Wild Fauna and Flora) என்பது வன விலங்குகள் மற்றும் தாவரங்களின் வர்த்தகமானது அவற்றின் உயிர்வாழலுக்கு அச்சுறுத்தலாக இருக்காது என்பதை உறுதிசெய்வதற்கான ஒரு சர்வதேச ஒப்பந்தமாகும். CITESஇன் தலைமையகம் வாஷிங்டன் DCஇல் அமைந்துள்ளது.

**8.காதி மற்றும் கிராமப்புற தொழிற்துறை ஆணையமானது (KVIC) இராஜஸ்தானின் எந்த மாவட்டத்திலிருந்து தோல் திட்டத்தைத் (Leather Mission) தொடங்கியுள்ளது?**

A) ஹனுமன்கர்

**B) சிரோஹி ☑**

C) அஜ்மீர்

D) ஜாலவார்

✓ உலக பழங்குடியினர் நாளை முன்னிட்டு, இராஜஸ்தானின் சிரோஹி மாவட்டத்தில் பழங்குடியினர் அதிகம் வசிக்கும் சிற்றூரான சந்தலாவில், காதி மற்றும் கிராமப்புற தொழிற்துறை ஆணையமானது (KVIC) 'தோல் திட்டம்' என்னும் புதிய திட்டமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தப்புதிய திட்டத்தின் கீழ், KVIC, நாடு முழுவதுமுள்ள தோல் கைவினைஞர்களுக்கு தோல் தொழில் கருவிகளை வழங்கும்.

✓ இது அவர்களின் வருமானத்தை பன்மடங்கு அதிகரிப்பதோடு மட்டுமல்லாமல், பாரம்பரிய தொழிலில் இருந்து பிற பணிகளுக்குச் சென்ற பாரம்பரிய தோல் கைவினைஞர்களுக்கும் இத்தொழிலை மீண்டும் பின்பற்ற ஊக்குவிக்கும். தோல் திட்டம், குமார் சஷக்திகரண் திட்டம் மற்றும் தேன் திட்டம் போன்ற

திட்டங்களின் கீழ், KVIC, சுமார் 50 தோல் தொழில் கருவிகள் மற்றும் தேனீக் கூட்டங்களுடன் கூடிய 350 தேனீப் பெட்டிகளையும் விநியோகித்துள்ளது.

**9.சட்டவிரோத போதைப் பொருள் உற்பத்தி மற்றும் கடத்தும் நாடுகளின் பட்டியலில் இந்தியாவை சேர்த்துள்ள நாடு எது?**

**A)** ஐக்கிய அமெரிக்க நாடுகள் (USA) ☑

B) சீனா

C) ஈரான்

D) பாகிஸ்தான்



- ✓ அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், இருபதுக்கும் மேற்பட்ட போதைப்பொருள் கடத்தும் (அ) சட்டத்துக்கு புறம்பாக போதைப்பொருள் உற்பத்திசெய்யும் நாடுகளில் இந்தியாவை சேர்த்துள்ளார். ஆப்கானிசுதான், பகாமாஸ், பெலீசு, பொலிவியா, பர்மா, கொலம்பியா, கோஸ்டாரிகா, டொமினிகன் குடியரசு, ஈக்குவடோர், எல் சால்வடார், கௌதமாலா, ஹைத்தி, கோண்டுராஸ், சமைக்கா, லாவோஸ், மெக்சிகோ, நிகரகுவா, பாகிஸ்தான், பனாமா, பெரு மற்றும் வெனிசுலா ஆகியன பட்டியலில் இனங்காணப்பட்ட பிற நாடுகளாம்.
- ✓ புவியியல், வணிகம் மற்றும் பொருளாதார காரணிகளின் கலவையே இந்த நாடுகள் அமெரிக்காவின் பட்டியலில் இருப்பதற்கான காரணங்களாகும். ஓர் அரசாங்கம் வலுவான மற்றும் தளரா முயற்சியுடைய போதைப்பொருள் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தாலும் கூட அந்தக் காரணிகள், போதை மருந்துகளை கடத்தவோ அல்லது உற்பத்தி செய்யவோ அனுமதிக்கின்றன.

**10.இந்தியாவின் முதல் சுற்றுச்சூழல் நச்சியல் பரிசோதனைக் கூடமானது (Clinical Ecotoxicology Facility) எந்த நகரத்தில் தொடங்கப்பட்டுள்ளது?**

**A)** தில்லி ☑

B) இலக்னோ

C) பாம்பே

D) சென்னை



- ✓ தில்லியில் நீர், உணவு மற்றும் காற்றை மாசுபடுத்தும் சுற்றுச்சூழல் நச்சுகள் வெளிப்படுவதால் ஏற்படும் நோய்கள் அதிகரிப்பை புலனாய்வு செய்ய இந்தியாவின் முதல் சுற்றுச்சூழல் நச்சியல் பரிசோதனைக் கூடம் AIIMSஇல் தொடங்கப்பட்டுள்ளது. புதிதாக தொடங்கப்பட்ட இக்கூடம், நாட்டில் செய்யப்படும் சுற்றுச் சூழல் நச்சியல் குறித்த ஆராய்ச்சிக்கான மையமாகஇருக்கும். சுற்றுச்சூழல் நச்சுக்களால் ஏற்படும் நோய்களைக் கையாளும் அனைத்து மருத்துவத் துறைக்கும் இது கண்டறி ஆலோசனைகளையும், ஆராய்ச்சி சேவைகளையும் வழங்கும்.
- ✓ மாசு மற்றும் நலத்திற்கான லான்செட் ஆணையத்தின் கூற்றுப்படி, அசுத்தமான நீர், காற்று மற்றும் மண் ஆகியவை சுமார் ஒன்பது மில்லியன் முன்கூட்டிய மரணங்களுக்கு காரணமாக அமைகின்றன.

சுற்றுச்சூழல் நச்சுத்தன்மையால் ஏற்படும் இந்த இறப்புகளில் சுமார் 92% இந்தியா உள்ளிட்ட குறைந்த வருமானம் மற்றும் நடுத்தர வருமானம் உள்ள நாடுகளிலேயே நிகழ்கிறது.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- ✓ தமிழ்நாட்டில் சிறப்பாகச் செயல்படும் மாநகராட்சி மற்றும் சிறந்த விளங்கும் 3 நகராட்சிகள் ஒவ்வோர் ஆண்டும் தேர்வு செய்யப்பட்டு முதலமைச்சர் விருது வழங்கப்பட்டு வருகிறது.
  - நடப்பாண்டுக்கான சிறந்த மாநகராட்சியாக சேலம் மாநகராட்சி தேர்வுசெய்யப்பட்டுள்ளது. சிறந்த நகராட்சிக்கான முதலமைச்சர் விருதுக்கு முதலிடத்தை தருமபுரி நகராட்சியும், வேதாரண்யம், அறந்தாங்கி ஆகியவை அடுத்தடுத்த இடங்களையும் பிடித்துள்ளன.
  - விருது பெறும் மாநகராட்சிக்கு ரூ.25 இலட்சம் ரொக்கப்பரிசும், வாழ்த்து மடலும் வழங்கப்படும்.
  - விருதுக்கு முதலிடத்தில் தேர்வாகும் நகராட்சிக்கு ரூ.15 இலட்சம் ரொக்கப்பரிசும், இரண்டாம் இடம் பிடிக்கும் நகராட்சிக்கு ரூ.10 இலட்சமும், மூன்றாமிடத்துக்கு தேர்வாகும் நகராட்சிக்கு ரூ.5 இலட்சம் ரொக்கப்பரிசுகளுடன் வாழ்த்து மடலும் வழங்கப்படும்.




- ✓ மீனவர்களுக்குப் பயனுள்ள தகவல்களை வழங்குவதற்காக 'தூண்டில்' என்ற பெயரில் ஆன்ட்ராய்ட் செயலியை தமிழ்நாடு அரசு அறிமுகப்படுத்தியுள்ளது.

---

# நடப்பு நிகழ்வுகள்

**1.நடப்பாண்டு பிலிசி கிராண்ட் பிரிக்ஸ் மல்யுத்த போட்டியில் 65 கிலோ பிரிவில் தங்கம் வென்ற இந்திய மல்யுத்த வீரர் யார்?**

A) சுசில்குமார்

**B) பஜ்ரங் புனியா ☑**

C) யோகேஷ்வர் தத்

D) பவன் குமார்



- ✓ ஜார்ஜியாவில் நடந்த பிலிசி கிராண்ட் பிரிக்ஸ் மல்யுத்த தொடரில், ஆண்களுக்கான 'பிரீ–ஸ்டைல்' 65 கி.கி எடைப்பிரிவு இறுதிப்போட்டியில், இந்தியாவின் பஜ்ரங் புனியா, ஈரானின் பெய்மன் பிப்யானியை 2–0 என்ற கணக்கில் வீழ்த்தி தங்கத்தை கைப்பற்றினார். டான் கோலோவ், ஆசிய சாம்பியன்ஷிப் மற்றும் அலி அலீவ் போட்டிகளில் வென்ற பின்னர், இந்த சீசனில் பஜ்ரங் புனியா கைப்பற்றும் 4ஆவது தங்கமாகும் இது.

**2.நடப்பாண்டு ஹைதராபாத் ஓப்பன் பூப்பந்து சாம்பியன்ஷிப்பில் ஆடவர் பட்டத்தை வென்ற இந்திய விளையாட்டு வீரர் யார்?**

A) B. சாய் பிரனீத்

B) பருப்பள்ளி காஷ்யப்

C) ஸ்ரீகாந்த் கிடாம்பி

**D) சவுரப் வர்மா ☑**



- ✓ பூப்பந்தில், கச்சிபௌலி உட்புற அரங்கில் நடந்த நடப்பாண்டு ஹைதராபாத் ஓப்பன் சாம்பியன்ஷிப்பில், மத்திய பிரதேசத்தைச் சேர்ந்த சவுரப் வர்மா ஆடவர் ஒற்றையர் பட்டத்தை வென்றார். 52 நிமிடங்கள் நீடித்த விறுவிறுப்பான இறுதிப்போட்டியில், அவர், சிங்கப்பூரின் லோ கீன் யூவை 21–13, 14–21, 21–16 என்ற செட்–கணக்கில் தோற்கடித்தார். முன்னதாக, கடந்த மே மாதம், சவுரப், ஸ்லோவேனிய சர்வதேச பட்டத்தை வென்றிருந்தார். கடந்த ஆண்டு டச்சு ஓப்பன் மற்றும் இரஷ்ய ஓப்பனில் இரண்டு சூப்பர் 100 பட்டங்களையும் அவர் வென்றிருந்தார்.

**3.ஜம்முவில் "Mission Reach Out"ஐ தொடங்கிய இந்திய ஆயுதப்படை எது?**

A) இந்திய வான் படை

B) இந்திய கடற்படை

**C) இந்திய இராணுவம் ☑**

D) இந்திய கடலோர காவல்படை



- 370ஆவது சட்டப்பிரிவின் விதிகள் இரத்து செய்யப்பட்டு ஜம்மு–காஷ்மீர் மறுசீரமைக்கப்பட்ட பின்னர், அப்பிராந்தியத்தில் அடிப்படை தேவைகள் மற்றும் அத்தியாவசிய சேவைகள் கிடைப்பதை உறுதி செய்வதற்காக இந்திய இராணுவம் ஜம்முவில், "Mission Reach Out" என்ற ஒன்றைத் தொடங்கியுள்ளது. இச்சிக்கல் தொடர்பாக, நக்ரோடா இராணுவ நிலையத்தில், பிராந்தியத்தில் நிலவும் நிலைமை குறித்து மீளாய்வு செய்வதற்காக உயர்மட்ட "Mission Reach Out" மாநாடு நடைபெற்றது. இதற்கு White Knight Corps படைத்தளபதி Lt.Gen பரம்ஜித் சிங் தலைமைதாங்கினார்.
- "Mission Reach Out"இன் கீழ் இந்திய இராணுவம் மேற்கொண்ட பல்வேறு பணிகள் பின்வருமாறு:

   1. அத்தியாவசிய மருந்துகள் மற்றும் பெண் மருத்துவ அதிகாரிகளுடன் கூடிய நடமாடும் மருத்துவ பராமரிப்பு பிரிவுகள் (தேவையான இடங்களில்)
   2. நீர் வழங்கல் தடைபட்ட இடங்களில் நீர் வழங்குதல், அத்தியாவசிய பொருட்கள் (உணவுப் பொருட்கள் உட்பட)
   3. நோயாளிகளை மருத்துவமனைகளுக்கு அழைத்துச் செல்வதற்கான உதவி, இராணுவ தொலைபேசியகத்தின் மூலம் பொதுமக்கள் தங்களின் உறவினர்களுடன் பேசுவதற்கான வசதி ஏற்படுத்தித் தருதல் மற்றும் ATMகள், வங்கிகள் மற்றும் மருத்துவமனைகள் வழக்கம்போல செயல்படுவதற்கு பாதுகாப்பான சூழலை உருவாக்குதல்.

### 4.அரசியல் அறிக்கைக்காக நடப்பாண்டு பிரேம் பாட்டியா விருதை வென்ற இந்திய இதழாளர் யார்?

**A) இராஜ்தீப் சர்தேசாய் ☑**

B) இராவீஷ்குமார்

C) பர்கா தத்

D) பிரணோய் ராய்



- இந்தியா டுடே தொலைக்காட்சியின் மூத்த இதழாளரும் ஆலோசனை ஆசிரியருமான இராஜ்தீப் சர்தேசாய்க்கு சிறந்த அரசியல் அறிக்கைக்கான மதிப்புமிக்க நடப்பாண்டு 'பிரேம் பாட்டியா விருது' ஆக.11 அன்று புது தில்லியில் உள்ள இந்திய சர்வதேச மையத்தில் வழங்கப்பட்டது. 2019 பொதுத்தேர்தல்கள் குறித்த தனது வர்ணனைக்காக அவர் இவ்விருதை வென்றார். 1995இல் காலமான மூத்த இதழாளர் பிரேம் பாட்டியாவின் நினைவாக வழங்கப்படும் இவ்விருது, ரூ.2 இலட்சம் ரொக்கப்பரிசை உடையது.

### 5.இந்திய தேசிய அறிவியல் அகாடமியின் (INSA) முதல் பெண் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?

A) அதிதி பாண்ட்

**B) சந்திரிமா ஷாஹா ☑**

C) அசிமா சாட்டர்ஜி

D) சுலோச்சனா கட்கில்



- ✓ Dr.சந்திரிமா ஷாஹா இந்திய தேசிய அறிவியல் அகாடமியின் (INSA) முதல் பெண் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். அவர் தற்போது தில்லியில் உள்ள தேசிய நோயெதிர்ப்பு நிறுவனத்தில் (NII) சிறப்புப் பேராசிரியராக பணிபுரிந்து வருகிறார். ஓர் உயிரியலாளராக ஷாஹா, Apoptosisஇல் (அல்லது திட்டமிடப்பட்ட உயிரணு இறப்பு) தனது கவனத்தை செலுத்துகிறார். அவரது ஆய்வகமானது ஒற்றைச் செல் லீஷ்மேனியா ஒட்டுண்ணியை தனது மாதிரியாகப் பயன்படுத்துகிறது.


**6.இந்தியாவின் முதலாவது நலனை மையப்படுத்திய கடன் அட்டையை (Credit Card) அறிமுகம் செய்துள்ள வங்கி எது?**

A) எச்டிஎஃப்சி வங்கி

**B) ஆர்பிஎல் வங்கி ☑**

C) ஐசிஐசிஐ வங்கி

D) ஆக்சிஸ் வங்கி




- ✓ இந்தியாவின் முதல் நலனை மையப்படுத்திய கடன் அட்டையை RBL வங்கியும் இணையவழி நலன் பராமரிப்பு தளமான Practoஉம் இணைந்து அறிமுகப்படுத்தியுள்ளன. இந்தச் சுகாதார கடன் அட்டை, மாஸ்டர்கார்டு மூலம் இயக்கப்படுகிறது. இது Practo மற்றும் RBLஇன் அலைபேசி செயலிகளிலும் வலைத்தளங்களிலும் கிடைக்கப்பெறும்.
- ✓ இது, அனுபவமிக்க மற்றும் தகுதிவாய்ந்த மருத்துவர்களிடமிருந்து வரம்பற்ற & 24*7 இணையவழி ஆலோசனைகள், ஓர் இலவச முழு உடல்நலப் பரிசோதனை போன்ற நன்மைகளை வழங்குகிறது. இதுதவிர, பயனர்கள் இந்த அட்டையைப் பயன்படுத்தி மருந்துகளை ஆர்டர் செய்யலாம் மற்றும் Practo சேவைகளைப் பெறலாம்.

**7.ஆசிய துணைக்கண்டத்தில் அதிகம் பார்வையிடப்பட்ட அருங்காட்சியகம் எது?**

A) விக்டோரியா நினைவிடம்

B) நேப்பியர் அருங்காட்சியகம்

C) ஆல்பர்ட் மண்டப அருங்காட்சியகம்

**D) கால்சாவின் மரபுடைமை (விரசத் – இ – கால்சா) ☑**



- ✓ பஞ்சாப் மற்றும் சீக்கிய மதத்தின் 550 ஆண்டுகால வரலாறு மற்றும் கலாசாரத்தை பிரதிபலிக்கும் முன்னோடி அருங்காட்சியகமான 'கால்சாவின் மரபுடைமை அருங்காட்சியகம்', ஒரேநாளில் ஆசிய துணைக்கண்டத்திலேயே அதிகம் பேரால் பார்வையிடப்பட்ட அருங்காட்சியமாக மாறியுள்ளது.
- ✓ மார்ச்.20 அன்று ஒரேநாளில் இந்த அருங்காட்சியகத்துக்கு 20,569 பேர் வருகைபுரிந்தனர். எனவே, விரசத்–இ–கால்சா என்ற பெயரில் 'ஒரேநாளில் அதிகபட்ச பார்வையாளர்களைக் கண்ட அருங்காட்சிய–கம்' என்ற சாதனையை படைத்ததாக 'ஆசிய சாதனை நூல்' இதனை உறுதிப்படுத்தியுள்ளது. ஆசிய சாதனை நூலின் அடுத்த பதிப்பில் கால்சா இடம்பெறும்.

✓ முன்னதாக, இந்த அருங்காட்சியகம் "லிம்கா சாதனை நூல் – பிப்ரவரி 2019 பதிப்பு" மற்றும் "இந்தியா சாதனை நூல் – 2020 பதிப்பு" ஆகியவற்றில் இடம்பெற்றிருந்தது. இந்த அருங்காட்சியகம், பஞ்சாப் அரசாங்கத்தால் கட்டப்பட்டு, 2011 நவம்பரில் திறக்கப்பட்டது.

**8.வணிகங்களுக்கு மேகக்கணிமை உட்கட்டமைப்பை (Cloud Infrastructure) வழங்குவதற்காக எந்தத் தொழில்நுட்ப நிறுவனத்துடன் ரிலையன்ஸ் ஜியோ கூட்டுச் சேர்ந்துள்ளது?**

**A) மைக்ரோசாப்ட் ☑**

B) அமேசான்

C) இன்போசிஸ்

D) பேஸ்புக்

✓ இந்தியாவில் டிஜிட்டல் மாற்றத்தை விரைவுபடுத்துவதற்காக மைக்ரோசாப்ட் நிறுவனத்துடன் ரிலையன்ஸ் ஜியோ கூட்டுச்சேர்ந்துள்ளது. இந்த ஒப்பந்தத்தின் கீழ், தொழில்நுட்ப மாற்றத்தை எதிர்பார்க்கும் நிறுவனம் மற்றும் வணிகப் பயனர்களை குறிவைத்து, மைக்ரோசாப்ட் நிறுவனமானது ஜியோ வலையமைப்பில் அசூர் கிளவுட் சேவையைக் கொண்டுவரும். ஜியோ என்பது ரிலையன்ஸ் தொழிற்துறையின் துணைநிறுவனமாகும்.

✓ சிறு & நடுத்தர நிறுவனங்களிடையே முன்னணி தொழில்நுட்பங்களை (தரவு பகுப்பாய்வு, செயற்கை நுண்ணறிவு (AI), அறிவாற்றல் சேவைகள், பிளாக்செயின், இணைய உலகம் மற்றும் நவீன கணினி வசதி) கொண்டு செல்வதே இவ்விரு நிறுவனங்களின் நோக்கமாகும்.

**9.நடப்பாண்டு சர்வதேச இளையோர் நாளுக்கான கருப்பொருள் என்ன?**

A) Safe Spaces for Youth

B) Youth Building Peace

**C) Transforming Education ☑**

D) Youth and Mental Health

✓ உலகளாவிய சமூகத்தை மேம்படுத்துவதில் இளையோரின் முயற்சிகளை அங்கீகரிப்பதற்காக ஒவ்வோர் ஆண்டும் ஆக.12 அன்று சர்வதேச இளையோர் நாள் கொண்டாடப்படுகிறது. தற்கால இளையோரைச் சுற்றியுள்ள கலாசார மற்றும் சட்ட சிக்கல்கள் குறித்து கவனம் செலுத்தும் விதமாக ஐ.நா அவை இந்நாளை கொண்டாடுகிறது. இளையோரது முயற்சிகள் உட்பட, அனைத்து இளையோருக்கும் கல்வியை மிகவும் பொருத்தமான, சமமான மற்றும் உள்ளடக்கியதாக மாற்றுவதற்கான முயற்சிகளை 2019இல் வரும் இந்நாளுக்கான "Transforming Education" என்ற கருப்பொருள் எடுத்துக்காட்டுகிறது.

**10.மூன்றாம் பாலினத்தவர் & பாலின வேறுபாடுடையோர் கொள்கையை அறிமுகப்படுத்தியுள்ள கிரிக்கெட் வாரியம் எது?**

**A) ஆஸ்திரேலியா ☑**

B) மேற்கிந்தியத் தீவுகள்

C) இங்கிலாந்து

D) நியூசிலாந்து

✓ ஒரு புரட்சிகர நடவடிக்கையாக, 3ஆம் பாலினத்தவர் & பாலின வேறுபாடுடையோர் ஆஸ்திரேலியாவில் மிகவுயர்மட்ட விளையாட்டுகளில் பங்கேற்க இயலும் என்பதை உறுதிப்படுத்தும் விதமாக மூன்றாம் பாலினத்தவர்களை உள்ளடக்கிய புதிய கொள்கையை (Transgender Inclusive Policy) ஆஸ்திரேலிய கிரிக்கெட் வாரியம் அண்மையில் அறிமுகப்படுத்தியது. இந்த நடவடிக்கை, பன்னாட்டு கிரிக்கெட் கவுன்சிலின் பாலின அங்கீகாரக் கொள்கை மற்றும் பாலின வேறுபாடு வழிகாட்டுதல்களின்படி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

✓ மாநில மற்றும் தேசிய பெண்கள் அணிகளுக்காக விளையாட விரும்பும் திருநங்கைகள் மற்றும் பாலின வேறுபாடுள்ள வீரர்களுக்கான டெஸ்டோஸ்டிரோன் வரம்பை இந்தக் கொள்கை வகுக்கிறது. உயரடுக்கு பெண்கள் அணிகளுக்கு தகுதிபெற, குறைந்தபட்சம் 12 மாதங்களுக்கு லிட்டர் ஒன்றுக்கு 10 நானோமோல்களுக்கு குறைவான டெஸ்டோஸ்டிரோன் செறிவை வீரர்கள் சான்று பகர வேண்டும்.

✓ அவர்கள் தேர்வு செய்த பாலினம், அவர்களின் அன்றாட வாழ்வோடு எவ்வாறு ஒத்துப்போகிறது என்பதையும் அவர்கள் நிரூபிக்க வேண்டும். பழிவாங்குதல் முதல் தனியுரிமை வரை அனைத்தையும் உள்ளடக்கியுள்ளது இந்த வழிகாட்டுதல்கள்.

---

# தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

✓ கடந்த 8 ஆண்டுகளாக (2011–2018) வழங்கப்படாமல் இருந்த கலைமாமணி விருதுகள், சென்னையில் நடைபெற்ற விழாவில் பல்வேறு கலைஞர்களுக்கு அளிக்கப்பட்டன. இந்த விழாவில், 200 பேருக்கு கலைமாமணி விருதுகளை முதலமைச்சர் க.பழனிசாமி வழங்கினார்.

## 2018ஆம் ஆண்டுக்கான 'கலைமாமணி' விருது பெற்றவர்கள்:

- அமுதகுமார் (மருத்துவ நூலாசிரியர்).
- A.M ஜேம்ஸ் (நூலாசிரியர்).
- இரமணன் (கவிஞர்).
- கணேசன், நிர்மலா பெரியசாமி, மணவை பொன்.மாணிக்கம் – (இயற்றமிழ்).
- S J ஜனனி, இலட்சுமி மோகன், வித்யா சுப்ரமணியன், பிரியா சகோதரிகள் – சண்முகப்பிரியா, ஹரிப்பிரியா, இராஜ்குமார் பாரதி – (குரலிசை).
- மணிபாரதி (வயலின்).

- வீணை M.இராகவன் (வீணை).
- திருப்பனந்தாள் S.பாலசுப்பிரமணியம் (நாதஸ்வரம்).
- K.சத்தியநாராயணன் (கீ போர்டு).
- V.இராஜா (மெல்லிசை).
- பத்மலட்சுமி சுரேஷ், நந்தினி ரமணி, இலாவண்யா சங்கர், நிவேதிதா பார்த்தசாரதி, பினேஷ் மகாதேவன், இலதா இராஜேந்திரன், முரளிதரன் – (பரதநாட்டியம்).
- வரதராஜன் (நாடக நடிகர்).
- ஸ்ரீகாந்த் (நடிகர்).
- சந்தானம் (நகைச்சுவை நடிகர்).
- A.M இரத்னம் (தயாரிப்பாளர்).
- இரவிவர்மன் (ஒளிப்பதிவாளர்).
- உன்னிமேனன் (பின்னணிப் பாடகர்).
- முத்துலட்சுமண இராவ் (தோல்பாவைக்கூத்து).
- முத்துச்சந்திரன் (தோல்பாவைக்கூத்து)
- K.குமரவேல் (பம்பை).
- S A கருப்பையா (நையாண்டி மேளம்).
- கோவிந்தராஜ் (கெக்கலிக்கட்டை).

## 3 புதிய அறிவிப்புகள்:

- கலைமாமணி விருது 3 சவரனுக்குப் பதிலாக இனி 5 சவரன், அதாவது 40 கிராம் எடையுள்ள பொற்பதக்கங்களாக அளிக்கப்படும்.
- மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெ.ஜெயலலிதா பெயரில் மூன்று 'சிறப்பு கலைமாமணி விருதுகள்' ஒவ்வோர் ஆண்டும் வழங்கப்படும். இவையும் தலா 5 சவரன் எடையுள்ள பொற் பதக்கங்களாக வழங்கப்படும்.
- நலிந்த மூத்த கலைஞர்களுக்கு மாதந்தோறும் வழங்கப்படும் உதவித்தொகை ரூபாய் இரண்டு ஆயிரத்திலிருந்து ரூபாய் மூன்றாயிரமாக உயர்த்தி வழங்கப்படும் எனத் தமிழ்நாடு மாநில அரசு அறிவித்துள்ளது.

✓ சிறு வணிகர்களின் பொருட்களை இணையதளம் வழியாக சந்தைப்படுத்தும் முயற்சியாக 'மெரினா' என்னும் பெயருடைய செயலியை தமிழ்நாடு வணிகர் சங்கம் அறிமுகம் செய்துள்ளது. இதில் முழுவதும் தமிழ்நாடு வணிகர்களின் பொருட்கள் மட்டும் விற்பனை செய்யப்படும். வாடிக்கையாளர்கள் இச்செயலியை பிளே ஸ்டோரில் பதிவிறக்கம் செய்து, தங்களுக்கு அருகே நான்கு கிமீ தொலைவில் உள்ள கடைகளில் பொருட்களை ஆர்டர் செய்து வாங்கிக்கொள்ளலாம். அதிகபட்சம் 48 நிமிடத்தில் பொருட்கள் நேரில் ஒப்படைக்கப்படும்.

# நடப்பு நிகழ்வுகள்

**1.மோட்டார் விளையாட்டுகளில் உலக பட்டத்தை வென்ற முதல் இந்தியரான ஐஸ்வர்யா பிஸ்ஸே, எந்த நகரத்தைச் சேர்ந்தவராவார்?**

**A) பெங்களூரு ☑**

B) தில்லி

C) சென்னை

D) கொல்கத்தா



- ✓ பெங்களூரைச் சேர்ந்த ஐஸ்வர்யா பிஸ்ஸே, மோட்டார் விளையாட்டுகளில் உலக பட்டத்தை வென்ற முதல் இந்தியர் என்ற வரலாற்றுச் சாதனையை உருவாக்கியுள்ளார். ஹங்கேரியில் உள்ள வார்பலோட்டாவில் நடந்த சாம்பியன்ஷிப்பின் இறுதிச்சுற்றில் பெண்கள் பிரிவில் வென்ற பின்னர், FIM உலகக் கோப்பையை (Federation Internationale de Motocyclisme) அவர் வென்றார்.
- ✓ துபாயில் நடைபெற்ற முதல்சுற்றில் வென்ற அவர், அடுத்தடுத்த போட்டிகளில் மூன்றாவது (போர்ச்சுகல்), ஐந்தாவது (ஸ்பெயின்) மற்றும் நான்காவது (ஹங்கேரி) இடங்களைப் பிடித்தார். பெண்களுக்கான ஒட்டுமொத்த புள்ளிகளில் போர்ச்சுகலின் ரீட்டா வியேராவை விட பிஸ்ஸே 65 புள்ளிகள் கூடுதலாக பெற்றார். சிலியைச் சேர்ந்த சாம்பியன்ஷிப் வெற்றியாளர் டோமாஸ் டி கவார்டோவுக்கு (60) அடுத்ததாக ஐஸ்வர்யா, 46 புள்ளிகளுடன் FIM ஜூனியர் பிரிவில் இரண்டாவது இடத்தைப் பிடித்தார்.

**2.உயிரி எரிபொருள்கள் தொடர்பான தேசிய கொள்கையை அமல்படுத்திய இந்தியாவின் முதல் மாநிலம் எது?**

A) ஜார்கண்ட்

B) உத்தரப்பிரதேசம்

**C) இராஜஸ்தான் ☑**

D) பஞ்சாப்




- ✓ உலக உயிரி எரிபொருள் நாளை முன்னிட்டு, உயிரி எரிபொருள் விதிகள் – 2019ஐ இராஜஸ்தான் அரசு வெளியிட்டது. மேலும், உயிரி எரிபொருட்கள் தொடர்பான தேசிய கொள்கையை அமல்படுத்திய இந்தியாவின் முதல் மாநிலமாகவும் மாறியுள்ளது. இக்கொள்கை, இந்திய அரசாங்கத்தால் கடந்த மே மாதம் வெளியிடப்பட்டது. எண்ணெய் வித்துக்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்கு முக்கியத்துவம் அளித்து, மாற்று எரிபொருள்கள் மற்றும் எரிசக்தி வளங்களின் துறைகளில் ஆராய்ச்சியை ஊக்குவிக்க உதய்பூரில் ஒரு சிறப்பு மையத்தை இராஜஸ்தான் மாநில அரசு நிறுவவுள்ளது.
- ✓ மேலும் இதுகுறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ராஜஸ்தான் மாநில அரசு உயிரி எரிபொருள் விளம்பரங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும். உயிரி எரிபொருட்களின் பயன்பாடு குறித்து ஊக்குவிக்க –ப்பதற்காக மாநில கிராமப்புற வாழ்வாதார மேம்பாட்டுக் கழகத்தால் மகளிர் சுய உதவிக் குழுக்கள்

உருவாக்கப்படும். இதுதவிர, இந்திய ரயில்வேயின் நிதியுதவியுடன் ஒரு நாளைக்கு 8 டன் அளவிலான உயிரி எரிபொருள் உற்பத்தி செய்யும் உயிரி எரிபொருள் ஆலையானது அம்மாநிலத்தில் ஏற்கனவே நிறுவப்பட்டுள்ளது. உயிரி எரிபொருள் (Biodiesel) என்பது ஒரு மாற்று எரிபொருளாகும். இது புதைபடிவ எரிபொருளுக்கு மாற்றாக பயன்படுத்தப்படுகிறது. இது தாவர எண்ணெய்கள், மறுசுழற்சி செய்யப்பட்ட உயவு எண்ணெய், பாசி மற்றும் விலங்குகளின் கொழுப்பு ஆகியவற்றிலிருந்து தயாரிக்கப்படுகிறது.

**3.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற Holmberg 15A, எந்தத் துறையுடன் தொடர்புடையது?**

A) போர் பயிற்சி

**B) கருந்துளை ☑**

C) சுற்றுச்சூழல் ஒப்பந்தம்

D) வங்கி சார்ந்த செயல்பாடு



- ✓ ஜெர்மனியின் மேக்ஸ் பிளாங்க் நிறுவனத்தில் உள்ள வானியலாளர்கள் அண்மையில் Holmberg 15A என்ற புதிய கருந்துளையை கண்டுபிடித்தனர், இது சூரியனின் நிறையைப் போன்று 40 பில்லியன் மடங்கில் உள்ளது. இந்தக் கருந்துளையானது ஒரு மீஒளிர் நீள்வட்ட விண்மீன் திரளாகும் (Supergiant Elliptical Galaxy), அது பூமியிலிருந்து சுமார் 700 மில்லியன் ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ளது மற்றும் Abell 85 விண்மீன் கொத்தின் மையத்தில் உள்ளது.

- ✓ Holmberg 15A என்பது அதைச் சுற்றியுள்ள நட்சத்திரங்களின் இயக்கத்தைக் கண்காணித்தவரையிலும் இதுவரை கண்டறியப்பட்ட மிகப்பெரிய கருந்துளைகளுள் ஒன்றாகும் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். கருந்துளைகள் என்பது வெளி–நேரத்தின் ஒரு பகுதியாகும். இவை ஈர்ப்பு முடுக்கத்தை மிகவும் வலுவாக வெளிப்படுத்துகிறது. அதிலிருந்து, எந்தவொரு துகள்களும் அல்லது ஒளி போன்ற மின்காந்த கதிர்வீச்சும் கூட தப்பவியலாது.

**4.ஒரே நாளில் 22 கோடி மரக்கன்றுகளை நட்டு, உலக சாதனை படைத்துள்ள மாநில அரசு எது?**

A) இராஜஸ்தான்

**B) உத்தரப்பிரதேசம் ☑**

C) மகாராஷ்டிரா

D) மத்திய பிரதேசம்



- ✓ வெள்ளையனே வெளியேறு இயக்கத்தின் 77ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில், உத்தரப்பிரதேச மாநில அரசு ஒரே நாளில் 22 கோடிக்கு மேற்பட்ட மரக்கன்றுகளை, மாநிலத்தின் 12.2 இலட்சம் இடங்களில் நட்டு உலக சாதனை படைத்துள்ளது. இதற்காக, ஒரே நாளில் 22 கோடி மரக் கன்றுகளை நட இலக்கு வைத்து, 'விருக்ஷரூபன் மகாகும்ப்' என்ற ஒரு பிரம்மாண்ட காடு வளர்ப்பு இயக்கத்தை அம்மாநில அரசு தொடங்கியது. 30,000 மரக்கன்றுகளை நட்ட முந்தைய சாதனையை மகாராஷ்டிராவின் சாவித்ரிபாய் பூலே புனே பல்கலை, கடந்த ஜூன் மாதத்தில் படைத்தது.

**5.பணியாளர் மற்றும் பயிற்சித்துறையானது குழந்தைப் பராமரிப்பு விடுப்பின் (CCL) குறைந்தபட்ச காலத்தை 15 நாட்களிலிருந்து எத்தனை நாளாக குறைத்துள்ளது?**



A) 12

**B)** 5 ☑

C) 10

D) 8

✓ குழந்தைப் பராமரிப்பு விடுப்புப் பயன்களை இராணுவத்தில் பணிபுரியும் ஆண்களுக்கு நீட்டிக்கவும், பாதுகாப்புப் படையில் உள்ள பெண் அதிகாரிகளுக்கு சில விதிவிலக்குகள் அளிக்கவும் பாதுகாப்பு அமைச்சர் இராஜ்நாத் சிங் ஒப்புதல் அளித்துள்ளார். குழந்தைப் பராமரிப்பு விடுப்பை ஒத்த நன்மைகளை இராணுவ ஊழியர்களுக்கு நீட்டிப்பதற்கான பணியாளர் & பயிற்சித்துறையின் சமீபத்திய உத்தரவின் படி, இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

✓ தற்போது, பாதுகாப்புப்படைகளில் உள்ள பெண் அதிகாரிகளுக்கு CCL வழங்கப்படுகிறது. பெண் அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுவரும் குழந்தைப் பராமரிப்பு விடுப்பு இனி தனியாக வசிக்கும் ஆண் அதிகாரிகளுக்கும் வழங்கப்படுமென பணியாளர் & பயிற்சித்துறை தனது விதிகளில் திருத்தம் செய்தது. இதன்மூலம், பெண் ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட குழந்தைப் பராமரிப்பு விடுப்பு, இனி தனியாக வசிக்கும் ஆண் ஊழியர்களுக்கும் நீட்டிக்கப்படும்.

✓ 40% குறைபாட்டுடன் உள்ள குழந்தைகளைப் பராமரிப்பதற்கு 22 வயது என்ற உச்சவரம்பு தற்போது நீக்கப்பட்டுள்ளது. இந்த விடுப்பைப் பயன்படுத்துவதற்கு குறைந்தபட்சம் 15 நாட்கள் கட்டாயம் என்பது 5 நாட்களாக குறைக்கப்பட்டுள்ளது.

**6.பிரிட்டிஷ் அகாடமியின் லாஸ் ஏஞ்சல்ஸ் கிளையின் 2019 சார்லி சாப்ளின் விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளவர் யார்?**



A) ஆல்பர்ட் புரோக்கோலி


B) ஜேன் போன்டா

**C) ஸ்டீவ் கூகன் (Steve Coogan) ☑**

D) ஜாக்கி சான்

✓ பிரிட்டிஷ் அகாடமியின் லாஸ் ஏஞ்சல்ஸ் கிளையின் மிகச்சிறந்த நகைச்சுவைக் கலைஞருக்கான 'சார்லி சாப்ளின் விருது' நடிகர் ஸ்டீவ் கூகனுக்கு வழங்கப்படவுள்ளது. சிறந்த நகைச்சுவையாளரை இவ்விருது அங்கீகரிக்கிறது. கூகனைத் தவிர, மிகச்சிறந்த திரைக்கலைஞருக்கான 'ஸ்டான்லி குப்ரிக் பிரிட்டானியா விருது' ஜேன் போன்டாவுக்கும் (Jane Fonda), பொழுதுபோக்குக்கான உலகளாவிய பங்களிப்புக்கு வழங்கப்படும் 'ஆல்பர்ட் R. புரோக்கோலி பிரிட்டானியா விருது' நடிகர் ஜாக்கிசானுக்கும் வழங்கப்படவுள்ளது. நடப்பாண்டின் பிரிட்டானியா விருதுகள் வழங்கும் விழா, வரும் அக்.25 அன்று பெவர்லி ஹில்டன் உணவகத்தில் நடைபெறவுள்ளது.

7. "Sridevi: Girl Woman Superstar" என்ற நூலின் ஆசிரியர் யார்?




A) அக்ஷத் வர்மா

**B) சத்யார்த் நாயக் ☑**

C) ஜூஹி சதுர்வேதி

D) கசல் தலிவால்

✓ "Sridevi: Girl Woman Superstar" என்ற நூலை ஆசிரியர் – திரைக்கதை எழுத்தாளர் சத்யார்த் நாயக் எழுதியுள்ளார். ஸ்ரீதேவியின் 56ஆவது பிறந்தநாளின்போது இந்நூல் வெளியிடப்படும். ஆணாதிக்கம் நிறைந்த திரைப்படத் துறையில் பெண் நட்சத்திரமாக அவர் எவ்வாறு ஆனார் என இது விவரிக்கிறது. எழுத்தாளரின் கூற்றுப்படி, தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் மற்றும் ஹிந்தி சினிமாவில் ஸ்ரீதேவியின் சாதனைகளை இந்நூல் மிக ஆழமாக ஆராயும். இந்நூல், வரும் அக்டோபரில் பென்குயின் ரேண்டம் பதிப்பகத்தால் 'Ebury Press' முத்திரையின் கீழ் வெளியிடப்படும்.

8. தூர்தர்ஷன் தயாரித்த 'வதன்' என்ற தேசப்பற்றுப் பாடலைப் பாடிய பாடகர் யார்?

**A) ஜாவேத் அலி ☑**




B) அதிஃப் அஸ்லம்

C) அபிஜீத் பட்டாச்சார்யா

D) கவிதா கிருஷ்ணமூர்த்தி

✓ 73ஆவது விடுதலை நாளை முன்னிட்டு, மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர், 'வதன்' என்னும் தேசப்பற்றுப் பாடலை புது தில்லியில் வெளியிட்டார். தூர்தர்ஷன் தயாரித்த இந்தச் சிறப்புப் பாடல், புதிய இந்தியாவுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது. பாடலின் காணொளி தேசிய போர் நினைவிடம், ஒற்றுமை சிலை மற்றும் சந்திரயான் 2 போன்ற அரசாங்கத்தின் பல்வேறு புரட்சிகர முயற்சிகளை எடுத்துக்காட்டுகிறது.

✓ இந்தப் பாடல் ஆயுதப்படைகளின் துணிச்சலையும் வீரத்தையும் போற்றுகிறது மற்றும் நாட்டின் தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்துகிறது. இந்தப் பாடலை பாடகர் ஜாவேத் அலி பாடியுள்ளார். இதனை பாடலாசிரியர் அலோக் ஸ்ரீவாஸ்தவ் இயற்றியுள்ளார் மற்றும் துஷ்யந்த் இசையமைத்துள்ளார்.

9. வடதுருவத்தின் மீது பறக்கும் முதல் இந்திய விமான நிறுவனம் எது?

A) ஜெட் ஏர்வேஸ்



**B) ஏர் இந்தியா (Air India) ☑**

C) ஸ்பைஸ்ஜெட்

D) இண்டிகோ

✓ 73ஆவது விடுதலை நாளை முன்னிட்டு, தேசிய விமானப் போக்குவரத்து சேவையான ஏர் இந்தியா, வடதுருவத்தின் மீது பறக்கும் முதல் இந்திய விமானப் போக்குவரத்து நிறுவனமாக மாறும். தில்லி – சான் பிரான்சிஸ்கோ வரை பறக்கவுள்ள அதன் விமானம், 2000 முதல் 7000 கிலோ எரிபொருளை மிச்சப்படுத்தும் மற்றும் விமானம் ஒன்றுக்கு கரியுமிழ்வை 6000 – 21000 கிலோ வரை குறைக்கும்.

✓ இது கிர்கிஸ்தான், கஜகஸ்தான், இரஷ்யா, ஆர்டிக் பெருங்கடல், கனடா வழியாக பறந்து பின்னர் அமெரிக்காவுக்குள் நுழையும். எனவே, இந்தப் புதிய பாதையானது சுமார் 12,000 கிமீ உள்ள பயண தூரத்தை 8,000 கிலோ மீட்டராகக் குறைக்கும். மேலும் பயண நேரத்தை சராசரியாக 30 நிமிடங்கள் வரை குறைக்கும். ஆக.15 அன்று பறக்கவுள்ள சான் பிரான்சிஸ்கோவுக்கான பயணிகள் விமானத்தை கேப்டன் ரஜினீஷ் சர்மா மற்றும் கேப்டன் திக்விஜய் சிங் ஆகியோர் இயக்குகின்றனர். இந்தியாவின் புவியியல் அமைப்பு காரணமாக அட்லாண்டிக், பசிபிக் மற்றும் துருவம் ஆகிய மூன்று வழிகளிலும் பறக்கும் ஒரே விமான நிறுவனமாக ஏர் இந்தியா மாறவுள்ளது.

**10.புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட கஜின் சாரா ஏரி (Kajin Sara Lake) எந்த நாட்டில் அமைந்துள்ளது?**

A) வங்கதேசம்

**B)** நேபாளம் ☑

C) பூடான்

D) இந்தியா



✓ நேபாளத்தின் மனாங் மாவட்டத்தில் புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட கஜின் சாரா ஏரி உலகின் மிக உயரமான இடத்திலுள்ள ஏரி என்ற புதிய உலக சாதனையை படைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது 5,200 மீ உயரத்தில் அமைந்துள்ளது. இது இன்னும் அதிகாரப்பூர்வமாக சரிபார்க்கப்படவில்லை. தற்போது, நேபாளத்தில் உள்ள திலிச்சோ ஏரி 4,919 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது. திலிச்சோ ஏரி 4 கி.மீ நீளமும், 1.2 கி.மீ அகலமும், 200 மீ ஆழமும் கொண்டது.

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

✓ புது தில்லியில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் ஜவுளி அமைச்சகத்துடன் தமிழ்நாடு உள்ளிட்ட பதினாறு மாநில அரசுகள், சமர்த் – ஜவுளித்துறையில் திறன் வளர்ப்பு திட்டத்தில் பங்கேற்க கையெழுத்திட்டன.

✓ முருகப்பெருமானின் அறுபடை வீடுகளுள் முதன்மையான திண்டுக்கல் மாவட்டம், பழனி அருள்மிகு தண்டாயுதபாணி முருகன் கோவிலின் பஞ்சாமிர்தத்திற்கு புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிலிருந்து சர்வதேச அங்கீகாரம் பெற்ற முதல் பிரசாதம் இதுவாகும்.



# நடப்பு நிகழ்வுகள்

**1.தூய்மை கணக்கெடுப்பு – ஊரகத்தை (Swaccha Survakshan – Grameen) தொடங்கியுள்ள மத்திய அமைச்சகம் எது?**

A) ஊரக வளர்ச்சி அமைச்சகம்

**B) ஜல் சக்தி அமைச்சகம் ☑**

C) வேளாண்மை மற்றும் உழவர் நல அமைச்சகம்

D) பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம்

✓ மத்திய ஜல் சக்தி அமைச்சரான கஜேந்திர சிங் செகாவத், 'சுவச் சர்வேக்ஷன் – கிராமின்' என்னும் இந்தியாவின் மிகப்பெரிய தூய்மை கணக்கெடுப்பை புது தில்லியில் தொடங்கிவைத்தார். தீவிர பரப்புரையின் மூலம் கிராமப்புறத்தினர் தங்களது மாவட்டம் மற்றும் மாநிலத்தின் சுகாதார நிலையை மேம்படுத்துவதே 45 நாட்கள் நீடிக்கும் இந்தக் கணக்கெடுப்பின் நோக்கமாகும்.

✓ 698 மாவட்டங்களில் உள்ள 18,000 சிற்றூர்களில் இந்த ஆய்வு நடைபெறும். சமுதாயக் கூட்டங்கள் நடத்தப்படும் சுமார் 87,000 பொது இடங்களில் சுவச்சதா நடவடிக்கைகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளன. அலைபேசி செயலியின் மூலம் பொதுமக்கள் நேரடியாக தங்கள் கருத்துக்களை வழங்கலாம். சுவச் சர்வேக்ஷன் கிராமினின் இரண்டாவது பதிப்பின் கீழ், பொதுமக்கள் கருத்து, கள ஆய்வு மற்றும் சேவை அளவிலான முன்னேற்றம் ஆகியவற்றிலிருந்து பெறப்படும் தரவுகளின் அடிப்படையில் மாவட்டங்களும் மாநிலங்களும் தரவரிசைப்படுத்தப்படும்.

**2.அருள்மிகு பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவிலின் புகழ்பெற்ற 'பஞ்சாமிர்தம்', அண்மையில் புவிசார் குறியீடைப் பெற்றது. இந்தக் கோவில், எந்த மாநிலத்தில் அமைந்துள்ளது?**

**A) தமிழ்நாடு ☑**



B) கேரளா

C) கர்நாடகா

D) ஆந்திரப்பிரதேசம்

✓ அருள்மிகு பழனி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவிலின் புகழ்பெற்ற 'பஞ்சாமிர்த'த்திற்கு புவிசார் குறியீடு கிடைத்துள்ளது. தமிழ்நாட்டைச் சேர்ந்த கோவில்களில் வழங்கப்படும் பிரசாதத்திற்கு புவிசார் குறியீடு வழங்கப்படுவது இதுவே முதல்முறையாகும். பழனிக்கோவிலின் தனித்துவமிக்க'பஞ்சாமிர்தம்' வாழைப்பழம், வெல்லம், பசு நெய், மலைத்தேன் & ஏலக்காய் போன்ற 5 இயற்கைப் பொருட்களைப் பயன்படுத்தி தயாரிக்கப்படுகிறது. இந்தப் பஞ்சாமிர்தம், முருகனுக்கு அபிஷேகம் செய்யப்பட்டு, பின்னர், பக்தர்களுக்குப் பிரசாதமாக வழங்கப்படுகிறது.

✓ தித்திப்புச் சுவையுடைய இது, பழனி மலையின் மீது அமைந்துள்ள அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவிலின் மூலவரான தண்டாயுதபாணி சுவாமிக்கு படைக்கப்படும் முக்கிய பிரசாதங்களுள்

ஒன்றாக உள்ளது. பஞ்சாமிர்தத்தின் தரத்தை மைசூரில் உள்ள மத்திய உணவு தொழினுட்ப ஆராய்ச்சி நிறுவனம் கண்காணித்து வருகிறது. தமிழ்நாட்டில் உள்ள முருகனின் அறுபடை வீடுககளுள் 'பழனி' முதன்மையானதும் முக்கியமானதும் ஆகும். 'குறிஞ்சி' நிலத்தின் தலைவனான முருகப்பெருமானின் வாழ்க்கையுடன் சிறப்புத் தொடர்பினை கொண்டுள்ளது பழனிமலை.

**3.எந்த IITஐச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் ஒரு மலிவு விலை இரத்தப் பரிசோதனை சாதனத்தை உருவாக்கியுள்ளனர்?**

A) ஐஐடி கான்பூர்

**B) ஐஐடி கரக்பூர் ☑**

C) ஐஐடி பம்பாய்

D) ஐஐடி தில்லி



✓ விரல் நுனியிலிருந்து பெறப்பட்ட துளி இரத்தத்தைப்பயன்படுத்தி பல்வேறு நோயறி சோதனைகளை மேற்கொள்ளும் ஒரு மலிவுவிலை நோயறி சாதனத்தை IIT கரக்பூரைச்சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கியுள்ளனர். இந்தச் சாதனம், பகுப்பாய்வு மற்றும் ஆய்வுச்செயல்பாடுகளை மேற்கொள்வதற்கு, திறன்பேசியுடன் ஒருங்கிணைந்த ஒரு காகிதத்துண்டு (Paper Strip) அடிப்படையிலான உபகரணமும், படமாக்கலுக்கான LED ஒளியும் மட்டுமே தேவைப்படுகிறது. செயல்பாட்டில் எளிமையும், மிகக் குறைந்த இயக்கச் செலவுமே இதன் முக்கிய அம்சமாகும். பேராசிரியர் சுமன் சக்ரவர்த்தி தலைமையிலான ஆய்வுக் குழுவால் இந்த உபகரணம் உருவாக்கப்பட்டுள்ளது.

**4.பிரெஞ்சு கௌரவத்தைப் பெற்ற முதல் இந்திய சமையல்காரர் யார்?**

A) சஞ்சீவ் கபூர்

B) இரன்வீர் பிரார்

C) விகாஸ் கன்னா

**D) பிரியம் சாட்டர்ஜி ☑**



✓ பிரியம் சாட்டர்ஜி, பிரான்ஸ் அரசாங்கத்தால் 'Chevalier de l'Ordre du Mérite Agricoleto' வழங்கிக் கௌரவிக்கப்பட்ட முதல் இந்திய சமையல்காரராக மாறியுள்ளார். இந்தியாவில் அறுசுவை உணவை புதுப்பிப்பதில் அவராற்றிய பங்களிப்பை இவ்விருது அங்கீகரிக்கிறது. தற்போது, பிரான்சில் உள்ள ஜான் உணவக படகில் தலைமைச் சமையல்காரராக பிரியம் பணிபுரிந்து வருகிறார்.

**5.'எண்பலகை நடவடிக்கை – Operation Number Plate' என்ற பெயரில் சிறப்பு நடவடிக்கையை தொடங்கிய அமைப்பு எது?**

A) தேசிய பாதுகாப்புப் படை

B) எல்லைப் பாதுகாப்புப் படை

C) மத்திய சேமக் காவல் படை

**D) இரயில்வே பாதுகாப்புப் படை ☑**

✓ இந்திய இரயில்வேயின் இரயில்வே பாதுகாப்பு படை (RPF) இரயில் பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக 'எண்பலகை நடவடிக்கை' என்ற சிறப்பு நடவடிக்கையை தொடங்கியுள்ளது. இந்திய இரயில்வேயின் இருசக்கர வாகன நிறுத்தகங்களில் உள்ள பதிவெண்ணற்ற வாகனங்கள் மற்றும் நீண்ட நாட்களாக கேட்பாரற்று கிடக்கும் வாகனங்களை அடையாளங்காண்பதே இந்தச் சிறப்பு நடவடிக்கையின் நோக்கமாகும்.

**6.குவாத்தமாலாவின் புதிய அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டவர் யார்?**



A) மரியானோ ரிவேரா பாஸ்

B) ஜிம்மி மோரல்ஸ்

**C) அலெஜான்ட்ரோ கியாமட்டே (Alejandro Giammattei) ☑**

D) அலெஜான்ட்ரோ மால்டோனாடோ

✓ 2019 குவாத்தமாலா அதிபர் தேர்தலின் இரண்டாவது சுற்றில் வென்றபின் குவாத்தமாலாவின் புதிய அதிபராக அலெஜான்ட்ரோ கியாமட்டே தேர்ந்தெடுக்கப்பட்டார். ஏற்கனவே மும்முறை அதிபர் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியுற்ற இவர், நான்காவது முறையாக இம்முறை போட்டியிட்டு வென்றுள்ளார். மகாத்மா காந்தியை தனது போற்றுதலுக்குரிய உலக நபராக அவர் குறிப்பிடுகிறார்.

**7.பிரதம மந்திரி கிசான் மான்–தன் திட்டத்தின்படி (PM–KMY), 60 வயதை எட்டும் தகுதிவாய்ந்த விவசாயிகளுக்கு, மாதந்தோறும் ஓய்வூதியமாக எவ்வளவு தொகை வழங்கப்படும்?**

A) ரூ 5000

B) ரூ 6000

**C) ரூ 3000 ☑**

D) ரூ 4000




✓ நாட்டின் சிறு மற்றும் குறு விவசாயிகளின் வாழ்க்கையை மேம்படுத்தும் நோக்கில், மத்திய அரசு அண்மையில் பிரதம மந்திரி கிசான் மான்–தன் திட்டத்துக்கான (PM–KMY) பதிவைத் தொடங்கியது. விவசாயிகளுக்கான இத்திட்டம், 2019–20 மத்திய வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்தத் திட்டம், 18 முதல் 40 வயது வரையிலான விவசாயிகளுக்கு தன்னார்வத்துடன் பங்கேற்பு அடிப்படையிலான ஓய்வூதியத் திட்டத்தை வழங்குகிறது.

✓ திட்டத்தில் சேர்ந்த வயதைப்பொறுத்து விவசாயிகள் 60 வயதை எட்டும் வரை மாதந்தோறும் ரூ.55 முதல் ரூ.200 வரை பங்களிப்பு செய்ய வேண்டும். அதேயளவு தொகையை மத்திய அரசு ஓய்வூதிய நிதியில் சமமாக வழங்கும். விவசாயியின் மனைவி தனியாக பங்கேற்பு நிதியளித்தால் அவரும் தனியாக மாதம் ரூ.3000 ஓய்வூதியமாக பெற தகுதியுடையவராவார்.

✓ இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகம் (LIC) ஓய்வூதிய நிதியின் மேலாளராகவும், ஓய்வூதியம் வழங்கலுக்கு பொறுப்புடையதாகவும் இருக்கும். ஜம்மு மற்றும் காஷ்மீர், இலடாக் உட்பட நாடு முழுவதும் PM–KMY செயல்படுத்தப்படும்.

**8.எந்தத் தேதியில், உலக யானைகள் நாள் கடைப்பிடிக்கப்படுகிறது?**

**A) ஆகஸ்ட் 12 ☑**

B) ஆகஸ்ட் 14

C) ஆகஸ்ட் 13

D) ஆகஸ்ட் 10



✓ ஆசிய & ஆப்பிரிக்க யானைகளின் மோசமான நிலைகுறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் ஆக.12 அன்று உலக யானைகள் நாள் அனுசரிக்கப்படுகிறது. யானை, இந்திய நாட்டின் 'தேசிய பாரம்பரிய விலங்கு' ஆகும். பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்புச் சங்கத்தின் (IUCN) அச்சுறுத்த நிலை இனங்களுக்கான சிவப்புப்பட்டியலில், ஆப்பிரிக்க யானைகள் 'இடர்மிகு–Vulnerable' இனமாகவும் ஆசிய யானைகள் 'அருகிவிட்ட – Endangered' இனமாகவும் பட்டியலிடப்பட்டுள்ளன. வேட்டைக்காரர்கள் யானைகளின் தந்தங்களை குறிவைப்பதாலேயே அவற்றின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. அவற்றின் எண்ணிக்கை குறைவதற்கு வாழ்விட இழப்பு மற்றொரு காரணமாகும்.

**9.எந்தத் தேதியில், உலக உடலுறுப்புதான நாள் கடைப்பிடிக்கப்படுகிறது?**

A) ஆகஸ்ட் 12

**B) ஆகஸ்ட் 13 ☑**

C) ஆகஸ்ட் 14

D) ஆகஸ்ட் 15



✓ மக்கள் தங்களின் விலைமதிப்பற்ற உடலுறுப்புகளை தானம் செய்வதை ஊக்குவிப்பதற்காக, ஒவ்வோர் ஆண்டும் ஆக.13 அன்று உலக உடலுறுப்புதான நாள் கடைப்பிடிக்கப்படுகிறது. ஒவ்வோர் ஆண்டும், உடலுறுப்பு மாற்று சிகிச்சைக்காக காத்திருப்போரில் சுமார் ஐந்து இலட்சம் பேர், உடலுறுப்பு கிடைக்காத காரணத்தினால் மரணிக்கிறார்கள். உடலுறுப்பு மாற்று சிகிச்சைக்கு காத்திருப்போரின் எண்ணிக்கை –க்கும், உடலுறுப்பு கிடைக்கும் எண்ணிக்கைக்கும் இடையே பெருமளவு வித்தியாசம் உள்ளது.

- ✓ உடலுறுப்பு தானம் என்பது நோயுற்று, உடலுறுப்பு பாதிக்கப்பட்ட ஒருவருக்கு மற்றொருவர் அந்த உடலுறுப்பைத் தானமாக அளிப்பதாகும். இதை, ஒருவர், உயிருடன் இருக்கும்போதோ அல்லது இறந்த பிறகோ மேற்கொள்ளமுடியும். சிறுநீரகம், நுரையீரல், இருதயம், கண், சிறு குடல், கல்லீரல், கணையம், விழிப்படலம், தோல் திசுக்கள், எலும்புத்திசுக்கள், இதயக்குழாய்கள் மற்றும் நரம்புகள் ஆகியவற்றை ஒருவர் தானமாக வழங்கவியலும்.

**10. CSR செலவினங்களை வரி விலக்குச் செலவாக மாற்ற பரிந்துரைக்கும் CSR தொடர்பான உயர் மட்டக் குழுவின் தலைவர் யார்?**

**A) இஞ்செட்டி சீனிவாஸ் ☑**

B) நிருபேந்திர மிஸ்ரா

C) பிரமோத் குமார் மிஸ்ரா

D) பாஸ்கர் குல்பே



- ✓ பெருநிறுவன விவகார செயலாளர் இஞ்செட்டி சீனிவாஸ் தலைமையிலான பெருநிறுவனங்களின் சமூக பொறுப்புணர்வுக்கான உயர்மட்டக் குழு, சமீபத்தில் தனது அறிக்கையை நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனிடம் சமர்ப்பித்தது. அந்த அறிக்கையின் முக்கிய பரிந்துரைகளுள் CSR செலவின வரி விலக்கு அளிக்கப்படுவது, 3–5 ஆண்டுகாலத்திற்கு செலவிடப்படாத நிலுவைத் தொகையை முன்கொணர்வது மற்றும் நிறுவனங்கள் சட்டத்தின் ஏழாவது அட்டவணையை (CSR ஆக தகுதிபெறும் செயல்பாடுகளை கோடிட்டுக் காட்டுகிறது) ஐ.நா நீடித்த வளர்ச்சி இலக்குகளுடன் இணைத்தல் ஆகியவை அடங்கும்.
- ✓ CSR பரிந்துரைத்த தொகையான ரூ.50 இலட்சத்துக்குக் குறைவாகவுள்ள நிறுவனங்களுக்கு CSR குழு அமைப்பதிலிருந்து விலக்களிக்கலாம் எனவும் அக்குழு பரிந்துரைத்துள்ளது. பெருநிறுவனங்கள் சமூக–பொறுப்புணர்வு இணக்கத்தை மீறுவது என்பது ஓர் உரிமையியல் குற்றமாக்கப்பட்டு அபராதம் விதிக்கும் அளவுக்கு மாற்றலாம் என்றும் அக்குழு பரிந்துரைத்துள்ளது.

# தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

## 2016 – 2018ஆம் ஆண்டுகளுக்கான விருதுபெறும் அகில இந்திய அளவில் புகழ்பெற்ற தமிழ்நாட்டுக் கலைஞர்களுக்கான விருதுகள்:



### பாரதி விருது:

1. புலவர் புலமைப்பித்தன் (கவிஞர்–பாடலாசிரியர்)
2. கவிஞர் சுப்பு ஆறுமுகம் (வில்லிசை) 3. சிவசங்கரி (எழுத்தாளர்)



### பாலசரஸ்வதி விருது:

1. சி.வி.சந்திரசேகர் (பரதநாட்டியம்) **2.** வைஜெயந்தி மாலா பாலி (பரதநாட்டியம்).
3. வி.பி.தனஞ்ஜெயன் (பரதநாட்டிய ஆசிரியர்)



### எம்.எஸ். சுப்புலட்சுமி விருது:

1. எஸ்.ஜானகி (திரைப்பட பாடகி – குடும்பத்தினர் பெற்றனர் )
2. பாம்பே சகோதரிகள் சி.சரோஜா – சி.லலிதா (கர்நாடக இசைக் கலைஞர்கள்).
3. டி.வி. கோபாலகிருஷ்ணன் (கர்நாடக இசைக்கலைஞர்).

---

## நடப்பு நிகழ்வுகள்

**1.எந்த IITஐச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள், முட்டை ஓட்டிலிருந்து எலும்புக்கான மாற்றுகளை உருவாக்கியுள்ளனர்?**

A) ஐஐடி மெட்ராஸ்

B) ஐஐடி தில்லி

C) ஐஐடி பம்பாய்

**D) ஐஐடி ஹைதராபாத் ☑**



✓ IIT ஹைதராபாத் மற்றும் ஜலந்தரில் உள்ள B R அம்பேத்கர் தேசிய தொழில்நுட்ப நிறுவனத்தின் ஆராய்ச்சியாளர்கள் (NIT) ஒரு செயல்முறையை உருவாக்கியுள்ளனர். இதன்மூலம் எலும்பு உள்வைப்பு பொருட்களை கழிவு முட்டை ஓடுகளிலிருந்து உருவாக்க முடியும். டிரை–கால்சியம் பாஸ்பேட் (TCP) போன்ற எலும்பு மாற்றுப் பொருள்களை நச்சு இரசாயனங்கள் பயன்படுத்தாமல் உருவாக்குவதற்கு அவர்கள் முயற்சி செய்கிறார்கள்.

✓ IIT ஹைதராபாத் ஆராய்ச்சியாளர்களின் இயற்கை ஆதார தேர்வாக முட்டை ஓடுகள் உள்ளன. முட்டை ஓடுகள் பெரும்பாலும் கால்சியம் (95.1%) மற்றும் சிறிய அளவு புரதங்கள் மற்றும் தண்ணீரால் ஆனவை. நவீனகால மருத்துவத்தில், சேதமடைந்த மற்றும் தொலைந்த எலும்புகள் நோயாளியிடமிருந்தோ அல்லது நன்கொடையாளரிடமிருந்து பெறப்படும் எலும்புகளைக் கொண்டோ அல்லது பாரிசச் சாந்து போன்ற கால்சியம் நிறைந்த செயற்கைப் பொருட்களையும், ஹைட்ராக்ஸிபடைட் மற்றும் கால்சியம் பாஸ்பேட் போன்ற பாஸ்பேட் கலவைகளைப் பயன்படுத்தி உருவாக்கப்படும் எலும்பு மாற்றுப் பொருட்களைக் கொண்டோ மாற்றப்படுகின்றன. TCP (Tri–Calcium Phosphate) என்பது எலும்பு மாற்றுப் பொருளாக பயன்படுத்தப்படும் ஒரு பொதுவான இயற்கை மூலப் பொருளாகும்.


**2.எந்த IITஐச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள், 'GraspMan' என்னும் தொழிற்துறை மற்றும் களத்தில் பயன்படுத்தக்கூடிய ரோபோவை உருவாக்கியுள்ளனர்?**

**A) ஐஐடி மெட்ராஸ் ☑**

B) ஐஐடி தில்லி

C) ஐஐடி பம்பாய்

D) ஐஐடி ஹைதராபாத்



✓ தொழில் நிறுவனங்களில் பல பணிகளுக்குப் பயன்படும் வகையிலான நவீன தொழில்நுட்பங்களுடன் கூடிய ரோபோட்டை மெட்ராஸ் IIT ஆராய்ச்சியாளர்கள் வடிவமைத்துள்ளனர். 'GraspMan' எனப் பெயரிடப்பட்டிருக்கும் இந்த ரோபோட் மெட்ராஸ் IIT பொறியியல் வடிவங்கள் துறையின் கீழ் இயங்கி வரும் தானியங்கி ஆய்வகப் பேராசிரியர் அசோகன் தொண்டியாத் தலைமையிலான குழு வடிவமைத்துள்ளது.

✓ தொழில்நிறுவனங்களில் பல்வேறு பணிகளை மேற்கொள்ளும் வகையில் புரிதல், கட்டளையை ஏற்று நடத்தல், இடம்பெயர்தல் ஆகிய திறன்களுடன் இந்த ரோபோட் வடிவமைக்கப்பட்டுள்ளது. மாறுபட்ட சூழல்களுக்கு ஏற்ப செயல்படும் திறன்கொண்டது. இந்த ரோபோட்டுடன் இணைக்கப்பட்டிருக்கும் கைகள், மனித கைகளுக்கு இணையாக பல்வேறு வடிவங்களிலான பொருள்களை எளிதாகக் கையாளும் திறன்கொண்டதாகும்.

**3. 18 ஆண்டுகளுக்குப் பிறகு உலக ஜூனியர் மல்யுத்த சாம்பியன்ஷிப்பில் தங்கம் வென்ற முதல் இந்தியர் யார்?**

A) ஆகாஷ் ஆன்டில்

B) பர்வீன் மாலிக்

C) விஜய் பாட்டீல்

**D) தீபக் புனியா ☑**



✓ எஸ்டோனியாவின் தாலினில் நடந்த உலக ஜூனியர் மல்யுத்த சாம்பியன்ஷிப்பின் ஆண்களுக்கான 'பிரீஸ்டைல்' 86 கிலோ எடைப்பிரிவு இறுதிப்போட்டியில், இந்தியாவின் தீபக் புனியா, இரஷ்யாவின் அலிக் ஷெய்ஜுகோவை வீழ்த்தி தங்கம் வென்றார். இதன்மூலம் இந்தத் தொடரில் 18 ஆண்டுக்குப்பின் இந்தியாவுக்கு தங்கப்பதக்கம் கிடைத்துள்ளது. இதற்குமுன், 2001ஆம் ஆண்டில் இரமேஷ் குமார் (69 கிலோ), பால்விந்தர் சிங் சீமா (130 கிலோ) ஆகியோர் தலா ஒரு தங்கம் வென்றிருந்தனர்.

**4.உலக கல்வி உச்சிமாநாடு –2019இல் விருது பெற்ற மாநிலம் எது?**

**A) இராஜஸ்தான் ☑**

B) உத்தரப்பிரதேசம்

C) மகாராஷ்டிரா

D) மத்திய பிரதேசம்


14th WORLD EDUCATION SUMMIT DELHI
CONFERENCE • AWARDS • EXPO

✓ புது தில்லியில் நடந்த 14ஆவது உலக கல்வி உச்சிமாநாட்டில் (World Education Summit – 2019), உயர் கல்வியில் புரிந்த சாதனைகளுக்காக "Best Innovation & Initiative Leadership Award – சிறந்த புத்தாக்கம் மற்றும் முன்னெடுப்புக்கான தலைமைத்துவ விருது" இராஜஸ்தான் மாநில அரசுக்கு வழங்கப்பட்டது. இவ்விருதை அம்மாநிலத்தின் உயர்கல்வித்துறை அமைச்சர் பன்வர் சிங் பாட்டி பெற்றுக்கொண்டார். இந்த 2 நாள் மாநாட்டில் 8 நாடுகள் & இந்தியாவின் 17 மாநிலங்களின் பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

**5.அண்மையில் காலமான V B சந்திரசேகர், எந்த விளையாட்டுடன் தொடர்புடையவர்?**

A) கூடைப்பந்து **B) கிரிக்கெட் ☑**

C) கால்பந்து D) ஹாக்கி



✓ முன்னாள் இந்திய மற்றும் தமிழக கிரிக்கெட் வீரரான V B சந்திரசேகர் (57), ஆகஸ்ட்.15 அன்று சென்னையில் காலமானார். VB என அன்புடன் அழைக்கப்படும் இவர், இந்திய கிரிக்கெட் அணிக்காக 7 ஒருநாள் சர்வதேச போட்டிகளில் விளையாடியுள்ளார். இதில், அதிகபட்சமாக 53 இரன்களை அவர் எடுத்துள்ளார். 81 முதல்தரப் போட்டிகளில் 4,999 இரன்களை 10 சதங்களுடன் எடுத்துள்ளார்.

✓ 1988இல், தமிழ்நாடு, இரஞ்சிக்கோப்பையை வென்றபோது அவ்வணியின் ஓரங்கமாக அவர் இருந்தார். பின்னர், ஒருகட்டத்தில் கோவா அணிக்காக ஆடினார். தமிழ்நாடு அணியையும் வழிநடத்தியுள்ளார். ஓய்வுக்குப்பிறகு, பயிற்சி மற்றும் வர்ணனையில் கவனம் செலுத்திவந்தார். சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் மேலாளராகவும் செயல்பட்டார். முதல் IPL ஏலத்தில் தோனியை ஏலம் எடுக்க பிரதான காரணமாக இருந்தவர் V B சந்திரசேகர் ஆவார்.

**6. ஆசிய தடகள சங்கத்தின் (AAA) தடகள ஆணையத்தில், உறுப்பினராக நியமிக்கப்பட்ட முன்னாள் இந்திய விளையாட்டு வீரர் யார்?**

A) அஞ்சு பாபி ஜார்ஜ்

B) இராஜ்யவர்தன் சிங் ரத்தோர்

**C) P T உஷா ☑**

D) கர்ணம் மல்லேஸ்வரி



✓ புகழ்பெற்ற இந்திய தடகள வீராங்கனையும் ஒலிம்பிக் வெற்றியாளருமான P T உஷா, ஆசிய தடகள சங்கத்தின் (AAA) தடகள ஆணையத்தின் உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார். AAA தடகள ஆணையத்தின் ஆறு உறுப்பினர்களுள் ஒருவராக P T உஷா இருப்பார். இந்த ஆணையத்திற்கு 1992ஆம் ஆண்டு ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற சம்மட்டி எறி வீரரான உஸ்பெகிஸ்தானைச் சேர்ந்த ஆண்ட்ரி அப்துவலீவ் தலைமைதாங்குவார்.

✓ 1984 லாஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக்கில், 400 மீ தடைதாண்டல் இறுதிப்போட்டியில், வெண்கலத்தை 1/100 வினாடியில் P T உஷா தவறவிட்டார். 'பய்யோலி எக்ஸ்பிரஸ்' என அழைக்கப்படும் இவருக்கு, 1983ஆம் ஆண்டில் 'அர்ஜுனா' விருது வழங்கப்பட்டது. அண்மையில், சர்வதேச தடகள கூட்டமைப்பின் (IAAF) மதிப்புமிக்க 'Veteran Pin' விருதுக்கு P T உஷா பரிந்துரைக்கப்பட்டார்.

**7. மாணவ தொழில்முனைவோருக்கான 'E–Step' திட்டத்தை தொடங்கியுள்ள மாநில அரசு எது?**

A) தமிழ்நாடு

**B) கர்நாடகா ☑**

C) பஞ்சாப்

D) கேரளா



✓ மாணவர்களின் துளிர் – நிறுவனங்களை மேம்படுத்துவதற்கான ஒரு முன்முயற்சியாக 'E – Step'ஐ கர்நாடக அரசு தொடங்கியுள்ளது. தொழில்முனைவின் பல்வேறு அம்சங்களை உள்ளடக்கிய தொடக்க முகாம்கள் (Boot Camps), வழிகாட்டுதல் மற்றும் பயிற்சித் திட்டங்களில் 'E–Step' தனது கவனத்தைச்

செலுத்தும். இந்தத் திட்டம், கர்நாடகா புத்தாக்கம் மற்றும் தொழினுட்ப சங்கத்தின் (KITS) ஒருபகுதியாக உள்ளது. அனுபவம்வாய்ந்த பயிற்சியாளர்களிடமிருந்து தொழில்முனைவின் அடிப்படைகளைப் புரிந்து கொள்வதற்காக மாணவர்கள்/துளிர்–நிறுவனர்கள் (Startups)/தொழில்முனைவோருக்காக சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

✓ 'E–Step' ஆனது முதற்கட்டமாக மாநிலம் முழுவதுமுள்ள அனைத்து தற்கால அடைவு வலையமைப்புக –ளிலும் (NAIN) நாள் முழுவதும் நடைபெறும் தொடக்க முகாம்களை நடத்தும். இத்தொடக்க முகாம்கள், பங்கேற்பாளர்களுக்கு தற்போதைய துளிர்–நிறுவன அமைப்பின் கண்ணோட்டத்தை வழங்கும்.

**8.எந்த நகரத்தில், இந்தியாவின் முதலாவது தனியார் விண்வெளி அறிவியல் அருங்காட்சியகம் திறக்கப்பட்டுள்ளது?**



**A) ஹைதராபாத் ☑**

B) உஜ்ஜைன்

C) டேராடூன்

D) இலக்னோ

✓ இந்தியாவின் முதலாவது தனியார் விண்வெளி அறிவியல் அருங்காட்சியகம், ஹைதராபாத்தில், பிர்லா தொல்பொருள் மற்றும் கலாசார ஆராய்ச்சி நிறுவனத்தின் (BACRI) பொன்விழாவைக் குறிக்கும் வகையில் திறக்கப்பட்டுள்ளது. இது இந்திய விண்வெளி ஆய்வு மையம் (ISRO) மற்றும் B M பிர்லா அறிவியல் மையத்துக்கும் இடையிலான கூட்டுத் திட்டமாகும். ISRO அதன் பங்குக்கு சுமார் 65 மாதிரிகளில் பல்வேறு விண்கலங்கள், செயற்கைக்கோள்கள் மற்றும் பல்வேறு அளவிலான ஏவுகணைகளை இந்த அருங்காட்சியகத்துக்கு வழங்கும்.

✓ இந்த அருங்காட்சியகத்தில், இந்திய ஏவுகலங்களான GSLV Mk – III, GSLV Mk – II மற்றும் PSLV, சந்திரயான் – I, செவ்வாய் விண்சுற்றுக்கலம், ஆப்பிள், ஆர்யபட்டா, பாஸ்கரா, ரோகிணி RS–1 மற்றும் சர்வதேச விண்வெளி நிலையத்தின் (ISS) மாதிரி ஆகியவை காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. விண்வெளி அறிவியல் மற்றும் தொழினுட்பத்தை ஆராய்வதற்கு இளையோரை ஊக்குவிக்கும் வகையில், தற்போது 24 கண்காட்சிகள் இவ்வருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

**9.அண்மையில் கிளிமஞ்சாரோ மலையை ஏறிய அத்வைத் பார்தியா, எந்த நகரத்தைச் சேர்ந்தவர்?**



A) தில்லி

**B) புனே ☑**

C) சண்டிகர்


D) புவனேஸ்வர்

✓ புனேவைச் சேர்ந்த அத்வைத் பார்தியா என்ற 9 வயது சிறுவன் அண்மையில் ஆப்பிரிக்காவின் மிக உயர்ந்த சிகரமான கிளிமஞ்சாரோவை வெறும் 7 நாட்களில் ஏறியுள்ளான். அத்வைத்தை அன்பாக

'சிம்பம் டோட்டோ' (சிறு சிம்பா) என அழைக்கிறார்கள். பயிற்சியாளர் சமீர் பதாமின் கண்காணிப்புடன் கடந்த ஜூலை.31 அன்று அச்சிறுவன் அம்மலையின் உச்சியை அடைந்தான்.

✓ இந்த மலையேற்றத்தை புனேவைச்சேர்ந்த சாகச மற்றும் மலையேற்ற நிறுவனமான அட்வென்ச்சர் பல்ஸ் ஏற்பாடுசெய்தது. தான்சானியாவில் உள்ள கிளிமஞ்சாரோ அதன் அடிவாரத்திலிருந்து சுமார் 4,900 மீ உயரமும், கடல் மட்டத்திலிருந்து 5,895 மீ உயரமும் கொண்டுள்ளது. பனிப்பாறைகள் சுருங்கி, பனிப்பகுதிகள் மறைந்துவருவதால் இம்மலை பல அறிவியல் ஆய்வுகளுக்கு ஆட்பட்டுள்ளது.

**10. "Kashmir's Untold Story: Declassified" என்ற நூலின் ஆசரியர் யார்?**




A) பர்வேஸ் சர்மா

**B) இக்பால் சந்த் மல்கோத்ரா ☑**

C) ஜாபர் படேல்

D) அலெக்ஸா முகமது பாசில்

✓ "Kashmir's Untold Story: Declassified" என்ற நூலை திரைப்பட தயாரிப்பாளர் இக்பால் சந்த் மல்கோத்ரா மற்றும் பாதுகாப்பு பகுப்பாய்வாளர் மரூப் ரசா ஆகியோர் இணைந்து எழுதியுள்ளனர். மகாராஜா குலாப் சிங்கின் கீழ் அரசியல் மற்றும் புவியியல் ஒருங்கிணைப்பு ஏற்பட்டதிலிருந்து இன்று வரை ஜம்மு & காஷ்மீரின் விறுவிறுப்பான வரலாற்றை இந்நூல் கூறுகிறது. இணைப்பு ஒப்பந்தத்தில் சிறப்புத்தகுதி ஏன் ஒருங்கிணைந்துள்ளது என்பதையும் இந்நூல் வெளிக்காட்டும்.

✓ அப்போதைய மகாராஜாவின் ஆட்சியை இன்றுவரை அகற்றி, 1889ஆம் ஆண்டில் மத்திய ஆட்சியை முதன்முதலாக திணித்ததும், இந்திய அரசின் கொள்கை பற்றியும் இந்நூல் வெளிப்படுத்தும். "இந்தியப் பிரிவினைக்குப் பின்னர் 72 ஆண்டுகளாக காஷ்மீர் பள்ளத்தாக்கில் இந்த நெருக்கடி நிலை ஏன் தொடர்ந்து வருகிறது?", "இத்தனை ஆண்டுகளாக பாகிஸ்தான் என்ன பங்கு வகித்தது?" அல்லது தற்போதைய நேரத்தின் கேள்வியான "மாநிலத்தில் நிலவும் தீவிரவாதத்துக்கு எப்போதாவது தீர்வு வருமா? போன்ற காஷ்மீர் பள்ளத்தாக்கின் நிலைமை குறித்து அதிகம் கேட்கப்படும் சில கேள்விகளுக்கும் இந்நூல் பதில்களை வழங்கும்.

# தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

✓ தமிழ்நாட்டிலேயே அதிக பரப்பளவுகொண்ட மாவட்டமாக விளங்கும் வேலூர் மாவட்டத்தை வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை என மூன்று மாவட்டங்களாகப் பிரிக்கப்படும் என தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. இந்த அறிவிப்பால், தமிழ்நாட்டில் மொத்தமுள்ள மாவட்டங்களின் எண்ணிக்கை 35இல் இருந்து 37ஆக உயர்ந்துள்ளது.

- ஆங்கிலேயர் காலத்தில் இரயத்துவாரி வரிவசூல் முறையை (உழுபவர்களிடம் நேரடியாக வரி வசூல் செய்யும் முறை) முதன்முதலில் அமல்படுத்திய திருப்பத்தூரை தலைநகராகக் கொண்ட மாவட்டம், 225 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் உதயமாக இருப்பது வரலாற்று முக்கியத்துவம் பெற்றுள்ளது.

| 73ஆவது சுதந்தர நாளன்று தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்ட விருதுகள் | |
|---|---|
| **விருதின் பெயர்** | **விருது பெற்றவர்கள்** |
| *அப்துல்கலாம் விருது* | ISRO தலைவர் K. சிவன் |
| *கல்பனா சாவ்லா விருது* | இரம்யா லட்சுமி (மீன்வள உதவி இயக்குநர்) |
| *அதீத துணிவுக்கான விருது* | சண்முகவேலு – செந்தாமரை தம்பதி (கடையம், திருநெல்வேலி)<br>பரிசுத்தொகை : ரூ.2 இலட்சம். |
| *நல் ஆளுமை விருது* | 1) சென்னை பெருநகர காவல் ஆணையரகம்.<br>2) வேலூர் மாவட்டம் நாகநதி ஆற்றுக்கு புத்துயிர் அளித்த நடவடிக்கைக்காக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கு.<br>3) GST தொடர்பாக 24 மணி நேரமும் தகவல்களை அளிக்கும் அமைப்பு, தனி செயலியை உருவாக்கியதற்காக வணிகவரித் துறைக்கு. |
| *மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக சிறப்பாகப் பணியாற்றியதற்கான தமிழக அரசு விருது* | ஆப்பர்சூனிட்டி அறிவுசார் குறைபாடுடைய குழந்தைகளுக்கான பள்ளி, வேப்பேரி. |
| *சிறந்த மருத்துவருக்கான விருது* | 1) கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி முடநீக்கியல் மற்றும் விபத்து சிகிச்சைப் பிரிவு இயக்குநர் செ.வெற்றிவேல் செழியன். |

| | |
|---|---|
| | 2) கீழ்ப்பாக்கம் ஒட்டுறுப்பு அறுவைசிகிச்சைத் துறை தலைவர் வீ.ரமாதேவி. |
| *மாற்றுத்திறனாளிகளுக்கு அதிகளவில் வேலைவாய்ப்பு அளித்த தனியார் நிறுவனத்துக்கான விருது* | எவரெஸ்ட் ஸ்டெபிலைசர்ஸ் நிறுவனம். |
| *சிறந்த சமூகப் பணியாளருக்கான விருது* | திருவான்மியூர் பாத்வே நிறுவனத்தின் பொதுச்செயலாளர் சந்திரா பிரசாத். |
| *மாற்றுத் திறனாளிகளுக்கு அதிகளவில் கடனுதவி வழங்கிய வகையில் சிறந்த வங்கிக்கான விருது* | சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி. |
| *மகளிர் நலனுக்காகச் சிறப்பாகத் தொண்டாற்றிய அமைப்புக்கான விருது.* | 1) பி.எம்.எச் – இந்தியா அமைப்பு<br><br>2) போதிமரம் அமைப்பு. |
| *சிறந்த மாநகராட்சி* | சேலம் மாநகராட்சி.<br>(பரிசுத்தொகை – ரூ.25 இலட்சம்). |
| *சிறந்த நகராட்சி* | 1) முதல் பரிசு – தருமபுரி.<br>(பரிசுத்தொகை – ரூ.15 இலட்சம்).<br><br>2) இரண்டாம் பரிசு – வேதாரண்யம்.<br>(பரிசுத்தொகை – ரூ.10 இலட்சம்).<br><br>3) மூன்றாம் பரிசு – அறந்தாங்கி.<br>(பரிசுத்தொகை – ரூ.5 இலட்சம்). |
| *சிறந்த பேரூராட்சி* | 1) முதல் பரிசு – டி.கல்லுப்பட்டி<br>(பரிசுத்தொகை – ரூ.10 இலட்சம்).<br><br>2) இரண்டாம் பரிசு – நன்னிலம்.<br>(பரிசுத்தொகை – ரூ.5 இலட்சம்).<br><br>3) மூன்றாம் பரிசு – பவானிசாகர். |
| *மாநில இளைஞர் விருதுகள்* | 1) நாமக்கல் மாவட்டம் அட்சயம் அறக்கட்டளையின் பெ.நவீன்குமார்.<br><br>2) பாரதமாதா நிறுவனத்தின் மூலம் உணவளித்து வரும் திண்டுக்கல் மாவட்டம் மு.ஆனந்தகுமார்.<br><br>3) ஆதரவற்றோருக்கு மறுவாழ்வுகளை அளித்து வரும் மதுரை மாவட்டம் ரா.கலைவாணி.<br><br>பரிசுத்தொகை : தலா ரூ.50,000 ரொக்கம் |

## நடப்பு நிகழ்வுகள்

**1.தேசிய பழங்குடியினர் திருவிழாவான "ஆதி மகோத்சவம்", எவ்விடத்தில் தொடங்கியுள்ளது?**

A) சிம்லா

B) உதய்பூர்

**C) இலடாக் ☑**

D) தில்லி



- ✓ ஒன்பது நாட்கள் நடைபெறும் "ஆதி மகோத்சவம்" என்னும் தேசிய பழங்குடியினர் திருவிழா என்பது மத்திய பழங்குடியினர் விவகாரங்கள் மற்றும் பழங்குடியினர் கூட்டுறவு சந்தைப்படுத்தல் மேம்பாட்டு கூட்டமைப்பின் (TRIFED) கூட்டு முயற்சியாகும். ஆக.17 அன்று, லே – லடாக்கிலுள்ள போலோ களத்தில் "A Celebration of the Spirit of Tribal Craft, Culture and Commerce – பழங்குடி கைவினை, கலாசாரம் மற்றும் வர்த்தகத்தின் கொண்டாட்டம்" என்ற கருப்பொருளுடன் இவ்விழா தொடங்கியது.
- ✓ இவ்விழாவில் நாடு முழுவதும் இருபதுக்கும் மேற்பட்ட மாநிலங்களைச் சேர்ந்த 160 பழங்குடியின கைவினைஞர்கள், ஆர்வத்துடன் பங்கேற்று, அவர்களின் தலைசிறந்த படைப்புகளைக் காட்சிப்படுத்து –வார்கள். இந்த விழா, நாட்டின் பாரம்பரிய கலை மற்றும் கைவினைப்பொருட்கள் மற்றும் கலாசார பாரம்பரியத்தை வெளிப்படுத்தும்.
- ✓ இராஜஸ்தான், மகாராஷ்டிரா, ஒடிசா, மேற்கு வங்கத்தைச் சேர்ந்த பழங்குடியின உடைகள்; ஹிமாச்சல பிரதேசம், மத்திய பிரதேசம் மற்றும் வடகிழக்கு பகுதிகளைச் சேர்ந்த பழங்குடியின அணிகலன்கள்; மத்திய பிரதேசத்தைச் சேர்ந்த கோண்ட் கலை, மகாராஷ்டிராவைச் சேர்ந்த வார்லி கலை போன்ற பழங்குடியின ஓவியங்கள்; சத்தீஸ்கரைச் சேர்ந்த உலோகக் கைவினைப் பொருட்கள்; மணிப்பூரைச் சேர்ந்த கருப்பு மட்பாண்டங்கள் மற்றும் உத்தரகண்ட், மத்திய பிரதேசம் மற்றும் கர்நாடகாவைச் சேர்ந்த இயற்கையாக உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் இவ்விழாவில் காட்சிப்படுத்தப்படும்.

**2.அண்மையில் காலமான ரிசியா ரஹ்மான், எந்த நாட்டின் புகழ்பெற்ற நாவலாசிரியராவார்?**

A) இந்தோனேஷியா

B) மியான்மர்

C) ஈரான்

**D) வங்கதேசம் ☑**



- ✓ புகழ்பெற்ற வங்கதேச நாவலாசிரியரும், 'ஏகுஷே பதக்கம்' வென்ற எழுத்தாளருமான ரிசியா ரஹ்மான் (79), ஆகஸ்ட்.17 அன்று டாக்காவில் காலமானார். அவரது சில புதினங்கள் பின்வருமாறு: 'Bong Theke Bangla', 'Rokter Okshor' மற்றும் 'Ghar–Bhanga–Ghar'.

**3.தொழிலாளர்களின் குழந்தைகளுக்காக அடல் பிஹாரி வாஜ்பாய் உறைவிட பள்ளிகளை அமைக்க முடிவுசெய்துள்ள மாநில அரசு எது?**

A) ஜார்க்கண்ட்

**B) உத்தரபிரதேசம் ☑**

C) கர்நாடகா

D) ஹரியானா



✓ தொழிலாளர்களின் குழந்தைகளுக்காக மாநிலத்தின் 18 கோட்டங்களிலும், அடல் பிஹாரி வாஜ்பாய் உறைவிட பள்ளிகளை அமைக்க உத்தரபிரதேச மாநில அரசு முடிவுசெய்துள்ளது. இதுதவிர, முன்னாள் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயை நினைவுகூரும் வகையில், அவரது சொந்த கிராமமான ஆக்ராவில் உள்ள பதேஸ்வரில் நினைவாலயம் அமைப்பது உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை உத்தரபிரதேச முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் அறிவித்துள்ளார்.

✓ கான்பூரில் உள்ள அடல் கல்விபயின்ற DAV கல்லூரியில் 'சிறப்பு மையம்' ஒன்று நிறுவப்படும் எனவும், இலக்னோவில் ஒரு மருத்துவ பல்கலை அமைப்பதற்கான பணிகள் நடைபெற்று வருவதாகவும், 1957இல் வாஜ்பாய் தேர்தலில் போட்டியிட்ட பல்ராம்பூரில், KGMUஇன் செய்மதி மையம் (Satellite Centre) அமைக்கப்படுவதாகவும் அம்மாநில அரசு தெரிவித்துள்ளது.

**4.கிராமம் மற்றும் வார்டு தன்னார்வலர் முறையை உருவாக்கியுள்ள மாநில அரசு எது?**

**A) ஆந்திரப்பிரதேசம் ☑**

B) சத்தீஸ்கர்

C) இராஜஸ்தான்

D) மகாராஷ்டிரா



✓ 73ஆவது விடுதலை நாளை முன்னிட்டு, ஆந்திரப்பிரதேச முதலமைச்சர் Y S ஜெகன் மோகன் ரெட்டி திட்டங்களை திறம்பட வழங்குவதற்காக கிராமம் மற்றும் வார்டு தன்னார்வலர் முறையை தொடங்கி வைத்தார். ஊழலற்ற நிர்வாகம் மற்றும் மாநிலத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும் நலத்திட்டங்களின் பயன்கள் சென்றுசேர்வதை உறுதிசெய்வதே இந்தத்திட்டத்தை செயல்படுத்துவதன் பின்னணியில் உள்ள அடிப்படை நோக்கமாகும்.

✓ இந்தத் திட்டத்தில், 2.8 இலட்சத்துக்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள். இந்தத் திட்டத்தின்கீழ், ஒவ்வொரு கிராமத்திலும் தலா ஐம்பது குடும்பங்களுக்கு ஒரு தன்னார்வலர் என நியமிக்கப்படுவார்கள். ஒவ்வொரு தன்னார்வலருக்கும் அடையாள அட்டை வழங்கப்படும்; மேலும் அவர்களுக்கு மாதந்தோறும் ரூ.5000 மதிப்பூதியமாக வழங்கப்படும். மக்களின் குறைகளைக் கேட்டுப் பெற, முதலமைச்சர் அலுவலகத்தில், '1902' என்ற கட்டணமில்லா தொலைபேசி உதவி சேவையும் அமைக்கப்படும்.

**5.தமிழ்நாடு அரசின் Dr. APJ அப்துல் கலாம் விருது யாருக்கு வழங்கப்பட்டுள்ளது?**

**A) கைலாசவடிவு சிவன் ☑**

B) A.S கிரண் குமார்

C) ரீத்து கரிதால்

D) மயில்சுவாமி அண்ணாதுரை



- ✓ 73ஆவது விடுதலை நாளை முன்னிட்டு ISRO தலைவர் Dr. கைலாசவடிவு சிவனுக்கு தமிழ்நாடு அரசு Dr. APJ அப்துல் கலாம் விருதை வழங்கியது. இருப்பினும், புனித ஜார்ஜ் கோட்டையில் நடந்த விடுதலை நாள் கொண்டாட்டங்களின்போது Dr.கை.சிவனால் இவ்விருதைப்பெற இயலவில்லை. ஆனால், அவர், பின்னொரு நாளில் தமிழ்நாடு முதலமைச்சரிடமிருந்து அந்த விருதைப் பெற்றுக்கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.
- ✓ அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதில் அவராற்றிய சிறப்பான பணிகளுக்காக அவர் இந்த விருதை வென்றார். அறிவியல் வளர்ச்சி, மனிதநேயம் மற்றும் மாணாக்கரின் நலனை மேம்படுத்துவதற்காக பணியாற்றும் தமிழ்நாட்டைச் சேர்ந்தோரை 'கலாம் விருது' கௌரவிக்கிறது. இவ்விருது, ரூ.5 இலட்சத்துக்கான காசோலை, 8 கிராம் தங்கம் மற்றும் சான்றிதழைக் கொண்டதாகும்.

**6.அண்மையில் காலமான மூத்த எழுத்தாளரும் இதழாளருமான மதன் மணி தீட்சித், எந்த நாட்டைச் சேர்ந்தவராவார்?**

A) தென்னாப்பிரிக்கா

B) இந்தியா

C) இலங்கை

**D) நேபாளம் ☑**



- ✓ மூத்த எழுத்தாளரும் இதழாளருமான மதன் மணி தீட்சித் (96), காத்மாண்டுவில் ஆகஸ்ட்.15 அன்று காலமானார். அவர் தனது சமகாலத்தவர்களாலும் நண்பர்களாலும் 'மாட்சாப்' என்று அன்பாக அழைக்கப்பட்டார். மேரி நீலிமா, பூமிசுக்த், ரிக் வேதமும் சிறுகதையும், காஸ்லே ஜித்தியோ காஸ்லே ஹரியோ? உள்ளிட்டவை அவரது பிரபலமான சில படைப்புகளாகும். நேபாளத்தின் மதிப்புமிக்க 'மதன் புரஸ்கர்' அவரது தலைசிறந்த இலக்கியப்பணியான 'மாதவி'க்கு வழங்கப்பட்டது. நேபாளத்தின் முதல் புகைப்பட இதழாளர் என்றும் மதன் மணி தீட்சித் அழைக்கப்படுகிறார்.

**7.உலகிலேயே முதன்முறையாக எதிர்மறை வட்டி வீத அடமானத்தை அறிமுகப்படுத்திய Jyske வங்கி, எந்த நாட்டுடன் தொடர்புடையது?**

A) சுவீடன் **B) டென்மார்க்**

C) நார்வே D) பின்லாந்து

JYSKE BANK

- ✓ டென்மார்க்கின் மூன்றாவது பெரிய வங்கியான Jyske வங்கி, உலகின் முதல் எதிர்மறை வட்டி வீத அடமானத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. மேலும் 10 ஆண்டு அடமான ஒப்பந்தங்களை ஆண்டுக்கு 0.5% எதிர்மறை வட்டி விகிதத்தில் வழங்கவும் தொடங்கியுள்ளது. அதன் எதிர்மறை அடமானத்தின்கீழ், கடன் வாங்கியவர்கள் வழக்கமான சமப்படுத்தப்பட்ட மாதத் தவணையை (EMI) செலுத்துவார்கள். ஆனால், நிலுவையில் உள்ள தொகையானது ஒவ்வொரு மாதமும் கடன் வாங்கியவர் செலுத்தியதை விட அதிகமாக குறைக்கப்படும்.
- ✓ நவீன பொருளாதாரங்களை ஏற்றுக்கொண்டுள்ள மத்திய & வணிக வங்கிகள் தங்களது தேவைக்கு புத்துயிரூட்டவும், நுகர்வை அதிகரிக்கவும் மேற்கொண்ட தொடர் நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக வழக்கத்திற்கு மாறான இந்த சமீபத்திய முடிவு உள்ளது.

**8.இந்தியாவின் முதலாவது தேசிய அத்தியாவசிய நோயறிதல் பட்டியலை (National Essential Diagnostics List – NEDL) இறுதி செய்துள்ள அமைப்பு எது?**

**A) இந்திய மருத்துவ ஆராய்ச்சி அவை (ICMR) ☑**

B) சுகாதார மற்றும் குடும்பநல அமைச்சகம்

C) AIIMS

D) டாடா நினைவு மருத்துவமனை



- ✓ இந்திய மருத்துவ ஆராய்ச்சி அவை (ICMR) அண்மையில் இந்தியாவின் முதல் தேசிய அத்தியாவசிய நோயறிதல் பட்டியலை இறுதிப்படுத்தியுள்ளது. இந்தப்பட்டியல், அடிப்படை அரசு சுகாதார மையங்களில் கூட நோயாளிகளுக்கு குறைந்தது 159 நோயறி சோதனைகள் கிடைக்கவேண்டும் எனப் பரிந்துரைக்–கிறது. அனைத்து மருத்துவ சாதனங்கள் மற்றும் ஆய்வக நோயறிதல் (In–Vitro Diagnostic) சாதனம் ஆகியவற்றை உள்ளடக்காத தற்போதைய ஒழுங்குமுறை அமைப்பின் இடைவெளியைக்குறைப்பதை இந்தப்பட்டியல் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ✓ குறிப்பட்ட சில சாதனங்களை நிர்வகிக்க மட்டுமே தற்போதைய அமைப்பில் வசதி உள்ளது. இதன் மூலம், சிற்றூர்கள் மற்றும் தொலைதூரப் பகுதிகளில் உள்ள வெவ்வேறு சுகாதார மையங்களின் தேவைக்கேற்ப, நோயறிதல் சோதனைகளை தீர்மானிப்பதற்கு, அரசாங்கத்திற்கு வழிகாட்டுதல்களை வழங்கும் இத்தகையப் பட்டியலை தொகுத்த முதல்நாடாக, இந்தியா மாறும். இப்பட்டியல், கிராமம் முதல் மாவட்டம் வரையிலான மையங்களுக்காக உருவாக்கப்பட்டுள்ளது.
- ✓ பிரதம மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனாவின்கீழ், சுகாதார & நலவாழ்வு மையங்கள் போன்ற புதிய திட்டங்களுக்குப் பொருத்தமான பரிசோதனைகளையும் இப்பட்டியல் உள்ளடக்கியுள்ளது. நோயறிதல், மருந்துகள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் சட்டம், 1940 மற்றும் மருந்துகள் மற்றும் அழகுசாதனப் பொருட்கள் விதிகள், 1945 ஆகியவற்றின் கீழ், மருந்து விதிகளின் அடிப்படையில் ஓர் ஒழுங்குமுறை கட்டமைப்பு இந்தியாவில் பின்பற்றப்படுகிறது. மருத்துவ சாதன விதிகள், 2017இன் ஒழுங்குமுறை விதிகளின்கீழ், நோயறிதல்கள் கட்டுப்படுத்தப்படுகின்றன.

**9.அண்மையச் செய்திகளில் இடம்பெற்ற SUPRA திட்டம், எந்தத் துறையுடன் தொடர்புடையது?**



A) பெண்கள் அதிகாரமளித்தல்

**B) அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் ☑**

C) சிறார் கல்வி

D) டிஜிட்டல் வங்கி

✓ உலகளாவிய தாக்கத்துடன் கூடிய புதிய அறிவியல் & பொறியியல் ஆராய்ச்சிகளுக்கு நிதியளிக்கும் ஒரே நோக்கத்துடன் அறிவியல் மற்றும் பொறியியல் ஆராய்ச்சி வாரியமானது 'SUPRA' என்ற புதிய திட்டத்தை முன்மொழிந்துள்ளது. இந்த முயற்சி, பிரதமர் மோடியின் 100 நாள் யோசனைகளின் ஒரு பகுதியாகும். புதிய கருதுகோள்களைக் கொண்ட உயர்தர ஆராய்ச்சித் திட்டங்களை ஈர்க்க அல்லது ஏற்கனவே உள்ளவற்றை சவால் செய்து தீர்வுகளை வழங்குவதற்காக SUPRA (Scientific and Useful Profound Research Advancement) திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

✓ அறிவியல் மற்றும் பொறியியல் ஆராய்ச்சி வாரியம் என்பது அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் கீழுள்ள ஒரு சட்டபூர்வமான அமைப்பாகும். இது, பல்வேறு அறிவியல் துறைகளில் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சிகளை ஊக்குவிக்கவும், அவற்றுக்கு நிதியளிக்கவும் செய்கிறது.

**10.ஐந்தாவது தூய்மை கணக்கெடுப்பு – 2020ஐ தொடங்கியுள்ள மத்திய அமைச்சகம் எது?**

A) சுகாதார மற்றும் குடும்பநல அமைச்சகம்

B) ஊரக மேம்பாட்டு அமைச்சகம்

**C) வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் ☑**

D) சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகம்

✓ மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகமானது வருடாந்திர தூய்மை ஆய்வின் ஐந்தாவது தூய்மை கணக்கெடுப்பு–2020ஐ (Swachh Survekshan–2020) "Cleanliness is Our Right – தூய்மை எங்கள் உரிமை" என்ற கருப்பொருளுடன் புது தில்லியில் தொடங்கியது. இக்கணக்கெடுப்பு, வரும் 2020 ஜனவரி மாதத்தில் நடத்தப்படும். இந்நிகழ்வின்போது மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகமானது கழிவு சேகரிப்புக்காக 'Swachh Nagar' என்றவொரு செயலியையும் அறிமுகம் செய்தது.

✓ மேலும், Water PLUS நெறிமுறையையும் அந்த அமைச்சகம் அறிமுகப்படுத்தியது. சுத்திகரிக்கப்படாத எந்தவொரு கழிவுநீரும் சுற்றுச்சூழலில் அப்படியே வெளியேற்றப்படாததை உறுதிசெய்வதற்காக நகரங்களுக்கும் ஊர்களுக்கும் ஒரு வழிகாட்டுதலை வழங்குவதை இது நோக்கமாகக்கொண்டுள்ளது; இதன்மூலம் தூய்மை மதிப்பு சங்கிலியின் நீடித்த தன்மையை செயல்படுத்த முடியும். கழிவுநீரை 100% சுத்திகரிப்பு செய்து, அந்நீரை பிற உபயோகங்களுக்கு 10% வரை பயன்படுத்துவதை உறுதிசெய்தால், ஒரு நகரத்திற்கு நீர்+ குறிச்சொல் வழங்கப்படும்.

# நடப்பு நிகழ்வுகள்

**1.இந்தியாவின் முதல் மத்திய வேதிப்பொறியியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனமானது (CICET) எந்த மாநிலத்தில் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது?**

A) மகாராஷ்டிரா

**B) குஜராத் ☑**

C) கர்நாடகம்

D) உத்தரபிரதேசம்



✓ இரசாயனத் தொழிலுக்கு ஊக்கமளிக்கும் வகையில் குஜராத் மாநிலத்தில் இந்தியாவின் முதல் மத்திய வேதிப்பொறியியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம் (CICET) அமைக்கப்படும் என மத்திய இரசாயன மற்றும் உரங்களுக்கான இணையமைச்சர் மான்சுக் மாண்டவியா அண்மையில் அறிவித்தார். CICET ஆனது அகமதாபாத் அல்லது சூரத்தில் அமைக்கப்படும். இந்நிறுவனம் இரசாயனத் தொழிற்துறையின் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கங்களுக்கு உதவும்.

**2.அண்மையில் காலமான தாமோதர் கணேஷ் பாபத், எந்தத்துறையுடன் தொடர்புடையவர்?**

A) ஓவியம் வரைதல்

**B) சமூகப்பணி ☑**

C) நிழற்படம் எடுத்தல்

D) இதழியல்



✓ பிரபல சமூக சேவையாளரும், 'பத்மஸ்ரீ' விருது பெற்றவருமான தாமோதர் கணேஷ் பாபத் (84), ஆக.17 அன்று சத்தீஸ்கரின் பிலாஸ்பூர் மாவட்டத்தில் காலமானார். கடந்த நாற்பத்தைந்து ஆண்டுகளாக அம்மாநிலத்தின் ஜஞ்ச்கீர் – சம்பா மாவட்டத்தின் சோதி கிராமத்தில் உள்ள பாரதீய குஷ்ட நிவாரக் சங்கத்தால் நடத்தப்படும் ஆசிரமத்தில் தொழுநோயாளிகளின் சிகிச்சை மற்றும் சேவைக்காக தனது வாழ்க்கையை அவர் அர்ப்பணித்தார். பழங்குடியினத்தவர் வசிக்கும் பகுதிகளில் தொழுநோய் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதில் அவர் ஒரு முக்கியக்கருவியாகப் பங்குவகித்தார்.

**3. 2019 T20 மாற்றுத்திறனாளிகள் உலக கிரிக்கெட் தொடரை வென்ற நாடு எது?**

**A) இந்தியா ☑**

B) இங்கிலாந்து

C) நியூசிலாந்து

D) பாகிஸ்தான்



✓ இங்கிலாந்தில் நடந்த T20 மாற்றுத்திறனாளிகள் உலக கிரிக்கெட் தொடரில் இந்திய கிரிக்கெட் அணி வென்றுள்ளது. இறுதிப்போட்டியில், வோர்செஸ்டரில் உள்ள பிளாக்பிஞ்ச் நியூ ரோடு களத்தில், இந்தியா இங்கிலாந்தை 36 இரன்கள் வித்தியாசத்தில் தோற்கடித்தது. அகில இந்திய மாற்றுத் திறனாளிகள் கிரிக்கெட் சங்கத்தில் (AICAPC) தீவிர பங்கு வகித்த முன்னாள் இந்திய கேப்டன் அஜித் வடேகரின் நினைவாக இந்திய அணி தன்னை 'வடேக்கர் வாரியர்ஸ்' என அழைத்துக்கொள்கிறது. இந்த நிகழ்விற்கான தேர்வு மற்றும் ஆயத்தப் பணிகளை AICAPC மேற்கொண்டது. ஆறு நாடுகள் பங்கேற்ற இந்தப் போட்டியை இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் கிரிக்கெட் வாரியம் ஏற்பாடு செய்திருந்தது.

**4.எந்த சர்வதேச அமைப்புடன் சிறப்பு நோக்கம் அறக்கட்டளை நிதியம் தொடர்புடையது?**

**A) ஐக்கிய நாடுகள் ☑**

B) உலக வங்கி

C) ஆசிய உட்கட்டமைப்பு மற்றும் முதலீட்டு வங்கி

D) ஆசிய வளர்ச்சி வங்கி




✓ இருப்பிட ஒருங்கிணைப்பாளர் அமைப்புக்காக (Resident Coordinator System) ஐ.நா. சிறப்பு நோக்கம் அறக்கட்டளை நிதியத்துக்கு (Special Purpose Trust Fund – **SPTF**) இந்தியா அண்மையில் $1 மில்லியன் டாலர் பங்களித்துள்ளது. **SPTF** என்பது ஐநா செயலகத்துக்குள் செயல்படும் ஒரு குறிப்பிட்ட நிதியமாகும்.

✓ புதிய இருப்பிட ஒருங்கிணைப்பாளர் அமைப்பின் அனைத்து பங்களிப்புகள் மற்றும் பணப் பரிவர்த்தனைகளை வெளிப்படையான மற்றும் பயனுள்ள வழியில் பெற, ஒருங்கிணைக்க, நிர்வகிக்க மற்றும் கணக்கிடுவதற்காக இந்த நிதியம் நிறுவப்பட்டுள்ளது. SPTFஇன் வலைத்தளமானது நிதிக்காக பதிவுசெய்யப்பட்ட அனைத்து கடமைகள், பங்களிப்புகள் மற்றும் செலவினங்களை நிகழ்நேர அடிப்படையில் காண்பிக்கும்.

**5.அண்மையில் எந்தத் தேதியில், உலக நிழற்பட நாள் கடைப்பிடிக்கப்பட்டது?**

A) ஆகஸ்ட் 18

B) ஆகஸ்ட் 21

**C) ஆகஸ்ட் 19 ☑**

D) ஆகஸ்ட் 20



✓ நிழற்படக்கலையையும், அதில் ஈடுபட்டிருக்கும் நிழற்படக் கலைஞர்களையும் பெருமைப்படுத்தும் வகையில் ஆண்டுதோறும் ஆக.19 அன்று உலக நிழற்பட நாள் கொண்டாடப்படுகிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் லூயிசு டாகுவேரே என்பவர் 'டாகுரியோடைப்' என்ற நிழற்பட செயல்முறையை வடிவமைத்தார். பிரான்ஸ் அகாடமி இம்முயற்சியை 1839 ஜனவரி 9 அன்று அறிவித்தது.

✓ அதன்பின், 1839இல் பிரான்ஸ் நாட்டு அரசு, ஆகஸ்ட்.19 அன்று 'டாகுரியோடைப்' செயல்பாட்டை உலக மக்கள் அனைவரும் இலவசமாகப் பயன்படுத்தலாம் என அறிவித்தது. அந்த ஆகஸ்ட்.19ஆம் தேதிதான்

உலகம் முழுவதும் நிழற்பட நாளாகக் கொண்டாடப்பட்டுவருகிறது. 1826இல் பிரான்ஸ் நாட்டைச்சேர்ந்த ஜோசப் நைஸ்போர் நீப்ஸ் என்பவர் முதல் நிலையான நவீன நிழற்படத்தை எடுத்தார்.

**6.நடப்பாண்டின் உலக மனிதநேய நாளுக்கான கருப்பொருள் யாது?**

A) #NotATarget

B) #PeopleHelpingPeople

**C) #WomenHumanitarians ☑**

D) #WorldNeedsMore

✓ உலக மனிதநேய நாள் (World Humanitarian Day) என்பது மனிதநேயப் பணியாளர்களையும், மனிதநேய காரணங்களுக்காக தம் இன்னுயிரை இழந்தவர்களையும் நினைவுகூரும் ஒரு நாளாகும். 2003 ஆக.19 அன்று பாக்தாத்தில் உள்ள ஐ.நா தலைமையகத்தில் நடந்த வெடிகுண்டுத்தாக்குதலில் 21 பேர் கொல்லப்பட்டனர். அதனை நினைவுகூரும் விதமாக ஆண்டுதோறும் ஆகஸ்ட்.19 அன்று உலக மனிதநேய நாள் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

✓ "#WomenHumanitarians" என்பது நடப்பாண்டில் வரும் இந்நாளுக்கான பரப்புரைக் கருப்பொருளாகும். நெருக்கடி காலங்களில் பெண் மனிதநேயப் பணியாளர்களின் பணிகளை போற்றும் விதமாக இந்தக் கருப்பொருள் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

**7.அடல் சௌக் என மறுபெயரிடப்பட்ட புகழ்பெற்ற ஹஸ்ரத்கஞ்ச் சௌரஹா, உத்தரபிரதேசத்தின் எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளது?**

A) ஆக்ரா

B) அலகாபாத்

C) மீரட்

**D) இலக்னோ ☑**



✓ முன்னாள் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயின் நினைவாக இலக்னோவின் புகழ்பெற்ற 'ஹஸ்ரத்கஞ்ச் சௌரஹா' 'அடல் சௌக்' எனப் பெயர்மாற்றம் செய்யப்பட்டுள்ளது. முன்னாள் பிரதமரின் முதலாமாண்டு நினைவுநாளன்று இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது. 'ஹஸ்ரத்கஞ்ச்' என்பது நகரத்தின் மையத்தில் அமைந்துள்ள ஒரு முக்கிய விக்டோரிய பாணியிலான கடைவீதியாகும்.

✓ இங்கு காட்சியகம், வணிக வளாகங்கள், உணவகங்கள், உணவு விடுதிகள், திரையரங்கங்கள், அலுவலகங்கள் மற்றும் வணிக நிறுவனங்கள் அமைந்துள்ளன. ஹஸ்ரத்கஞ்ச் கடைகள், பிரபலமான இலக்னோ பூத்தையல் பொருட்களை விற்பனை செய்கின்றன. ஹஸ்ரத்கஞ்சின் ஒருபகுதியான Naza சந்தை, மாநிலத்தின் கணினி / தகவல் தொழில்நுட்ப பொருட்களுக்கான மிகப்பெரிய சந்தையாகவும், தில்லியின் நேரு இடத்திற்குப்பிறகு இந்தியாவிலேயே இரண்டாவது பெரிய சந்தையாகவும் உள்ளது. மேலும், மொத்த ஆசியாவிலும் திருட்டுப் பொருட்கள் விற்கும் மிகப்பெரிய சந்தையாகவும் உள்ளது .

**8.தேசிய சுகாதார மற்றும் குடும்பநல நிறுவனத்தின் தலைமையகம் எங்கு அமைந்துள்ளது?**

A) போபால்



B) ஆக்ரா

**C) புது தில்லி ☑**

D) ஜெய்ப்பூர்

✓ டாடா சமூக அறவியல் கழகத்தின் (TISS) பேராசிரியர் ஹர்ஷத் பாண்டுரங் தாக்கூர், புது தில்லியின் தேசிய சுகாதார மற்றும் குடும்பநல நிறுவனத்தின் (NIHFW) புதிய இயக்குநராக 5 ஆண்டுகாலத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளார். NIHFW என்பது சுகாதார மற்றும் குடும்பநல அமைச்சகத்தின் கீழ் இயங்கும் ஒரு தன்னாட்சி அமைப்பாகும். இது, புது தில்லியை தலைமையிடமாகக் கொண்டுள்ளது. நாட்டில் சுகாதார மற்றும் குடும்பநலத்திட்டங்களை மேம்படுத்துவதற்கான ஒரு சிந்தனைக் குழுவாகவும், ஓர் உச்சபட்ச தொழில்நுட்ப நிறுவனமாகவும் இது செயல்படுகிறது.

**9.மதிப்புமிக்க J C போஸ் பெல்லோஷிப்பைப் பெற்ற புகழ்பெற்ற அறிவியலாளர் யார்?**

**A) K தங்கராஜ் ☑**



B) ஆன்னி சைதி

C) இரகுநாத் அனந்த் மஷேல்கர்

D) ஷிராஸ் மின்வல்லா

✓ உயிரணு மற்றும் மூலக்கூறு உயிரியல் மையத்தின் (CCMB) தலைமை அறிவியலாளர் Dr K தங்கராஜ், மக்கள்தொகை மற்றும் மருத்துவ மரபியல் துறையில் அவரது சிறப்பான அறிவியல் பங்களிப்புக்காக மதிப்புமிக்க J C போஸ் பெல்லோஷிப்பைப் பெற்றுள்ளார். அறிவியல் மற்றும் பொறியியல் ஆராய்ச்சி வாரியம், அறிவியல் & தொழில்நுட்பத் துறையின் சிறப்பான செயல்திறனை அங்கீகரிக்கும் வகையில், பணியில் உள்ள அறிவியலாளர்களுக்கு J C போஸ் பெல்லோஷிப் வழங்கப்படுகிறது.

✓ Dr K தங்கராஜ் ஒரு மக்கள்தொகை மரபியலராவார். அவரது சில முதன்மைப் பணிகளுள், வெவ்வேறு காலகட்டங்களின்போது, மாந்தர்கள் ஆப்பிரிக்காவிலிருந்து எவ்வாறு இந்தியாவின் பல்வேறு பகுதிக –ளுக்கு இடம்பெயர்ந்தனர் என்பனபோன்ற இந்திய மக்கட்தொகையின் தோற்றத்தைக் கண்டறிவதும் அடங்கும். இந்த ஆய்வுகள் இனக்கலப்பைப் புரிந்துகொள்வதற்கான மேலதிக ஆராய்ச்சிப்பணிகளுக்கு வழிவகுத்தன. கடந்த 2000 ஆண்டுகளில், இந்தியர்கள், தங்கள் இனத்தைச் சார்ந்தவரோடு மட்டுமே திருமணம் செய்துகொள்ளும் வழக்கத்தை பின்பற்றத் தொடங்கியதன் விளைவாக பல்வேறு மக்கள் தொகை சார்ந்த மரபணுக் கோளாறுகள் ஏற்பட்டதையும் அவர் நிறுவியுள்ளார்.

**10.பிரபல இதழாளரும் கட்டுரையாளருமான ரஞ்சித் குரு காலமானார். அவர் எந்த மாநிலத்தைச் சேர்ந்தவராவார்?**

A) ஜார்க்கண்ட்

**B) ஒடிசா ☑**

C) பீகார்

D) உத்தரபிரதேசம்



- ✓ பிரபல ஒடிசா இதழாளரும் கட்டுரையாளருமான ரஞ்சித் குரு (61), புவனேஸ்வரில் ஆகஸ்ட்.18 அன்று காலமானார். இவர், முன்னணி ஒடிய நாளேடான 'சம்பதா'வில், மூத்த செய்தி ஆசிரியராக பணியாற்றி வந்தார். 30 ஆண்டுகளுக்கும் மேலாக இதழியல் துறையில் அவர் பணியாற்றிய காலத்தில், 'ஆனந்த பஜார் பத்ரிகா' மற்றும் 'தி ஆசியன் ஏஜ்' போன்ற முன்னணி செய்தித்தாள்களிலும் பணிபுரிந்தார்.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- ✓ தெற்காசியாவின் மிகப்பெரிய மண்–அணையான பவானிசாகர் அணை இன்று (19–08–2019) 65ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் வட்டத்தில் பவானிசாகர் அணை அமைந்துள்ளது.



- ✓ அரியலூர் மாவட்டம், வாரணவாசியில் தமிழ்நாட்டின் முதலாவது புதை உயிரிப்படிவ அருங்காட்சியகம் திறக்கப்பட்டுள்ளது.

---

# நடப்பு நிகழ்வுகள்

**1.எந்த மாநிலத்தில், அன்சுபா ஏரி அமைந்துள்ளது?**

A) மகாராஷ்டிரா

**B) ஒடிசா ☑**

C) கேரளா

D) உத்தரபிரதேசம்




- ✓ சிலிக்கா (இந்தியாவின் மிகப்பெரிய கடற்கரைக் காயல்) மற்றும் அன்சுபா (ஒடிசா மாநிலத்தின் மிகப் பெரிய நன்னீர் ஏரி) ஆகியவற்றுக்கான ஒருங்கிணைந்த மேலாண்மை திட்டத்தை செயல்படுத்த ஒடிசா ஈரநில ஆணையம் அண்மையில் ஒப்புதல் அளித்துள்ளது. சிலிக்கா மற்றும் அன்சுபா திட்டத்திற்கு ரூ.180 கோடி செலவாகும். இவ்விரு ஏரிகளின் 5 ஆண்டுகால மேலாண்மையானது 2 நீர்நிலைகளை நம்பியுள்ள ஆயிரக்கணக்கான மீனவர்களின் வாழ்வாதாரத்தை வலுப்படுத்தும் நோக்கில் உள்ளது.
- ✓ 1,100 சதுர கி.மீ பரப்பளவில் அமைந்துள்ள சிலிக்கா ஏரிக்கு, குளிர்காலத்தில், அருகிவரும் ஐராவதி டால்பின்கள் மற்றும் புலம்பெயர்ந்த பறவைகளைப் பார்க்க இலட்சக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனர். அன்சுபா ஏரி அதன் நன்னீர் மீன்களுக்கு குறிப்பாக உள்ளூரில் 'போகலா' என்று அழைக்கப்படும் 'லேபியோ பாட்டா'வுக்கு பிரபலமானது. இது கிட்டத்தட்ட 2 சதுர கி.மீ பரப்பளவில் அமைந்துள்ளது. குளிர்காலத்தில் 32 வகையான புலம்பெயர்ந்த பறவைகள், இந்த ஏரிக்கு வருகை தருகின்றன. அதன் அமைதி, கண்ணுக்கினிய அழகு & வனப்பகுதி ஆகியவை பார்வையாளர்களை வெகுவாக ஈர்க்கின்றது.


**2.அரசுப் பள்ளிகளில் உட்கட்டமைப்பை மேம்படுத்த 'பள்ளி பகதாபா' என்றவொரு திட்டத்தை தொடங்கியுள்ள மாநில அரசு எது?**

A) அருணாச்சல பிரதேசம்

**B) மணிப்பூர் ☑**

C) நாகாலாந்து

D) திரிபுரா



- ✓ மணிப்பூர் முதலமைச்சர் N பைரன் சிங், மாநிலத்தில் உள்ள அரசுப் பள்ளிகளின் உட்கட்டமைப்பை மேம்படுத்த "School Fagadaba" (கல்வியை சிறந்ததாக்குங்கள்) என்ற திட்டத்தை தொடங்கினார். சிறந்த உட்கட்டமைப்பு, தரமான கல்வி மற்றும் அரசுப் பள்ளிகளின் ஒட்டுமொத்த முன்னேற்றத்தை உறுதி செய்வதே இந்தத் திட்டத்தின் நோக்கம். இத்திட்டத்தின் முதல் கட்டத்தில், மாநிலத்தின் 60 சட்டமன்றத் தொகுதிகளிலிருந்து தலா ஒரு பள்ளி தேர்வு செய்யப்படும்.
- ✓ உடல் மற்றும் மனித ஆற்றல் இடைவெளிகளின் அடிப்படையில் அரசுப் பள்ளிகளை மேம்படுத்துவதும், மாணாக்கரின் சேர்க்கை அதிகரிப்பதுமே இந்தத் திட்டத்தின் ஒட்டுமொத்த நோக்கமாகும்.

**3.ஐக்கிய அரபு அமீரகத்தின் மிகவுயர்ந்த குடிமக்கள் கௌரவமான 'Order of Zayed' வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ள இந்தியர் யார்?**

**A) நரேந்திர மோடி ☑**

B) இராம்நாத் கோவிந்த்

C) இலதா மங்கேஷ்கர்

D) அமிதாப்பச்சன்



- ✓ ஆகஸ்ட்.23 அன்று, பிரதமர் நரேந்திர மோடி ஐக்கிய அரபு அமீரகம் (UAE) மற்றும் பஹ்ரைன் முதலிய நாடுகளுக்கு மூன்று நாள் அலுவல்பூர்வ பயணத்தை மேற்கொள்ளவுள்ளார். இப்பயணத்தின்போது, பிரதமர் மோடி ஐக்கிய அரபு அமீரகத்தின் மிகவுயர்ந்த குடிமக்கள் கௌரவமான 'Order of Zayed' வழங்கிக் கௌரவிக்கப்படுவார். இருநாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளுக்கு ஒரு பெரிய ஊக்கத்தை அளித்த அவரது சிறந்த தலைமைத்துவத்தை அங்கீகரிக்கும் விதமாக கடந்த ஏப்ரல் மாதம் அவருக்கு இந்த விருது வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது.
- ✓ ஐக்கிய அரபு அமீரகத்தின் நிறுவன தந்தை ஷேக் சயீத் பின் சுல்தான் அல் நஹ்யானின் பெயரால் இந்த விருது வழங்கப்படுகிறது. இதுவரை இரஷ்யா, தென்கொரியா, சவூதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம், பாலஸ்தீனம் மற்றும் ஆப்கானிஸ்தான் ஆகிய ஆறு நாடுகள் பிரதமர் மோடிக்கு மிகவுயர்ந்த விருதை வழங்கியுள்ளன. ஐக்கிய அரபு அமீரக பயணத்தை முடித்துக்கொண்ட பின்னர், பிரதமர் நரேந்திர மோடி பஹ்ரைன் செல்கிறார். அரபு நாடுகளுள் ஒன்றான பஹ்ரைனுக்குச் செல்லும் முதல் இந்தியப் பிரதமர் மோடியாவார்.

**4.பாலியல் துஷ்பிரயோகம் குறித்த விழிப்புணர்வை பரப்புவதற்காக NCPCRஉம், எந்த IITஉம் இணைந்து கருவி ஒன்றை உருவாக்கியுள்ளன?**

**A) ஐஐடி கான்பூர் ☑**

B) ஐஐடி கரக்பூர்

C) ஐஐடி பம்பாய்


D) ஐஐடி மெட்ராஸ்



- ✓ IIT கான்பூருடன் இணைந்து தேசிய குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையமானது (NCPCR) தன்பாதுகாப்பு (Personal Safety) குறித்து கற்பிப்பதற்காக ஊடாடும் (Interactive) வழிகளைப்பயன்படுத்தி குழந்தைகளிடையே பாலியல் துஷ்பிரயோகம் (Sexual–abuse) பற்றி விழிப்புணர்வை பரப்புவதற்கான கருவியொன்றை உருவாக்கியுள்ளது. இந்தக் கருவி அட்டைகள், சுவரொட்டிகள், குறுகிய அனிமேஷன் படங்கள் மற்றும் விளையாட்டுகளின் தொகுப்பாகும். பாலியல் துஷ்பிரயோக விழிப்புணர்வு குறித்து குழந்தைகளுக்காக ஓர் ஊடாடும் பயிலரங்கை நடத்த விரும்பும் ஆசிரியர்கள் அல்லது தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் இதைப் பயன்படுத்தலாம்.

- ✓ குழந்தைகள் அடைந்த கற்றலை மதிப்பிடுவதற்கான விளையாட்டு அட்டைகளையும் இந்தக் கருவி கொண்டுள்ளது. 8–12 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கான வகுப்பறைகளிலும், ஓர் அமர்வில் 30–35 மாணாக்கர்கள் உள்ள குழுவிலும் இதனை பயன்படுத்த முடியும். இராஞ்சியின் மத்திய உளவியல் நிறுவனத்தின் உளவியலாளர்களால் இந்தப் பயிலரங்க உபகரணம் பரிசோதிக்கப்பட்டுள்ளது. மேலும், அவர்களின் கருத்துரையின் அடிப்படையில் மேம்படுத்தப்பட்ட பதிப்பு உருவாக்கப்படும்.

**5.அண்மையில் காலமான முகமது ஜாகூர் ஹாஷ்மி, எந்தத் துறையுடன் தொடர்புடையவர்?**




A) இதழியல்

B) அரசியல்

**C) திரைத்துறை ☑**

D) நிழற்படம்

- ✓ மூத்த இசையமைப்பாளரான முகமது ஜாகூர் ஹாஷ்மி (92), ஆக.20 அன்று மும்பையில் காலமானார். 'கயாம்' எனப் பிரபலமாக அறியப்பட்ட இவர், 'உம்ராவ் ஜான்' & 'கபி கபி' போன்ற திரைப்படங்களில் தனது இசையால் மிகவும் பிரபலமானவர். அவர் 'சங்கீத நாடக அகாடமி விருது' மற்றும் 'பத்ம பூஷன்' ஆகிய விருதுகளைப் பெற்றுள்ளார். 2016இல், கயாம் ஜக்ஜீத் கவுர் KPG தொண்டு அறக்கட்டளையை நிறுவி, இந்தியாவில் வளர்ந்துவரும் கலைஞர்கள் & தொழினுட்ப வல்லுநர்களை ஆதரிப்பதற்காக தனது முழு செல்வத்தையும் அறக்கட்டளைக்கு நன்கொடையாக அளிப்பதாக அவர் உறுதியளித்தார்.

**6.அண்மையில் மத்திய நிதியமைச்சகத்திடம் தனது அறிக்கையை சமர்ப்பித்த நேரடி வரி விதி (Direct Tax Code) பணிக்குழுவின் தலைவர் யார்?**




A) G C ஸ்ரீவஸ்தவா

B) மான்சி கெடியா

**C) அகிலேஷ் ரஞ்சன் ☑**

D) கிரிஷ் அஹுஜா

- ✓ புதிய நேரடி வரி விதிகளை உருவாக்குவதற்காக மத்திய அரசால் அமைக்கப்பட்ட மத்திய நேரடி வரிகள் வாரியத்தின் உறுப்பினர் அகிலேஷ் ரஞ்சன் தலைமையிலான பணிக்குழு அண்மையில் தனது அறிக்கையை மத்திய நிதி & பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சர் நிர்மலா சீதாராமனிடம் சமர்ப்பித்துள்ளது. அறுபது ஆண்டுகள் பழமையான வருமானவரிச் சட்டம்,1961ஐ மாற்றியமைக்கும் நோக்கில் இந்தக் குழு அமைக்கப்பட்டது.

- ✓ தனிநபர் வருமானவரி & பெருநிறுவன வரிக்கு படிமுறையில் (Slab) மாற்றங்களை இந்தப் பணிக்குழு பரிந்துரைத்துள்ளதாக நம்பப்படுகிறது. தற்போது, தனிநபர் வருமானவரி கட்டமைப்பில் முப்பிரிவுகள் உள்ளன – 60 வயதிற்குட்பட்டவர்களுக்கு, 60 வயதிற்கு மேற்பட்டவர்கள் ஆனால் எண்பது வயதுக்கு மிகாதவர்களுக்கு, மூன்றாவது 80 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவர்களுக்கு.

✓ தற்போதைய நிலையில், 400 கோடி ரூபாய் வரை விற்பனை செய்யும் உள்நாட்டு நிறுவனங்கள் 25% வரி செலுத்துகின்றன. பதிவுசெய்த மொத்த நிறுவனங்களுள் 99.3% நிறுவனங்கள் இப்பிரிவில் வரும். மத்திய வரவு செலவு அறிக்கை 2020–21இன் ஒருபகுதியாக, இந்த அறிக்கை, நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**7. சுற்றுச்சூழல் சார்ந்த அரசுசாரா நிறுவனமான கிரீன்பீஸின் அண்மைய அறிக்கையின்படி, உலகில் மனிதச் செயல்வழிகளின் மூலம் மிக அதிக அளவில் சல்பர் டை ஆக்ஸைடை ($SO_2$) வெளியிடும் நாடு எது?**

A) ஈரான்

**B) இந்தியா ☑**

C) இரஷ்யா

D) தென்னாப்பிரிக்கா



✓ சுற்றுச்சூழல் சார்ந்த அரசுசாரா நிறுவனமான கிரீன்பீஸ், அண்மையில், தேசிய வானூர்தியியல் மற்றும் விண்வெளி நிர்வாகத்தின் (NASA) ஓசோன் கண்காணிப்பு கருவி (OMI) செயற்கைக்கோள் தரவின் பகுப்பாய்வை வெளியிட்டுள்ளது. நாடு வாரியான உலக தரவரிசைப்படி, இந்தியா, உலகின் மிகப்பெரிய கந்தக டை ஆக்சைடு ($SO_2$) வெளியிடும் நாடாக உள்ளது. மனிதச் செயல்வழிகளின் மூலம் வளிமண்ட–லத்துக்குச் செல்லும் கந்தக டை ஆக்சைடில் 15% இந்திய தொழில்துறையிடமிருந்து செல்கிறது.

✓ இந்தியாவில் அதிகம் கந்தக டை ஆக்சைடு வெளியாகும் இடங்களில் மத்தியபிரதேசத்தின் சிங்ராலி, தமிழ்நாட்டின் நெய்வேலி மற்றும் சென்னை, ஒடிசாவின் தால்சர் மற்றும் ஜார்சுகுடா, சத்தீஸ்கரின் கோர்பா, குஜராத்தின் கச், தெலங்கானாவின் இராமகுண்டம், மகாராஷ்டிராவின் சந்திரபூர் மற்றும் கொரடி ஆகியவை குறிப்பிடத்தகுந்தவை.

✓ மேலும், இந்தியாவில் உள்ள பெரும்பாலான ஆலைகளில் கந்தக நீக்க நுட்பம் இல்லாமல்போனதும் ஒரு பின்னடைவாகப் பார்க்கப்படுகிறது. இதனால் காற்றில் மாசுபடிவதை தடுக்க இயலவில்லை. தனித் தனியாகப் பார்த்தால், இரஷ்யாவின் நாரில்ஸ்க் உருக்கு வளாகம் உலகிலேயே அதிகளவு கந்தக வெளியீட்டு தொழிற்துறையாகும். அதைத்தொடர்ந்து தென்னாப்பிரிக்காவின் புமலங்கா மாகாணத்தில் கிரியேலும், ஈரானில் சாக்ரோசும் உள்ளன. ம.பி'இன் சிங்ராலி ஐந்தாவது இடத்தில் உள்ளது.

✓ இந்தியாவிலேயே அதிகபட்சமாக தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் 751 கிலோ டன் கந்தக டை ஆக்சைடு வாயு வெளியேற்றப்படுகிறது. அதற்கடுத்தபடியாக ஒடிசா (648 கிலோ டன்), குஜராத் (596 கிலோ டன்) ஆகிய மாநிலங்கள் உள்ளன. ஆண்டுக்கு 215 கிலோ டன் கந்தக டை ஆக்சைடு வெளியேற்றும் சென்னை உலகிலேயே 29ஆவது இடத்தில் உள்ளது.

**8.அண்மையில், நிக்கோட்டினை A வகை நஞ்சு என வகைப்படுத்திய மாநில அரசு எது?**




A) பஞ்சாப்


**B) கர்நாடகா ☑**

C) ஹரியானா

D) ஒடிசா

✓ கர்நாடக நஞ்சுகள் (வைத்திருத்தல் மற்றும் விற்பனை செய்தல்) விதிகள், 2015ஐ திருத்தியதன் மூலம் கர்நாடக அரசு அண்மையில் நிக்கோட்டினை 'A வகை நஞ்சு' என வகைப்படுத்தியுள்ளது. சட்டவிரோத விற்பனை, நிக்கோட்டின் பொதியுறைகள் & மின்னணு – சிகரெட்டுகளை கடத்துதல் ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவதே இந்த நடவடிக்கையின் நோக்கமாகும். அதிக நச்சுவாய்ந்த வேதிகள் (சயனோஜென், ஹைட்ரோசையனிக் அமிலம், நைட்ரஜன் பெராக்சைடு மற்றும் பாஸ்ஜீன் போன்றவை) மிகக்குறைந்த அளவில்கூட காற்றில் வாயுவாகவோ அல்லது நீராவியாகவோ இருந்தால் அவை உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும்.

**9.அண்மையில் காலமான Dr. ஜகந்நாத் மிஸ்ரா, எந்த மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சராக இருந்தார்?**



**A) பீகார் ☑**

B) ஜார்க்கண்ட்

C) உத்தரபிரதேசம்

D) இராஜஸ்தான்

✓ மும்முறை பீகாரின் முதலமைச்சராக இருந்த Dr.ஜகந்நாத் மிஸ்ரா (82), ஆகஸ்ட்.19 அன்று தில்லியில் காலமானார். டிசம்பர் 1989 மற்றும் மார்ச் 1990க்கு இடையில் பீகாரின் கடைசி காங்கிரஸ் முதல்வராக மிஸ்ரா இருந்தார். P V நரசிம்மராவ் அமைச்சரவையில் மத்திய அமைச்சராகவும் இடம்பெற்றிருந்தார். பத்திரிகை சுதந்தரத்துக்குத் தடை விதிக்கும் வகையிலான, 'அவதூறுச்செய்தி மசோதா' மாநில சட்டப் பேரவையில் அவர் நிறைவேற்றினார். இறுதியாக, அவர் பாரதிய ஜன் காங்கிரசில் (இராஷ்டிரிய) உறுப்பினராக இருந்தார்.

**10.மகாராஷ்டிராவின் எந்த நகரத்தில், பிரிட்டிஷ் காலத்து பதுங்கு குழியானது நிலத்தடி அருங்காட்சியகமாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது?**



**A) மும்பை ☑**

B) நாக்பூர்

C) நாசிக்

D) ஔரங்காபாத்

- ✓ மும்பை மலபார் மலையில் உள்ள ஆளுநர் மாளிகைக்குள் அருங்காட்சியகமாக மாற்றப்பட்ட பிரிட்டிஷ் காலத்து பதுங்கு குழியை குடியரசுத்தலைவர் இராம்நாத் கோவிந்த் அண்மையில் திறந்துவைத்தார். 15000 சதுர அடி பரப்பளவில் அமைந்துள்ள இந்த அருங்காட்சியகத்தில் அமைக்கப்பட்டுள்ள "மெய்நிகர் சாவடிகள் (Virtual Reality Booths) மூலம், எதிரி நாட்டுக் கப்பல்கள் நெருங்கும்போது, பீரங்கிகளைக் கொண்டு தாக்கியழிப்பதற்காக உருவாக்கப்பட்ட பதுங்கு குழிகளை, பத்தொன்பதாம் நூற்றாண்டின் காலத்துக்கே சென்று பொதுமக்களால் காணமுடியும்.

- ✓ ஆளுநர் மாளிகையின் வரலாறும் மற்றொரு பகுதியில் சித்தரிக்கப்பட்டுள்ளது. 2016ஆம் ஆண்டில், ஆளுநர் வித்யாசாகர் ராவ் அவர்களால் இந்தப் பிரிட்டிஷ் காலத்து பதுங்கு குழி கண்டறியப்பட்டது. இது எறிகணை அங்காடி, துப்பாக்கி எறிகணை, பொதியுறை அங்காடி மற்றும் பீரங்கி அங்காடி மையம் போன்ற 13 அறைகளால் ஆனது.

- ✓ முழு பதுங்கு குழியிலும் சரியான வடிகால் அமைப்பு மற்றும் புதிய காற்று மற்றும் வெளிச்சத்திற்கான நுழைவாயில்கள் உள்ளன. இந்தப் பதுங்கு குழி, முதலாம் உலகப்போருக்கு முந்தைய காலத்தியது என்றும், கடற்படை தாக்குதல்களில் இருந்து பம்பாய் கோட்டையை பாதுகாப்பதற்காக கடற்கரைக்கு அருகில் நிறுவப்பட்டது என்றும் நம்பப்படுகிறது.

---

## நடப்பு நிகழ்வுகள்

**1. 'மகாத்மா காந்தி சர்பத் சேகத் பீமா யோஜனா' என்னும் சுகாதார காப்பீட்டுத் திட்டத்தை அறிமுகம் செய்துள்ள மாநில அரசு எது?**

A) மகாராஷ்டிரா

**B) பஞ்சாப் ☑**

C) இராஜஸ்தான்

D) உத்தரபிரதேசம்



✓ முன்னாள் பிரதமர் இராஜீவ் காந்தியின் 75ஆவது பிறந்தநாளைக் குறிக்கும் வகையில், பஞ்சாப் அரசு 'மகாத்மா காந்தி சர்பத் சேகத் பீமா யோஜனா' என்ற பிரம்மாண்ட சுகாதார காப்பீட்டுத் திட்டத்தை உருவாக்கியுள்ளது. இது, மாநிலத்தின் 76% மக்களை உள்ளடக்கும். இந்தத் திட்டம், ஏழைகளுக்கான நடுவணரசின் 'பிரதம மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா' (PMJAY) என்ற சுகாதார காப்பீட்டுத் திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. சமீபத்திய சமூக–பொருளாதார மற்றும் சாதி கணக்கெடுப்பின்படி, ஆயுஷ்மான் பாரத், 14.86 இலட்சம் குடும்பங்களை மட்டுமே உள்ளடக்கியுள்ளது. ஆனால் பஞ்சாபின் இந்தத் திட்டம், மொத்தம் 46 இலட்சம் குடும்பங்களுக்கு பயனளிக்கும்.

✓ PMJAY திட்டத்தைப்போலவே, பஞ்சாப் அரசாங்கமும் ஆண்டுக்கு ரூ.5 இலட்சம் வரையிலான சுகாதார காப்பீட்டை வழங்கும். 14.86 லட்சம் குடும்பங்களுக்கான ஆண்டு காப்பீட்டுத்தொகை செலவை 60:40 என்ற விகிதத்தில் நடுவணரசும் மாநில அரசும் ஏற்கும். மீதமுள்ள பயனாளிகளுக்கு, பஞ்சாப் அரசு முழு செலவையும் ஏற்கும். 1,396 வகை மருத்துவச் சிகிச்சைகளுக்கு சுகாதார காப்பீட்டை வழங்கும் பஞ்சாப் திட்டமானது, 200 அரசாங்க மருத்துவமனைகள் உட்பட அதிகாரப்பூர்வ பட்டியலில் உள்ள 450க்கும் மேற்பட்ட மருத்துவமனைகளின் மூலம் செயல்படுத்தப்படும்.

**2. எந்தத் துறையுடன் NISHTHA திட்டம் தொடர்புடையது?**

A) மங்கல்யான்

**B) கல்வி ☑**

C) மின்னணு வங்கியியல்

D) பெண்கள் அதிகாரமளித்தல்




✓ ஆக.21 அன்று, மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் இரமேஷ் போக்ரியால் 'நிஷாங்க்', 'NISHTHA' என்னும் உலகின் மிகப்பெரிய ஆசிரியர் பயிற்சித் திட்டத்தை புதுதில்லியில் தொடங்கி வைத்தார். இந்தத் திட்டத்தின்கீழ், நாடு முழுவதும் 42 இலட்சத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்கப்படும். 'National Initiative for School Head's and Teachers' Holistic Advancement' என்பதன் சுருக்கமே 'NISHTHA'.

✓ அனைத்து அரசு ஆரம்பப் பள்ளிகளில் பணியாற்றி வரும் அனைத்து ஆசிரியர்கள் மற்றும் பள்ளித் தலைமையாசிரியர்கள், மாநில கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி கவுன்சில்கள் மற்றும் பிற கல்வித்

துறைகளில் பணியாற்றும் ஆசிரிய உறுப்பினர்கள் ஆகியோரை உள்ளடக்கிய சுமார் 42 இலட்சம் பங்கேற்பாளர்களின் திறன்களை கட்டமைப்பதே இந்த ஒருங்கிணைந்த திட்டத்தின் நோக்கமாகும்.


**3.அண்மையில் காலமான பாபுலால் கௌர், எந்த மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சராக இருந்தார்?**

A) ஜார்க்கண்ட்

B) ஹிமாச்சலபிரதேசம்

C) உத்தரபிரதேசம்

**D) மத்தியபிரதேசம் ☑**



✓ மத்தியபிரதேச மாநிலத்தின் முன்னாள் முதல்வர் பாபுலால் கௌர் (89), போபாலில், ஆக.21 அன்று காலமானார். முதுமையின் காரணமாக 2018இல் தேர்தல் அரசியலிலிருந்து அவர் ஓய்வு பெற்றார். ஆகஸ்ட் 2004 முதல் 2005 நவம்பர் வரை மத்தியபிரதேசத்தின் முதலமைச்சராக பணியாற்றிய அவர், பத்து முறை கோவிந்த்புரா சட்டப்பேரவைத்தொகுதியிலிருந்து சட்டமன்றத்துக்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**4.அமெரிக்காவின் கேடலினா வாய்க்காலைக் கடந்த முதல் ஆசிய நீச்சல் வீரரான சதேந்திர சிங் லோஹியா, எந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்?**

**A) மத்தியபிரதேசம் ☑**

B) இராஜஸ்தான்

C) பஞ்சாப்

D) ஹரியானா



✓ ஆக.21 அன்று, மத்தியபிரதேசத்தைச் சேர்ந்த இந்திய பாரா நீச்சல் வீரர் சதேந்திர சிங் லோஹியா, அமெரிக்காவின் கேடலினா வாய்க்காலைக்கடந்த முதலாவது ஆசிய நீச்சல் வீரர் என்ற வரலாற்றுச் சாதனையை புரிந்தார். ஆங்கில மற்றும் கேடலினா வாய்க்கால்களைக் கடந்து ஆசிய சாதனையை அவர் படைத்துள்ளார். குவாலியரில் பிறந்த சதேந்திரா, ஐந்து அணி வீரர்களுடன் இந்திய பாரா ரிலே அணியை வழிநடத்தி 11 மணி 34 நிமிடங்களில் கேடலினா வாய்க்காலைக்கடந்தார். அந்த நேரத்தில், நீரின் வெப்பநிலை 13℃ வரை இருந்தது. 2014இல் மத்தியபிரதேசத்தின் மிகவுயர்ந்த விளையாட்டு விருதான 'விக்ரம் விருதை' சத்யேந்திரா பெற்றார்.

**5.2019 தெற்காசிய 'Spelling Bee' போட்டியில் வென்ற இந்திய – அமெரிக்க இளைஞர் யார்?**



A) காவ்யா கொப்பரப்

**B) நவ்னீத் முரளி ☑**

C) துருவ் கௌர்

D) சியாமந்தக் பேரா

✓ நியூ ஜெர்சியைச் சேர்ந்த இந்திய – அமெரிக்க இளைஞரான நவ்னீத் முரளி, நடப்பாண்டு தெற்காசிய 'Spelling Bee' (SASB) போட்டியை வென்றுள்ளார். இப்போட்டிக்கான பரிசுத்தொகை $3,000 அமெரிக்க டாலர்களாகும். SASB என்பது தெற்காசிய வம்சாவளியைச் சேர்ந்த சிறார்களுக்காக ஆண்டுதோறும் நடத்தப்படும் ஒரு போட்டியாகும். தெற்காசிய வம்சாவளியைச் சேர்ந்த குறைந்தபட்சம் ஒரு பெற்றோர் (அ) தாத்தா–பாட்டி அல்லது ஆப்கானிஸ்தான், வங்கதேசம், பூட்டான், இந்தியா, மாலத்தீவு, நேபாளம், பாகிஸ்தான் அல்லது இலங்கை ஆகிய நாடுகளை பூர்வீகமாகக் கொண்ட 14 வயது அல்லது அதற்கு குறைவான எந்தவொரு மாணாக்கரும் இந்தப் போட்டியில் பங்கேற்கலாம்.

**6. SAARC வெளியுறவு அமைச்சர்களின் முறைசாரா கூட்டத்தை நடத்த முடிவு செய்துள்ள நாடு எது?**



A) பூட்டான்

**B) நேபாளம் ☑**

C) இந்தியா

D) இலங்கை

✓ வரும் செப்டம்பரில் நடைபெறவுள்ள 74ஆவது ஐக்கிய நாடுகள் பொது அவை அமர்வின் ஒருபகுதியாக, SAARC வெளியுறவு அமைச்சர்களின் முறைசாரா கூட்டத்தை நடத்த நேபாளம் திட்டமிட்டுள்ளது. 18ஆவது SAARC உச்சிமாநாடு காத்மாண்டுவில் 2014இல் நடைபெற்றது; அடுத்த உச்சிமாநாட்டை 2016இல் பாகிஸ்தான் நடத்தவிருந்தது. ஆனால், ஜம்மு – காஷ்மீரின் உரியில் உள்ள ஒரு இராணுவத் தளத்தில் நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலில் 19 வீரர்கள் கொல்லப்பட்டதை அடுத்து, இந்தியா பங்கேற்பதை புறக்கணித்த பின்னர் அவ்வுச்சிமாநாடு இரத்து செய்யப்பட்டது.

✓ பாகிஸ்தான் மீதான அழுத்தத்தை அதிகரிப்பதற்காக உச்சிமாநாட்டிலிருந்து வெளியேற இந்தியா முடிவு செய்ததைத் தொடர்ந்து வங்கதேசம், பூட்டான் மற்றும் ஆப்கானிஸ்தானும் வெளிநடப்பு செய்தன. பயங்கரவாதத்தை கையாள பாகிஸ்தான் நடவடிக்கை எடுத்தால் மட்டுமே மீண்டும் பங்கேற்பதாக இந்தியா அறிவித்தது.

**7.எந்த நகரத்தில், நடப்பாண்டு உலக இளையோர் செஸ் சாம்பியன்ஷிப் நடைபெறவுள்ளது?**



A) கொல்கத்தா

**B) மும்பை ☑**

C) புனே

D) புது தில்லி

✓ அக்.1–13 வரை மும்பையில் நடைபெறவுள்ள மதிப்புமிக்க உலக இளையோர் செஸ் சாம்பியன்ஷிப்பை இந்தியா முதன்முறையாக நடத்துகிறது. U–14, U–16 மற்றும் U–18 பிரிவுகளில் உலகின் சிறந்த திறமை மிக்க செஸ் வீரர்கள் இதில் பங்கேற்பார்கள். அகில இந்திய செஸ் சம்மேளனத்தின்கீழ், இப்போட்டியை அகில மராத்தி சதுரங்க சங்கம் ஏற்பாடு செய்துவருகிறது. இரஷ்யா, அமெரிக்கா, பிரான்சு, இத்தாலி, அசர்பைஜான் உள்ளிட்ட 62 நாடுகளின் வீரர்கள் தங்களின் பங்கேற்பை உறுதிப்படுத்தியுள்ளனர்.

**8.எந்த IITஐச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள், சர்க்கரை & உப்பைக் கொண்டு உயிரி எரிபொருளை (Bio fuel) உருவாக்கும் ஒரு முறையை உருவாக்கியுள்ளனர்?**




A) ஐஐடி இந்தூர்

B) ஐஐடி பாம்பே

**C) ஐஐடி ஐதராபாத் ☑**

D) ஐஐடி கான்பூர்

✓ சர்க்கரை, கந்தக அமிலம் மற்றும் உப்பு முதலியவற்றைப் பயன்படுத்துவதன் மூலம், IIT ஐதராபாத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள், உயிரி–எரிபொருள் முன்னோடிகளின் தயாரிப்புக்கு உதவும் மலிவான மற்றும் திறமையான ஒரு நானோ–கார்பன் வினையூக்கியை உருவாக்கியுள்ளனர். டீசல் மற்றும் ஜெட் எரிபொருளின் முன்னோடியான C15 ஆக்ஸிஜனேற்றப்பட்ட ஹைட்ரோகார்பனை உற்பத்தி செய்வதற்கு வணிகரீதியாக கிடைக்கக்கூடிய வகைகளை விடவும் சிறந்த செயல்திறனையும் தேர்வுத் திறனையும் இந்த வினையூக்கி கொண்டுள்ளது.

✓ உத்தரபிரதேசம் மற்றும் ஆந்திர பிரதேசம் / தெலங்கானா போன்ற மாநிலங்கள் நாட்டில் அதிக அளவு சோளக்கழிவுகளை உற்பத்தி செய்வதால் இவ்வளர்ச்சி முக்கியத்துவம் மிகுந்ததாக பார்க்கப்படுகிறது. இந்தச் சோளக்கழிவுகளை எரிப்பதற்கு பதிலாக மதிப்புமிக்க எரிபொருளாக மாற்றலாம். IIT ஐதராபாத் நிறுவனம் உருவாக்கிய நானோ–கார்பன் வினையூக்கியானது உயிரி–எரிபொருளாக மாற்றும் செயல் முறையைத் தூண்டும். கூடுதல் எரிசக்தி ஆதாரமாக இருப்பதைத் தவிர, சோள விவசாயிக்கு கூடுதல் வருவாய் ஈட்டும் வாய்ப்பையும் இது வழங்குகிறது.

**9.செக் குடியரசில் நடந்த 2019 தடகள மிடிங்க் ரெய்ட்டர் நிகழ்வில் ஆண்கள் 300 மீட்டர் ஓட்டத்தில் தங்கம் வென்ற இந்திய ஸ்ப்ரிண்டர் யார்?**




A) குன்ஹு முகமது


B) மோகன் குமார் ராஜா

**C) முகமது அனாஸ் ☑**

D) நிர்மல் டாம்

- ✓ செக் குடியரசில் நடந்த நடப்பாண்டு தடகள மிட்டிங்க் ரெய்ட்டர் நிகழ்வில், இந்திய ஸ்ப்ரிண்டர்களான ஹிமா தாஸ் மற்றும் முகமது அனாஸ் முறையே பெண்கள் & ஆண்கள் 300 மீ., ஓட்டப்பந்தயங்களில் தலா ஒரு தங்கப்பதக்கம் வென்றனர். கடந்த ஜூலை.2 முதல் ஐரோப்பிய மண்ணில் இவர் வெல்லும் ஆறாவது தங்கமாகும் இது. ஆண்களுக்கான 300 மீட்டர் ஓட்டத்தில் அசத்திய இந்தியாவின் முகமது அனாஸ், 32.41 வினாடியில் இலக்கை அடைந்து தங்கம் வென்றார்.
- ✓ இதே நிகழ்வில், இந்தியாவின் நிர்மல் டாம் 33.03 வினாடிகளில் இலக்கை அடைந்து வெண்கலம் வென்றார். செப்டம்பர் – அக்டோபர் மாதங்களில் தோகாவில் நடக்கவுள்ள உலக சாம்பியன்சிப்பிற்கான 400 மீட்டர் போட்டிக்கு, தேசிய சாதனை படைத்த அனாஸ் ஏற்கனவே தகுதிபெற்றுள்ளார். ஹிமா தாஸ் இன்னும் அந்தத் தகுதியை அடையவில்லை.

**10.எந்தத் தேதியில், இந்தியாவில் சமூக நல்லிணக்க நாள் கொண்டாடப்படுகிறது?**



A) ஆகஸ்ட் 21

B) ஆகஸ்ட் 22

**C) ஆகஸ்ட் 20 ☑**

D) ஆகஸ்ட் 23

- ✓ இந்தியாவில், மறைந்த முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் பிறந்தநாளை நினைவுகூரும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட்.20 அன்று 'சத்பவன திவாஸ்' (அல்லது சமூக நல்லிணக்க நாள்) கொண்டாடப்படுகிறது. ராஜீவ் காந்தியின் 75ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, காங்கிரசு இடைக்காலத் தலைவர் சோனியா காந்தியும், இராகுல் காந்தியும் இணைந்து ஆக.20 அன்று 'Memories and Archives of Rajiv Gandhi' என்ற தலைப்பிலான ஒரு கண்காட்சியைத் தொடங்கிவைத்தனர்.
- ✓ இராஜீவ் காந்தி, 1984 முதல் 1989 வரை இந்தியாவின் 6ஆவது பிரதமராக பணியாற்றினார். 1984ஆம் ஆண்டு தனது தாயார் பிரதமர் இந்திரா காந்தி படுகொலை செய்யப்பட்ட பின்னர் நாற்பதாவது வயதில் இளவயது இந்திய பிரதமராக பதவியேற்றார். 1991 மே.21 அன்று, இராஜீவ், தமிழ்நாட்டில் உள்ள திருப் பெரும்புதூரில் நடந்த தேர்தல் பேரணியில், தமிழீழ விடுதலைப் புலிகளின் (LTTE) மனித வெடிகுண்டு தாக்குதலால் படுகொலை செய்யப்பட்டார். அவரது நினைவுநாள், "தேசிய பயங்கரவாத எதிர்ப்பு நாளாகவும்" அனுசரிக்கப்படுகிறது.

# நடப்பு நிகழ்வுகள்

**1.இந்திய அமைச்சரவை செயலாளர், _____ இன் நேரடி பொறுப்பில் செயல்படுகிறார்?**



A) பெருநிறுவன விவகார அமைச்சகம்

**B) பிரதமர் ☑**

C) உள்துறை அமைச்சகம்

D) நிதி அமைச்சகம்

✓ இராஜீவ் கௌபா IAS (ஜார்கண்ட்: 1982) புதிய அமைச்சரவையின் செயலாளராக ஈராண்டுகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளார். பிரதீப் குமார் சின்ஹாவுக்குப் பின் இந்தப் பதவிக்கு வரும் இவரின் பதவிக்காலம் 2019 ஆகஸ்ட்.30 முதல் நடைமுறைக்கு வரும். கௌபா, தற்போது மத்திய உள்துறை செயலாளராக பணிபுரிந்து வருகிறார். அமைச்சரவை செயலாளர் என்பவர் இந்திய அரசின் மிகவுயர்ந்த நிர்வாக அதிகாரியும், மிக–மூத்த அரசு ஊழியரும் ஆவார். அவர் பிரதமரின் நேரடி பொறுப்பில் செயல்படுகிறார்.

**2.இந்தியாவின் புதிய பாதுகாப்பு செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**



**A) அஜய் குமார் ☑**

B) இராஜ் குமார் அகர்வால்

C) சுபாஷ் சந்திரா

D) இராஜீவ் கௌபா

✓ அஜய் குமார் IAS (கேரளா: 1985) புதிய பாதுகாப்பு செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். சஞ்சை மித்ராவுக்குப் பிறகு அவர் இந்தப் பதவிக்கு வந்துள்ளார். அவரைத்தவிர, மக்களவையின் செயலாளராக பிரிஜ் குமார் அகர்வாலும், பாதுகாப்பு உற்பத்தித்துறையின் செயலாளராக சுபாஷ் சந்திராவும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். பிரதமர் மோடி தலைமையிலான அமைச்சரவையின் நியமனக்குழு, இந்த நியமனங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது.

**3.வர்ம அறிவியல் தொடர்பான தேசிய மாநாடு, அண்மையில் எந்த நகரத்தில் நடைபெற்றது?**

National Institute of Siddha
தேசிய சித்த மருத்துவ நிறுவனம்
राष्ट्रीय सिध्द संस्थान

**A) சென்னை ☑**

B) புது தில்லி

C) கொச்சின்

D) ஜெய்ப்பூர்

✓ ஆகஸ்ட்.22 அன்று, மத்திய AYUSH இணையமைச்சர் ஸ்ரீபத் யெசோ நாயக், வர்ம அறிவியல் குறித்த இரண்டு நாள் தேசிய மாநாட்டை சென்னையில் தொடங்கிவைத்தார். 'வர்மம்' என்பது சித்த மருத்துவ

முறையின் ஓர் அங்கமாகும். மேலும், இது ஒரு தற்காப்புக் கலையுமாகும். இந்தத் தேசிய மாநாட்டை, சென்னையில் உள்ள தேசிய சித்த மருத்துவ நிறுவனம் ஏற்பாடு செய்திருந்தது.

### 4. 'Op–Blue Freedom' என்பது எந்த விளையாட்டுடன் தொடர்புடையது?



A) Water Skiing

B) Water Polo

C) Parasailing

**D) Scuba Diving (மூச்சுவிடு அமைப்புடன் நீரில்குதித்தல்) ☑**

✓ ஆசியாவிலேயே முதன்முதலாக, 8 ஆயுதப்படை வீரர்கள் தங்களின் 'சிறப்புப் படை சாகசங்கள்' என்ற முதன்மைத் திட்டத்தின் ஒருபகுதியாக, 'Op–Blue Freedom' என்ற தலைப்பில் தேசிய அளவிலான ஓர் உயர்நிலை சாகச விளையாட்டுக்கள் உயிர்வாழ் பயிற்சி மற்றும் தற்காப்புத் திட்டத்தைத் தொடங்கினர். இந்தச் சிறப்புப் படை சாகசங்கள், மேஜர் விவேக் ஜேக்கப் (ஓய்வு) தலைமையிலானது மற்றும் இந்திய இராணுவ பாரா கமாண்டோக்கள் மற்றும் கடற்படை கமாண்டோக்கள் (MARCOS) ஆகியவற்றின் வீரர்கள் இதில் உள்ளனர். 'Op–Blue Freedom' என்பது குறைபாடுகள் உள்ளவர்களுக்கும், உடல் திறன் உடையவர்களுக்குமான ஒரு நாடு தழுவிய ஸ்கூபா டைவிங் திட்டமாகும்.

✓ சிறப்புப் படைகளில் உள்ள சாகச ஆர்வலர்களுக்கு பயிற்சியளிப்பதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும். மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு மற்றும் கால்பந்து வீரர் பைச்சுங் பூட்டியா ஆகியோர் 'Op–Blue Freedom'காக தில்லி – NCT பிரிவுக்கான ஸ்கூபா டைவ் போட்டியை கொடி அசைத்து தொடங்கிவைத்ததன் காரணமாக அண்மைச் செய்திகளில் 'Op–Blue Freedom' இடம்பெற்றது.

### 5. இந்திய – பசிபிக் தீவுகள் ஒத்துழைப்புக்கான (FIPIC) மன்றத்தில் உறுப்பினர்களாக உள்ள தீவு நாடுகள் எத்தனை?

A) 20

**B) 14 ☑**

C) 16

D) 18

MINISTRY OF TOURISM
GOVERNMENT OF INDIA

✓ 160க்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து இந்தியாவுக்கு அயல்நாட்டு பயணிகளை ஈர்ப்பதற்காக சுற்றுலாப் பயணிகளின் வருகைக்கேற்ப மின்னணு முறையில் விசா கட்டணத்தை செலுத்தி, விசா பெறும் வசதி அளிக்க மத்திய சுற்றுலா அமைச்சகம் முடிவு செய்துள்ளது. சுற்றுலாப் பயணியர் அதிகம் வரும், ஜூலை முதல் மார்ச் வரை $25 டாலர் என்ற கட்டணத்திலும், சுற்றுலாப் பயணியர் குறைவாக வரும் ஏப்ரல் – ஜூன் வரை $10 டாலர் என்ற கட்டணத்திலும் மின்னணு முறையில் நுழைவு இசைவு கட்டணத்தை அறிமுகப்படுத்த அமைச்சகம் பரிந்துரைத்துள்ளது.

- ✓ அமைச்சகமானது ஐந்தாண்டுக்கு செல்லுபடியாகும் ஒரு புதிய மின்னணு சுற்றுலா விசாவையும் அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்கட்டணம் $80 ஆகவும், ஓராண்டுக்கான மின்னணு சுற்றுலா விசாவின் கட்டணம் $40 ஆகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.
- ✓ இருப்பினும், இந்திய–பசிபிக் தீவுகள் ஒத்துழைப்பு மன்றத்தில் உறுப்பினர்களாக உள்ள 14 பசிபிக் தீவு நாடுகளைச் சேர்ந்த (பிஜி, குக் தீவுகள், கிரிபட்டி, மார்ஷல் தீவுகள், மைக்ரோனேசியா, நௌரு, நியு தீவு, பலாவ், பப்புவா நியூ கினியா, சமோவா, சாலமன் தீவுகள், டோங்கா, துவாலு மற்றும் வனாடு மற்றும் மியானமர், அர்ஜென்டினா, இந்தோனேசியா, சமைக்கா, மொரிசியஸ், சீஷெல்ஸ், தென்னாப்பிரிக்கா மற்றும் உருகுவே) சுற்றுலாப் பயணிகளுக்கு நுழைவு இசைவு கட்டணம் இருக்காது. உள்துறை அமைச்சகம் மற்றும் வெளியுறவு அமைச்சகம் ஆகிய இரண்டும் நெகிழ்வான இந்த மின்னணு சுற்றுலா நுழைவு இசைவுக்கு ஒப்புதல் அளித்துள்ளன.

**6. ரோபோடிக்ஸ் & 5G தொடர்பாக IISc உடன் கூட்டுச்சேர்ந்துள்ள இந்திய தொழினுட்ப நிறுவனம் எது?**

**A) விப்ரோ ☑**

B) இன்போசிஸ்

C) டாடா

D) ரிலையன்ஸ்

- ✓ ரோபோடிக்ஸ் மற்றும் 5G முதலிய தானியங்கி அமைப்புகளில் நவீன பயன்பாட்டு ஆராய்ச்சியை மேற்கொள்வதற்காக WIPRO நிறுவனமானது இந்திய அறிவியல் கழகத்துடன் கூட்டுச் சேர்ந்துள்ளது. இரண்டு நிறுவனங்களும் கூட்டாக, 'WIPRO IISc ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்பு நெட்வொர்க் (WIRIN)' என்றவொரு தொழில் – கல்வி ஒத்துழைப்பு அலகை அமைத்துள்ளன. இது, தொழில்நுட்பம் மற்றும் தயாரிப்பு வடிவமைப்பில் எண்ணமாக்கம், ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கங்களை ஊக்குவிக்கும்.
- ✓ செயற்கை நுண்ணறிவு (AI), எந்திர கற்றல், Visual Computing, Human Computer Interaction (HCI) & Vehicle–to–everything Communication (V2X) ஆகியவற்றில் அதிநவீன தொழில்நுட்பங்களின் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு குறித்து இரு நிறுவனங்களும் கவனம் செலுத்தும். ஆராய்ச்சியின் முடிவுகள் WIPRO நிறுவனத்தால் அதன் வாடிக்கையாளர்களுக்கும் தொழில் சூழல் அமைப்புக்கும் வழங்கப்படும்.

**7. SARAL – 'State Rooftop Solar Attractiveness Index'இல் முதலிடத்தைப் பெற்ற மாநிலம் எது?**

A) ஆந்திரப்பிரதேசம்

B) குஜராத்

**C) கர்நாடகா ☑**

D) தெலங்கானா



- ✓ சூரிய மேற்கூரை பயன்பாட்டின் அடிப்படையில் இந்திய மாநிலங்களை மதிப்பிடும் SARAL – 'State Rooftop Solar Attractiveness Index'இல் கர்நாடக மாநிலத்திற்கு முதலிடம் கிடைத்துள்ளது. இந்தக் குறியீட்டை, அண்மையில், மத்திய மின் மற்றும் புதிய & புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் துறை அமைச்சர்

RK சிங் வெளியிட்டார். தெலங்கானா 2ஆவது இடத்தையும், அதனைத்தொடர்ந்த இடங்களை குஜராத், ஆந்திரப்பிரதேசம் ஆகிய மாநிலங்கள் பெற்றுள்ளன. இக்குறியீட்டை புதிய & புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம், சக்தி நீடித்த ஆற்றல் அறக்கட்டளை, ASSOCHAM மற்றும் Ernst மற்றும் Young ஆகியவை இணைந்து வடிவமைத்துள்ளன.

**8.சென்னைக் கடற்கரையில் நிகழ்ந்த 'கடல் ஒளிர்வு'க்குக் காரணமான பாசி எது?**



A) Cryptomonad

B) Diatom

**C) Noctiluca ☑**

D) Wakame

✓ ஆக.18 அன்று, சென்னையில் உள்ள ஈஞ்சம்பாக்கம் கடற்கரை மற்றும் பெசன்ட் நகரின் எலியட்ஸ் கடற்கரைக்கு வந்திருந்தவர்கள் கடலலைகள் நீலநிறத்தில் மின்னியதைக்கண்டனர். இது பொதுவாக 'கடல் ஒளிர்வு – Sea Tinkle' என அறியப்படுகிறது. கடல்சார் வல்லுநர்களின் கூற்றுப்படி, கடலலைகள் நீலநிறமாக ஒளிர்ந்ததற்கு மின்னிய அந்த நிகழ்வுக்குப் பின்னால் 'Noctiluca' என்னும் ஒரு பாசி வகை காரணமாக இருந்துள்ளது.

✓ பாசிகள் உயிரொளிர்தல் (Bioluminescence) (தொந்தரவு ஏற்படும்போது உயிரியல் ரீதியாக ஒளியை உமிழ்வது) நிகழ்வை வெளிப்படுத்துகின்றன. 'Luciferase' என்னும் ஒரு நொதி ஆக்சிசனுடன் வினை புரிந்து ஒரு வேதி எதிர்வினையின் மூலம் ஒளியை உருவாக்குகிறது. மின்மினிப்பூச்சிகள், ஒருசில வண்டுகள் மற்றும் கடல் உயிரினங்களான ஆங்கிலர் மீன் மற்றும் கடல் முகட்டுப் பூச்சிகளில் இந்த உயிரொளிர்தல் காணப்படுகிறது.

✓ பாசிகள் உற்பத்தி செய்யும் இந்த ஒளியானது பார்வைக்கு அழகாக இருந்தாலும், அவற்றின் வருகை கடலின் நலத்திற்கு நன்றன்று. 'Noctiluca' என்பது மிதவை உயிரினங்களை (Diatom) கொடூரமாக வேட்டையாடும் ஒரு பாசி வகையாக அறியப்படுகிறது. அது, கடலின் உணவுச்சங்கிலியை சீர்குலைக்க வழிவகுக்கிறது. 2000ஆம் ஆண்டுகளின் முற்பகுதியில் வடக்கு அரேபிய கடலில் ஆண்டுதோறும் இத்தகைய நிகழ்வுகள் ஏற்பட்டதாக பதிவுகள் உள்ளன. கோவா, மும்பை மற்றும் கேரள உப்பங்கழிகள் இத்தகைய நிகழ்வுகளைக் கண்டுள்ளன.

**9. 'Quality Unknown: The Invisible Water Crisis' என்ற தலைப்பில் அறிக்கை வெளியிட்டுள்ள சர்வதேச அமைப்பு எது?**



A) வர்த்தகம் மற்றும் வளர்ச்சி தொடர்பான ஐ.நா தீர்மானம்

B) ஆசிய வளர்ச்சி வங்கி

**C) உலக வங்கி ☑**

D) ஐ.நா பொது அவை

- ✓ மனித மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்புகளுக்கு தீர்வு காண்பதற்காக உலக வங்கி அண்மையில் 'Quality Unknown: The Invisible Water Crisis' என்ற தலைப்பில் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. நுண் –உயிரி, கழிவுநீர், வேதிகள் & நெகிழி ஆகியவற்றின் கூட்டுக்கலவையானது நீர் வழங்கலிலிருந்து உயிர்வளியை உறிஞ்சி, மக்களுக்கும் சுற்றுச்சூழல் அமைப்புகளுக்குமான நீரை எவ்வாறு நஞ்சாக மாற்றுகிறது என்பதை இந்த ஆய்வு மதிப்பீடு செய்துள்ளது.

- ✓ மாசுபாட்டின் விளைவாக ஏழை மற்றும் பணக்கார நாடுகள் என அனைத்தும் மோசமான நீர்தர ஆபத்தில் உள்ளன. மோசமான நீர்தரத்திற்கு மிக முக்கியக் காரணியாக இருப்பது நைட்ரஜன் ஆகும். இது, வேளாண்மையில் உரமாகப் பயன்படுத்தப்படுகிறது. இறுதியில் இது ஆறுகள், ஏரிகள் மற்றும் பெருங்கடல்களில் நுழையும்போது அங்கு நைட்ரேட்டுகளாக மாற்றம் பெறுகின்றது. நைட்ரேட்டுகள், சிறார்களின் வளர்ச்சி மற்றும் மூளைவளர்ச்சியை பாதிக்கின்றன. மேலும், வயதுவந்தோரில் வளர்ச்சித் திறனையும் அது பாதிக்கிறது.

- ✓ உயிரிகளுக்கான உயிர்வளியின் தேவை – Biological Oxygen Demand (ஒட்டுமொத்த நீர்தரத்தை அளவிட பயன்படும் காரணி) ஒரு குறிப்பிட்ட வரம்பைக் கடக்கும்போது, பிரச்சனையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (GDP) வளர்ச்சி 1/3 பங்காக குறையும். இதற்குக்காரணம் நலவாழ்வு, வேளாண்மை மற்றும் சுற்றுச்சூழல் அமைப்புகளில் ஏற்படும் தாக்கமே ஆகும்.

**10.வனவுயிரி வர்த்தக கண்காணிப்பு வலையமைப்பின் (TRAFFIC) தலைமையகம் எங்குள்ளது?**

A) பிரான்ஸ்

B) ஜெர்மனி

**C) ஐக்கிய பேரரசு ☑**

D) ஐக்கிய அமெரிக்க நாடுகள்




- ✓ வனவிலங்கு வர்த்தக கண்காணிப்பு வலையமைப்பானது (TRAFFIC) அண்மையில், 'Skin and Bones Unresolved: An Analysis of Tiger Seizures from 2000–2018' என்ற புதிய அறிக்கையை வெளியிட்டது. இந்தப் புதிய TRAFFIC பகுப்பாய்வின்படி, 2000 முதல் அடுத்து வந்த 19 ஆண்டுகளில் புலிகள் மற்றும் புலிகளின் உடல் பாகங்கள் கடத்தலில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. புலித்தோல் மற்றும் எலும்புகள் தவிர, உயிருடன் இருக்கும் புலிகள் கடத்தப்பட்டு, சட்டவிரோதமாக அவை விற்பனை செய்யப்பட்டதாக பல வழக்குகள் பதிவாகியுள்ளன. இது, நடைபெற்ற 463 சம்பவங்களில் 40.5% ஆகும்.

- ✓ ஒட்டுமொத்தமாக, உலகளவில் 2000 – 2018 வரை 32 நாடுகளில் எடுக்கப்பட்ட கணக்கீடுப்படி 2359 புலிகள் இந்தச் சட்டவிரோத கடத்தலால் பாதிக்கப்பட்டுள்ளன. இதுவரை பல்வேறு நாடுகளில் நிகழ்ந்த 1142 சம்பவங்கள் இந்தச் சட்டவிரோத புலிகள் கடத்தலை உறுதிப்படுத்தியுள்ளன. இந்தச்சம்பவங்களில் 95%, புலிகள் பூர்வீகமாக வசிக்கும் நாடுகளிலேயே பதிவாகியுள்ளன. CITESஇன் உறுப்பினர்களுக்கு இடையே நடந்த பதினெட்டாவது கூட்டத்தில், புலிகள் & பிற பெரும் பூனையினங்களின் வர்த்தகம் குறித்த கலந்துரையாடல்களுடன் இணைந்து இந்த ஆய்வு தொடங்கப்பட்டது. உலகில் புலிகளின் எண்ணிக்கை மிக அதிகமாக இருப்பது இந்தியாவில்தான். TRAFFICஇன் தலைமையகம் ஐக்கிய பேரரசின் (இங்கிலாந்து) கேம்பிரிட்ஜில் அமைந்துள்ளது.

# நடப்பு நிகழ்வுகள்


**1.சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு (ISS) 'Fedor' என்னும் மனித அளவிலான ரோபோவை கொண்டுசெல்லும் ஏவுகணையை ஏவிய நாடு எது?**

A) ஐக்கிய அமெரிக்க நாடுகள்

**B) இரஷ்யா ☑**

C) சீனா


D) பிரான்ஸ்



✓ கசகஸ்தானில் உள்ள இரஷ்யாவுக்கு சொந்தமான பைக்கனூர் விண்வெளி ஏவுதளத்திலிருந்து 'Fedor' என்னும் ரோபோவுடன் சோயூஸ் ஏவுகணையை இரஷ்யா விண்ணில் ஏவியது. இந்த 'ரோபோ' சனிக் கிழமையன்று சர்வதேச விண்வெளி மையத்தை சென்றடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. 'Fedor – Experimental Demonstration Object Research' எனப் பெயரிடப்பட்ட இந்த ரோபோ இரஷ்யாவால் விண்வெளிக்கு அனுப்பப்படும் முதல் ரோபோவாகும்.

✓ இந்த ரோபோ 5 அடி 11" உயரமும், 160 கிலோ எடையும் கொண்டுள்ளது. 'Fedor' ரோபோ, சர்வதேச விண்வெளி மையத்தில் மின்சார வடங்களை இணைத்தல் மற்றும் துண்டித்தல், தீயணைக்கும் கருவியை பயன்படுத்துதல் போன்ற மீட்புப்பணிகளுக்கான புதிய திறன்களைக் கற்றுக்கொள்ளும்.

**2. "Big Billion Startup: The Untold Flipkart Story" என்ற நூலின் ஆசிரியர் யார்?**




**A) மிஹிர் தலால் ☑**

B) பிரஹ்லாத் ஜோஷி

C) இராஜ் குமார் சிங்

D) அஸ்வானி குமார்

✓ "Big Billion Startup: The Untold Flipkart Story" என்ற நூலை மிஹிர் தலால் எழுதியுள்ளார். ITI பட்டதாரிகளான சச்சின் மற்றும் பின் பன்சால் ஆகியோர் பிளிப்கார்ட்டை எவ்வாறு உருவாக்கினார்கள் என்பதையும் இணைய தொழில்முனைவு எவ்வாறு விரும்பத்தக்க தொழிலாக மாற்றப்பட்டது என்பதையும் இந்த நூல் விவரிக்கின்றது.

**3.எந்தத் தேதியில், உலக மூத்த குடிமக்கள் நாள் கொண்டாடப்படுகிறது?**

A) ஆகஸ்ட் 20

B) ஆகஸ்ட் 23

**C) ஆகஸ்ட் 21 ☑**

D) ஆகஸ்ட் 22



✓ முதியோர்களை பாதிக்கும் பிரச்சனைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வோர் ஆண்டும் ஆகஸ்ட்.21 அன்று உலக மூத்த குடிமக்கள் நாள் கொண்டாடப்படுகிறது. முதியோர்கள் சமுதாயத்திற்கு அளித்த பங்களிப்புகளை இந்நாள் அங்கீகரிக்கிறது மற்றும் ஏற்றுக்கொள்கிறது. முதியோர்களின் அர்ப்பணிப்பு, சாதனைகள் மற்றும் வாழ்நாள் முழுவதும் அவர்கள் இச்சமுதாயத்திற்கு வழங்கிய சேவைகளை பாராட்டுவதற்கு இந்நாள் ஒரு வாய்ப்பை வழங்குகிறது.

**4. எந்த இந்தியப் பேராசிரியருக்கு 'புஷ்கின் பதக்கம் – 2019' வழங்கப்பட்டுள்ளது?**

A) விஷ்ணுபிரியா தத்

**B) மீதா நரேன் (Meeta Narain) ☑**

C) அனிந்த்ய சின்ஹா

D) அய்ஜாஸ் அகமது



✓ ஜவகர்லால் நேரு பல்கலையின் பேராசிரியர் மீதா நரேனுக்கு, இரஷ்ய ஆய்வுக்கு பங்களித்தமைக்காக மதிப்புமிக்க 'புஷ்கின் பதக்கம் – 2019' விருது வழங்கப்பட்டுள்ளது. சோவியத் ஒன்றியம் கலைக்கப்பட்ட பின்னர் பட்டதாரி மாணவர்களுக்கான இரஷ்ய ஆய்வுகள் பாடப்புத்தகங்களை மீண்டும் எழுதுவதற்கு நரேன் பங்களித்துள்ளார். அவரது பணிகள் பாடநூல்களுக்கு ஒரு சமகால உணர்வை அளித்தன.

✓ அவை இப்போது, இந்தியாவின் பல்வேறு பல்கலைக்கழகங்களில், பல முன்னாள் சோவியத் தேச நிறுவனங்களில், ஐரோப்பா, அமெரிக்கா மற்றும் பிற நாடுகளில் இரஷ்ய மொழி ஆய்வுத் துறைகளில் பயன்படுத்தப்படுகின்றன. ரஷ்ய மொழி மற்றும் கலாசாரத்தை மேம்படுத்துவதில் சிறப்பான பங்களிப்பு செய்யும் இந்திய அறிஞர் ஒருவருக்கு இரஷ்ய அரசு வழங்கும் மிகவுயர்ந்த கௌரவந்தான் இப்'புஷ்கின் பதக்கம்'. இது பிரபல இரஷ்ய எழுத்தாளரும் கவிஞருமான அலெக்சாண்டர் S. புஷ்கின் பெயரால் வழங்கப்படுகிறது.

**5. 'டிஜிட்டல் தெலுங்கானா'வுக்காக எந்தத் தொழில்நுட்ப நிறுவனத்துடன் தெலுங்கானா மாநில அரசு ஒப்பந்தம் செய்துள்ளது?**

A) மைக்ரோசாப்ட்

**B) கூகிள் ☑**

C) விப்ரோ

D) இன்போசிஸ்




✓ 'டிஜிட்டல் தெலுங்கானா'வுக்காக கூகிள் இந்தியா நிறுவனத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தெலுங்கானா அரசு கையெழுத்திட்டுள்ளது. இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தமானது கூகிளின் டிஜிட்டல் பதிப்பக கருவியான 'நவலேகா'வைப் பயன்படுத்தி ஆன்லைனில் உள்ளூர் மொழி உள்ளடக்கத்தை மேம்படுத்தும்.

- ✓ இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் ஒருபகுதியாக, பொதுமக்களுக்கு அரசாங்க வலைத்தளங்களில் உள்ள அனைத்து தகவல்களும் சேவைகளும் உள்ளூர் மொழிகளிலேயே கிடைப்பதை உறுதி செய்வதற்காக தெலுங்கில் அரசாங்கத்தின் உள்ளடக்கத்தை மாற்ற மாநில அரசுடன் கூகிள் இணைந்து செயல்படும். இதுதவிர, கூகிள் தனது டிஜிட்டல் கல்வியறிவு நோக்கம் மற்றும் மாநிலத்தின் ஒட்டுமொத்த டிஜிட்டல் மயமாக்கல் நிகழ்ச்சி நிரலில் உதவுவதற்கு அரசாங்கத்துடன் ஒத்துழைக்கும்.

**6.ஐந்தாண்டுகளுக்கு இந்திய கிரிக்கெட் அணியின் 'டைட்டில் ஸ்பான்சர்ஷிப்' உரிமையை பெற்றுள்ள நிறுவனம் எது?**

**A)** Paytm ☑

B) வோடபோன்

C) போன்பே

D) ஏர்டெல்

- ✓ இந்திய கிரிக்கெட் அணியின் சர்வதேச மற்றும் உள்ளூர் போட்டிகளுக்கான 'Title Sponsorship' உரிமையை Paytm நிறுவனத்துக்கு நீட்டித்து வழங்கியுள்ளதாக இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் (BCCI) தெரிவித்துள்ளது. 2019 அக்டோபரில் தொடங்கும் இந்த நான்காண்டு ஒப்பந்தகாலம், 2023இல் நிறைவடையும். இதன் ஒப்பந்தத்தொகை ₹326.80 கோடி.
- ✓ ஒரு போட்டிக்கு ₹3.80 கோடியை, Paytm நிறுவனம் செலுத்த வேண்டும். முந்தைய ஒப்பந்தத் தொகையுடன் ஒப்பிட்டால், 58% அதிகம். அடுத்த 4 ஆண்டுகளில், இருதரப்பு தொடர்களில் குறைந்தது 86 சர்வதேச ஆண்கள் போட்டிகளை இந்தியா நடத்தவுள்ளது. சர்வதேச ஆண்கள் கிரிக்கெட்டைத் தவிர, உள்ளூர் கிரிக்கெட் மற்றும் பெண்கள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளுக்கு கூடுதல் செலவேதும் இல்லாமல் ஸ்பான்சர்ஷிப் உரிமைகளை Paytm நிறுவனத்துக்கு BCCI நீட்டித்து வழங்கியுள்ளது.

**7.மதம்/நம்பிக்கையின் அடிப்படையில் வன்முறைச் செயல்களால் பாதிக்கப்பட்டோருக்கான முதல் சர்வதேச நாள், எந்தத் தேதியில் கடைப்பிடிக்கப்பட்டது?**

A) ஆகஸ்ட் 20

B) ஆகஸ்ட் 23

C) ஆகஸ்ட் 21

**D) ஆகஸ்ட் 22** ☑




- ✓ மதம் அல்லது நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்ட வன்முறைச் செயல்களால் பாதிக்கப்பட்டவர்க –ளுக்கான முதல் சர்வதேச நாள் (International Day for Victims of Acts of Violence based on Religion or Belief) 2019 ஆக.22 அன்று அனுசரிக்கப்பட்டது. மத சகிப்பின்மை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த இந்த நாள் ஒரு சிறந்த வாய்ப்பாக உள்ளது.

**8.மாற்றுத்திறனாளிகள் அணுகக்கூடிய கழிப்பறைகளுக்காக 'சன்–சதன்' ஹேக்கத்தானை ஏற்பாடு செய்துள்ள மத்திய அமைச்சகம் எது?**

A) நலவாழ்வு மற்றும் குடும்பநல அமைச்சகம்

**B) ஜல் சக்தி அமைச்சகம் ☑**

C) சுற்றுச்சூழல், வனம் & காலநிலை மாற்ற அமைச்சகம்

D) ஊரக வளர்ச்சி அமைச்சகம்




- ✓ தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ், மாற்றுத்திறனாளிகள் அணுகக்கூடிய கழிப்பறைகளுக்காக இந்திய அரசு தனது சமீபத்திய முயற்சியை 'சன்–சதன்' ஹேக்கத்தான் என்ற பெயரில் அறிமுகப்படுத்தியுள்ளது. கழிவறைகளை சிறந்ததாகவும், அணுகக்கூடியதாகவும், பயன்படுத்த எளிதானதாகவும் மாற்றுவதன் மூலம் மாற்றுத்திறனாளிகளின் வாழ்வை எளிதாக்குவதே இந்த முயற்சியின் நோக்கமாகும்.
- ✓ இந்த ஹேக்கத்தானில், கிராமப்புற மற்றும் நகர்ப்புற சூழல்களில் தனிநபர் மற்றும் பொதுப் பயன்பாட்டிற்கான சிக்கன கழிவறைகளுக்கான புதுமையான தீர்வுகளை அரசாங்கம் எதிர்பார்க்கிறது. ஆராய்ச்சியாளர்கள், துளிர் நிறுவனங்கள், மாணவ கண்டுபிடிப்பாளர்கள், தொழில்நுட்ப ஆர்வலர்கள் மற்றும் தொழில் வல்லுநர்களை பங்கேற்க இந்த ஹேக்கத்தான் அழைக்கிறது. இந்த ஹேக்கத்தானில் பங்கேற்க விண்ணப்பிப்பதற்கான கடைசி தேதி ஆகஸ்ட்.28 ஆகும்.
- ✓ தேர்வுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் செப்டம்பரில் புது தில்லியில் இரண்டுநாள் நடைபெறவிருக்கும் ஹேக்கத்தானின்போது தங்கள் முன்மாதிரிகளை உருவாக்க பணியாற்றுவார்கள். அடல் புத்தாக்க திட்டம், NITI ஆயோக், பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை மற்றும் 91 ஸ்ப்ரிங் போர்டு ஆகியவற்றுடன் இணைந்து ஜல் சக்தி அமைச்சகம் மற்றும் மாற்றுத்திறனாளிஞக்கு அதிகாரமளித்தல் துறை இணைந்து இந்த முயற்சியை ஏற்பாடு செய்து வருகிறது.

**9.தேசிய நலவாழ்வு திட்டத்தின்கீழ், விலையில்லா மருந்துத் திட்டத்தை செயல்படுத்துவதில் முதலிடத்தில் உள்ள மாநிலம் எது?**

A) மத்தியபிரதேசம்

B) உத்தரபிரதேசம்

**C) இராஜஸ்தான் ☑**

D) ஜார்க்கண்ட்

- ✓ தேசிய நலவாழ்வு திட்டத்தின்கீழ் இயங்கும் விலையில்லா மருந்துத் திட்டத்தை செயல்படுத்துவதை விவரிக்கும் 16–மாநில தரவரிசையில், இராஜஸ்தான் அரசாங்கத்தின் முதன்மை திட்டம் முதலிடத்தில் உள்ளது. மருந்துகள் மற்றும் தடுப்பூசி விநியோக மேலாண்மை அமைப்பு (DVDMS), அத்தியாவசிய மருந்துகளின் இருப்பு, காலாவதியாகும் மருந்துகளின் மதிப்பு மற்றும் இதுபோன்ற பிற அளவுருக்களின் அடிப்படையில் மாநிலங்களின் செயல்திறனை தேசிய நலவாழ்வு திட்டம் (NHM) மதிப்பீடு செய்தது.

✓ NHM மடலின்படி, இராஜஸ்தானில் DVDMSஇன் செயலெல்லை 77.26 சதவீதமாகவும், ஆன்லைன் மருந்து விநியோகத்தின் விகிதம் 96.03 சதவீதமாகவும் உள்ளது. உடைப்பு, வீணானது மற்றும் இழப்பு உள்ளிட்ட காலாவதியான அளவு விகிதம் வெறும் 7.43 ஆகும்.

**10.அண்மையில் பெருங்கடலாற்றலை பசுமை ஆற்றலாக அறிவித்த மத்திய அமைச்சகம் எது?**

A) ஜல் சக்தி அமைச்சகம்

B) கால்நடை பராமரிப்பு, பால்வளம் & மீன்வளத்துறை

**C) புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் அமைச்சகம் ☑**

D) சுற்றுச்சூழல், வனம் & காலநிலை மாற்ற அமைச்சகம்



✓ பெருங்கடலாற்றலை புதுப்பிக்கத்தக்க ஆற்றல் ஆதாரமாக அறிவிக்கும் திட்டத்திற்கு புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது. இம்முடிவு கடலாற்றலின் பயன்பாட்டை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஓதம், அலை, கடல் வெப்ப ஆற்றல் மாற்றம் போன்ற பல்வேறு வகையான கடலாற்றலைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் ஆற்றல் புதுப்பிக்கத்தக்க ஆற்றலாகக் கருதப்படும் என்றும் சூரிய ஆற்றல் அல்லாத புதுப்பிக்கத்தக்க கொள்முதல் கடமைகளை பூர்த்தி செய்ய அவை தகுதியுடையவை என்றும் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் அமைச்சகம் அனைத்து பங்குதாரர்களுக்கும் தெளிவுபடுத்தியுள்ளது.

✓ பெருங்கடல் வெப்ப ஆற்றல் மாற்றமானது பொருத்தமான தொழில்நுட்ப பரிணாமத்திற்கு உட்பட்டு இந்தியாவில் 180,000 MW கோட்பாட்டுத் திறனைக் கொண்டுள்ளது. இந்தியாவில் அடையாளங் காணப்பட்டுள்ள மொத்த ஓத ஆற்றல் திறன் 12,455 MW ஆகும். அதேநேரம், நாட்டின் கடற்கரையில், அடையாளங் காணப்பட்டுள்ள அலையாற்றலின் மொத்த கோட்பாட்டுத் திறன் 40,000 மெகாவாட் என மதிப்பிடப்பட்டுள்ளது.

---


## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

✓ பூச்சிக்கொல்லிகள், கனமான உலோகங்கள், ஹைட்ரோ கார்பன்கள், சாயக்கழிவுகள் ஆகியவற்றால் பறவைகளுக்கு ஏற்படும் அபாயமான தாக்கங்கள் குறித்து ஆய்வுசெய்ய கோயம்புத்தூருக்கு அருகே ஆனைகட்டியில் உள்ள சலீம் அலி பறவையியல் மற்றும் இயற்கை அறிவியல் மையத்தில் (Salim Ali Centre for Ornithology and Natural Sciences – SACON) பறவைகள் சூழல் நச்சுத்தன்மைக்கான தேசிய மையத்தை மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர் திறந்துவைத்தார்.

✓ சேலம், நாமக்கல் மற்றும் தேனி ஆகிய மாவட்டங்களில் புதிய அரசு சட்டக்கல்லூரிகள் தமிழ்நாடு அரசால் திறக்கப்பட்டுள்ளன. இந்தக் கல்லூரிகள், தமிழ்நாடு Dr. அம்பேத்கர் சட்டப்பல்கலையின் கீழ் செயல்படும். இந்த மூன்று புதிய சட்டக்கல்லூரிகளுடன் சேர்த்து தமிழ்நாட்டில் மொத்தமாக 13 அரசு சட்டக்கல்லூரிகள் உள்ளன.

# நடப்பு நிகழ்வுகள்

**1. "The Diary of Manu Gandhi (1943–44)" என்ற நூலின் மொழிபெயர்ப்பாளர் யார்?**




A) சரஸ்வதி நாகராஜன்

B) நீதா சத்தியேந்திரன்

**C) திரிதீப் சுஹ்ருத் (Tridip Suhrud) ☑**

D) கிருஷ்ணா கிருபாளினி

✓ மத்திய கலாசார மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் பிரகலாத் சிங் படேல், அண்மையில் புது தில்லியில் நடந்த ஒரு விழாவில் "The Diary of Manu Gandhi (1943–44)" என்ற நூலை வெளியிட்டார். மகாத்மா காந்தியின் 150ஆவது ஆண்டுவிழாவை முன்னிட்டு ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழக அச்சகத்துடன் இணைந்து இந்நூலை இந்திய தேசிய ஆவணக்காப்பகம் வெளியிடுகிறது.

✓ இந்த நூல், முதலில் குஜராத்தி மொழியில் எழுதப்பட்டு, பின்னர், பிரபல அறிஞர் டாக்டர். திரிதீப் சுஹ்ருத் அவர்களால் திருத்தப்பட்டு மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. நூலின் முதற்தொகுதி 1943–1944 காலத்தை உள்ளடக்கியுள்ளது. இது ஒரு கைதியாக 'மகாத்மா' காந்தியின் வாழ்க்கையையும், அகிம்சையை நிறுவுவதற்கான அவரது முயற்சிகளையும் வெளிக்கொணர்கிறது. காந்தியின் உடன் பிறந்தாரின் மகளான மனுகாந்தி (மிருதுளா), காந்தி கொல்லப்படும் வரை அவருடன் இருந்தார். 1943ஆம் ஆண்டில் ஆகாகான் அரண்மனையில் சிறையிலிருந்தபோது கஸ்தூரிபா காந்தியின் உதவியாளராக இருந்தார்.

**2. சூடானின் புதிய பிரதமராக பொறுப்பேற்றுள்ளவர் யார்?**



A) மொகமத் தாஹிர் அயலா

**B) அப்தல்லா ஹம்தோக் ☑**

C) பக்ரி ஹசன் சலே

D) மோதாஸ் மௌசா

✓ சூடான் நாட்டின் பொருளாதார நிபுணரான அப்தல்லா ஹம்தோக் சூடான் நாட்டின் புதிய பிரதமராக பதவியேற்றுள்ளார். இந்நிலையில் நாட்டின் பொருளாதார நெருக்கடி மற்றும் நீதியை நிலைநாட்டுதல் ஆகியவற்றில் தாம் முன்னின்று செயல்படப்போவதாக அப்தல்லா ஹம்தோக் உறுதியளித்துள்ளார். அமெரிக்காவின் வர்த்தக தடையால் இருபது ஆண்டுகளாக முடங்கியிருந்த சூடான் நாட்டை சர்வதேச பொருளாதாரத்துடன் ஒருங்கிணைப்பதே அவரது மிகப்பெரிய சவாலாக இருக்கும்.

**3. பயங்கரவாத நிதி தரங்களுக்கு இணங்க தவறியதற்காக ஆசிய–பசிபிக் குழுமமான FATFஆல் தடுப்புப்பட்டியலில் (Blacklist) வைக்கப்பட்டுள்ள நாடு எது?**

APG
Asia/Pacific Group on Money Laundering

A) ஈரான்

**B) பாகிஸ்தான் ☑**

C) வட கொரியா

D) ஆப்கானிஸ்தான்

- ✓ நிதி நடவடிக்கை பணிக்குழுவின் (FATF) ஆசிய–பசிபிக் குழு (APG) என்பது பயங்கரவாத நிதி மற்றும் பணமோசடி தொடர்புடைய சர்வதேச கண்காணிப்புக் குழுவாகும். இது, அண்மையில் பாகிஸ்தானை அதன் தரங்களை பூர்த்தி செய்யத் தவறியதற்காக மேம்படுத்தப்பட்ட விரைவான பின்தொடர்தல் பட்டியலில் (தடுப்புப்பட்டியலில்) சேர்த்தது.
- ✓ தீவிரவாதத்தை கட்டுப்படுத்த ஆசிய–பசிபிக் குழு நிர்ணயித்துள்ள 40 அம்சங்களில் 32 அம்சங்களை பாகிஸ்தான் நிறைவேற்றாதது கண்டறியப்பட்டதால், அந்த நாடு தடுப்புப்பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. FATF விதித்துள்ள 15 மாதகால அவகாசம் வரும் அக்டோபரில் நிறைவடைவதைத் தொடர்ந்து, தடுப்புப் பட்டியலில் பாகிஸ்தான் இடம்பெறுவதை தடுக்க அந்நாடு தீவிர கவனம் செலுத்திவருகிறது.

**4.டிஜிட்டல் இந்தியா பரப்புரையின் கீழ், மத்திய பிரதேசத்தின் எந்த மாவட்டத்தில் உள்ள பஞ்சாரி கிராமம், நாட்டின் டிஜிட்டல் வரைபடத்தின் ஒருங்கிணைந்த பகுதியாக மாறியுள்ளது?**

**A) கட்னி ☑**

B) ஜபல்பூர்

C) சிந்த்வாரா

D) குவாலியர்

- ✓ மத்தியபிரதேசத்தின் கட்னி மாவட்டத்தில் உள்ள பஞ்சாரி கிராமம் நாட்டின் டிஜிட்டல் வரைபடத்தின் ஒருங்கிணைந்த பகுதியாக மாறியுள்ளது. பிரதமரின் இலட்சியத் திட்டமான 'டிஜிட்டல் இந்தியா'வுடன் தொடர்புடைய மாநிலத்தின் முதல் கிராமமாக இது உள்ளது. 'டிஜிட்டல் இந்தியா' பரப்புரைக்கிணங்க, மத்திய மின்னணு & தகவல் தொழினுட்ப அமைச்சகம் 'டிஜிட்டல் கிராமம்' திட்டத்தை வகுத்துள்ளது.
- ✓ இந்தத் திட்டம், நாடு முழுவதும் 1000 டிஜிட்டல் கிராமங்களை உருவாக்க திட்டமிட்டுள்ளது. டிஜிட்டல் கிராமமானது ஒவ்வொரு கிராமத்திலும் இணைப்பை வழங்க உதவுவதோடு மட்டுமல்லாமல், ஊரக மற்றும் நகர்ப்புறங்களுக்கு இடையிலான டிஜிட்டல் இடைவெளிகளைத் தடுக்கவும் உதவும். இது, புதிய வேலைவாய்ப்புக்கான கதவையும் திறக்கும். குஜராத்தின் சபர்கந்தா மாவட்டத்தின் அகோதரா கிராமம் நாட்டின் முதல் டிஜிட்டல் கிராமமாகும்.

**5.உலக காவலர் விளையாட்டுப் போட்டிகளில் 3 பதக்கங்களை வென்ற மோனாலி ஜாதவ், எந்த மாநிலத்தைச் சேர்ந்தவராவார்?**

A) மத்திய பிரதேசம்

**B) மகாராஷ்டிரா ☑**

C) இராஜஸ்தான்

D) உத்தர பிரதேசம்



✓ சீனாவின் செங்டுவில் அண்மையில் நடந்த நடப்பாண்டு உலக காவல்துறை மற்றும் தீயணைப்பு விளையாட்டு சர்வதேச சாம்பியன்ஷிப்பில், மகாராஷ்டிராவைச் சேர்ந்த காவலர் மோனாலி ஜாதவ் இந்திய காவல் படையை பிரதிநிதித்துவப்படுத்தினார்.

✓ நடைபெற்ற போட்டிகளில், இலக்கு மற்றும் கள வில்வித்தை ஆகியவற்றில் தங்கமும், '3D வில்வித்தை' போட்டியில் வெண்கலத்தையும் அவர் பெற்றார். 720 புள்ளிகளில் 716 புள்ளிகளைப் பெற்று அவர் ஒரு புதிய சாதனையை படைத்தார். மோனாலி, மகாராஷ்டிராவின் புல்தானா மாவட்டத்தில் உள்ள ஜலம்ப் காவல் நிலையத்தில் பணிபுரிந்து வருகிறார்.

**6.அண்மையில் வெளியிடப்பட்ட ஒருங்கிணைந்த நீர் மேலாண்மை குறியீடு 2.0க்கான குறிப்பு ஆண்டு (Reference Year) என்ன?**




A) 2019-20

B) 2018-19

C) 2016-17

**D) 2017-18 ☑**

✓ ஜல் சக்தி அமைச்சகம் மற்றும் ஊரக வளர்ச்சி அமைச்சகம் ஆகியவற்றுடன் இணைந்து NITI ஆயோக் ஆனது ஒருங்கிணைந்த நீர் மேலாண்மை குறியீடு 2.0ஐ (Composite Water Management Index 2.0 – CWMI 2.0) வெளியிட்டுள்ளது. இது, அடிப்படை ஆண்டான 2016-17ஐவிட 2017-18 குறிப்பு ஆண்டிற்கு பல்வேறு மாநிலங்களை தரவரிசைப்படுத்தியுள்ளது.

✓ நீர்வளங்களை திறம்பட நிர்வகிப்பதில் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் செயல்திறனை மதிப்பிடுவதற்கும் மேம்படுத்துவதற்கும் CWMI ஒரு முக்கியமான கருவியாகும். இந்தக் குறியீடானது மாநிலங்களுக்கும், சம்பந்தப்பட்ட மத்திய அமைச்சகங்கள் / துறைகளுக்கும் பயனுள்ள தகவல்களை வழங்குகிறது. மேலும், நீர்வளங்களை சிறப்பாக நிர்வகிக்க பொருத்தமான உத்திகளை வகுத்து செயல் -படுத்தவும் உதவுகிறது.

**7.அண்மையில் வெளியிடப்பட்ட ஒருங்கிணைந்த நீர் மேலாண்மை குறியீடு 2.0இல், முதலிடம் பிடித்த மாநிலம் எது?**




A) மத்திய பிரதேசம்

B) ஆந்திர பிரதேசம்

**C) குஜராத் ☑**

D) கோவா

✓ NITI ஆயோக் அண்மையில் 2017-18ஆம் ஆண்டிற்கான ஒருங்கிணைந்த நீர் மேலாண்மை குறியீடு 2.0 (CWMI 2.0) குறித்த அறிக்கையை வெளியிட்டது. இதில் குஜராத் முதலிடத்தையும், அதனைத் தொடர்ந்த இடங்களை ஆந்திர பிரதேசம், மத்திய பிரதேசம், கோவா, கர்நாடகா மற்றும் தமிழ்நாடு ஆகிய

மாநிலங்களும் பிடித்துள்ளன. வடகிழக்கு மற்றும் இமயமலை மாநிலங்களில், ஹிமாச்சல பிரதேசம் 2017–18ஆம் ஆண்டில் முதலிடத்தைப் பிடித்துள்ளது. அதைத் தொடர்ந்த இடங்களை உத்தரகாண்ட், திரிபுரா மற்றும் அசாம் ஆகிய மாநிலங்கள் பிடித்துள்ளன.

✓ யூனியன் பிரதேசங்கள் முதல்முறையாக தங்கள் தரவை சமர்ப்பித்துள்ளன, அதில் புதுச்சேரி முதலிடத்தை பிடித்ததாக அறிவிக்கப்பட்டது. குறியீட்டில் அதிகரிக்கும் மாற்றத்தின் அடிப்படையில் (2016–17 மட்டத்திற்கு மேல்), பொதுவான மாநிலங்களில் ஹரியானா முதலிடத்தையும், வடகிழக்கு மற்றும் இமயமலை மாநிலங்களில் உத்தரகாண்ட் முதலிடத்தையும் பிடித்துள்ளது. சராசரியாக, கடந்த 3 ஆண்டுகளில் குறியீட்டில் மதிப்பிடப்பட்ட 80 சதவீத மாநிலங்கள், சராசரியாக +5.2 புள்ளிகள் முன்னேற்றத்துடன் அவற்றின் நீர் மேலாண்மை மதிப்பெண்களை மேம்படுத்தியுள்ளன.

**8. கருணைக்கான முதல் உலக இளையோர் மாநாடு, அண்மையில் எந்த நகரத்தில் நடைபெற்றது?**

**A)** புது தில்லி ☑

B) புனே

C) சிம்லா

D) இலக்னோ




✓ கருணைக்கான முதல் உலக இளையோர் மாநாட்டை புது தில்லியில் உள்ள அறிவியல் நிலையத்தில் குடியரசுத்தலைவர் ராம்நாத் கோவிந்த் திறந்துவைத்தார். இதனை UNESCO மகாத்மா காந்தி அமைதி மற்றும் நீடித்த வளர்ச்சிக்கான கல்வி நிறுவனம் (MGIEP) ஏற்பாடு செய்திருந்தது. "Vasudhaiva Kutumbakam: Gandhi for the Contemporary World: Celebrating the 150th birth anniversary of Mahatma Gandhi" என்பது இந்த மாநாட்டின் கருப்பொருளாகும். மகாத்மா காந்தியின் 150ஆவது பிறந்தநாள் கொண்டாட்டத்தை நினைவுகூரும் வகையில் இந்த மாநாடு நடைபெற்றது.

✓ ஐ.நா அவையின் நீடித்த வளர்ச்சி இலக்குகளை (SDG) உணர்ந்துகொள்வதில் ஆக்கபூர்வமான, பயனுள்ள வழிமுறைகளை இளைஞர்களுக்கு வழங்குவதே இதன் நோக்கமாகும். இம்மாநாட்டில், 27க்கும் மேற்பட்ட நாடுகளைச்சேர்ந்த 60 சர்வதேச பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். அவர்கள் ஒவ்வொருவரும் நேர்மறையான சமூக மாற்றத்துறையில் பணியாற்றுகின்றனர்.

**9. அமேசான் மழைக்காடுகள், எந்தக் கண்டத்தில் அமைந்துள்ளன?**

**A)** தென்னமெரிக்கா ☑

B) ஆப்பிரிக்கா

C) ஆஸ்திரேலியா

D) ஐரோப்பா



✓ பிரேசிலின் தேசிய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் (Inpe) சமீபத்திய தகவலின்படி, பிரேசிலில் உள்ள அமேசான் மழைக்காடுகளில் 2019 ஜனவரி முதல் 74,155 காட்டுத்தீ சம்பவங்கள் நடந்துள்ளன. 2018ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 84% அதிகமாகும். அமேசான் மழைக்காடுகள் உலகின்

மிகப்பெரிய வெப்பமண்டல காடுகளாகும். இது பிரேசில், பொலிவியா, கொலம்பியா, ஈக்குவடோர், பிரெஞ்சு கயானா, கயானா, பெரு, சுரினாம் மற்றும் வெனிசுலா முதலிய 9 நாடுகளில் ஐந்து மில்லியன் சதுர கி.மீட்டருக்கும் அதிகமான பரப்பளவைக் கொண்டுள்ளது.

✓ இது ஒரு மகத்தான கரியமிலவாயு ($CO_2$) உறிஞ்சியாக செயல்படுகிறது. மேலும் புவி வெப்பமடைதலின் வேகத்தை குறைப்பதில் இது முக்கியப் பங்காற்றுகிறது. நாம் சுவாசிக்கும் காற்றில் 20 சதவீத்தை இது உருவாக்குவதால் இது மிகவும் குறிப்பிடத்தக்க காலநிலை நிலைப்படுத்தியாகும். மேலும், இது, புவியில் பாயும் நன்னீரில் 20 சதவீதத்தை தன்னகத்தே கொண்டுள்ளது.

## 10.சப்கா விஸ்வாஸ் திட்டம், எந்த நோக்கத்துடன் தொடர்புடையது?




A) நிலுவையில் உள்ள SC / ST வழக்குகளுக்கு தீர்வுகாண்பதற்கு

B) நிலுவையில் உள்ள PIL வழக்குகளுக்கு தீர்வுகாண்பதற்கு

**C) நிலுவையில் உள்ள மறைமுக வரி பிரச்சனைகளுக்கு தீர்வுகாண்பதற்கு ☑**

D) நிலுவையில் உள்ள பெண்கள் தொடர்பான வழக்குகளுக்கு தீர்வுகாண்பதற்கு

✓ பண்டங்கள் & சேவைகள் வரி அமல்படுத்துவதற்கு முந்தைய காலத்தில் நிலுவையில் இருந்த மரபு சேவை வரி மற்றும் மத்திய கலால் வழக்குகளை குறைப்பதற்காக இந்திய அரசு அண்மையில் சப்கா விஸ்வாஸ் – மரபுசார் பிரச்சனை தீர்வுத்திட்டத்தை அறிவித்துள்ளது. 2019 செப்டம்பர்.1 முதல் செயல்படு –த்தப்படவுள்ள இந்தத் திட்டம், 2019 டிசம்பர் 31 வரை தொடரும். பிரச்சனைக்கு தீர்வு மற்றும் பொது மன்னிப்பு ஆகிய இரண்டும் இந்தத் திட்டத்தின் இரண்டு முக்கிய கூறுகளாகும்.

✓ இந்தத் திட்டத்தின் மிகவும் கவர்ச்சிகரமான அம்சம் என்னவென்றால், இது அனைத்து வகையான வரி நிலுவை வழக்குகளுக்கும் கணிசமான நிவாரணம் அளிக்கிறது. அத்துடன் வட்டி மற்றும் அபராதம் ஆகியவற்றை முழுமையாக தள்ளுபடி செய்கிறது. எந்தவொரு தீர்ப்பாயத்திலும் தீர்ப்பளிக்கப்பட்ட அல்லது மேல்முறையீட்டில் நிலுவையில் உள்ள அனைத்து வழக்குகளுக்கும் இந்தத் திட்டம் ₹.50 இலட்சம் அல்லது அதற்கும் குறைவாக இருந்தால் வரி செலுத்துவதிலிருந்து 70% சலுகையையும், ₹.50 இலட்சத்துக்கு மேலிருந்தால் 50% சலுகையையும் வழங்குகிறது. வரி நிர்வாகத்துடன் நிலுவையில் உள்ள சர்ச்சைகளில் சிறுவரி செலுத்துவோரை விடுவிப்பதற்காக இத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

# நடப்பு நிகழ்வுகள்

**1. நடப்பாண்டு துரந்த் கோப்பை போட்டியை வென்ற கால்பந்தணி எது?**

**A) கோகுலம் கேரளா ☑**

B) மோகுன் பாகன்

C) கிழக்கு வங்கம்

D) FC கோவா

✓ ஆக.25 அன்று கொல்கத்தாவில் உள்ள உப்பு ஏரி மைதானத்தில் நடந்த நடப்பாண்டு 129ஆவது துரந்த் கோப்பைக்கான போட்டியில் மோகுன் பாகன் அணியை 2–1 என்ற கணக்கில் தோற்கடித்து கோகுலம் கேரள அணி கோப்பையை வென்றது. இந்த வெற்றியின் மூலம், 22 ஆண்டுகளில் கேரள மாநிலத்தில் இருந்து இப்போட்டியை வென்ற முதல் கால்பந்தணியாக கோகுலம் கேரளா அணி மாறியுள்ளது.

**2. 45ஆவது G7 உச்சிமாநாட்டின் கருப்பொருள் என்ன?**

A) Fight for Peace and Equality

B) Fighting Injustice

**C) Fighting Inequality ☑**

D) Fighting for Migrants

✓ G7 உச்சிமாநாட்டின் 45ஆவது பதிப்பு, பிரான்சின் பியாரிட்ஸில், ஆக.24–26 வரை "Fighting Inequality" என்ற கருப்பொருளுடன் நடந்தது. இந்த வருடாந்திர கூட்டத்தில் பிரான்சு, இத்தாலி, கனடா, அமெரிக்கா, ஜப்பான், ஜெர்மனி மற்றும் ஐக்கிய பேரரசு ஆகிய ஏழு உறுப்பு நாடுகளின் தலைவர்களும் கலந்து கொண்டனர். அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், பிரிட்டிஷ் பிரதமர் போரிஸ் ஜான்சன் மற்றும் ஜெர்மன் அதிபர் ஏஞ்சலா மெர்கல் ஆகியோர் பியாரிட்ஸில் நடந்த G7 கூட்டத்தின்போது பல்வேறு சிக்கல்கள் குறித்து விவாதித்தனர். ஒரு பங்காண்மை நாடாக G7 கூட்டத்திற்கு அழைக்கப்பட்ட இந்திய நாட்டின் சார்பாக பிரதமர் நரேந்திர மோடியும் இதில் கலந்துகொண்டார்.

**3. கோமோலிகா பரி, எந்த விளையாட்டுடன் தொடர்புடையவர்?**

A) கூடைப்பந்து

B) கால்பந்து

C) பூப்பந்து

**D) வில்வித்தை ☑**



✓ ஆக.25 அன்று, ஸ்பெயினின் மாட்ரிட்டில் நடைபெற்ற உலக வில்வித்தை இளைஞர் சாம்பியன்ஷிப்பில் ஜார்கண்டைச் சேர்ந்த கோமோலிகா பரி மீண்டும் கேடட் உலக சாம்பியனானார். இறுதிப்போட்டியில்,

ஜப்பானின் சோனோதா வகாவை 7–3 என்ற கணக்கில் தோற்கடித்து சாம்பியன்ஷிப்பின் இறுதி நாளில் இந்தியாவின் இரண்டாவது தங்கத்தை அவர் வென்றார். முன்னதாக, கூட்டு ஜூனியர் கலப்பு ஜோடி போட்டியில் இந்தியா ஒரு தங்கப்பதக்கத்தையும், கூட்டு ஜூனியர் ஆடவர் அணி போட்டியில் வெண்கலப்பதக்கத்தையும் வென்றிருந்தது. இதன் விளைவாக, இந்தியா இரண்டு தங்கம் மற்றும் ஒரு வெண்கலத்துடன் தனது போட்டியை நிறைவுசெய்தது.

✓ 17 வயதான கோமோலிகா, 2009இல் பட்டத்தை வென்ற தீபிகா குமாரிக்குப் பிறகு இந்தியாவின் இரண்டாவது 'ரீகர்வ் கேடட்' உலக சாம்பியனாக (18 வயதுக்குட்பட்டவர்) உள்ளார். இது, தீபிகா (கேடட் மற்றும் ஜூனியர்) மற்றும் பால்டன் ஹன்ஸ்தாவுக்குப் (2006ஆம் ஆண்டில் கூட்டு ஜூனியர்) பிறகு இந்தியா பெறும் நான்காவது தனிநபர் உலக சாம்பியன்ஷிப் பட்டமாகும்.

**4. உலக பூப்பந்து சாம்பியன்ஷிப்பில் தங்கம் வென்ற முதல் இந்திய வீரர் / வீராங்கனை யார்?**

A) பருப்பள்ளி காஷ்யப்

B) சாய்னா நேவால்

C) ஸ்ரீகாந்த் கிடாம்பி

**D)** P V சிந்து ☑




✓ சுவிச்சர்லாந்தின் பேசெலில் நடந்த உலக பூப்பந்து சாம்பியன்ஷிப் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற முதல் இந்தியர் என்ற பெருமையை P V சிந்து பெற்றுள்ளார். இறுதிப்போட்டியில், ஜப்பானின் நொசோமி ஒகுஹாராவை 21–7, 21–7 என்ற செட் கணக்கில் தோற்கடித்தார். சிந்துவுக்கு இது மூன்றாவது உலக சாம்பியன்ஷிப் இறுதிப்போட்டியாகும். 5 பதக்கங்களைப்பெற்ற 2ஆவது பெண் பூப்பந்து வீராங்கனையும், மூன்று வண்ணங்களிலும் பதக்கங்களைப் பெற்ற மூன்றாவது வீராங்கனையும் ஆவார் சிந்து.

**5. 50 கோடிக்கு மேலான வங்கி நிதி மோசடிகளை ஆய்வு செய்யும் மத்திய ஊழல் தடுப்பு ஆணையக் குழுவின் தலைவர் யார்?**

A) T K பதக் சுரேஷ்

B) N படேல்

**C)** T M பாசின் ☑

D) மதுசூதன் பிரசாத்



✓ ரூ.50 கோடிக்கு மேலான வங்கி நிதி மோசடிகளை விசாரிக்க மத்திய ஊழல் தடுப்பு ஆணையம் (CVC) புதிய குழுவொன்றை அமைத்துள்ளது. "வங்கி நிதி மோசடிகள் ஆலோசனை அமைப்பு" என்று பெயரிடப்பட்டுள்ள இக்குழுவுக்கு CVC முன்னாள் ஆணையர் T M பாசின் தலைவராக நியமிக்கப்பட்டு உள்ளார். இதற்கு முன்பு வங்கி, வர்த்தக, நிதி நிறுவனங்களின் மோசடி தொடர்பான ஆலோசனை அமைப்பு CVCஇல் இருந்தது. இக்குழுவுக்கு மாற்றாக புதிய குழு அமைக்கப்பட்டுள்ளது. இந்திய ரிசர்வ் வங்கியுடன் நடத்தப்பட்ட ஆலோசனைக்குப் பிறகு இது தொடர்பாக முடிவெடுக்கப்பட்டது.

- ✓ இந்தப் புதிய குழுவில் நான்கு பேர் இடம்பெற்றுள்ளனர். பொதுத்துறை வங்கிகளின் பொது மேலாளர் நிலையிலான அதிகாரிகள் மீதான குற்றச்சாட்டுகளை இந்தக் குழு விசாரிக்கும். ₹.50 கோடிக்கு மேல் உள்ள அனைத்துப் பெரிய மோசடி வழக்குகளையும் வங்கிகள் இந்தக்குழுவுக்கு பரிந்துரைக்கும், அதன் பரிந்துரை கிடைத்ததும், இதுபோன்ற வழக்குகளில் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும். தலைவர் மற்றும் உறுப்பினர்களின் பதவிக்காலம் ஆக.21 தொடங்கி இரண்டாண்டு காலத்திற்கு இருக்கும்.

**6.டோக்டோ தீவுகள், எந்த நாடுகளுக்கு இடையிலான சர்ச்சையின் முதுகெலும்பாக உள்ளது?**




**A) தென்கொரியா & ஜப்பான் ☑**

B) இந்தியா & இலங்கை

C) இந்தியா & வங்கதேசம்

D) வட கொரியா & தென் கொரியா

- ✓ ஜப்பானின் எதிர்பாராத தாக்குதலை சமாளிப்பதற்காக, தென்கொரியா தனது கீழைக்கடற்கரையில் உள்ள சர்ச்சைக்குரிய தீவுகளை பாதுகாக்கும் நோக்கத்தோடு இரண்டு நாள் பயிற்சியை நடத்தியது. டோக்கியோவுடனான இராணுவ உளவுத்துறை பகிர்வு ஒப்பந்தத்தை சியோல் இரத்து செய்த சில நாட்களுக்குள்ளேயே ஆண்டுதோறும் நடத்தப்படும் இந்தப் பயிற்சிகள் நடத்தப்பட்டுள்ளன. இந்தப் பயிற்சியில் போர்க்கப்பல்கள் மற்றும் விமானங்கள் ஈடுபடுத்தப்பட்டன.
- ✓ "கிழக்குக் கடல்பிரதேச பாதுகாப்புப் பயிற்சி" என்று மறுபெயரிடப்பட்ட இந்தப் பயிற்சி, டோக்டோ தீவுகள் மற்றும் ஜப்பான் கடலைச்சுற்றியுள்ள பகுதிகளைப் பாதுகாப்பதற்கான இராணுவத்தின் தீர்மானத்தை உறுதிப்படுத்துகிறது. அண்டைநாடான ஜப்பானுடன் பதட்டங்கள் நீடித்து வருவதால் இந்தப் பயிற்சிகள் தாமதமாக நடந்துள்ளன.
- ✓ கொரிய தீபகற்பத்தில் டோக்கியோவின் 35 ஆண்டுகால காலனித்துவ ஆட்சி முடிவடைந்த 1945 முதல் ஜப்பான் கடலில் உள்ள பாறைத் தீவுகளை சியோல் கட்டுப்படுத்திவருகிறது. டோக்கியோ, தீவுகளுக்கு உரிமை கோருவதோடு அல்லாமல் தென்கொரியா அவற்றை சட்டவிரோதமாக ஆக்கிரமித்ததாக குற்றம் சாட்டியும் வருகிறது. இரு நாடுகளும் சந்தைப் பொருளாதாரத்தை பின்பற்றும் நாடுகளாகும், ஜனநாயக நாடுகளாகும் மற்றும் அமெரிக்காவின் நட்பு நாடுகளாகும். இவ்விரண்டும் அணுவாயுத பலம்வாய்ந்த வட கொரியாவால் அச்சுறுத்தப்படுகின்றன.

**7.எந்த IITஐச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள், ஆய்வகத்தில் வளர்க்கப்பட்ட இறைச்சியை உருவாக்கியுள்ளனர்?**



A) ஐஐடி பம்பாய்

**B) ஐஐடி கௌகாத்தி ☑**

C) ஐஐடி தில்லி

D) ஐஐடி மெட்ராஸ்

- ✓ IIT கௌகாத்தியைச்சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் இறைச்சி உற்பத்திக்கான ஒரு புதிய மற்றும் முற்றிலும் இயற்கையான ஒரு நுட்பத்தை உருவாக்கியுள்ளனர். ஆய்வகத்தில் வளர்க்கப்பட்ட இந்த இறைச்சி, சத்தான மற்றும் கொடுமையற்ற உணவை நோக்கிய ஒரு படியாக இருக்கும். இந்த இறைச்சியின் சுவையானது அசல் இறைச்சியின் சுவைக்கு ஈடாக இருக்கும். மேலும், வாடிக்கையாளர்களின் தேவைக்கேற்ப மேம்படுத்தப்பட்ட ஊட்டச்சத்து மதிப்புகளுடன் இது உற்பத்தி செய்யப்படும்.
- ✓ இந்த இறைச்சி உற்பத்தியை மாறுபட்ட வடிவங்கள் மற்றும் அளவுகளில் 3D உயிரி அச்சுப்பொறியைப் பயன்படுத்தி, உண்ணக்கூடிய கூறுகளுடன் அச்சிட்டு, எதிர்கால பயன்பாட்டுக்காக பாதுகாக்கவும் முடியும். மக்கள்தொகை விரைவாக அதிகரித்து வருவதால் இறைச்சித்தொழில் உணவுத்தேவைகளை பூர்த்திசெய்வதில் பேரழுத்தத்தை எதிர்கொண்டுள்ளதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.
- ✓ ஐ.நா. மக்கள்தொகை கணிப்புகளை மேற்கோள்காட்டி Dr. பீமன் B மண்டல், "2050க்குள் தற்போதுள்ள இறைச்சித் தொழிலால் உலகளாவிய தேவைகளைப் பூர்த்திசெய்ய முடியாது" என்று கூறியுள்ளார். ஒரு கிலோ கோழி இறைச்சியை உற்பத்தி செய்ய சுமார் 4000 லிட்டர் நீரும், ஒரு கிலோ ஆட்டிறைச்சியை உற்பத்தி செய்ய சுமார் 8000 லிட்டருக்கும் அதிகமான நீரும் தேவைப்படுகிறது. எனவே, ஆய்வகத்தில் வளர்க்கப்படும் இறைச்சியானது இந்திய மற்றும் அயல்நாட்டு சந்தைகளில் மகத்தான மதிப்பைக் கொண்டிருக்கும்.

### 8.வெப்பமண்டல வன ஆராய்ச்சி நிறுவனத்தின் (TFRI) தலைமையகம் எங்கு அமைந்துள்ளது?

A) டேராடூன்

B) கான்பூர்

C) தில்லி

**D)** ஜபல்பூர் ☑

- ✓ ஜபல்பூரில் உள்ள வெப்பமண்டல வன ஆராய்ச்சி நிறுவனமானது (TFRI) பூச்சிகள் மற்றும் தீம்பூச்சிகள் மற்றும் அவற்றின் மேலாண்மை பற்றிய விவரங்களைக்கொண்ட திறன்பேசி செயலியை அறிமுகம் செய்துள்ளது. "INSECT PESTS" எனப் பெயரிடப்பட்டுள்ள அந்தச் செயலி, பல்வேறு வனப்பகுதிகளில் காணப்படும் பூச்சிகள் மற்றும் தீம்பூச்சிகள் பற்றிய தகவல்களையும், மத்திய இந்தியாவில் அமைந்துள்ள வெப்பமண்டல காடுகளில் அவற்றின் மேலாண்மை பற்றிய விவரங்களையும் தரும் ஒரு கருவியாகும்.
- ✓ இந்தச் செயலியில், மூன்று வகைகளில் தகவல்கள் உள்ளன – வனப்பண்ணைகள், தோட்டங்கள், இயற்கைக்காடுகளில் உள்ள பூச்சிகள் மற்றும் தீம்பூச்சிகள் (pests) மற்றும் அவற்றின் மேலாண்மை. பூச்சிகளை இனங்காணுதல், அவைவாழும் தாவரங்கள், தொற்றுகாலம், சேதத்தின் தன்மை, அவற்றின் சுருக்கமான வாழ்க்கை வரலாறு மற்றும் அவற்றைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு பயன்பாடுகள் இந்தச் செயலியில் உள்ளன. சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின் இந்திய வன ஆராய்ச்சி மற்றும் கல்விக்கழகத்தின்கீழ் TFRI செயல்படுகிறது.

**9."கல்வி தொலைக்காட்சி" என்ற பிரத்யேக கல்விக்கான தொலைக்காட்சி அலைவரிசையை தொடங்கியுள்ள மாநில அரசு எது?**

**A) தமிழ்நாடு ☑**

B) கர்நாடகா

C) கேரளா

D) ஆந்திரப்பிரதேசம்

- ✓ ஒன்றாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு பயனளிக்கும் விதமாக தமிழ்நாடு அரசு அண்மையில் தனது பிரத்யேக கல்வி தொலைக்காட்சி அலைவரிசையான "கல்வி தொலைக்காட்சி"யை அறிமுகம் செய்தது. வேலைவாய்ப்புகள் மற்றும் தொடர்புடைய நிகழ்ச்சிகள் தவிர பள்ளிக் குழந்தைகளை இலக்காகக் கொண்ட நிகழ்ச்சிகள் இதில் ஒளிபரப்பப்படும். நாள்தோறும் காலை 6 மணி முதல் இரவு 9.30 மணிவரை நிகழ்ச்சிகள் ஒளிபரப்பு செய்யப்படும்.
- ✓ வாரியத் தேர்வுக்கான தயாரிப்பு, இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு செய்திகள் மற்றும் வாய்ப்புகள் மற்றும் தொழில் – வழிகாட்டல் தகவல்கள் ஆகியவற்றின் அடிப்படையில் நிகழ்ச்சிகள் இருக்கும். இதற்கான நிகழ்ச்சிகள் அனைத்தும் 25 ஆசிரியர்கள் கொண்ட ஒரு குழுவால் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும், நிகழ்ச்சிகளின் இடையே ஆசிரியர்கள் / பாட வல்லுநர்களின் சிறப்புரைகளும் இடம்பெறும்.
- ✓ தமிழ்நாடு மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனமானது (TNSCERT) இந்தத் தொலைக்காட்சிக்கான நிகழ்சிகளுக்கு பெரும்பங்களித்துள்ளது. TNSCERT, ஏற்கனவே 2.5 இலட்சம் சந்தாதாரர்களையும் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட காணொளிகளையும் கொண்ட ஒரு YouTube அலை வரிசையை தன்னகத்தே கொண்டுள்ளது.

**10.எம்மாநிலத்தில், ஆண்டுதோறும் நடைபெறும் புகழ்பெற்ற மதுரை மீனாட்சியம்மன் கோவிலின் ஆவணிமூலத் திருவிழா தொடங்கியுள்ளது?**

**A) தமிழ்நாடு ☑**

B) கேரளா

C) கர்நாடகா

D) ஆந்திரப்பிரதேசம்



- ✓ புகழ்பெற்ற மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் ஆண்டுதோறும் 10 நாள் நடைபெறும் ஆவணிமூலத் திருவிழாவானது ஆகஸ்ட்.26 அன்று கோவில் வளாகத்தில் முறையான கொடியேற்ற விழாவுடன் தொடங்கியது. 'சொக்கநாதர் முடிசூட்டு விழா' செப்டம்பர்.7 அன்று நடைபெறும். அதன்பிறகு வரும் ஆறு மாதங்களுக்கு சொக்கநாதர் மதுரையை ஆட்சிசெய்வார்.
- ✓ சொக்கநாதர் மற்றும் மீனாட்சியம்மனின் வாழ்வில் நடந்த பல்வேறு திருவிளையாடல்கள் லீலைகளாக நடத்திக்காட்டப்படுவது இத்திருவிழாவின் முக்கிய அம்சங்களுள் ஒன்று. ஆண்டுதோறும் நடைபெறும்

இத்திருவிழாவின்போது நடத்தப்படும் ஒரு முக்கியமான திருவிளையாடலில், சொக்கநாத இறைவன் 'வந்தி' என்ற ஓர் ஏழை மூதாட்டிக்கு உதவும்பொருட்டு ஒரு வேலையாளாக வேடமணிந்து வருவார்.

✓ புகழ்பெற்ற பொற்றாமரைக்குளம் மற்றும் ஆயிரங்கால் மண்டபம் உள்ளிட்ட கோவிலின் வளாகத்தில் இசை மற்றும் ஆடல் நிகழ்ச்சிகள் மற்றும் ஊர்வலங்கள் நடைபெறும். அண்மையில் பொற்றாமரைக் குளம் முழுமையாக சுத்தம் செய்யப்பட்டு, குளத்தின் அடியில் இயற்கையாக அமைந்துள்ள நீரூற்றுகள் சூழலுக்குகந்த புவி தரைவிரிப்பு (Geo–Carpeting) தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி புதுப்பிக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

✓ 'தமிழ்த்தென்றல்' திரு.வி.கலியாணசுந்தரனாரின் 136ஆவது பிறந்தநாள் (26–08–1883).

✓ தமிழ்நாட்டிலேயே முதன்முறையாக சென்னையில் மின்கலப் பேருந்துசேவை தொடங்கப்பட்டுள்ளது. அரசுப்போக்குவரத்துக் கழகத்தில் பேருந்துகளை இயக்க ஆகும் செலவு மற்றும் காற்று மாசுபாடு காரணமாக, மின்கலப்பேருந்துகளை இயக்க தமிழ்நாடு அரசு முடிவெடுத்து அதனை செயல்படுத்தி உள்ளது. அசோக் லேலண்ட் வாகன உற்பத்தி தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்ட இந்தப் பேருந்தில் 54 பேர் பயணம் செய்யலாம்.

✓ தென் மண்டல இந்திய தர நிர்ணய ஆணையத்தின், புதிய துணை தலைமை இயக்குநராகவும், G–நிலை அறிவியலாளராகவும் கலைவாணன் ஆக.26 அன்று பொறுப்பேற்றார். தமிழ்நாடு, புதுச்சேரி, கேரளா, கர்நாடகா, ஆந்திரா, தெலுங்கானா ஆகிய மாநிலங்களும், அந்தமான் & நிக்கோபார் தீவுகள், மற்றும் இலட்சத்தீவுகள் ஆகிய யூனியன் பிரதேசங்களும் தென் மண்டல அலுவலகத்தின் கீழ் வரும்.

✓ மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகமும், மெட்ராஸ் IITஉம் இணைந்து நாட்டிலேயே தனித்துவமிக்க தேசிய புற்றுநோய் திசுக்கள் உயிரி வங்கியினை மெட்ராஸ் IITஇல் உருவாக்கியுள்ளன.

---

# நடப்பு நிகழ்வுகள்

**1. UNCCD உறுப்பினர்களின் மாநாடு (COP 14) நடைபெறவுள்ள நாடு எது?**

**A) இந்தியா ☑**

B) இஸ்ரேல்

C) நியூசிலாந்து

D) சீனா

✓ புது தில்லியின் நொய்டா பெருநகர பகுதியில் உள்ள இந்திய சந்தை மற்றும் கண்காட்சியில் வரும் செப்டம்பர் 2–13 வரை பாலைவனமயமாக்கலுக்கு எதிரான ஐ.நா அவை (UNCCD) உறுப்பினர்களின் மாநாட்டை (COP 14) இந்தியா நடத்துகிறது. இந்த நிகழ்வில், இருநூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த சுமார் 100 நாடுகளைச்சேர்ந்த அமைச்சர்கள் உட்பட மூவாயிரத்துக்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்கவுள்ளனர். பாலைவனமயமாக்கல் மற்றும் நிலச்சீரழிவு ஆகியவற்றில் இம்மாநாடு தனது கவனத்தை செலுத்தும்.

**2. SU.RE (Sustainable Resolution) திட்டம், எந்தத் துறையுடன் தொடர்புடையது?**

**A) ஆடை வடிவமைப்பு தொழில் ☑**

B) திரைப்பட தொழில்

C) சணல் தொழில்

D) பருத்தி தொழில்



✓ SU.RE (Sustainable Resolution) திட்டம் என்பது ஐக்கிய நாடுகள் அவையின் CMAI (இந்திய ஆடை உற்பத்தியாளர்கள் சங்கம்) மற்றும் IMG ரிலையன்ஸ் (பன்னாட்டு மேலாண்மைக்குழு) ஆகியவற்றின் கூட்டுத்திட்டமாகும். மும்பையில் நடந்த லக்மே குளிர்காலத்திருவிழா 2019இன்போது இதனை மத்திய ஜவுளித்துறை அமைச்சர் ஸ்மிருதி ஜூபின் இராணி தொடங்கிவைத்தார்.

✓ தூய்மையான சூழலுக்கு பங்களிக்கும் நீடித்த ஆடை வடிவமைப்பை நோக்கி செல்வதே இதன் நோக்கமாகும். இது மகாத்மா காந்தியின் சிந்தனையை பிரதிபலிக்கிறது. SU.RE திட்டம், 16 முன்னணி சில்லறை ஆடை வடிவமைப்பு பிராண்டுகளை உள்ளடக்கியுள்ளது. பியூச்சர் குரூப், ஷாப்பர்ஸ் ஸ்டாப், ஆதித்யா பிர்லா ரீடைல், அரவிந்த் பிராண்ட்ஸ், லைஃப்ஸ்டைல், மேக்ஸ், ரேமண்ட், ஹவுஸ் ஆப் அனிதா டோங்ரே, வெஸ்டைட், ஸ்பைக்கர், லெவிஸ், பெஸ்ட்செல்லர்ஸ் மற்றும் டிரெண்ட்ஸ் போன்ற சிறந்த ஆடை வடிவமைப்பு மற்றும் சில்லறை வணிக பிராண்டுகள் இத்திட்டத்தில் இணைந்துள்ளன.

**3.எந்த நகரத்தில், பறவைகள் சூழல் நச்சுத்தன்மைக்கான தேசிய மையம் அமைக்கப்பட்டுள்ளது?**

A) சென்னை

B) சேலம்

**C) கோயம்புத்தூர் ☑**

D) மதுரை



✓ பூச்சிக்கொல்லிகள், கனமான உலோகங்கள், கைட்ரோ கார்பன்கள், சாயக்கழிவுகள் ஆகியவற்றால் பறவைகளுக்கு ஏற்படும் அபாயமான தாக்கங்கள் குறித்து ஆய்வுசெய்ய தமிழ்நாட்டின் கோயம்புத்தூரில் உள்ள சலீம் அலி பறவையியல் மற்றும் இயற்கை அறிவியல் மையத்தில் (SACON) பறவைகள் சூழல் நச்சுத்தன்மைக்கான தேசிய மையத்தை மத்திய சுற்றுச்சூழல், வனம் & காலநிலை மாற்றத்துறை அமைச்சர் பிரகாஷ் ஜவடேகர் திறந்துவைத்தார்.

✓ பறவைகளின் தனித்தனி இனங்கள் வேதிக்கழிவுகளால் பாதிக்கப்படுவது குறித்து, தேவைப்பட்டால் இவை மக்களோடும், சமூகத்தோடும் கொண்டுள்ள தொடர்பு குறித்து இந்த மையம் ஆய்வுசெய்யும். இந்த மையத்துக்கு மத்திய அமைச்சகம் ரூ.4 கோடி ஒதுக்கியுள்ளது. இம்மையத்தில், High Performance Liquid Chromatograph (HPLC), Atomic Absorption Spectrometer (AAC) மற்றும் Inductively Coupled Plasma Mass Spectrometer (ICP – MS) போன்ற நவீன கருவிகள் இடம்பெற்றுள்ளன.

**4. பொறியாளர்கள் நிறுவனத்தின் (இந்தியா) 'நடப்பாண்டிற்கான சிறந்த பொறியாளர் விருது'க்கு தேர்வு செய்யப்பட்டுள்ளவர் யார்?**

A) P S ஜூனேஜா

**B) பிரபாகர் சிங் ☑**

C) துளசி வர்மா

D) ஜிதேந்திர சர்மா



✓ மத்திய பொதுப்பணித் துறையின் தலைமை இயக்குநர் பிரபாகர் சிங் அவர்கள் பொறியியல் மற்றும் தொழில்நுட்பம் துறையில் அவரது அளப்பரிய சேவைக்காக பொறியாளர்கள் நிறுவனத்தின் (இந்தியா) 'நடப்பாண்டிற்கான சிறந்த பொறியாளர் விருது'க்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார். வரும் செப்.15 அன்று புது தில்லியில் நடைபெறவுள்ள 'பொறியாளர்கள் நாள்' நிகழ்வில் அவருக்கு இந்த விருது வழங்கப்படும்.

✓ ஒரு சிறந்த தொழில்நுட்ப வல்லுநராக நாட்டிற்கு அவர் செய்த மகத்தான பங்களிப்புகளும் அர்ப்பணிப்பு சேவையும் மத்திய அரசின் முன்னணி பொறியியல் அமைப்பான மத்திய பொதுப்பணித் துறையை அடுத்தக்கட்டத்துக்கு கொண்டுசெல்வதில் முக்கிய பங்குவகித்துள்ளன.


**5. எந்த IITஐச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள், விலாங்கு மீனின் தோல் கழிவிலிருந்து தசை நார்ப் புரதத்தை (Collagen) உருவாக்கியுள்ளனர்?**

A) ஐஐடி பம்பாய்

**B) ஐஐடி ஹைதராபாத் ☑**

C) ஐஐடி தில்லி

D) ஐஐடி மெட்ராஸ்



✓ ஹைதராபாத் IITஐச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் அசிட்டிக் அமிலம், உப்பு மற்றும் பெப்சின் ஆகியவற்றால் பதப்படுத்துவதன் மூலம் விலாங்கு (eel) மீனின் தோல் கழிவிலிருந்து தசைநார்ப் புரதத்தை (Collagen) உருவாக்கியுள்ளனர். அதுபின்னர் ஆல்சினேட் நீரேறியகளியுடன் (hydrogel) சேர்க்கப்பட்டு 3D அச்சிடும் செயல்முறையைப் பயன்படுத்தி சாரக்கட்டுகளாக (Scaffolds) பெறப்படுகிறது.

✓ அத்தகைய தசைநார்ப்புரதத்தை பயன்படுத்தி கட்டமைக்கப்பட்ட திசு சாரக்கட்டுகள், முதல்நிலை உயிரணுக்களின் (Stemcell) வளர்ச்சியையும் பெருக்கத்தையும் அனுமதிக்கின்றன என்பதை அவர்கள் நிரூபித்துள்ளனர். ஆகையால், விலாங்கு மீனின் தோலிலிருந்து பெறப்பட்ட இத்தசைநார்ப் புரதமானது திசு பொறியியல் பயன்பாடுகளுக்கு ஒரு நம்பிக்கைக்குரிய உயிரி மூலப்பொருளாக உள்ளது.

✓ இந்த ஆராய்ச்சிக்கு மத்திய அரசின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப – அறிவியல் மற்றும் பொறியியல் ஆராய்ச்சி வாரியம், தேசிய முனைவர் பட்டத்துக்குப் பிந்தைய பெல்லோஷிப் திட்டத்தின் மூலம் நிதியுதவி செய்தது. தசைநார்ப்புரதம் (Collagen) என்பது மனிதர்கள் மற்றும் விலங்குகளின் மூட்டுகளில் காணப்படும் ஒரு புரதமாகும்.

**6.எந்த நகரத்தில், நான்காவது இணைய உலக (IoT) இந்திய மாநாடு 2019 நடைபெற்றது?**

**A) பெங்களூரு ☑**

B) போபால்

C) அமராவதி

D) ராய்ப்பூர்




✓ நான்காவது இணைய உலக (IoT) இந்திய மாநாடு 2019 ஆனது பெங்களூருவில் நடைபெற்றது. "Mainstreaming the Internet of Things" என்பது இந்த மாநாட்டுக்கான கருப்பொருளாகும். இது, டிஜிட்டல் தொழில்நுட்பம் குறித்த இந்தியாவின் மிகப்பெரிய சங்கமமாகும். இரண்டு நாட்கள் நடந்த இம்மாநாடு எரிசக்தி, நலவாழ்வு, பாதுகாப்பு, தரநிலைகள் மற்றும் ஒழுங்குமுறை, சில்லறை, டிஜிட்டல் தொடர்பு, திறன்கள் மற்றும் மேம்பாடு, வேளாண்மை, உற்பத்தி மற்றும் சீர்மிகு நகரங்கள் உள்ளிட்ட பத்துத் தடங்களில் தனது கவனத்தை செலுத்தியது.

**7.அண்மையில் காலமான இந்தியாவின் முதல் பெண் DGP காஞ்சன் சவுத்ரி பட்டாச்சார்யா, எந்த மாநிலத்தைச் சேர்ந்தவராவார்?**



**A) பஞ்சாப் ☑**

B) ஹரியானா

C) உத்தரபிரதேசம்

D) மத்தியபிரதேசம்

✓ இந்தியாவின் முதல் பெண் காவல்துறை தலைமை இயக்குநரான காஞ்சன் சவுத்ரி பட்டாச்சார்யா, ஆகஸ்ட்.26 அன்று மும்பையில் காலமானார். பஞ்சாப் மாநிலம் அமிர்தசரசைச் சேர்ந்த இவர், கடந்த 2004இல் உத்தரகாண்ட் காவல்துறை தலைமை இயக்குநராக நியமிக்கப்பட்டார். இதன்மூலம் நாட்டின் முதல் பெண் காவல்துறை தலைமை இயக்குநர் என்ற பெருமையை காஞ்சன் சவுத்ரி பெற்றார். பட்டாச்சார்யா நாட்டின் இரண்டாவது பெண் IPS அதிகாரியுமாவார், முதலாமவர் கிரண் பேடி.

✓ கடந்த 2007இல் ஓய்வுபெற்ற இவர், ஆம்ஆத்மி கட்சியில் இணைந்து சமூகப்பணியாற்றி வந்தார். கடந்த 2014ஆம் ஆண்டு மக்களவைத்தேர்தலின்போது, ஹரித்துவார் தொகுதியில் போட்டியிட்டார். ஆனால், அவர் தோல்வியடைந்தார்.

**8. 7ஆவது 'சமூக வானொலி மாநாடு' நடத்த திட்டமிடப்பட்டுள்ள நகரம் எது?**



A) டேராடூன்

B) கான்பூர்

**C) தில்லி ☑**

D) ஜபல்பூர்

✓ தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சகமானது ஆக.27–29 வரை தில்லியில் உள்ள Dr. B R அம்பேத்கர் பவனில் ஏழாவது 'சமூக வானொலி' மாநாட்டை நடத்தவுள்ளது. ஜல் சக்தி அபியான் போன்ற அரசின் பல்வேறு முக்கிய திட்டங்கள் மற்றும் பேரிடர் அபாயத்தைக் குறைப்பதற்கான முயற்சிகள் குறித்து இம்மாநாட்டில் கலந்துரையாடப்படும். இதுதவிர ஆராய்ச்சி, உற்பத்தி, ஒலிபரப்பு, சமூக ஊடகங்கள் மூலம் சமூக நலச்செய்திகளைப் பரப்புதல் மற்றும் சமூக வானொலி நிலையங்களுக்கான உள்ளடக்க மேலாண்மை குறித்தும் இதில் விவாதிக்கப்படும். நாடு முழுவதும் செயல்பாட்டில் உள்ள அனைத்து சமூக வானொலி நிலையங்களும் இந்த மாநாட்டில் பங்கேற்கும்.

**9.பாங்காக்கில் நடக்கும் நடப்பாண்டு இந்திய – பசிபிக் பாதுகாப்புத் தலைவர்கள் மாநாட்டில் இந்திய நாட்டின் சார்பாக பங்கேற்றவர் யார்?**



A) ரிஷி குமார் சுக்லா

**B) பிரேந்தர் சிங் தனோவா ☑**

C) பிபின் ராவத்

D) சுனில் லம்பா

✓ தாய்லாந்தின் பாங்காக்கில் நடைபெறும் நடப்பாண்டு இந்திய–பசிபிக் பாதுகாப்புத் தலைவர்கள் (CHOD) மாநாட்டில் வான்படைத் தளபதி பிரேந்தர் சிங் தனோவா இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார். "Collaboration in a free and Open Indo – Pacific" என்பது இம்மாநாட்டின் கருப்பொருளாகும். பங்கேற்கும் நாடுகள் எதிர்கொள்ளும் பொதுவான சவால்கள் பற்றிய பார்வைகளை இம்மாநாடு வழங்குகிறது. இந்த மாநாட்டில் 33 நாடுகளின் பாதுகாப்புத் தலைவர்கள் பங்கேற்கின்றனர்.

**10.எதிர்ப்புகள் இருந்தபோதிலும் உலகின் முதலாவது மிதக்கும் அணுவுலையை ஆர்டிக்கில் அறிமுகம் செய்துள்ள நாடு எது?**

A) ஐக்கிய அமெரிக்க நாடுகள்

B) ஐக்கிய பேரரசு

**C) இரஷ்யா ☑**

D) சீனா



✓ சுற்றுச்சூழல் வல்லுநர்கள் அப்பகுதிக்கு கடுமையான அபாயங்கள் ஏற்படும் என எச்சரித்த போதிலும், அகாடெமிக் லோமோனோசோவ் (Akademik Lomonosov) என்னும் உலகின் முதலாவது மிதக்கும் அணுவுலையை இரஷ்யா ஆர்டிக்கில் அறிமுகப்படுத்தியது. இந்த அணுவுலையைத் தாங்கியுள்ள கப்பலானது இரஷ்யாவின் முர்மான்ஸ்க் என்ற துறைமுகத்திலிருந்து புறப்பட்டது. சுமார் 5,000 கி.மீ., தொலைவிலுள்ள சைபீரியாவுக்கு இந்தக் கப்பல் செல்லவுள்ளது. பருவநிலையைப்பொறுத்து சுமார் 4 முதல் 6 வார காலங்கள் வரை இந்த அணுவுலைக் கப்பலின் பயணம் அமையும்.

✓ இந்தக்கப்பல் 21,000 டன் எடைகொண்டது. 35 MW மின்சாரத்தை உற்பத்தி செய்யும் வகையில் இரு அணுவுலைகள் இதில் பொருத்தப்பட்டுள்ளன. 69 பேர் பயணிக்கும் இக்கப்பல் 3.5 – 4.5 கடல்மைல் வேகத்தில் பயணிக்கும். எவ்வாறாயினும், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் இந்தத் திட்டத்தால் ஏற்படப் போகும் ஆபத்துக்கள் குறித்து எச்சரித்துள்ளன.

✓ மேலும், இது "பனியின் மீதுள்ள செர்னோபில்" & "அணுசக்தி டைட்டானிக்" என்று அழைக்கப்படுகிறது. இருப்பினும், இத்திட்டம் தொலைதூர பிராந்தியத்திற்கு தூய்மையான ஆற்றலை வழங்கும் என்றும், பழைமையான அணுசக்தி ஆலை மற்றும் நிலக்கரி மின்நிலையங்களுக்கு ஓய்வளிக்க அதிகாரிகளை அனுமதிக்கும் என்றும் இரஷ்யா கூறுகிறது.

# நடப்பு நிகழ்வுகள்

**1. ஷாஹீன் VIII என்பது பாகிஸ்தானுக்கும் எந்த நாட்டிற்கும் இடையிலான கூட்டு இராணுவப் பயிற்சியாகும்?**



**A) சீனா ☑**

B) இஸ்ரேல்

C) இலங்கை

D) மியான்மர்

✓ இலடாக் அருகே இந்திய எல்லைக்கு மிகநெருக்கமாக அமைந்துள்ள சீன நகரமான ஹோல்டனில் சீனா மற்றும் பாகிஸ்தான் விமானப்படைகளுக்கு இடையே 'ஷாஹீன் VIII' என்ற கூட்டு இராணுவப் பயிற்சியின் 8ஆவது பதிப்பு தொடங்கப்பட்டுள்ளது. பரஸ்பர கற்றல் மூலம் இருநாட்டு விமானப்படைகளின் பயிற்சித் தரத்தை மேம்படுத்துவதே இந்தப் பயிற்சியின் நோக்கமாகும். பாகிஸ்தான் – சீனாவின் இந்த வான்படைப் பயிற்சியை இந்திய விமானப்படை உன்னிப்பாகக் கவனித்து வருகிறது; இதில் இரு நாடுகளும் நவீன போர் விமானங்களை ஈடுபடுத்தியுள்ளன.

**2.இந்தியாவின் முதல் பெண் விமானத் தளபதி யார்?**



A) மிதாலி மதுமிதா

B) சீமா ராவ்

**C) ஷாலிஜா தாமி ☑**

D) புனிதா அரோரா

✓ இந்திய விமானப்படையின் 'Wing Commander' ஷாலிஜா தாமி, பறக்கும் பிரிவுக்கான விமானத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார். தாமி, இப்பொறுப்பில் நியமிக்கப்பட்ட முதல் பெண் அலுவலராவார். ஆசியாவின் மிகப்பெரிய வான்படையான உத்தரபிரதேசத்திலுள்ள ஹிண்டன் வான் படையிலுள்ள சேதக் (Chetak) உலங்குவானூர்தி பிரிவின் விமானத்தளபதியாக அவர் பொறுப்பேற்றுள்ளார்.

✓ சேதக் இரக உலங்குவானூர்தி மணிக்கு 220 கி.மீ வேகம் செல்லக்கூடியது. இந்த உலங்குவானூர்தி நிவாரணப்பொருட்கள் அளிப்பதற்கும், அவசர மருத்துவ உதவியளிக்கவும், தேடுதல் பணிக்கும், ஆய்வுப் பணிக்கும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதன் இரண்டாம் தளபதியாக தாமி நியமிக்கப்பட்டுள்ளார். அதாவது விமானத்தின் தலைமைத் தளபதிக்கு அடுத்தப்பதவியாக இப்பதவி கருதப்படுகிறது.

**3.இந்தியாவில் முன்னாள் ராணுவப் படைவீரர் வேலைவாய்ப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ள மின்னணு வணிக நிறுவனம் எது?**

amazon

A) மிந்த்ரா B) ஸ்னாப்டீல்

**C) அமேசான் ☑** D) பிளிப்கார்ட்

- ✓ மின்னணு வணிக நிறுவனமான அமேசான், முன்னாள் இராணுவ வீரர்களுக்கு நாடு முழுவதுமுள்ள அதன் மையங்களில் பணிவாய்ப்பு வழங்குவதற்காக முன்னாள் ராணுவப்படைவீரர் வேலைவாய்ப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தத்திட்டத்தை செயல்படுத்துவதற்காக மீள்குடியேற்றத்துக்கான தலைமை இயக்குநரின் அலுவலகம் மற்றும் இராணுவ நல பணிவாய்ப்பு அமைப்பு ஆகியவற்றுடன் அமேசான் இந்தியா நிறுவனம் கூட்டு சேர்ந்துள்ளது.

**4.இந்திய தேசிய டிஜிட்டல் நூலகத்தை தொடங்கியுள்ள மத்திய அமைச்சகம் எது?**

A) சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம்

B) திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவு அமைச்சகம்

C) மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகம்

**D) மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் ☑**

- ✓ ஒற்றைச்சாளர தேடுதல் வசதியுடன் கற்றல் வளங்களின் மெய்நிகர் களஞ்சியத்தின் கட்டமைப்பை உருவாக்குவதற்காக மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் அதன் தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தின் ஊடான தேசிய கல்வித் திட்டத்தின்கீழ், இந்திய தேசிய டிஜிட்டல் நூலகத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ✓ இன்றைய தேதியில், மூன்று கோடிக்கும் அதிகமான டிஜிட்டல் வளங்களை தேசிய டிஜிட்டல் நூலகம் கொண்டுள்ளது. 50 இலட்சத்துக்கும் மேற்பட்ட மாணாக்கர் இதில் தங்களை பதிவுசெய்துள்ளனர். தேசிய டிஜிட்டல் நூலகமானது 'UMANG' செயலியுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. மேலும், அதன் பயனர்கள் www.ndl.gov.in மூலமாகவோ அல்லது அலைபேசி செயலின் மூலமாகவோ தங்களை பதிவு செய்துகொள்ளலாம்.

**5.இந்திய பெட்ரோலியம் நிறுவனத்தின் தலைமையகம் எங்கு அமைந்துள்ளது?**

A) தில்லி

**B) டேராடூன் ☑**

C) மும்பை

D) கொல்கத்தா

- ✓ நெகிழிக்கழிவுகளை டீசலாக மாற்றக்கூடிய ஆலை ஒன்றை டேராடூனில் இந்திய பெட்ரோலிய நிறுவனம் அமைத்துள்ளது. இந்த ஆலையை அண்மையில் மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் Dr. ஹர்ஷ் வர்தன் திறந்துவைத்தார். இந்த ஆலை நெகிழியிலிருந்து விடுபடுவதற்கான ஒரு நல்ல முயற்சியாக இருப்பதோடு மட்டுமல்லாமல், பெட்ரோலிய பொருட்களுக்கு பிறநாடுகளை இந்தியா சார்ந்திருப்பதைக் குறைக்கும்.
- ✓ இந்த ஆலை பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்கும்; ஏனெனில் இது ஒரு டன் நெகிழிக் கழிவுகளில் இருந்து 800 லிட் டீசலை உற்பத்தி செய்யும்; இது அரசு சாரா நிறுவனங்களின் (NGOs) உதவியுடன் சேகரிக்கப்படும்.

**6. நடப்பாண்டு BWF பாரா பூப்பந்து உலக சாம்பியன்ஷிப்பில் தங்கம் வென்ற மானசி ஜோஷி, எந்த நகரத்தைச் சேர்ந்தவராவார்?**

A) ஜபல்பூர்

B) புனே

**C) இராஜ்கோட் ☑**

D) இராஞ்சி




✓ சுவிச்சர்லாந்தின் பேசெலில் நடந்த BWF பாரா பூப்பந்து உலக சாம்பியன்ஷிப் போட்டியில், பெண்கள் ஒற்றையர் பிரிவில், இராஜ்கோட்டைச் சேர்ந்த இந்திய பாரா – பூப்பந்து வீராங்கனை மானசி ஜோஷி தனது முதல் தங்கத்தை வென்றார். இறுதிப்போட்டியில், மும்முறை SL3 உலக சாம்பியனான பருல் பர்மரை 21–12, 21–7 என்ற புள்ளிகளில் அவர் தோற்கடித்தார்.


**7. 2019 அமெரிக்க தொழில்நுட்ப புத்தாக்க சவாலில் வெண்கலம் வென்ற இந்திய செயலி எது?**

**A) மைத்ரி (Maitri) ☑**

B) BHIM

C) IRCTC

D) விது



✓ US Technovation Challenge என்பது 100+ நாடுகளில் நடக்கும் சிறுமிகளுக்கான உலகின் மிகப்பெரிய தொழில்நுட்பம் மற்றும் தொழில்முனைவுப் போட்டியாகும். இதனை Salesforce.org, Google.org, அடோபி அறக்கட்டளை, உபெர், சாம்சங், BNY மெல்லன் மற்றும் UNESCO, அமைதிப் படைகள் மற்றும் ஐ.நா. பெண்கள் ஆதரிக்கின்றன. இந்தப் போட்டி, அண்மையில், சான் பிரான்சிஸ்கோவில் நடைபெற்றது. அதில், இந்தியாவைச் சேர்ந்த, 'மைத்ரி' என்னும் அலைபேசி செயலி, வெண்கலம் வென்றது.

✓ ஆதரவற்றோர் இல்லங்களில் வசிக்கும் குழந்தைகளை முதியோர் இல்லங்களில் வசிக்கும் முதியோருடன் இணையவழியில் இணைப்பதற்காக நொய்டாவைச் சேர்ந்த 'Tech Witches' என்னும் பெயருடைய பெண்கள் குழு இந்தச் செயலியை உருவாக்கியது.

✓ தனிமை மற்றும் மனவழுத்தத்தால் பாதிக்கப்பட்ட நபர்களையும், முதியோர்களின் அன்பு, அரவணைப்பு கிடைக்கப்பெறாதவர்களையும் ஒன்றிணைப்பதே இச்செயலியின் நோக்கமாகும். இந்தச்செயலி, கூகிள் பிளேஸ்டோரில் இலவசமாகக் கிடைக்கிறது. மேலும், முதியோர் இல்லங்கள் மற்றும் ஆதரவற்றோர் இல்லங்களுக்கு நன்கொடை அளிக்கவும் இந்தச் செயலி அனுமதிக்கிறது.

**8. 2019 UEFA அதிபர் விருதை வென்றுள்ள முன்னாள் கால்பந்து வீரர் யார்?**



A) ஜோகன் குருப்

B) பிரான்ஸ் பெக்கன்பவுர்

**C) எரிக் கான்டோனா (Eric Cantona) ☑**

D) டேவிட் பெக்காம்

✓ மான்செஸ்டர் யுனைடெட் அணியின் முன்னாள் முன்கள வீரரும், பிரான்ஸ் ஜாம்பவானுமான எரிக் கான்டோனாவுக்கு மொனாக்கோவில் நடப்பாண்டுக்கான UEFA அதிபர் விருது வழங்கப்பட்டது. தொழிற்முறை வாழ்க்கை மற்றும் தொண்டு நிறுவனங்களுக்கான அவரது அர்ப்பணிப்பு ஆகியவற்றை அங்கீகரிக்கும் பொருட்டு இவ்விருது வழங்கப்பட்டது. 1990களில் யுனைடெட் அணியில் பங்கேற்றதன் மூலம் ஐந்து ஆண்டுகளில் நான்கு பிரீமியர் லீக் பட்டங்களை கான்டோனா வென்றார். மேலும், ஓல்ட் டிரா◌ஃபோர்ட் அணிக்காக 143 போட்டிகளில் பங்கேற்ற அவர் 64 கோல்களை அடித்தார்.

**9.மழலையர் பள்ளிகளில் நவீன ஆரம்பக்கல்வியை வழங்க முடிவு செய்துள்ள மாநில அரசு எது?**



**A) மத்திய பிரதேசம் ☑**

B) சத்தீஸ்கர்

C) பஞ்சாப்

D) ஹரியானா

✓ தனியார் மழலையர் பள்ளிகளின் அடியொற்றி மழலையர் பள்ளிகளில் (அல்லது குழந்தை பராமரிப்பு மையங்களில்) நவீன ஆரம்பக்கல்வியை வழங்க மத்தியபிரதேச மாநில அரசு முடிவுசெய்துள்ளது. இத்திட்டத்தின்கீழ், மாநிலத்தில் உள்ள அனைத்து 97,000 மழலையர் பள்ளிகளும் உள்ளடக்கப்படும். முதற்கட்டமாக, ஆகஸ்ட்.28 அன்று மாநிலம் முழுவதும் 313 நிர்வாகத் தொகுதிகளிலும் தலா ஒரு மழலையர் பள்ளி திறக்கப்படும். சிறார்களுக்கு 'விளையாட்டினூடே கற்றல்' முறையின் அடிப்படையில் கல்வி கற்பிக்கப்படும்.

**10. 'Shagun' வலைத்தளம், எந்தத் துறையுடன் தொடர்புடையது?**



A) நிலத்தடி நீர் பாதுகாப்பு

**B) பள்ளிக்கல்வி ☑**

C) பெண்கள் அதிகாரம்

D) ஒலி மாசுபாடு

✓ மத்திய மனிதவள மேம்பாட்டு அமைச்சர் இரமேஷ் போக்ரியால் 'நிஷாங்க்', அண்மையில் 'Shagun' என்ற பள்ளிக்கல்வி இணையதளத்தை அறிமுகம் செய்துவைத்தார். இது பள்ளிக்கல்வி குறித்த

அனைத்து தகவல்களையும் வழங்குவதற்காக நாடு முழுவதுமுள்ள 15 இலட்சத்திற்கும் மேற்பட்ட பள்ளிகளை ஒருங்கிணைத்துள்ளது.

- ✓ பள்ளிகள் நிலக்குறியிடப்பட்டுள்ளன (Geo–tag); மேலும், பள்ளிகள் வழங்கிய அனைத்து தரவுகளையும் இந்த வலைத்தளம் மூலம் அணுகலாம். மனிதவள மேம்பாட்டு அலுவலர்களின் கூற்றுப்படி, பள்ளிகள் வழங்கும் தகவல்கள் மூன்றாம் தரப்பால் சரிபார்ப்பு செய்யப்படும். இதன்மூலம், 2.3 இலட்சத்துக்கும் மேற்பட்ட கல்வி வலைத்தளங்களை ஒருங்கிணைக்க முடியும்.

## நடப்பு நிகழ்வுகள்

**1.அண்மையில் கிழக்குத் தொடர்ச்சி மலையில் கண்டறியப்பட்ட மயில் வான்குடை சிலந்தி (Peacock Parachute Spider), எந்த இனத்தைச் சேர்ந்ததாகும்?**



A) Avicularia

**B) Poecilotheria ☑**

C) Mygale

D) Chilobrachys

✓ கிழக்குத்தொடர்ச்சி மலையில் அதன் பொதுவான வாழ்விடங்களுக்கு அப்பால், முதன்முறையாக அருகிவரும் உயிரினமான மயில் வான்குடை சிலந்தி அல்லது நச்சுமிக்க சிலந்தியை (Trantula) ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். இந்தச் சிலந்தி 'Poecilotheria' இனத்தைச் சேர்ந்ததாகும். விழுப்புரம் மாவட்டத்தில் செஞ்சிக்கு அருகிலுள்ள பக்கமலை காப்புக்காடுகளில் புதுச்சேரியைச் சேர்ந்த உள்நாட்டு பல்லுயிர் அறக்கட்டளையின் ஆராய்ச்சியாளர்கள் குழு இச்சிலந்தியைக் கண்டறிந்தது.

✓ 1899ஆம் ஆண்டில் ரெஜினால்ட் இன்னெஸ் போக்காக் என்பவர் முதன்முதலில் கூட்டியில், இந்தச் சிலந்தியின் பெண்ணினத்தைக் கண்டார். மயில் வான்குடை சிலந்திகளின் பொதுவான வாழ்விடம் ஆந்திரத்தின் நந்தியாலுக்கு அருகிலுள்ள கைவிடப்பட்ட வனங்களாகும். இவை தீம்பூச்சி (pests) கட்டுப்படுத்திகளாக உள்ளன. பன்னாட்டு இயற்கைப் பாதுகாப்புச் சங்கமானது (IUCN) இதை அழிவின் விளிம்பிலிருக்கும் உயிரினமாக வகைப்படுத்தியுள்ளது.

**2.உலகிலேயே முதன்முறையாக மாலுமிகள் முகத்தின் வழியான பயோமெட்ரிக் அடையாள ஆவணத்தை வழங்கும் நாடு எது?**

**A) இந்தியா ☑**

B) சீனா

C) தென் கொரியா

D) இரஷ்யா



✓ உலகிலேயே முதன்முறையாக மாலுமிகள் முகத்தின் வழியான பயோமெட்ரிக் அடையாள ஆவணத்தை வழங்கும் முதல் நாடாகியுள்ளது இந்தியா. இந்த ஆவணம், இந்திய மாலுமிகளை முழுமையாக அடையாளங்காண உதவுவதோடு, உலகின் எந்தப்பகுதியில் இருந்தாலும் அடையாளம் காணவும் வசதியாக இருக்கும். மாலுமிகளுக்கான இந்தப் புதிய பயோமெட்ரிக் அடையாள ஆவணம், நவீன பாதுகாப்பு அம்சங்களைக்கொண்டதாகும். இந்த ஆவணத்தை வைத்திருப்பவரின் முகத்தோடு கடவுச்சீட்டில் உள்ள படம் மென்பொருள் மூலம் சரிபார்க்கப்பட்டு அடையாளம் உறுதிசெய்யப்படும்.

✓ பன்னாட்டு தொழிலாளர் அமைப்பின் 185ஆவது மாநாட்டில் இந்தப் புதிய அடையாள அட்டைக்கு ஏற்பு அளிக்கப்பட்டது. இந்த மாநாட்டு தீர்மானத்தை, இந்தியா, அக்டோபர் 2015இல் ஏற்றுக்கொண்டது.

நடுவணரசால் வழங்கப்பட்டுள்ள தொடர்ச்சியான பணிச்சான்றிதழ் வைத்திருக்கும் இந்திய மாலுமிகள் ஒவ்வொருவரும் இந்த அடையாள ஆவணம் பெறத் தகுதியுள்ளவர் ஆவார். மொத்தமுள்ள 3,50,000 மாலுமிகளுக்கும் அடுத்த 2 ஆண்டுகளுக்குள் பயோமெட்ரிக் அடையாள ஆவணம் வழங்கப்பட்டுவிடும். இதற்குப்பின், ஒவ்வோர் ஆண்டும் சுமார் 15,000 புதிய மாலுமிகளுக்கு அடையாள அட்டை வழங்க வேண்டியிருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

**3. 25ஆவது சீனியர் பெண்கள் தேசிய கால்பந்து சாம்பியன்ஷிப் நடைபெறவுள்ள மாநிலம் எது?**



A) ஆந்திர பிரதேசம்

B) ஹிமாச்சல பிரதேசம்

**C) அருணாச்சல பிரதேசம் ☑**

D) உத்தரப் பிரதேசம்

✓ 25ஆவது சீனியர் பெண்கள் தேசிய கால்பந்து சாம்பியன்ஷிப் – 2019 ஆனது முதல்முறையாக அருணாச்சல பிரதேசத்தில், வரும் செப்.10–24 வரை நடைபெறவுள்ளது. இந்தப் போட்டி, கிழக்கு சியாங் மாவட்டத்தில் உள்ள அம்மாநிலத்தின் மிகப்பழமையான நகரமான பசிகாட்டில் நடைபெறும்.

✓ பல்வேறு மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள் மற்றும் இந்திய ரயில்வேயை பிரதிநிதித்துவப்படுத்தும் மொத்தம் 30 அணிகள் இந்தப் போட்டியில் பங்கேற்கின்றன. அணிகள், A, B, C, D, E, F, G & H என 8 குழுக்களாக பிரிக்கப்பட்டுள்ளன. அருணாச்சல பிரதேசம், ஜம்மு – காஷ்மீர் மற்றும் தெலுங்கானம் ஆகியன H குழுவில் உள்ளன. தொடக்க ஆட்டம் ரயில்வே மற்றும் மிசோரம் அணிகளிடையே நடக்கும்.

**4. இந்திய குழந்தைகள் நலவாழ்வு குறியீட்டில் முதலிடம் பிடித்துள்ள நாடு எது?**

A) ஜார்க்கண்ட்

B) ஹிமாச்சல பிரதேசம்

C) தமிழ்நாடு

**D) கேரளா ☑**

World Vision India
Together for children. For change. For life.

✓ குழந்தைகளின் நலத்துக்கான குறியீடுகள் குறித்து World Vision India என்ற தொண்டு நிறுவனம் ஆய்வறிக்கையை வெளியிட்டுள்ளது. அந்த ஆய்வறிக்கை 3 முக்கிய பகுதிகளை, 24 குறியீடுகளை ஆய்வுசெய்து குழந்தைகளின் நலத்தைக் கணக்கிட்டுள்ளது. தனிப்பட்ட நலம்மிக்க வளர்ச்சி, நேர்மறையான உறவுகள், பாதுகாப்பான தன்மைகள் ஆகிய 3 பிரிவுகளின்கீழ் ஆராய்ச்சிசெய்துள்ளது. நாடு முழுவதுமுள்ள மாநிலங்கள் மற்றும் யூனியன் பகுதிகளில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

✓ அதில், 0.76 புள்ளியுடன் கேரளா முதலிடத்திலும், 0.67 புள்ளியுடன் தமிழ்நாடு, ஹிமாச்சல பிரதேசம் இரண்டாவது இடத்திலும் உள்ளன. 0.53 புள்ளியுடன் மேகாலயா, 0.50 புள்ளியுடன் ஜார்க்கண்ட், 0.44 புள்ளியுடன் மத்திய பிரதேசம் ஆகிய 3 மாநிலங்களும் கடைசி மூன்று இடங்களைப்பெற்றுள்ளன. யூனியன் பிரதேசங்களில், புதுச்சேரி 0.77 புள்ளியுடன் முதலிடத்திலும், தாத்ரா மற்றும் நாகர் ஹவேலி 0.52 புள்ளியுடன் கடைசி இடத்திலும் உள்ளது.

**5.அண்மையில், எந்த நகரத்தில், 12ஆவது இந்திய பாதுகாப்பு உச்சிமாநாடு நடைபெற்றது?**




**A) புது தில்லி ☑**

B) டேராடூன்


C) மும்பை

D) கொல்கத்தா

✓ ஆக.29 அன்று புது தில்லியில், 12ஆவது இந்திய பாதுகாப்பு உச்சிமாநாடு (ISS) "Towards New National Cyber Security Strategy" என்ற தலைப்பில் நடைபெற்றது. இந்த மாநாட்டின்போது, முக்கியமான தேசிய உட்கட்டமைப்பைப் பாதுகாத்தல், வளர்ந்துவரும் இணைய அச்சுறுத்தல்கள்: சம்பவங்கள், சவால்கள் மற்றும் நடவடிக்கை போன்ற பல்வேறு பிரச்சனைகள் குறித்து விவாதிக்கப்பட்டன.

✓ இணைய அச்சுறுத்தல்களை எதிர்த்துப்போராட இந்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. இணைய குற்றங்களுக்கு எதிராக, மத்திய உள்துறை அமைச்சகம் ஏற்கனவே நாட்டில் 'இந்திய இணைய குற்ற ஒருங்கிணைப்பு மையம் (I4C)' என்ற திட்டத்தை உருவாக்கியுள்ளது. இது தவிர, மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின்கீழ், இந்திய அரசாங்கத்தின் டிஜிட்டல் இந்தியா முயற்சியின் ஒரு பகுதியாக இருக்கும் 'சைபர் ஸ்வச்சதா கேந்திரா'வும் நடப்பில் உள்ளது.

**6.இந்தியாவின் தேசிய விளையாட்டு நாளானது எந்த விளையாட்டு வீரரின் பிறந்தநாளைக் குறிக்கும் வகையில் கொண்டாடப்படுகிறது?**




A) சாந்தா ரங்கசாமி

B) பைச்சுங் பூட்டியா

**C) தியான் சந்த் ☑**

D) P.T உஷா

✓ இந்தியாவின் சிறந்த ஹாக்கி வீரராக திகழ்ந்த தியான் சந்த்தைப் போற்றும் விதமாக ஒவ்வோர் ஆண்டும் அவரது பிறந்தநாளான ஆக.29 அன்று தேசிய விளையாட்டு நாள் (National Sports Day) கொண்டாடப்படுகிறது.

✓ இந்திய ஹாக்கி அணித்தலைவராக இருந்த தியான் சந்த் 1928, 1932, 1936 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் இந்தியா தங்கம் வெல்ல முக்கிய காரணமாக விளங்கினார். 22 ஆண்டுகள் ஹாக்கி விளையாடிய அவர், நானூற்றுக்கும் மேற்பட்ட கோல்கள் அடித்துள்ளார். 1952இல் ஸ்போர்ட் & பாஸ்டைம், சென்னை "கோல்!" என்ற அவரது சுயசரித நூலை வெளியிட்டது. 1956ஆம் ஆண்டில் அவருக்கு 'பத்மபூஷன்' விருது வழங்கப்பட்டது. இவரது நினைவைப் போற்றும் விதமாக இந்தியாவில் விளையாட்டில் வாழ்நாள் சாதனை நிகழ்த்தியவர்களுக்கு, 'தியான் சந்த்' விருதை இந்திய அரசு வழங்குகிறது. 2002ஆம் ஆண்டு இந்த விருது நிறுவப்பட்டது.

**7. '10 Hafte, 10 Baje, 10 Minute – Har Ravivar, dengue par war' என்ற புதிய முயற்சியைத் தொடங்க முடிவு செய்துள்ள மாநில அரசு எது?**

**A) தில்லி ☑**

B) மத்திய பிரதேசம்

C) உத்தர பிரதேசம்

D) பீகார்



✓ தில்லியில் டெங்கு காய்ச்சலுக்கு எதிராக தங்களது வீடுகளை தாங்களே ஆய்வுசெய்யும் "10 வாரம், 10 மணி, 10 நிமிடங்கள் ஞாயிறுதோறும் டெங்குவுக்கு எதிரான போர்" என்ற பரப்புரை இயக்கத்தை தில்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் தொடங்கவுள்ளார். செப்.1 முதல் நவ.15ஆம் தேதி வரையிலான காலத்தில், நன்னீரில் டெங்கு நோயைப்பரப்பும் ஏடிஸ் கொசுக்கள் உற்பத்தியாவதால், ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் தில்லி வாசிகள் சுமார் 10 நிமிடங்கள் ஒதுக்கி வீடுகள் மற்றும் வீடுகளைச்சுற்றி தண்ணீர் தேங்காமல் இருப்பதை குடியிருப்பாளர்கள் உறுதிசெய்ய வேண்டும் என தில்லி அரசு பொது மக்களைக் கேட்டுக்கொண்டுள்ளது.

**8. எந்தத் தேதியில், அணுசக்தி சோதனைகளுக்கு எதிரான சர்வதேச நாள் அனுசரிக்கப்படுகிறது?**

A) ஆகஸ்ட் 30

B) ஆகஸ்ட் 28

**C) ஆகஸ்ட் 29 ☑**

D) ஆகஸ்ட் 31




✓ அணுவாயுத சோதனையின்போது ஏற்படும் வெடி விபத்துகள் ஏற்படுத்தும் விளைவுகள் குறித்த அறிவையும் அணுவாயுத சோதனைகள் நிறுத்தப்பட வேண்டியதன் அவசியத்தையும் குறித்த விழிப்புணர்வை அதிகரிப்பதற்காக ஒவ்வோர் ஆண்டும் ஆக.29 அன்று அணுசக்தி சோதனைகளுக்கு எதிரான சர்வதேச தினம் அனுசரிக்கப்படுகிறது.

**9. விதிவிலக்கான சூழ்நிலைகளில் மட்டுமே மத்திய அரசுக்கு இந்திய ரிசர்வ் வங்கி இடைக்கால ஈவுத்தொகையை (interim dividend) வழங்கலாம் என பரிந்துரைத்த குழுவின் தலைவர் யார்?**

**A) பிமல் ஜலான் ☑**

B) ராஜீவ் மெஹ்ரிஷி

C) விரால் ஆச்சார்யா

D) ஹஸ்முக் ஆதியா



✓ இந்திய ரிசர்வ் வங்கியின் பொருளாதார மூலதனக் கட்டமைப்பை ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு அவ்வப்போது மதிப்பாய்வு செய்ய வேண்டும் என்றும் அதன் கணக்கியல் ஆண்டு (ஜூலை–

ஜூன்) மார்ச் 31 ஆம் தேதியுடன் முடிவடையும் நிதியாண்டுடன் சீரமைக்கப்பட வேண்டும் என்றும் பிமல் ஜலான் குழு பரிந்துரைத்துள்ளது.

- ✓ விதிவிலக்கான சூழ்நிலைகளில் மட்டுமே ரிசர்வ் வங்கியானது அரசாங்கத்திற்கு இடைக்கால ஈவுத் தொகையை (2016–17இல் தொடங்கிய ஒரு நடைமுறை) செலுத்துமாறு குழு பரிந்துரைத்துள்ளது. இந்திய ரிசர்வ் வங்கி அதன் அதிகரித்துவரும் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு அதன் இருப்பு நிலை வெளிப்பாடுகளின் சந்தை அபாயத்தை மதிப்பிடுவதற்கான ஒரு கட்டமைப்பை ஏற்படுத்த வேண்டும் என்றும் இக்குழு பரிந்துரைத்துள்ளது.
- ✓ பொருளாதார மூலதனத்தின் இருகூறுகளுக்கிடையேயான (உணரப்பட்ட சமபங்கு & மறுமதிப்பீட்டு நிலுவைகள்) தெளிவான வேறுபாட்டை முக்கியமாக மறுமதிப்பீட்டு நிலுவைகளின் நிலையற்ற தன்மைகாரணமான தெளிவான மறுமதிப்பீட்டை இக்குழு பரிந்துரைத்துள்ளது.

**10. இளவேனில் வாலறிவன், எந்த விளையாட்டுடன் தொடர்புடையவர்?**

A) மல்யுத்தம்

**B) துப்பாக்கிச் சுடுதல் ☑**

C) குத்துச்சண்டை

D) சதுரங்கம்



- ✓ ஆக.28 அன்று பிரேசிலில் உள்ள ரியோ டி ஜெனிரோவில் நடைபெற்ற பெண்களுக்கான 10 மீட்டர் 'ஏர் ரைபிள்' போட்டியில், இந்தியாவைச் சேர்ந்த 20 வயதான இளவேனில் வாலறிவன் 251.7 புள்ளிகள் பெற்று தனது முதல் சீனியர் உலகக்கோப்பை தங்கப்பதக்கத்தை வென்றார். இதன்மூலம், இளவேனில் இச்சாதனையை நிகழ்த்திய மூன்றாவது இந்தியரானார்.
- ✓ இருப்பினும், இளவேனிலின் இந்தச்சாதனை அவரை ஒலிம்பிக்கில் பங்கேற்கவைக்க உதவவில்லை. ஏனெனில், ஒரு நாட்டின் சார்பாக ஒலிம்பிக்கில் பங்கேற்க அதிகபட்சம் இருவர் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள் என்னும் நிலையில் அபூர்வி சந்தேலா மற்றும் அஞ்சும் முட்கில் ஆகியோர் இந்தியாவின் சார்பாக ஏற்கனவே ஒலிம்பிக்கிற்குத் தகுதிபெற்றுள்ளனர். இளவேனில், ஏற்கனவே ஜூனியர் உலகக்கோப்பையில் தங்கம் வென்றவரும் ஆசிய சாம்பியனும் ஆவார்.

---

## நடப்பு நிகழ்வுகள்

### 1.கோரேவாடா பன்னாட்டு உயிரியல் பூங்கா அமையவுள்ள நகரம் எது?

**A) நாக்பூர் ☑**

B) தில்லி

C) ஜெய்ப்பூர்

D) சிம்லா




- ✓ வனங்களைப் பாதுகாக்கும் ஒரு முயற்சியாக நாக்பூரின் கோரேவாடாவில் உள்ள வனத்தில் சர்வதேச தரத்திலான மிருகக்காட்சிச் சாலை மற்றும் உயிரியல் பூங்காவை அமைக்க இந்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இந்த மிருகக்காட்சிச் சாலையில் உயிரியல் பூங்கா, இந்திய சவாரி, ஆப்பிரிக்க சவாரி, இரவுநேர சவாரி, ஆராய்ச்சி, கல்வி மற்றும் பயிற்சி, சுற்றுலாப் பயணிகளுக்கான வசதிகள் போன்றவை அமையவுள்ளன. மகாராஷ்டிரா லிமிட்டெடின் வன மேம்பாட்டு கழகத்தின் (FDCM. Ltd.) மூலம் இந்தச் சர்வதேச மிருகக்காட்சிச் சாலையை அமைக்க மகாராஷ்டிர அரசு அனுமதியளித்துள்ளது.
- ✓ கோரேவாடா காடுகளில் காடுகள் மற்றும் வனவிலங்குகளைப் பாதுகாத்தல் மற்றும் வனவிலங்கு வாழ்விட மேம்பாடு ஆகிய பணிகள் FDCM. Ltd. நிறுவனத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளன. இதற்காக FDCM. Ltd. வசம் மாநில வனத்துறை மானியங்களையும் மனிதவளத்தையும் வழங்கிவருகிறது.

### 2.புவிசார் குறியீடு பெற்றுள்ள 'கண்டாங்கி சேலை', எந்த மாநிலத்துடன் தொடர்புடையது?

**A) தமிழ்நாடு ☑**

B) கர்நாடகா

C) கேரளா

D) தெலுங்கானா




- ✓ தமிழ்நாட்டில் தயாரிக்கப்படும் 'திண்டுக்கல் பூட்டு' மற்றும் 'கண்டாங்கி சேலை' ஆகியவற்றுக்கு சென்னையிலுள்ள புவிசார் குறியீடு பதிவேட்டால் புவிசார் குறியீடு வழங்கப்பட்டுள்ளது. 'திண்டுக்கல் பூட்டு' அதன் உயர்ந்த தரம் மற்றும் நீண்ட காலம் உழைக்கும் திறன் ஆகியவற்றுக்காக உலகம் முழுவதும் பிரபலமாக அறியப்படுகிறது. அந்த நகரமும், 'பூட்டு நகரம்' என்றே அழைக்கப்படுகிறது.
- ✓ சிறைச்சாலைகள், கிடங்குகள், மருத்துவமனைகள் மற்றும் கோவில்கள் போன்ற அரசு நிறுவனங்கள் கூட இந்தப் பூட்டுகளையே பெரும்பாலும் பயன்படுத்துகின்றன. இந்தப் பகுதியில் அதிகளவு இரும்பு கிடைப்பதே இந்த வகை பூட்டு தயாரிக்கும் தொழிலின் வளர்ச்சிக்குக் காரணமாக அமைந்துள்ளது.
- ✓ சிவகங்கை மாவட்டத்தின் காரைக்குடி வட்டத்தில் 'கண்டாங்கி சேலை'கள் தயாரிக்கப்படுகின்றன. அதன் பெரிய கரைகளுக்காக அவ்வகை சேலைகள் பிரபலமாக அறியப்படுகின்றன. சில சேலைகளில் மூன்றில் இரண்டு பங்கு வரை கரை இருக்கும். வழக்கமாக 5.10 மீ – 5.60 மீ நீளம் கொண்டவையாக இந்தச் சேலைகள் இருக்கும்.

**3.குறு, சிறு & நடுத்தர நிறுவனங்கள், துளிர் நிறுவனங்கள் மற்றும் பெண் தொழில் முனைவோர் ஆகியவற்றின் வளர்ச்சியைச் செயல்படுத்துவதற்காக எந்த நிறுவனத்துடன் அரசு மின்னணுச் சந்தை (GeM) ஒப்பந்தம் செய்துள்ளது?**

A) NABARD

**B)** SIDBI ☑

C) NHB

D) IRDA

✓ குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள், பெண் தொழில்முனைவோர்கள், சுய உதவிக்குழுக்கள், மகளிர் சுய உதவிக்குழுக்கள் மற்றும் MUDRA மற்றும் எழுக இந்தியா திட்டத்தின் கீழ்வரும் பல்வேறு கடன் பயனாளிகளுக்கு பயனளிப்பதற்காக அரசு மின்னணுச் சந்தையானது (GeM) இந்திய சிறு தொழிற்துறை மேம்பாட்டு வங்கியுடனான (SIDBI) புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. SIDBI பங்குதாரர்களுடன் 'Womaniya' மற்றும் 'Start-up Runway' போன்ற அரசு மின்னணுச் சந்தையின் சிறப்பு முயற்சிகளை ஊக்குவிப்பதற்கு இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் உதவும்.

**4.காசநோயை எதிர்த்துப் போராடுவதற்கான செயற்கை நுண்ணறிவு (AI) சாத்தியக்கூறுகளை ஆராய்வதற்கு, எந்த நிறுவனத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் மத்திய நலவாழ்வு அமைச்சகம் கையெழுத்திட்டுள்ளது?**

A) IISc பெங்களூரு

B) ஹைதராபாத் பல்கலைக்கழகம்

C) IIT மெட்ராஸ்

**D)** வாத்வானி செயற்கை நுண்ணறிவு நிறுவனம் ☑

✓ காசநோய்க்கு எதிரான போராட்டத்தில் அதிநவீன செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்வதற்காக நலவாழ்வு அமைச்சகத்தின் மத்திய காசநோய் பிரிவு, வாத்வானி செயற்கை நுண்ணறிவு நிறுவனத்துடனான (WIAI) ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. ஒப்பந்தத்தின்படி, பாதிப்பு மற்றும் பாதிக்கப்பட்ட இடங்களைத் தொகுத்தல், பிரித்தறிதல் மற்றும் கண்டறியும் புதிய முறைகளை மாதிரியமைத்தல் ஆகியவற்றில் தேசிய காசநோய் திட்டத்துக்கு வாத்வானி AI தனது ஆதரவை வழங்கும். மேலும், திருத்தப்பட்ட தேசிய காசநோய் திட்டத்தை ஆதரிப்பதைத் தவிர்த்து பராமரிப்பாளர்களுக்கு முடிவெடுக்கும் ஆதரவையும் அது வழங்கும்.

✓ உலக நலவாழ்வு அமைப்பின் (WHO) மதிப்பீடுகளின்படி, இந்தியாவில் ஒவ்வோர் ஆண்டும் 27 லட்சம் பேர் காசநோயால் பாதிக்கப்படுகின்றனர். மேலும் 4.23 இலட்சம் நோயாளிகள் மரணிக்கின்றனர். சர்வதேச நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கு 5 ஆண்டுகளுக்கு முன்னதாகவே, அதாவது 2025க்குள் காசநோயை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு இந்தியா உறுதிபூண்டுள்ளது.

**5.மலையாள மனோரமா செய்தி மாநாடு – 2019, கேரளாவின் எந்த நகரத்தில் நடைபெற்றது?**

A) திருவனந்தபுரம்

**B) கொச்சின் ☑**

C) திருச்சூர்

D) பாலக்காடு

- ✓ ஆகஸ்ட்.30 அன்று, மலையாள மனோரமா செய்தி மாநாடு – 2019, கொச்சினில் நடைபெற்றது. இது கேரளாவின் முதல் மற்றும் ஒரே செய்தி மாநாடாகும். புதிய இந்தியா; புதிய அரசு; புதிய விழைவுகள்; புதிய சவால்கள்; புதிய எல்லைகள்; புதிய வழிகள் போன்ற சமகால கருப்பொருட்களில் இந்தச் செய்தி மாநாடு தனது கவனத்தைச் செலுத்தியது. பிரதமர் நரேந்திர மோடி, புது தில்லியிலிருந்து காணொளி மூலம் இந்த மாநாட்டை தொடங்கிவைத்தார்.
- ✓ இந்த மாநாட்டின்போது புதிய இந்திய தேசியவாதி, அரசியல், நம்பிக்கையின் புதிய எல்லைகள், இளைஞர்கள் மற்றும் கேரளாவிற்கான வாய்ப்புகள் போன்ற பல்வேறு தலைப்புகளில் விவாதங்கள் நடத்தப்பட்டன. இந்தச் சந்தர்ப்பத்தில், சசிதரூர், டுவிட்டரில், #LanguageChallenge என்ற ஒரு மொழி சவாலை தொடங்கினார். மக்கள் தங்களின் தாய்மொழியைத்தவிர வேறு மொழிகளிலிருந்து தலா ஒரு சொல்லை கற்றுக்கொள்ள உதவும் நோக்கில் இந்தச் சவால் தொடங்கப்பட்டது.

**6.பேரிடர் மறுசீரமைப்பு கட்டமைப்புக்கான சர்வதேச கூட்டமைப்பு அமைக்கப்படவுள்ள நகரம் எது?**

**A) புது தில்லி ☑**

B) கொல்கத்தா

C) புனே

D) சென்னை



- ✓ பிரதமர் மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை, பேரிடர் மறுசீரமைப்பு கட்டமைப்புக்கான சர்வதேச கூட்டமைப்பை உருவாக்கவும், அதற்கான செயலகத்தை புது தில்லியில் அமைக்கவும் பின்னேற்பு ஒப்புதல் அளித்துள்ளது. இந்தப் பேரிடர் மறுசீரமைப்பு கட்டமைப்பு கூட்டமைப்பு (Coalition for Disaster Resilient Infrastructure – CDRI), அமெரிக்காவின் நியூயார்க்கில், 23 செப்டம்பர் 2019 அன்று நடைபெறவுள்ள ஐ.நா. பருவநிலை மாநாட்டின்போது தொடங்கிவைக்கப்படவுள்ளது.
- ✓ இந்த CDRI, பல்வேறு அறிவாற்றல் உருவாகக்கூடிய மற்றும் பேரிடர் மற்றும் பருவநிலை மறுசீரமைப்பு கட்டமைப்புக்கான பல்வேறு அம்சங்கள் குறித்து கருத்துகளைப் பரிமாறிக்கொள்ளும் அமைப்பாகத் திகழும். பல்வேறு உறுப்புநாடுகளின் தொழில்நுட்ப நிபுணத்துவத்தை ஓரணியில் திரட்டவும் இது உதவும். அதுபோன்று செய்வதன்மூலம், கூட்டமைப்பின் உறுப்புநாடுகள் தத்தமது செயல்பாட்டை மேம்படுத்திக்கொள்வதுடன், அவரவர் பாதிப்புக்கு ஏற்றவாறும், பொருளாதாரத் தேவைகளுக்கும் ஏற்ற கட்டமைப்புகளை உருவாக்கிக்கொள்ளவும் வழிவகுக்கும்.

**7. 2019 உலக திறன்கள் கசான் சர்வதேச போட்டி 2019இல், நீர் தொழில்நுட்பத்தில் தங்கம் வென்ற S. அஸ்வதா நாராயணா, எந்த மாநிலத்தைச் சேர்ந்தவராவார்?**



A) மேற்கு வங்கம்

**B) ஒடிசா ☑**

C) திரிபுரா

D) ஆந்திர பிரதேசம்

✓ ரஷ்யாவின் கசான் நகரில் நடந்த 45ஆவது உலக திறன்கள் போட்டி 2019இல், தங்கம் வென்ற முதல் இந்தியர் என்ற பெருமையை ஒடிசாவைச்சேர்ந்த S.அஸ்வதா நாராயணா பெற்றுள்ளார். ஆக.23–27 வரை நடந்த போட்டியில் நீர் தொழினுட்பத்தில் அவர் தங்கம் வென்றார். இந்திய போட்டியாளர்களிடை –யே அவருக்கு 'Best of Nation' என்ற பரிசும் வழங்கப்பட்டது.

✓ கர்நாடகாவைச் சேர்ந்த பிரணவ் நுதலபதி, வலை தொழில்நுட்பங்களில் வெள்ளி வென்றார். மேற்கு வங்கத்தைச்சேர்ந்த சஞ்சோய் பிரமானிக் மற்றும் மகாராஷ்டிராவைச் சேர்ந்த சுவேதா ரத்தன்புரா ஆகியோர் முறையே நகை & வரைகலை வடிவமைப்பு தொழில்நுட்பத்தில் வெண்கலம் வென்றனர். உலக திறன்கள் கசான் – 2019இல் இந்தியாவுக்காக பதக்கம் வென்ற ஒரே பெண் போட்டியாளர் என்ற பெருமையையும் சுவேதா பெற்றுள்ளார். மொத்தத்தில், 48 உறுப்பினர்களைக் கொண்ட இந்திய அணி 19 பதக்கங்களுடன் போட்டியை நிறைவு செய்தது.

**8.மாற்ற மேலாண்மைக்காக 'அங்கிகார்' பரப்புரையைத் தொடங்கியுள்ள மத்திய அமைச்சகம் எது?**




**A) வீட்டுவசதி & நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் ☑**

B) வேதிகள் மற்றும் உரங்கள் அமைச்சகம்

C) வர்த்தகம் மற்றும் தொழிற்துறை அமைச்சகம்

D) ஆயுஷ் அமைச்சகம்

✓ மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற அமைச்சகம், அண்மையில், சமூக நடத்தை மாற்றத்திற்கான 'அங்கிகார்' என்னும் மாற்ற மேலாண்மை பரப்புரையைத் தொடங்கியுள்ளது. சமூக அணிதிரட்டல் & IEC நடவடிக்கைகள் மூலம் PMAY(U)இன் கீழ் கட்டப்பட்ட வீடுகளின் பயனாளிகளுக்கு நீர் மற்றும் ஆற்றல் பாதுகாப்பு, கழிவு மேலாண்மை, நலவாழ்வு, மர நடவு, துப்புரவு & தூய்மை போன்றவற்றில் இந்தப் பரப்புரை கவனம் செலுத்துகிறது.

✓ இந்நோக்கத்திற்காக, இந்த அம்சங்களைக் கையாளும் திட்டங்கள் மற்றும் பிற அமைச்சகங்களின் பணிகள் ஆகியவற்றுடன் இந்தப் பரப்புரை ஒன்றிணையும். இந்த ஒருங்கிணைப்பு குறிப்பாக எரிவாயு இணைப்பிற்காக உஜ்வாலா திட்டத்தின் மீதும், சுகாதார காப்பீட்டுக்காக ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் மீதும் தனது கவனத்தைச் செலுத்தும். இதுதவிர, இந்தியாவின் எளிதில் பாதிக்கப்படக்கூடிய பகுதிகள் வரைபடம் குறித்த இணையவழி பாடத்தையும் அவ்வமைச்சகம் தொடங்கியுள்ளது.

**9.இராஜீவ் காந்தி கேல் ரத்னா விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட முதல் இந்திய பெண் மாற்றுத் திறனாளி விளையாட்டு வீராங்கனை யார்?**

A) மானசி ஜோஷி

**B) தீபா மாலிக் ☑**

C) கரம்ஜோதி தலால்

D) பூஜா ராணி



✓ தேசிய விளையாட்டு நாளை முன்னிட்டு, குடியரசுத்தலைவர் மாளிகையில் நடந்த விருது வழங்கும் விழாவில், பஜ்ரங் புனியா மற்றும் தீபா மாலிக் (49) ஆகியோருக்கு 2019ஆம் ஆண்டிற்கான மதிப்புமிக்க இராஜீவ் காந்தி கேல் ரத்னா விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. இந்த விருதைப் பெறும் முதல் பெண் மாற்றுத்திறனாளி வீராங்கனையும் அதிகவயது கொண்டவரும் தீபா மாலிக் என்பது குறிப்பிடத்தக்கது.

✓ தேவேந்திர ஜஜாரியாவுக்குப் பிறகு மதிப்புமிக்க இந்த விருதைப் பெறும் இரண்டாவது மாற்றுதிறனாளி விளையாட்டு ஆளுமையாக தீபா உள்ளார். இவ்விருது, ₹7.5 லட்சம் பணப்பரிசை உள்ளடக்கியதாகும்.

**10. 'Animal Spirits – ஜீவ ஆற்றல்' என்ற சொல்லாடல், எந்தத் துறையுடன் தொடர்புடையது?**

**A) பொருளாதாரம் ☑**

B) சுற்றுச்சூழல்

C) அறிவியல்

D) புவியியல்




✓ உள்நாட்டு தேவை இல்லாதது, பொருளாதாரத்தில் ஜீவ ஆற்றலைத் தடுத்து நிறுத்துவதாகவும், 2019–20ஆம் ஆண்டில் நுகர்வு தேவை மற்றும் தனியார் முதலீட்டை புதுப்பிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளதாகவும் இந்திய ரிசர்வ் வங்கி 2018–19ஆம் ஆண்டுக்கான தனது ஆண்டறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. ஆழ்ந்த கட்டமைப்புக்கு மாறாக பொருளாதாரம் சுழற்சிமுறை மந்தநிலைக்கு ஆளாகி வருவதாக அவ்வறிக்கை தெரிவித்துள்ளது. உற்பத்தி, வர்த்தகம், உணவகங்கள், போக்குவரத்து, தகவல் தொடர்பு மற்றும் ஒலிபரப்பு, கட்டுமானம் மற்றும் வேளாண்மை போன்ற துறைகளில் பரந்த அடிப்படையிலான சரிவு ஏற்பட்டுள்ளதால் "நிலம், தொழிலாளர் மற்றும் சந்தைப்படுத்தல்" தொடர்பான பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும் எனவும் அது வலியுறுத்தியது.

✓ பொருளாதாரத்தில், 'ஜீவ ஆற்றல்' என்னும் சொல்லாடல், பிரிட்டிஷ் பொருளாதார வல்லுநர் ஜான் மேனார்ட் கெய்ன்ஸ் என்பவரால் 1936இல், 'The General Theory of Employment, Interest, and Money' என்ற அவரது நூலில், முதலாளித்துவத்தின் கீழ் பொருளாதார ஏற்ற இறக்கங்களின் நிலைத் தன்மையை விளக்குவதற்காக முதன்முதலாக பயன்படுத்தப்பட்டது.

✓ சந்தைப் பொருளாதாரத்தில் முதலீட்டாளர்கள் மற்றும் நுகர்வோரின் நடவடிக்கைக்கு வழிகாட்டும் உணர்ச்சிகள் மற்றும் உள்ளுணர்வுகளை இச்சொல் குறிக்கிறது. இது ஒருவகையான பொருளாதார

நன்னம்பிக்கையாகும். பொருளாதாரம் நிச்சயமற்ற நிலையில் இருக்கும்போதுகூட முதலீட்டாளர்களை அதிக முதலீடு செய்ய இது தூண்டுகிறது. எளிமையான சொல்லவேண்டுமானால், மனித உளவியல் எவ்வாறு பொருளாதாரத்தை இயக்குகிறது என்பதை 'ஜீவ ஆற்றல்' காட்டுகிறது.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- ✓ சென்னை புறநகர் இரயில் பயணத்தை சிறப்பாக அமைக்கும் வகையில், சென்னை – அரக்கோணம் இடையே, நவீன வசதிகளுடன் கூடிய MEMU (**M**ainline **E**lectric **M**ultiple **U**nit – **MEMU**) மின்சார இரயில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

---